# தமிழரசு

## பொங்கல் மலர்-1987




தமிழ்நாடு
பரிசுச்சீட்டு
சிறப்புக் குலுக்கல்
4 வரிசைகள்
மொத்த பரிசுத்தொகை
ரூ. 40 லட்சம்
முதல் பரிசு
ரூ. 15 லட்சம்
டிக்கட் ரூ. 2
K.A.S. சேகர்
போன்: 31945
பஸ் ஸ்டாண்ட்,
மதுரை
கிளைகள்: சென்னை, பெங்களூர், பாண்டி, நெல்லை
கோவை, சங்கரன்கோவில், திண்டுக்கல், காரைக்குடி

# பொருளடக்கம்


மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். 4
அவர்களின் வாழ்த்துரை. 6
இந்நாள் திருநாள் 9
'தமிழரசு' வாழ்த்து 10
பொங்கல் விளையாட்டு 11
இரட்டை வாழ்த்து
வெளிநாட்டு நாடாளுமன்றத்தில் சில நடை 12
முறைகள் - விதி முறைகள் 15
தைப்பாவை 16
நெல்லின் சரித்திரமே பொங்கல் 17
தமிழிசை உணர்வு 19
பாமா விஜயம் 23
அமைதிப் பொங்கலிடுவோம் 25
இரவல் தாய் 28
வாழ்க இசை 30
வளர்ந்தோங்கும் அண்ணா மாவட்டம் 35
தமிழ் வளர்க்கும் அரசு 36
தமிழன் கண்ட கலைகள் 38
மகுடி ராகம் 40
தை-இது ஒரு தமிழ் நாகரிகம் 42
உரிமைக்காரன் 45
கரைநாட்டிசை 47
அப்பச்சிக்குத் திண்ணை போதுமே! 51
வண்ணப்படத் தொகுப்பு 55
பண்பாட்டுப் பலகணி 57
அன்றும் இன்றும் 59
மனத்தேர் நிலைக்கு வந்தது 62
பொங்குக பொங்கல் 63
பெரிதினும் பெரிது கேள்
தமிழ்த் திரைப்பட வளர்ச்சியில் 66
நமது முதல்வர் தொண்டு 68
பல்லாண்டு புவிமேலே இனி வாழ்வோம் 69
நடிப்புக் கலையின் வளர்ச்சி 71
ஒரு கிராமத்தில் தைப் பொங்கல் 72
விடுகதை கவிதையாகிறது 73
வளரட்டும் மொழியுணர்வு 74
தமிழர் திருநாள் 76
தவஞ் செய்யும் நெஞ்சோடு தைமுதல்நாள் 77
ஏ, எழுத்து வியாபாரிகளே! 78
கிளியும் அணிலும் 79
இசை மரபுகள் 81
நம்பிக்கை மலர்கள் 82
தைப் பொங்கல் 83
வளம் பெருக்கி நலம் சிறக்கும் 87
காமராசர் மாவட்டம்
புதுமைகள் மலர வழிவகுப்போம்! 88
மதுரகீதங்கள் தந்த மதுரபாஸ்கரதாஸ் 90
முதல்வர் தொடங்கிய முத்தான 94
திட்டங்கள்
கடமை-முயற்சி-தன்னம்பிக்கை



தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2018 அட்சய - தை 3
மலர் : 17 16-1-1987 இதழ் : 13 & 14


பொங்கல் மலர் 1987

ரூ. 6

பக்கம் 248







# மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் வாழ்த்துரை

**நா**ன் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே!

என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே!

என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புக்களே !

திராவிடர் திருநாளாம் பொங்கல் நன்னாளையொட்டி உங்கள் அனைவருக்கும் என் உளங்கனிந்த வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மக்கள் கொண்டாடும் விழாக்களில் பொங்கல் திருநாள் தனிச் சிறப்புமிக்கதாகும். உழைப்பே உயர்வு தரும் என்பதையும், உழைப்பின் பயனை அனைவரும் பகிர்ந்துண்ணுவதே தமிழகத்தின் பண்பாடு என்பதையும் உலகறியக் கூறிடும் விழாவே பொங்கல் விழா. உழவரும் பிற தொழில்களில் ஈடுபட்டுள்ள உழைப்பாளிகளும் தாங்கள் விளைவித்த செல்வங்களைச் சமுதாயத்துக்கு உரிமையாக்கிடும் சமத்துவ விழா இது. இயற்கை அளிக்கும் வளம் அனைவருக்கும் பொது என்பதை மையக் கருத்தாகக் கொண்டுள்ள திருநாள், பொங்கல் திருநாள்.

பொங்கல் திருநாள் போதிக்கும் நற்கருத்துக்கள் நமது வாழ்க்கைக்கு வழிகாட்டும் தத்துவங்கள் ஆகும்.

பல்வேறு ஆற்றல் பெற்றவர்கள் தங்களுடைய திறமைகளையும் உழைப்பையும் பொது நன்மைக்காக ஒப்படைக்கின்ற ஒரு கூட்டு முயற்சியே இன்றைய தேவை என்பதே பொங்கல் விழாவின் அடிப்படை என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

நாட்டு முன்னேற்றத்துக்கான பணிகளிலும், நம்மை விட நலிந்துள்ள மக்களின் துயர்களைப் போக்குவதிலும் கூட்டு முயற்சியோடு நாம் இன்னும் நம்மை முழு மூச்சுடன் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இவ்வகையில் அரசின் திட்டங்களை நிறைவேற்றுகிற பொறுப்புக்களை ஏற்றுள்ளவர்களின் கடமை மகத்தானதாகும்.

வளர்ச்சிப் பாதையில் நாட்டைச் செலுத்துவதற்குக் கேடு ஏற்படுத்த முனைவோரைத் தடுப்பதும், நலன் தரும் முற்போக்குத் திட்டங்களைப் பாதுகாப்பதும் நம் முன் உள்ள இரு முக்கியக் குறிக்கோள்களாக உள்ளன.

> ''கேடுகள் முளைக்கும்போது அவற்றினை எதிர்த்து வீழ்த்தி நல்லனவற்றைப் பாதுகாத்துத் தீர வேண்டும். அதுமட்டும் போதாது; கேடுகள் மீண்டும் எழாதபடி பாதுகாப்பு ஏற்படுத்திக் கொண்டாக வேண்டும்'' என்று அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகப் பொருத்தமாகக் கூறியுள்ள வாசகத்தை அனைவருக்கும் நினைவுறுத்த விரும்புகிறேன்.

கேடுகள் நீங்கிடவும், நல்லனவற்றைப் பாதுகாத்திடவும், கேடுகள் மீண்டும் தலை தூக்காமல் பாதுகாப்புத் தேடிடவும், இவற்றின் வாயிலாக நமது முற்போக்கான செயல் திட்டங்கள் முழு வேகத்துடன் செயல்படுத்தப் படவும் மக்கள் தங்களுடைய நீடித்த உறுதியான ஆதரவைத் தொடர்ந்து அளித்திட வேண்டுகிறேன்.

பொங்கல் விழா ஊட்டுகின்ற மகிழ்ச்சியும், உற்சாகமும், மன நிறைவும் தமிழகத்தில் உள்ள எல்லோருடைய குடும்பங்களிலும் காணப்பட வேண்டும் என்பதே என் உள்ளத்தின் குறிக்கோள். அந்த இனிய குறிக்கோளை விரைந்து அடைந்திட இவ்வாண்டின் பொங்கல் விழா நம்மையெல்லாம் ஊக்குவிக்கும் பெரு விழாவாக அமைந்திடும் என்று நம்புகிறேன்.

'உழைப்பே உயர்வுதரும்'
'உழைப்போம், உயர்வோம்'
'உழைப்போரே உயர்ந்தவர்'
'உழைப்பவராலே உலகம் உயர்ந்திடும்'

என்கின்ற சீரிய இலட்சிய முழக்கங்களை நெஞ்சில் பதிய வைத்திடும் தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவையொட்டி, தமிழக மக்கள் அனைவருக்கும் என் இதயம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

சென்னை
12-1-87.

(எம்.ஜி. இராமச்சந்திரன்)





# இந்நாள் திருநாள்

பேரறிஞர் அண்ணா

தம்பி!

தெரிகிறது, தெரிகிறது, உன் முகத்திலே அழகு பொங்கி நிற்கும் காரணம்— புத்தாடையணிந்துள்ள உன நடை, காட்டுப்பாதையில் செல்லும் வேழம், வேங்கையின் மீது உராய்ந்து செல்லும் போது ஏற்படுவது போன்ற ஓசையை அல்லவா எழுப்புகிறது? கிளியும் புறாவும், நாகண வாயும் சிட்டும், குயிலும் மயிலும், தாட்சிக்கினிய பொருளத்தனையும் ஒரே நேரத்தில், ஒரே இடத்தில்கலந்துறவாடிடுவதுபோலன்றோ இல்லம் விளங்கிட வேண்டுமென விழைகிறாய்!

என்ன அவசரம்! ஏன் அவ்வளவு அவசரம்? சென்று சென்று பார்க்கிறாயே, பால் பொங்கிற்றா என்று! அன்னை அறிவார்களே, எத்துணை நேரம் தழலிடை இருந்தால் பொங்கிப் பதமாகும், புத்தரிசி என்பதனை! உனக்கேன் அந்தத் தொல்லை ஓராயிரம் தடவை சென்று கேட்கிறாயே- ஓஹோ! உன்னை உற்றாரும் நண்பரும், கேட்கிறார்களா—பால் பொங்கிற்றா என்று! ‘ஆம்’ எனப் பதிலும் கூற வேண்டுமா—அகத்தினழகுதான் முகத்தில் தெரிகிறதே!

இன்று திருநாள்! இல்லந்தோறும் இளைஞரும் முதியோரும், இருபாலரும், ‘பொங்கலோ பொங்க’லென்று மகிழ்ச்சியுடன் குரலெழுப்பி, தாமும், தம்மைச் சூழ இருப்பவரை யாவுமே புதியதோர் பொலிவு பெற்றிருப்பது கண்டு, ‘நலிவெலாம் ஒழிந்தது; நல்லன யாவையும் இனிக் கிடைத்திடும்’ என்று நம்பி, அந்த மகிழ்ச்சிப் பெருக்குடன் மற்றையோரும், மனைதோறும் மனைதோறும் இருத்தல் கண்டு, நாடே விழாக்கோலம் பூண்டுளது என்று பெருமிதம் கொள்வதற்கே அமைந்த விழாநாள்! ‘பால் பொங்கிற்றா? —என்று, அன்பு பொங்கக்கேட்டு, அகமகிழச் செய்யும் நன்னாள்! இன்பம் பொங்கும்! மனையெலாம் வழியும்! புத்தம் புதுக் கோலம் பெற்று, இல்லமெல்லாம் எழிலோவியமாகும்; அன்பு மணம் எங்கும் கமழும்; பூங்கா சென்ற புள்ளினமும், மலரிடை உலவும் வண்டினமும் ‘கானம்’ கிளப்பிடுவது போன்றதோர் களிப்பொலி’ எங்கும் எழும்! பனி தொலைந்தது; பரிதி அப்பகையினை விரட்டினான்! நில மடந்தைக்குப் புதிய எழிலூட்டினான்—நடுக்கும் குளிர் இனி இல்லை; வாழ்வைநொறுக்கும் கேடுகட்கு இனிஆதிக்கம் இல்லை!

விளைந்தது குவிந்திடக் கண்டோம்; வினையின் பயனைக் கொண்டோம்; செயலின் செழுமை விளங்கிற்று; செய்தொழிலின் மேன்மை துலங்கிற்று; உழவன் பெருமையை உலகே புகழ்கிறது; உலகுக்கே

அத்தொழில் அச்சாணி என்று உளமகிழ்ந்து உரைக்கின்றனர் அறிஞர் பெருமக்கள்.

அவன் காலில் படிந்த 'சேறும் சகதியும்' வாழ்வுக்குச் சந்தனமாகி மணம் அளிக்கிறது. அவன் பூட்டிய ஏர் அளித்த வளம், பெருந்தேரோடும் நிலையை அரசர்க்கே அளிக்கிறது எனில், மற்றையோர் ஏற்றம் பெறாதிருப்பரோ! அவன் 'கஞ்சி' தான் குடித்தான்; கலயமோ மண்ணாலானது; கழனிப் பக்கம் அமர்ந்து கடும் உழைப்புக்குப் பிறகு, உச்சிப்போதிலே அவன் 'இச்சைக்கினியாள்' தந்தது!

இதோ, அவன் இஞ்சியும், மஞ்சளும், வாழையும், பலாவும், மாவும் பிறவும் அளித்து, தன் திறமையையும், வள்ளற்றன்மையையும் எடுத்துக் காட்டுகிறான், கல்லிலும், முள்ளிலும் நடந்தான்—காரிருள் கலையும் நேரமறிந்து எழுந்தான்—பகலெலாம் பாடுபட்டான்—முளைவிட்டதும் மகிழ்ந்தான்—களை கண்டு கவலை கொண்டான்; உழைத்தான், உழைத்தான்—கழனி பச்சை நிறம் பெற்றது; மீண்டும் பாடுபட்டான்; இதோ, பொன்னாடை போர்த்துக் கொண்டு புவிப் பெண்ணாள், செந்நெல் மணி மாலைகள் அணிந்து தென்றலாளுடன் தேனொழுகப் பேசி, தெவிட்டாது பாடி, கோலம் காட்டி நிற்கிறாள்!

ஓவியன், நீல நிற வானிலே பல்வேறு உருவமாக உலவிடும் கார் கண்டு, தீட்டுகோல் எடுப்பான்; ஏரடிக்கும் சிறு கோலுடைய உழவுப் பெருமகனோ, அண்ணாந்து பார்க்கிறான்; அகமகிழ்கிறான். எதன் பொருட்டு? தன் வாழ்வு சிறக்கும் வகை கண்டோம் என்பது பற்றி எண்ணி அல்ல; நாட்டில் நல்லறிவாளர் படித்து இன்புறும் ஏடுகள் குறித்து அல்ல; அவனைப் பற்றித் தமிழ்ப் பேரறிவாளர்கள்—மூதறிஞர்கள் கூறிச் சென்ற பொன்னுரைகள், அகத்திலும் புறத்திலும், தொகையிலும் கலம்பகத்திலும் ஏராளம், ஏராளம், அவன், அவை பற்றி ஏதும் அறியான்! அவனுக்காக வாதாடிய புலவர்களை அவன் கண்டானில்லை; கருத்தூட்டமளிக்கும் கவிவாணர் பலர் அவன் செய் தொழிலின் சிறப்பு குறித்துச் செப்பியுள்ள ஒப்பில் புலமை நிறை மணிகளை அவன் கண்டானில்லை; சேரன் அவையின் சிறப்பு, பாண்டியன் பாசறை அமைந்த பெருமை, சோழ நன்னாட்டான் பாடியும் மாடியும் கண்ட அருமை இவை பற்றி அவன் அறியான்; 'கருக்கலிலே போக வேண்டும்—பசுந்தழை பத்து வண்டி வேண்டும்—பண்ணையாரிடம் இன்னது கூறவேண்டும்—வேலியை இவ்விதம் சரிசெய்ய வேண்டும்' என்ற இவை பற்றித்தான் பேசுகிறான். 'பயிர் எவ்வளவு காணும்' என்பதை உரைக்கிறான்—'மணி' அவனுக்கல்ல என்பது தெரிந்தும் மகிழ்ச்சியுடன். அவன் அளித்திடும் 'அம்பாரம்' பண்ணையாரைப் பொன்னார் மேனியராக்குகிறது—புவியாளும் வாய்ப்பினைத் தருகிறது! அவன் தன் கண்ணாரப் பயிர் ஏறுவது கண்டு களிப்பெய்துகிறான்—தன் உழைப்பு நற்பலனைத் தந்தது என்பதறிந்து!

'உழவர் திருநாள், இப்பொங்கற் புதுநாள்'—என்பதை அனைவரும் இன்று அறிந்து போற்றுகின்றனர்.

பண்படுத்திப் பரம்படித்து, எருவிட்டு ஏர்பிடித்து, விதை தூவி நாற்று நட்டு, களை எடுத்து, கதிர் முற்றிடக் கண்டு அறுத்தெடுத்துப் புடைத்துக் குவித்து உணவுப்பொருளை உலகோர்க்கு உழவர்





அளிக்கும் இவ்விழாதான், நாம் மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் கொண்டாடும் ஒரே விழா!

ஒருநாள்—ஊரெல்லாம் விழா! ஒரு திங்களும் போதுமானதாக இல்லை—நமக்கு, நாட்டவரிடம் இவ்விழாவில் மாண்பினைக் குறித்து, வியந்து விரித்துரைத்திட!

ஊர், விழாக்கோலம் கொள்ள வேண்டும்; இசையும் கூத்தும், உடற்பயிற்சி விளையாட்டுகளும் இன்ன பிறவும் நடைபெற வேண்டும்; தமிழரின் தொன்மை பற்றியும், மூதாதையர் காலத்தில் இருந்த பொலிவு பற்றியும், அஃதே பிறகு நலிவாக மாறிவிடும்படி செய்த நயவஞ்சகர் போக்குபற்றியும் முத்தமிழ் மூலம் ஆர்வமூட்டி வருதல் வேண்டும்.

பிற எந்த விழாவும், வீட்டோடு அமையும்; அல்லது, கோயிற் பெருவெளியில் நிகழும். மக்கள் மன்றம் கூடி, மகிழ்ச்சிப் பெருக்குடன் கலந்து களிப்பதற்கான விழாவாக இப்பொங்கற் புது நாளே அமைந்திருக்கிறது.

இந்த ஆண்டும், நாம் விழா கொண்டாடியும், மன்றமதில் நின்று மறத் தமிழன் மாண்பினைக் கூறியும், இன்று வந்துற்ற இழிநிலையைப் போக்குவது குறித்தும் எடுத்தியம்பத் தான் போகிறோம்.

செங்கரும்பு, பலா, மா, வாழை, செந்நெல், ஆவின்பால், புத்தாடை - ஏதேதோ தரலாம், தம்பி, உனக்கு! ஆனால் என்ன செய்வது! இவைகளை எல்லாம்விட என் 'அன்பு' இம்மலர் மூலம் உனக்குக் கிடைத்திடச் செய்தலே முறை என்று எண்ணினேன். உன்னிடம் கூறவேண்டுமென்று எண்ணிய கருத்துக்கள் பல; பலப் பல; ஒரு சிலவற்றைத்தான் கதை, கட்டுரை வடிவாக்கி அளித்திட முடிந்தது. இவற்றினைப் பார்க்கும்போது, உன் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் வேறு பல நற்செயலுக்கு உறைவிடமாக்கி, நமது நாட்டினுக்கு நல்கி, பொங்கலன்று காணும் மகிழ்ச்சி நாட்டின் பொதுமகிழ்ச்சி ஆவதற்கான நற்பணியாற்றிட வரவேண்டும் என்று அழைகிறேன்—உரிமையுடன் நம்பிக்கையுடன்.

'இன்று கூடவா, அண்ணா!' என்றா கேட்கிறாய்?

சரி, சரி, போ! போ! அதோ பொங்கும் இன்பத்தைப் பெறு, பொலிவு கண்டு அகமகிழ்ந்திரு; உள்ளம் நிறைந்திடும் உவகையுடன் உரையாடி களிப்புற்று இரு: நின் இல்லம் இன்பப் பூங்காவாகத் திகழட்டும்; அங்கு அறிவு மணம் கமழட்டும்; அன்பு பொங்கட்டும். அறம் தழைத்திடத் தக்க அரும்பணியாற்றிடும் ஆற்றல் எழட்டும்.

பொங்கற் புதுநாளன்று என் அன்பு நிறைந்த வாழ்த்தினை வழங்கி மகிழ்கிறேன்.

அதோ, பெற்றோர் அழைக்கிறார்கள் போலும்; சென்று, செங்கரும்பின்சாறன்ன அன்புரை பெற்று இன்புற்றிரு!

(1956 திராவிடநாடு பொங்கல் மலரிலிருந்து)

அனைவருக்கும்
'தமிழரசு' இனிய
பொங்கல் வாழ்த்துக்களைக்
காணிக்கையாக்கி
மகிழ்கிறது!

வாசகர்களுக்கு....
முகவர்களுக்கு....
விளம்பரதாரர்களுக்கு...
எழுத்தோவியங்களை அளித்திடும்
அறிஞர் பெருமக்களுக்கு...
எங்களுக்கு என்றும்
துணை யிருக்கும் நண்பர்களுக்கு
மீண்டும்
வாழ்த்துக்களையும்
வணக்கங்களையும்
தெரிவித்துக்கொள்கின்றோம்

ஆசிரியர்





# பொங்கல் விளையாட்டு

பாவேந்தர் பாரதிதாசன்

தையும் பிறந்தது நன்றாம்—நாம்
தைதைதை என்றாடு கின்றோம்
வைஇங்குப் பொங்கலை என்றோம்—நாம்
வாயார அள்ளி உண்கின்றோம்!

நெய்யில் மிதக்கின்ற பொங்கல்—பால்
நிறைய வார்த்தபுதுப் பொங்கல்
செய்யில் விளைந்த முத்தரிசி—நறுந்
தேனாய் இனிக்கின்ற பொங்கல்!

முந்திரிப் பருப்புமிட்ட பொங்கல்—கொடி
முந்திரிப் பழங்களிட்ட பொங்கல்
சிந்தாமல் கையில் அள்ளும்போதே—வாய்
தித்திக்கும் சர்க்கரைப் பொங்கல்!

இந்த மட்டுந்தானா சேதி?—பார்
இவ்வளவு செங்கரும்பு மீதி!
முந்தி இதில்நீயும் ஒருபாதி—எடு!
மொய்த்திருக்கும் எறும்பினை ஊதி!



# இரட்டை வாழ்த்து!

மாண்புமிகு சிலம்புச்செல்வர்
**டாக்டர் ம.பொ.சி**



மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களை முதல்வராகக் கொண்டுள்ள அ.இ.அ.தி.மு.க. அரசு, திரும்பவும் மதுவிலக்குச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. ஆம்; கள் - சாராயக் கடைகளுக்கு ''மூடு விழா'' நடத்தியிருக்கிறது! மூடிய கடைகள் காருள்ளளவும் கடல் நீருள்ளளவும் மூடியவையாகவே முடிய வேண்டும் என்று இறையருளைப் பிரார்த்திக்கிறேன்.

விலையுயர்ந்த மதுபானங்களை விற்கும் கடைகள் இனியும் நடிக்கும் என்று அரசு அறிவித்திருப்பது வருத்தத்தைத் தருகிறதென்றாலும், ஏழை மக்களை வாட்டி வதைக்கும் சாராயக் கடைகள் மூடப்பட்டு விட்டதற்காக சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாமான்ய மக்கள் - குறிப்பாக மாண்புமிகு எம். ஜி. ஆர்., தமது மேடைப் பேச்சுகளிலே, 'தாய்க் குலமே' என்று பக்தி விசுவாசத்தோடு அழைக்கிறாரே, அந்தத் தாய்க்குலத்தார் மகிழ்ச்சியடைந்து, முதல்வர் எம்.ஜி.ஆரை வாயார வாழ்த்துகிறார்கள்.

கள்-சாராயக் கடைகளை மூடியதால் தமிழக அரசுக்கு சுமார் 200 கோடி ரூபாய் ஆண்டுதோறும் இழப்பு ஏற்படும என்பது ஒரு சங்கடமான பொருளாதாரப் பிரச்னைதான். இந்த இழப்புக்கு ஈடு செய்யும்படி மத்திய அரசை மாண்புமிகு எம்.ஜி.ஆர். கோரியிருப்பது நியாயம்தான. மத்திய அரசு அவரது கோரிக்கையை ஏற்கும் என்று நம்புகிறேன். தமிழகத்திலுள்ள நாலரைக் கோடி மக்களும் இந்தக் கோரிக்கைக்கு ஆதரவாக இருக்கிறார்கள்.

'மதுவிலக்கு' என்பது, நாடு முழுவதற்குமான சமூக சீர்திருத்தமாகும். இதனை அமல் நடத்துவதற்கு மாநில அரசுகளை விட மத்திய அரசே அதிக அளவில் கடமைப்பட்டிருக்கிறது. அதன் தேசீயக் கடமை என்றும் சொல்லலாம். மத்திய அரசே பொறுப்பேற்று நாடு முழுவதிலும் ஒரே நாளில் கள்-சாராயக் கடைகளை மூடுவதற்கான காலம் விரைவில் வருமானால், அது அமரராகிவிட்ட அண்ணல் காந்தியடிகளின் ஆன்மாவுக்கு மகிழ்ச்சியளிப்பதாக இருக்கும்.

தமிழக முதல்வர் எம்.ஜி. ஆருக்கு மதுவிலக்கு உயிர்போன்ற கொள்கையாகும். அந்த வகையில் அவர் காந்தீயவாதி. எனது பிறந்த நாள் விழா ஒன்றிலே 'மகாத்மாவும் மதுவிலக்கும்' என்னும் பெயரில் யான் எழுதிய நூல் ஒன்றை வெளியிட்டு முதல்வர் பேசியபோது, குடிப்பழக்கத்திற்கு ஆளானவர்களைக் கணவர்களாகப் பெற்றுள்ள மனைவிமார்கள் அடையும் துன்பத்தைச் சொல்லி வேதனைப்பட்டு விம்மியழுதார்.

மாண்புமிகு எம். ஜி. ஆர். மதுவிலக்கால் வேலையிழந்த கள் இறக்கும் தொழிலாளர்களுக்கு உடனடி கஷ்ட நிவாரண நிதியாகத் தலைக்கு இரண்டாயிரம் ரூபாய் வழங்குவதாக அறிவித்திருப்பது என் மனதிற்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இதைவிடவும், அவர்களுக்கு மாற்று வேலை தரவும் மாண்புமிகு முதல்வர் உறுதி கூறியிருப்பது, அவரது கருணையுள்ளத்தைக் காட்டுகிறது.

*1948*-ல் முதன் முதலாகத் தமிழ்நாடு முழுவதிலும் கள்ளுக் கடைகள் மூடப்பட்டபோது, அதனால் வேலையிழந்த கள் இறக்கும் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை தர வேண்டுமென்று என தலைமையில் இயங்கும் தமிழரசுக் கழகம் அப்போதைய காங்கிரஸ் ஆட்சிக்கு வேண்டுகோள் விடுத்தது. அது பயன்தரவில்லை. மாற்று வேலை கொடுப்பதைக் காங்கிரஸ் அரசு கொள்கையளவில்கூட ஒப்புக் கொள்ளவில்லை.

கள்ளுக்கடைகளை மூடிய வேறு மாநிலங்களிலும் வேலையிழந்த தொழிலாளர்களுக்கு உடனடி கஷ்ட நிவாரணம் தரவோ, மாற்று வேலை கொடுக்கவோ மாநில காங்கிரஸ் அரசுகள் முன்வரவில்லை என்பது நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

மாண்புமிகு எம். ஜி. ஆர். 1987-ஆம் ஆண்டு பிறந்த முதல் நாளிலே கள்-சாராயக் கடைகளை முடியிருப்பது, உலக மக்கள் அனைவருடைய உள்ளத்தையும் கவர்ந்த நிகழ்ச்சியாகும். தமிழக மக்களுக்கு அவர் தந்துள்ள புத்தாண்டுப் பரிசு என்றும் சொல்லலாம். அதற்காக, பொங்கல் வாழ்த்தோடு சேர்த்து, அவருக்கு இரட்டை வாழ்த்துக் கூறுகின்றேன்.

மதுவிலக்கு முழு அளவில் வெற்றி பெற மாண்புமிகு முதல்வருக்கும், அ.இ.அ.தி.மு.க. அரசுக்கும் தமிழக மக்கள் ஒத்துழைப்புத் தர வேண்டுகிறேன்.

# நான் கண்ட



## மாண்புமிகு சட்டப்பேரவைத்தலைவர்
## திரு. பி.எச். பாண்டியன்

இங்கிலாந்து, அமெரிக்கா, நார்வே, ஸ்வீடன், டென்மார்க், ஸ்பெயின், பிரான்ஸ், கிரீஸ் போன்ற நாடுகளின் நாடாளுமன்ற நடவடிக்கைகளை நேரில் காணும் வாய்ப்புக் கிடைத்தபோது அவற்றின் விதிமுறைகள் சில வியப்பூட்டுவனவாகவும், நமக்கு வழி காட்டுவனவாகவும் அமைந்துள்ளதை என்னால் அறிய முடிந்தது. பல ஆண்டுகளுக்கு முன்னர் ரஷ்யாவுக்கும் சென்று வந்தேன்.

உலகின் நாடாளுமன்றங்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்து, 'நாடாளுமன்றங்களின் தாய்' (Mother of Parliaments) என்ற பெருமைக்குரிய பெயரினைப் பெற்றது பிரிட்டனின் பாராளுமன்றம். அங்கே நாடாளுமன்றத்தின் கீழவை பொதுமக்கள் அவை ( House of Commons ) என்றும், மேலவை பிரபுக்கள் அவை ( House of Lords ) என்றும் அழைக்கப்படுகின்றன. பிரிட்டனின் நாடாளுமன்றத்தில் இருக்கைகள் அமைப்புமுறை நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றத்தைப் போலவே உள்ளது. ஆனால், ஆளும்கட்சி, எதிர்க்கட்சி வரிசைகளைப் பிரிப்பதற்கு நம்முடைய சட்டமன்றத்தில் உள்ளதுபோல் பெஞ்சு, மேசைகள் வைக்கப்படவில்லை.

இரண்டு பிரிவுகளுக்கும் இடையில், தேவையான இடைவெளி விட்டு நீளமான சிவப்புக்கோடுகள் போடப்பட்டுள்ளன. உறுப்பினர்கள் அந்தக்கோட்டினைத் தாண்டாமல், தமது கட்சிப் பகுதிக்குள் இருக்க வேண்டும். ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிற உறுப்பினர்கள், அந்த எல்லைக் கோட்டைத்தாண்டிவிடாமல் தமது பகுதிக்குள் நின்று ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப வேண்டும். அந்த எல்லையைத் தாண்டிவிட்டால், அதுவே ஒழுங்கை மீறியதாக ஆகிவிடும். பிறகு அவர்கள் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப முடியாது.

பிரிட்டனின் மக்களவையில் உறுப்பினர்கள் அனைவருக்கும் இருக்கைகள் இருக்காது. உறுப்பினர்கள் நிறையப்பேர் வந்துவிட்டால், இருக்கைகள் கிடைக்காதவர்கள் தரையில்தான அமரவேண்டும். ஏன் அந்த நிலை என்றால், அங்கே எல்லா உறுப்பினர்களும் ஒட்டு மொத்தமாக வந்துவிடுவதில்லை. இருக்கைகள் சில எப்போதும் காலியாக இருக்கிற வகையில் சிலர் அவைக்கு வராமலும் இருப்பார்கள்.

சமயப் பெரியவர்களும் அவைக்கு நியமிக்கப்பட்டிருப்பார்கள். அவர்கள் எல்லாம் தொடர்ந்து அவைக்கு வருவதில்லை. எனவே அவையில் இருக்கைகள் காலியாக இருக்கும். திடீரென எல்லாரும் வந்துவிட்டால், எல்லோருக்கும் இருக்கைகள் கிடைப்பதில்லை. அப்போது சில உறுப்பினர்கள் தரையில் அமர நேரிடுகிறது. எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்பது மட்டுமல்ல; எல்லோரும் இந்நாட்டு மக்கள்தான். எனவே மக்களின் பிரதிநிதிகள் இருக்கைகளைப் பற்றி எண்ணத் தேவையில்லை என்ற எளிய நிலையையும் இது காட்டுகிறது.

பிரிட்டனின் நாடாளுமன்ற மேலவையான பிரபுக்கள் அவைதான் அந்நாட்டின் இறுதிக்கட்ட நீதிமன்றமாகும். இந்த பிரபுக்களவைக்குத் தலைவர், பிரிட்டன் நீதித்துறை அமைச்சரே ( Minister of Justice ) ஆவார். இந்தியாவின் நாடாளுமன்ற மேலவைத் தலைவர் (ராஜ்யசபா) குடியரசுத் துணைத்

# நாடாளுமன்றங்களின்

# சில வெளிநாட்டு

தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. பிரபுக்கள் அவை தருகிற தீர்ப்பு அவையின் உரைகள் (Speeches) என்றே குறிக்கப் படும். அவையின் 'தீர்ப்பு' ( Judgement ) என்று கூறப்படுவதில்லை.

மக்களாட்சி முறையின் சோதனைக் களமாக அமைந்த கிரேக்கத்தில் பல்வேறு ஆட்சி முறைகளும் மாறிமாறி அமைந்து இறுதியில் மக்களாட்சிமுறை நிலைபெற்றது. அங்குக் கோனாட்சி, கொடுங்கோலாட்சி, குழுவாட்சி, பிரபுக்களாட்சி எனப் பல்வேறு ஆட்சி முறைகள் இடம் பெற்று இறுதியாக மக்களாட்சிமுறை வெற்றி பெற்றது. மக்களாட்சியைக் குறிக்கும் 'Democracy' என்ற சொல் 'Demos' 'Cracy' என்ற இரண்டு



இங்கிலாந்து பிரதமர் தாட்சருடன் மாண்புமிகு தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் திரு பி. எச். பாண்டியன். மராட்டியம், ராஜஸ்தான், பீகார் மாநிலங்களின் சட்டப் பேரவைத் தலைவர்களும் உடன் உள்ளனர்.

# நடைமுறைகள்

சொற்களின் இணைப்பே ஆகும். 'Demos' என்றால் மக்கள், 'Cracy' என்றால் ஆட்சி என்று பொருள்.

இந்த மக்களாட்சி நெறியின் அடிப்படையை இன்றும் மதிக்கும் வகையில் கிரீஸ் நாடு செயல்பட்டு வருகிறது. அங்கு அரசு பிறப்பிக்கிற எந்த ஆணையும், நீதிமன்றத்தின் தீர்ப்பும் மக்கள் பெயரிலேயே வெளியிடப்படுகின்றது. நாம் குடியரசுத் தலைவரின் ஆணைப்படி (By order of the President), ஆளுநரின் ஆணைப்படி ( By order of the Governor) என்று நமது அரசாணைகளில் குறிப்

பிடுகிறோம். கிரேக்கத்தில் இது மக்களின் ஆணைப்படி என்றே குறிக்கப்படுகிறது. சாக்ரட்டீசும், பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலும் வளர்த்த தத்துவங்களின் தாயகமான கிரேக்கம் மக்கள் குரலையே மகேசன் ஆணையாக ஏற்று நடப்பதில் வியப்பில்லையே!

நார்வே, ஸ்வீடன், டென்மார்க் ஆகிய ஸ்காண்டிநேவியன் நாடுகளில் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறை உள்ளது. தேர்ந்தெடுக்கப்படுகிற நாடாளுமன்ற உறுப்பினர் சபாநாயகராகவோ, அமைச்சராகவோ, பதவி பெற்றுவிட்டால் அவர்கள் தமது உறுப்பினர் பதவியை இழந்துவிடுகிறார்கள். அவர்களுக்குரிய இடங்களுக்கு மாற்று உறுப்பினர்கள் ( Substitutes ) நியமிக்கப்பட்டு விடுவார்கள்.

டென்மார்க்கில் அரசுத்தொடர்பான வழக்குகள் எதுவும் உச்ச நீதிமன்றத்திற்கு ( Supreme Court ) மேல்முறையீட்டுக்குச் செல்வதாக இருந்தால், அந்தத் துறைஅமைச்சரின் அனுமதி கிடைத்தால்தான் வழக்குகளை உச்சநீதிமன்றத்தில் பதிவு செய்ய முடியும்.

சபாநாயகரை அவை தேர்ந்தெடுக்கிறது. என்றாலும், நாடாளுமன்றம் கூடுகின்ற ஒவ்வொரு கூட்டத் தொடருக்கும் அவர் அவையின் ஒப்புதல் பெற்றே தலைமை வகிக்க வேண்டும். கூட்டத்தொடர்கள் மாதக் கணக்கில் நீடிக்கும். ஸ்வீடனில் ஒரே சபாநாயகர் 27 ஆண்டுகளாகத் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதவி வகித்து வருகிறார். இங்கு நாடாளுமன்றம் நிறைவேற்றுகின்றவை எல்லாமே சட்டமாகிவிடும். அவை அரசியல் சட்டவரம்புக்குட்பட்டனவா என்பது பற்றி நீதிமன்றங்கள் கேள்வி எதுவும் எழுப்ப முடியாது.

நார்வே, டென்மார்க் நாடுகளில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு முதன்மை அளிக்கப்படுகிறது. முதியோர் ஊதியம், வேலை கிடைக்காதோருக்கு உதவித்தொகை போன்ற சமூகநலத் திட்டங்கள் அதிக அளவில் செயற்படுத்தப்படுகின்றன.

மேற்கு ஜெர்மனி வெளிநாட்டிலிருந்து வருகிற அகதிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதில் முதலிடம் வகிக்கிறது. எந்த நாட்டுக் குடிமகனும் அங்கே பாதுகாப்புத் தேடிக் கொள்ள முடியும். பாஸ்போர்ட், விசா என்ற எந்த அனுமதியும் இல்லாமல் அங்கே யாரும் சரணடையலாம். அவர்களுக்கு அபயம் அளித்துக் காக்க ஜெர்மனி முன் வருகிறது. பிற நாடுகளின் நாடாளுமன்ற நடைமுறைகள் சட்டதிட்டங்கள் பொதுநலத் திட்டங்கள் நமக்குத் தெளிவூட்டி வழிகாட்டி, மக்களாட்சியின் வெற்றிக்குப் பெரிதும் துணை நிற்கின்றன. அவற்றை நாமும் காணவேண்டும். அவற்றுள் நல்லன கொண்டு அல்லன நீக்கி மக்களாட்சியின் மாண்பினைக் காத்திட வேண்டும்.




Phone: 3866
3412
2128

HOTEL
SAPHIRE PARADISE

ETTINES ROAD, Ooty - 643 001,
NILGIRIS (Tamilnadu State)

Deluxe Rooms Provided with Colour T V. Video, Telephone & Piped Music for Luxurious & Pleasant Stay. (Vegetarian & Non-Vegetarian Restaurant Attached)

# தைப்பாவை

கன்னார் கரும்பும்
கதலிகளும் பூச்சரமும்
தண்ணாரும் மஞ்சள்
சரங்கோத்த மங்கலமும்
கண்ணாரக் கண்டு
கையாரச் சேர்த்தணைத்து
விண்ணாரும் நீலம்
விழியார்ந்த சேயிழையார்
பண்பாடிப் பாடிப்
பசியாற வந்தவர்க்கு
உண்ணீரென் றூட்டி
உறவுரைக்கும் முற்றத்துப்
பெண்ணாய்ப் பிறந்த
பெரும்பாவாய்! நின் சீர்மை
உண்ணாவி னூற்றி
உளஞ்செரித்தேன் தைப்பாவாய்!

அன்னங்கேள்! ஞானம்
அருள்வானை முன்னிறுத்தி
முன்னங்கால் சேர்த்து
முழந்தாளில் மண்டியிட்டு
தன்னங்கை கூப்பித்
தலைசாய்த்து யான்வணங்க
என்னங்கேள் ஈசன்
எனக்களித்தான் மெய்ஞ்ஞானம்
இன்னங்கே ளென்றான்
எவைகேட்பேன் இன்னமுதே!
பொன்னங்கோன் செம்பரிதி
பூத்தெழுங்கீழ் வானத்தே
அன்னங்கை காட்டும்
அருள்போதும் என்றுரைத்தேன்
மின்னுங்கீழ் வானில்
விரைந்தெழுவாய் தைப்பாவாய்!

போயவெலாம் போயொழிய(ப்)
புதைந்தவெலாம் புதைய
தீயவெலாம் சேர்ந்தொழிய
சிறுமையெலாம் அழிய
மாயமனத் துள்ளுலவும்
மயக்கமெலாம் தீர
ஆயபயன் கைமலர
அளித்தபலன் மீள
தூயவர்தம் இல்லமிசைச்
சுற்றமெலாம் கூட
வாயிதழில் தேன்வடியும்
மங்கையர் பண்பாட
மேயவிலங் கூர்ந்துசெலும்
வெள்ளெனும் பாற்பொழுதில்
நீயுமுலாக் கொண்டெழுவாய்
நிறைந்தெழு தைப்பாவாய்!





கவியரசர் கண்ணதாசன்

# நெல்லின் சரித்திரமே பொங்கல்

உவமைக் கவிஞர் சுரதா



முற்றிய உழைப்பின் மூல
முத்திரை வெற்றி என்றால்
கற்றவர் உழைப்பின் வெற்றி
காவியப் புதுமை என்றால்
பற்றுதான் இல்ல றத்தின்
பட்டயம் என்றால் நாட்டை
ஒற்றுமைப் படுத்து கின்ற
ஒரேவிழா பொங்க லாகும்!

நெய்விழாத் திரியின் உச்சி
நெடுநேரம் எரிவ தில்லை!
பொய்விழா நீண்ட காலம்
புவிதனில் நிலைப்ப தில்லை!
மெய்விழா நிலைக்கும்; அந்த
மெய்விழா தமிழர்க் கெல்லாம்
தைவிழா வாகும்; நெல்லின்
சரித்திரம் பொங்க லாகும்!

தைப்பொங்க லிடுவோம்; வண்ணத்
தாமரைக் குடும்பத் தோடு
நெய்ப்பொங்கல் உண்போம்: நன்செய்
நிலங்கீறும் உழவ ரோடு
மைப்பெண்கள் துள்ளி ஓடும்
மானோடு விளையா டட்டும்!
தைப்பொங்கல் தமிழர்க் கெல்லாம்
தலைமுறை விழாவா கட்டும்!






## டாக்டர் சீர்காழி எஸ்.கோவிந்தராஜன்

உலகில் வேறு எந்த இனத்தவர்க்கும் கிடைக்காத ஓர் அரிய பெரிய வாய்ப்பை இறைவன் தமிழ் இனத்திற்கு அளித்திருக்கின்றான். அது தெய்வத்தமிழை நாம் தாய் மொழியாகப் பெற்றதுதான்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், 'கனியிடை ஏறிய சுளையும் முற்றல் கழையிடை ஏறிய சாறும் பனி மலர் ஏறிய தேனும் காய்ச்சுப் பாகிடை ஏறிய சுவையும் நனி பசு பொழியும் பாலும் தென்னை நல்கிய குளிரிள நீரும்' நம் அருந் தமிழ் மொழிக்கு இணையல்ல என்று கூறுகின்றார். அத்துணைச் சுவையுடையது நம் தமிழ்மொழி. இதனால்தான் பழம் பெரும்புலவர் ஒருவர் இப்படிக் கூறுகின்றார்:

''இருந்தமிழே உன்னால்
இருந்தேன்; இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும்
வேண்டேன்''

வானளாவிய பெரும்புகழ் கொண்ட நம் தமிழ்மொழி தன்னுள் முப்பெரும் பிரிவுகளை அடக்கிக் கொண்டுள்ளது. அவை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்ற மூன்றுமே ஆகும்.

இயலுக்கும் நாடகத்திற்கும் இடையில் இருப்பதுதான் இசைத் தமிழ். கேட்போரை இசையவைப்பதாலேயே அது இசை என்று பெயர் பெற்றது. இசை என்பது சங்கீதத்தையும் புகழையும் குறிக்கும் ஒரு தமிழ்ச் சொல். இது வேறு எம்மொழியிலும் காணப்படாத ஒரு தனிச்சிறப்பு. தமிழ் என்று தோன்றியதோ அன்றே தோன்றியது தான் தமிழிசையும். தமிழிசையின் சிறப்பை யாரால் கூற முடியும்?

''காட்டில் விலங்கறியும் கைக்
குழந்தை தானறியும்
பாட்டின் சுவையதனைப்
பாம்பும் அறியும்''

இறைவனுக்கு இசை என்றால் மிகவும் விருப்பம். இசையின் மூலம் இறைவனை அடைவதே சிறந்த வழி என்று சான்றோர்கள் கூறுவர். இறைவனே இசை வடிவினனாக இருக்கின்றான். அதனால்தான் தம்பிரான் தோழரான சுந்தரர், ''ஏழிசையாய், இசைப்பயனாய், இன்னமுதாய், என் தோழனுமாய்'' என்று இறைவனைப் போற்றிப் பாடுகின்றார்.

இறைவனுக்கு மிகவும் விருப்பமானது தமிழிசை. இத்தமிழிசை








இறைவனைப்போலவே முன்னைப் பழமைக்கும் பழமையானது. அக்காலத் தமிழ் மக்கள் தமிழ்ப் பண்களைக் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்று ஏழு பிரிவுகளாகப் பிரித்திருந்தனர். ஒவ்வொன்றையும் பல திறங்களாகவும் திணைகளாகவும் துறைகளாகவும் அமைத்துப் பயின்று வந்தனர். தமிழிசையின் சிறந்த கூறுகளை எல்லாம் முத்தமிழ்க்காப்பியமான சிலப்பதிகாரத்தில் மிக விரிவாகக் காணலாம். கல்லாதவரையும் கற்றவரையும் களிப்பில் ஆழ்த்த வல்லது ஒன்று உண்டு என்றால் அது தமிழிசைதான்.

பழமையும் வலிமையும் பெருமையும் நிரம்பிய தமிழிசை, கால ஓட்டத்தில் தன் சீர்குன்றி, பேர் குன்றி, களையிழந்து போய் நின்றது. தமிழ்மொழியில் பாடுவதே பாபம் என்று எண்ணிய காலமும் ஒன்று இருந்தது. இந்நிலை கண்டு தமிழன்னை கண்ணீர் விட்டாள். ''பண்ணிடைத் தமிழைச் சேர்த்துப் பாரினை மயக்கும் நாள் எந்நாளோ?'' என்று தமிழ் அறிஞர்களும் தமிழன்பர்களும் ஏங்கிய நாட்களும் உண்டு. தமிழன்னையின் கண்ணீரும் வீண் போகவில்லை. தமிழன்பர்களின் ஏக்கமும் வீண்போகவில்லை. வாராது வந்த மாமணிபோல் வந்தார்கள் செட்டிநாட்டரசர் டாக்டர் இராசா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள். எவ்வாறேனும் தமிழிசையை நிலைநிறுத்துவது என்று உறுதி பூண்டு களத்தில் இறங்கினார்கள். அயராது பாடுபட்டார்கள். அறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசனார், ஆர்.கே. சண்முகம் செட்டியார், ரசிகமணி டி.கே.சி, பேராசிரியர் கல்கி, சிலம்புச் செல்வர் ம.பொ.சி. போன்ற அறிஞர் பெருமக்கள் எல்லாம் அவரோடு இணைந்து உழைத்தார்கள். அவர்கள் முயற்சி வீண் போகவில்லை. இன்று நாடெங்கும் தமிழிசை முழங்கக் கேட்கின்றோம்.

தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களும் அவர்கள் தலைமையில் இயங்குகின்ற தமிழக அரசும் பலவிதமான திட்டங்கள் தீட்டித் தமிழிசை வளர்ச்சிக்குப் பேருதவி செய்துவருகின்றார்கள். தமிழிசை முழு அளவில் வளர இசைக் கலைஞர்கள் எல்லோரும் பாடுபட வேண்டும். தமிழிசையில் இல்லாத நுணுக்கங்களே இல்லை என்று கூறலாம். கிடைத்தற்கரிய அரிய பெரிய பொக்கிஷங்கள் எல்லாம் நம் தமிழிசையில் தான் இருக்கின்றன. இதைப் படித்தவர்களும் பாமரர்களும் புரிந்து கொள்ளுமாறு செய்வது நம்போன்ற இசைவாணர்களின் கடமையாகும்.

அமிழ்தினும் இனிய தேவாரம், நற்கருப்பஞ்சாற்றினிலே தேன் கலந்து பால்கலந்து தேங்கனித் தீஞ்சுவை கலந்து, ஊன் கலந்து, உயிர் கலந்து, உவட்டாமல் என்றும் இனிக்கும் திருவாசகம், முத்தமிழ்த் தெய்வமான முருகனின் புகழ்பாடும் திருப்புகழ் அமிர்தம், அருட்பிரகாச வள்ளலாரின் திருவருட்பா, கோபாலகிருஷ்ண பாரதியாரின் பாடல்கள், சீர்காழி அருணாசலக் கவிராயரின் இராம நாடகக் கீர்த்தனைகள், மாரிமுத்தாப் பிள்ளையின் பாடல்கள், இன்னும் இவை போன்று எண்ணிலடங்காத் தமிழ்ப் பாடல்கள் ஏராளமாக நம் தமிழிசையில் இருக்கின்றன. இவற்றை எல்லாம் நாம் அதிக அளவில் வெளிக் கொணர வேண்டும்.

இப்போது தமிழ் மக்களிடையே புதியதொரு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. தமிழிசைப் பாடல்களைப் பெரும் அளவில் விரும்பிக் கேட்கின்றார்கள். இதன் காரணம், புரிந்த மொழியில் பாடுவதால் அவர்கள் அதில் அப்படியே ஒன்றிப் போய் விடுகின்றனர். எனவே இந்த நல்ல சந்தர்ப்பத்தை மிகவும் நன்முறையில் பயன்படுத்திக் கொண்டு இசை வாணர்களும் இசை ஸ்தாபனங்களும் முழுமையான தமிழிசையை நாடெங்கும் முழங்கச் செய்தல் வேண்டும். நம்மவர்களை நாமே பழித்துக் கூறிக் கொள்வதையும், தாழ்வு மனப் பான்மையுடன் செயல்படுவதையும் நாம் மாற்றிக் கொள்ள வேண்டும்.

செட்டிநாட்டு அரசர் இராஜா சர் தமிழிசைக் காவலர், பத்ம பூஷண் டாக்டர் முத்தையவேள் அவர்கள் எந்த ஒரு கலைநிகழ்ச்சியில் கலந்து கொண்டாலும் நிகழ்ச்சி நிறைவு வரை இருந்து, ரசித்து, கலைஞர்களைப் பாராட்டி அரங்கத்தையும் பெருமைப் படுத்தி நிகழ்ச்சியினைச் சிகரம் வைத்தாற்போல் ஆக்கி விடுவார்கள். அதே போன்று ஔவை டி.கே.சண்முகம் அண்ணாச்சி அவர்களும், நம் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களும் தாங்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சியில் அப்படியே ஒன்றிப் போய் விடுவார்கள். இதே போன்று நமது பெருமக்களும் இயன்ற அளவு இருந்து கலைஞர்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்பது அடியேனுடைய வேண்டுகோள்.

இறைவனால் ''அம்மையே'' என்று அழைக்கப்பட்ட காரைக் காலம்மையாரால் ஏற்றம்பெற்று, தோணிபுரத் தோன்றல் திருஞான சம்பந்தப் பெருமானால் வளர்க்கப்பட்ட தமிழிசை, கடல் கடந்தும் பரவும் வகை செய்தல்வேண்டும்.

மத்திய அரசும் மாநில அரசும் கலாசார பரிவர்த்தனைத் திட்டத்தின் கீழ், இசைக் கலைஞர்களைப் பரிவர்த்தனை செய்து கொள்வதிலும் தேமதுரத் தமிழிசை வாணர்களைப் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற கொள்கையின்படி தமிழக அரசு, தமிழரசாக இருக்கும் இந்த அரிய பெரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தமிழிசையை வளர்க்க வேண்டும். தமிழிசையின் அருமை பெருமைகளை எல்லாம் நாம் உணர்வதோடு மட்டுமல்லாமல் நாட்டு மக்களும்-ஏன் உலக மக்களும் உணரும்படிச் செய்தல் அனைவரது கடமையாகும்.

வாழ்க தமிழிசை!
வளர்க தமிழிசை!!

# பேரறிஞர் அண்ணா

# பாமா விஜயம்




பாமா மிகப் பொல்லாதவள்! படித்த பெண்! ஆகவே, அம்மா எதைச் சொன்னாலும் குற்றங் கண்டுபிடிக்கிறாள் என்று அந்த ஊர் குளத்தங்கரையில் குப்பம்மாள் கூறினாள்.

''ஆனால், பாமா, நல்ல அழகு! தங்கப் பதுமை போன்றவள்! தாய்க்கு ஒரே மகள்! தகப்பனுமில்லை பாபம்! அவர்கள் சொத்தைப் பார்த்துக் கொள்ள. பாமாவிற்குப் புருஷன் எந்தச் சீமையிலிருந்து வருவானோ தெரியவில்லை'' என்றாள் அன்னம்மாள்.

''பாமாவின் கண்களைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு, சினிமாவிலே, யாரது அந்த தேவிகா ராணியோ என்னமோ பேர் சொல்கிறார்களே, அதே கவனம் வருகிறதடி'' என்றாள் குப்பம்மாள்.

''என்றைக்காவது பாமா, குளத்துக்கு வந்தால், எனக்கு, ஒரு பாட்டு கவனத்துக்கு வருவதுண்டு'' என்றாள் சொர்ணம்.

''அது என்ன பாட்டுடியம்மா, கொஞ்சம் சொல்லேன்'' என்று எல்லோருமாகக் கேட்டனர்.

சொர்ணம் ''தாமரை பூத்த குளத்தி னிலேமுகத்தாமரை தோன்றிட வந்தனளே!'' என்று பாட ஆரம்பித்தாள்.

''பாட்டைப்பார்த்தியா, ரொம்ப ருசியா இருக்கிறதே'' என்றனர் யாவரும்.

''ஆமாம், சீக்கிரம் வீடு போனால்தான் வீட்டிலே சாப்பாடு ருசியாக இருக்கும். எடுங்கள் குடத்தை போவோம்; பாமா பேச்சைப்பேசுவதென்றால்பொழுதுபோவதே தெரியாது'' என்று அன்னம் கூறிட, எல்லோரு மாகக் குடங்களை எடுத்துக் கொண்டு வீட் டிற்குச் சென்றனர்.

உள்ளபடியே பாமாவின் பேச்சை யார் பேச ஆரம்பித்தாலும், அன்னம் கூறியபடி பொழுது போவதே தெரியாது.

நடுத்தர உயரம்! கண்கவரும் சிவப்பு! காதுவரை நீண்டு செவ்வரி படர்ந்த சிங் காரக் கண்கள்! கன்னங்கள் கண்ணாடி! புருவங்களோ, மதனன் வில்லேயெனலாம்! கொவ்வை இதழ் அக்கோமளவல்லிக்கு.முத்துப் பற்கள். அவை எப்போதோ சில சமயங்களே வெளியே தெரிந்து காண்போரை மயக்கி விட்டு, மாயமாக மறைந்துவிடும்!

இன்பத்தின் உருவம்! இயற்கையின் சித் திரம்! ஆனந்த ஒளி என்றெல்லாம் பாமா வைப் பற்றிப்பேசிப் புகழாதவர்களே இல்லை எனலாம்.

அந்தச்சிற்றூருக்கு, பாமாதான் 'தாஜ் மகால்.

அவர்கள் குடும்பத்தின் கோகினூர் பாமாவே. பாமாவிற்கு வயது 18 இருக்கும். தகப்பனார், பாமா சிறு பெண்ணாக இருக் கும்போதே இறந்துவிட்டார். தாய் பாமா வைக் கண்டு கண்டு பூரித்துத் தன் வாழ்வைத் தள்ளி வந்தாள்.

பாமாவின் அழகு வளர்ந்து கொண்டு வந்தது போலவே, அறிவும் வளர்ந்து கொண்டே வந்தது. அறிவு என்றால் அல்லி அரசாணி மாலையும், நல்லதங்காள் புலம்ப லும், அந்தக்னை மணந்த அற்புத வள்ளியின் கதையும் படிப்பது என்றல்ல பகுத்தறிவு.

பாவை பொன்போல இருந்தாள்! அவ ளுடைய அறிவு வைரம்போல் மின்னிக்கொண் டிருந்தது. தாய் அந்தக் காலத்து நடத்தை, பழங்காலப் பேச்சு பேசி வருவாள், மகள், சிறுநகையுடன், ''அம்மாவே அம்மா! எங்கள் அம்மா திரேதா யுகத்தில் பிறந்து வளர்ந்த வர்கள். ஏனம்மா அண்டை வீட்டு அகிலாண் டம், எந்த அரச மரத்தைச் சுற்றினார்கள் எனக்குக் காட்டமாட்டீர்களா? பக்கத்து வீட்டு பாலம்மா, புற்றுக்குப் பால் ஊற்றவே ஒரு மாடு வாங்கலே'' என்றுகேட்டு கேலி செய்து சிரிப்பாள், பாமா!

''நீ போடி அம்மா? போக்கிரி, அரச மரம், ஆலமரம் இதெல்லாம் என்ன என்று உனக்கென்னடி தெரியும்? பவுடரும், ரிப்ப னும் வராத காலத்திலே வேப்ப மரத்துப் பெருமை எல்லோருக்கும் தெரிந்துதான் இருந்தது. உங்க அப்பா இருக்கச்சே இந்த வீடு கோயில் மாதிரி இருக்கும் தெரியுமா?



நீ பிறந்துதான் அவரையும் உருட்டிவிட்டே. யாரும் இப்போ இங்கே வரக்கூடப் பயப்படு கிறார்கள். வேலாத்தம்மன் கோயில் பூசாரி, நேத்து நீ தூங்கிக்கொண்டு இருக்கும்போது, வந்தான், இளநீர் அபிஷேகம் செய்யணு மாம் அம்மாவுக்கு?'' என்றான்.

"கொடுத்தனுப்பினாயா? அம்மா, பத்தா ஐந்தா? எவ்வளவு ரூபாயம்மா கொடுத்தாய்?'' என்பாள், பாமா.

"பாமா பொல்லாத பெண், அது என் னென்னமோ புத்தகம் படித்துவிட்டு எதுக்குப் பார்த்தாலும் காரணம் கேட்கிறாள்'' என்று பாமாவின் தாயார், புரோகிதர் சுப்பய்ய ரிடம் சொல்வதுண்டு.

சுப்பய்யர் அந்த ஊர் புரோகிதர். அந்த வட்டாரத்திலே இருந்த எல்லாப் பணக்காரர் குடும்பத்தையும், அவருடைய பஞ்சாங்கத்தி னுள்ளே சுருட்டி மடக்கி வைத்துக்கொண் டிருந்தார். எஸ்டேட் விஷயம் முதற்கொண்டு வீட்டிலே எருமை வாங்குகிற விஷயம் வரை யிலே, சுப்பு சாஸ்திரியைக் கலக்காமல் ஒரு காரியமும் நடப்பதில்லை. ஐயருக்கு அவ் வளவு செல்வாக்கு.

காலையிலே குளித்து விட்டு, விபூதி பூசி கட்கத்திலே பஞ்சாங்கக் கட்டை வைத்துக் கொண்டு ஐயர் வெளியே கிளம்பினால் வீடு திரும்பி வரும்போது 12 மணிக்கு மேலே ஆகும். மடியிலே இரண்டோ மூணோ பணமும் இருக்கும்.

''கமலம்! அடி அம்மா கமலம்! தூங்கி விட்டாயோ?'' என்று கதவைத் தட்டுவார். இருபத்தைந்து வயதான அவருடைய ஒரே மகள் - விதவை கொட்டாவி விட்டுக் கொண்டே வந்து கதவைத் திறப்பாள்.

பாமாவைப் பற்றி சிங்காரவேலுப் பிள்ளை கேள்விப்பட்டிருக்கிறார்! பார்த்து மிருக்கிறார். சந்தைப்பேட்டை ஜமீந்தார் சிங்காரவேலருக்கு பாமாவின் பேச்சை எடுத்தாலே காயகல்பம் சாப்பிட்டதுபோல இருக்கும். எப்படியாவது பாமாவைக் கலி யாணம் செய்து கொள்ள வேண்டுமென்பது அவர் எண்ணம். மனைவி வைசூரியால் மாண்டுபோன நாள் முதல் கொண்டு அவர் இதே எண்ணத்தில் இருந்தார். அவருக்கு வேதவல்லி வைப்பு! இருந்தாலும் வேத வல்லிக்கு வயது நாற்பதாகி விட்டது.!

பாமாவைப் போல சின்னஞ்சிறு குட்டி, தனக்கு மனைவியாக இருந்தால், இந்திர லோகத்திலும் இல்லாத ஆனந்தமாக இருக்க

லாம் என்று அவர் எண்ணினார். வழக்கப்படி இதைப் புரோகிதரிடமும் சொன்னார்.

''குட்டி ரொம்ப அழகுதான்! ஆனால் பொல்லாத குட்டி. என் தலையைக் கண்டதும் வந்தாரம்மா புரோகிதர். வாழலைக்கோ, வெண்டைக்காய்க்கோ'' என்று கேலி செய்யும். அவ, அம்மாவுக்கு நல்ல பக்தி. திதி திவசத்தின்போது மனங்குளிர தான தருமம் செய்வாள். நேம, நிஷ்டை, தவறுவதில்லை. அவ அம்மாகிட்ட நானும் ஏற்கெனவே சொல்லியிருக்கேன். உம்ம ஜாதகமும் இப்ப நன்னா இருக்கு. உமக்கு ஒரு புதுப்பெண்ணாவது, புது மாடாவது, புது வேஷ்டியாவது இன்னும் கொஞ்ச நாளிலே தானா வந்து சேரணும்'' என்று புரோகிதர் சிங்காரவேலருக்குத் தேன்மொழி கூறி வந்தார்.

''சாமி அந்த அம்பிகையை நான் இந்த ஐம்பது வருஷமாக மறந்ததில்லை. கும்பாபிஷேகம் ஒரு தடவை கூட செய்யாது விட்டதுமில்லை. பார்ப்போம், அம்பிகையின் அருள் எப்படியிருக்குமென்று'' என்பார்.

'நாளைக்கு நானும் உம்ம பேருக்கு ஒரு இலட்சார்ச்சனை செய்யறதுன்னு நினைச்சுண்டே இருந்தேன்' என்பார் புரோகிதர்.

கணக்குப்பிள்ளையைக் கூப்பிட்டு, ''ஐயருக்கு வேண்டியதைக் கொடு'' என்று சிங்காரவேலு பிள்ளை கூறிவிட்டு நல்ல மயிர் கறுக்கும் தைலம் எங்கு விற்கிறது என்ற ஆராய்ச்சியிலே இருப்பார்.

எப்படியாவது இந்த இரண்டு குடும்பங்களையும் பிணைத்து விட்டால் தன்பாடு கொண்டாட்டம்தான் என்பது சாஸ்திரிகளின் எண்ணம். இரண்டு குடும்பத்திற்கும் ஏஜண்டாகவல்லவோ அவர் இருப்பார்!

ஒரு நாள் மாலை சாஸ்திரியார் பாமாவின் தாயாருக்கு தூபம் போட்டுக்கொண்டிருக்கையில், பொல்லாத பாமா வந்துவிட்டாள் அங்கே. ''உமது ஜாதகக் கணிதத்தில் கமலா கலியாணமான இரண்டாம் மாதம் தாலி அறுப்பாள் என்பது தெரியாமற் போனதே'' என்று இடித்தாள். சாஸ்திரிகள் பச்சைச் சிரிப்புடன், ''விதிவசம் அம்மா, ஆண்டவன் கூற்று'' என்றார். ''உமது மகளுக்கு நடக்கவிருந்த விபத்தையே உம்மால் கண்டு பிடிக்க முடியாதபோது, என் ஜாதகப்பலனைப் பார்த்துச் சொல்ல வந்துவிட்டீரே'' என்று குத்தலாகக் கூறினாள் மங்கை.

''என்னமோ நடந்தது நடந்துவிட்டது. என் மகள் கமலம் இப்போது ஏதோ ஆண்டவனைத் துதித்துக் கொண்டு சிவனே என்று காலந் தள்ளுகிறாள். அவளுக்குக் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்'' என்று சற்று வருத்தத்துடன் கூறினார் சாஸ்திரி.

''பாபம் கமலாவைப் பற்றி எண்ணினால் எனக்குத் துக்கம் தொண்டையை அடைக்கிறது. பெண்ணின் குணத்திற்கென்ன? ரூபத்திற்குத்தான் என்ன? எலுமிச்சம் பழம்போல இருக்கிறது குழந்தை'' என்றாள் பாமாவின் தாய்.

பாமா புன்சிரிப்புடன், ''அப்புறம் இன்னம் கொஞ்சம் வர்ணியுங்கள். கமலாவைப் பற்றி, அவள் கண்டது இதுதானே'' என்றாள்.

''போடி உள்ளே, போக்கிரி சிறுக்கி, கமலா எவ்வளவு ஆசார அனுஷ்டானந் தவறாது இருக்கிறாள் பார்! ஒரு நாளாவது சிவன் கோவிலைப் போய் பூஜை செய்யாது இருக்கிறாளா? நீதான் அந்தச் சங்கத்திற்குப் போகிறேன், இந்தச் சேரிக்குப் போகிறேன் என்று குலத்தையே கெடுத்துக் கொண்டு வருகிறாய்'' என்றார்.

''கமலா என் தோழி! அவள் விஷயத்தில் உங்களுக்கு இருப்பதைவிட எனக்கு அக்கறை அதிகம். நாளை மாலை மூன்றுமணிக்கு நான் உங்களுக்கு ஒரு 'காட்சி' காட்டப் போகிறேன். சாஸ்திரிவாள், நீர் இரவு முழுவதும் குத்து விளக்கடியில் உட்கார்ந்து கொண்டு உமது பஞ்சாங்கக் கட்டையெல்லாம் புரட்டிப் புரட்டிப் பார்த்தாலும், நாளை என்ன காட்டப் போகிறேன் என்பதைக் கண்டு கொள்ள முடியாது. கமலா அழகி! கமலா ஒரு யுவதி! கமலா ஒரு விதவை! அவள் என் அருமைத் தோழி! அவளை நீங்கள் முற்றும் தெரிந்து கொள்ளவில்லை. நான் தெரிந்து கொண்டேன். இன்று போய் நாளை வாரும். உமது மனம் முதலில் மருண்டு பிறகு குளிரும் காட்சியைக் காண்பீர்'' என்று பாமா கூறிவிட்டு, பெண்கள் முன்னேற்றச் சங்கத்திற்குப் போய்விட்டாள்.

''இதோ பாருங்கள்! 'கப்சிப்' என்று இந்த அறையில் இருக்க வேண்டும். நான் அறையை வெளிப்பக்கம் பூட்டி விடப்போகிறேன்'' என்று கூறி பாமா, சாஸ்திரிகளை ஒரு அறையில் பூட்டிவிட்டாள். மறுநாள் மாலை சாஸ்திரிகளுக்குக் கொஞ்சம் பயம், இந்தப் 'போக்கிரிப்பெண்' என்ன சூது செய்வாளோ என்று, சிறிது நேரத்திற்குப் பிறகு சிரிக்கும் சத்தம் கேட்டது. உற்றுக் கேட்டார். ஆம்! சந்தேகமில்லை. தன் மகள் கமலாவின் சிரிப்புதான். இதுவரை கமலா அப்படிச் சிரித்ததை அவர் கேட்டதில்லை; விதவைக்குச் சிரிப்பும் சலிப்பும் ஏது?

''கண்ணே பாமா, நான் இன்றே பாக்கியசாலியானேன். உன்னை நான் என்றும் மறவேன்'' என்றாள் கமலம்.

''என்னை மறந்தாலும் மறப்பாய், கமலா! எதுகுல காம்போதியை மறப்பாயோ?'' என்றாள் பாமா.

''போ, பாமா! உனக்கு எப்போதும் கேலி செய்வதுதான் வேலை. எங்களவர் 'எதுகுல காம்போதி' ஆலாபனம் செய்வதை ஒருமுறை கேட்ட யார்தான் மறந்து விடுவார்கள்?'' என்றாள் கமலா.



"பிளேட்டிலே கொடுத்துவிடச் சொல்லு. அவர் வெளியிலே போய்விட்டாலும் நீ போட்டுக் கேட்டுக் கொண்டே இருக்கலாம்" என்றாள் பாமா.

பக்கத்து அறையில் இருந்த சாஸ்திரியாருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. நட்சத்திர பலன். நாழிகைக் கணக்கு, தர்ப்பையின் மகிமை தெரியுமே தவிர, எதுகுல காம்போதி என்ன தெரியும் சாஸ்திரியாருக்கு?

என்னடா சனியன், எதுகுல காம்போதி எங்களவர் கிராமபோன் பிளேட் என்று எதை எதையோ குட்டிகள் பேசுகின்றனவே என்று எண்ணித் திகைத்தார்.

"பாமா! என் விஷயம் எல்லாம் பேப்பரிலுமா போட்டுவிடுவார்கள்?" என்று கேட்டாள் கமலம். "தடையில்லாமல்! 'பலான சாஸ்திரியின் மகள் ஸ்ரீமதி கமலத்திற்கும் சிவன் கோவில் நாதஸ்வர வித்வான் சுப்பிரமணியப் பிள்ளைக்கும் சீர்திருத்த மணம், ஸ்ரீமதி பாமாவின் முயற்சியால் இனிது நடந்தேறியது. அதில் ஜில்லா முன்சீப் தோழர் கதிரேசன் அவர்கள் தலைமை வகித்தார்' எனக் கொட்டை எழுத்தில் போட்டோவுடன் வெளிவரும்" என்று பாமா கூறிமுடிப்பதற்குள், சாஸ்திரிகள், "அடிப்பாவி குடி கெடுத்தாயே! நான் என் செய்வேன், கமலா! என்ன வேலையடி செய்தாய் "என்று ஓவென அலறினார்.

"ஒன்றுமில்லை! பயப்படாதே கமலா! உங்க அப்பா, சீர்திருத்தத்தைக் கண்டு பயந்து அலறுகிறார். அவ்வளவுதான். கொஞ்சநேரம் சென்று சரியாகிவிடும். சட்டப்படி உன்னை ஒன்றும் செய்ய முடியாது" என்று பாமா கூறினாள்.

பக்கத்து அறையின் கதவை, 'படேர் படேர்' என உதைத்தார் சாஸ்திரிகள், "நரசகாலப் பெண்ணே! திற கதவை! நாகஸ்வரக் காரனைக் கட்டிக்கொண்டாயா? இதற்குத் தானா நாள் தவறாமல் நீ சிவன் கோவிலுக்குப் போனாய்? நாசமாய்ப் போனவளே. எங்காவது குளத்திலே, குட்டையிலே விழுந்து சாகக்கூடாதா? கொண்டு வந்து வைத்தாயே என் குடும்பத்தில் கொள்ளியை" என்று கோவெனக் கதறினார்.

"சாஸ்திரியாரே, சாந்தமடையும். எல்லாம் ஆண்டவன் செயல்" என்றாள் பாமா. "போதும்மா உன்பேச்சு. நீ ரொம்ப நல்லவள். பிறந்தாயே இந்த ஊரில் என் குடி கெடுக்க" என்றார் சாஸ்திரியார்.



"ஓய் சாஸ்திரியாரே! உமது மகள் செய்ததில் என்ன தவறு கண்டுவிட்டீர்? அவள் வேறு ஜாதியானை மணந்து கொண்டதற்காக இங்கு மல்லுக்கு நிற்கிறீரே. உமது சங்கதி என்ன? கமலாவுக்குத் தெரியாது-எனக்குமா தெரியாது என்று எண்ணுகிறீர்? எங்கள் சங்கத்துக்கு வேவுகாரரிடம் உமது 'ஜாதகம்' அத்தனையும் இருக்கிறது. பேசுவது வேதம், வேதாந்தம்! வேஷமோ சனாதனம். நடத்தை எப்படி? ஏன் சாஸ்திரிகளே! உமது வைப்பாட்டி வள்ளி யார்? எந்த இனம்? சொல்லட்டுமா கமலாவுக்கு!" என்று கோபத்துடன் கேட்டாள் பாமா. சாஸ்திரியார் "சிவ! சிவ! சம்போ, மகாதேவா! உனக்கு என்ன அபசாரம் பண்ணினேனோ, என் தலையிலே இப்படி இடி விழுந்ததே" என்று அழுதார்.

"சரி கேளும் மேலும் சில சேதியை; கமலாவும் சுப்பிரமணியமும் இன்றிரவே புறப்பட்டு சென்னை போகிறார்கள். அங்கே தான் குடியிருப்பார்கள். நானும் அடுத்த வாரம் அங்கே போகிறேன்" என்றாள் பாமா.

"ஏண்டி பாமா! இது என்னடி பெரிய வம்பாகிவிட்டது?" என்று கூறிக்கொண்டே பாமாவின் தாயார், சாஸ்திரியாரை அறையை விட்டு வெளி ஏற்றினார். கமலாவைத்திரும்பிக் கூட பார்க்காது, அவர் வீடு சென்றார்.

அன்றிரவே கமலாவும் அவளுடைய காதற் கணவன் சுப்பிரமணியமும் சென்னை சென்றனர்.

பாமா புன்சிரிப்புடன், தாயைநோக்கினாள். 'ஏனம்மா! விதவைக்கு மணமுடித்து வைக்கிற திறமை எனக்கு இருக்கும்போது, என்னை ஒரு கிழவனுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்தாயே' என்று கேலி செய்துவிட்டு 'இதோ பாரம்மா படத்தை, இவரைத்தான் நான் அடுத்தவாரம் மணம் செய்து கொள்ளப் போகிறேன்' என்று கூறிக்கொண்டே, ஒரு 'போட்டோ'வைக் காட்டினாள்.

பாமாவின் தாய் அதைப் பார்த்தாள். படம் ஒரு வசீகரமான இளைஞனுடையது! நாகரிகமான உடை! நல்ல தோற்றம்!

"யாரம்மா இது? என்ன ஜாதி?" என்றாள் தாயார்.

"இவர்தானம்மா எனக்குக் கணவராக வரப்போகிறார். ஜாதி, ஆண் ஜாதிதான். எனக்கு அவ்வளவுதான் தெரியும்" என்று கூறிக்கொண்டே தாயின் கன்னத்தை அன்போடு கிள்ளினாள்.

"நீ செய்வது எனக்கொன்றும் பிடிக்கவேயில்லை. குலத்தைக் கோத்திரத்தை எல்லாம் கெடுக்கிறதா" என்றாள் தாய்.

"எதைக் கெடுத்தேனும் நான் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்பது தானே அம்மா உன் ஆசை" என்று கொஞ்சினாள் பாமா.

தாயாரால் ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை. "போடி பொல்லாத சிறுக்கி, நீ எப்படியோ சுகமாக இரு! பார்த்து மகிழ்கிறேன் நான்" என்று கூறினாள் தாயார்.



# அமைதிப் பொங்கலிடுவோம்!

திரைப்பட இயக்குநர்
— பாரதிராஜா

**தை**த்திரு நாள்...

தமிழரின் வருடத்து முதல் நாள்..

ஏதோ காரணத்தால், இடறிப் போய்ச் சித்திரை முன்னால் ஊர்வலம் வருகிறது..

அடுக்குப் பானையில், அள்ளி நீருற்றி, பொன்னி அரிசியிட்டு புத்தரிசிச் சோறாக்கி...கன்னல் வேய் நிறுத்தி கமுகு, தென்னம் பாளை விரித்து....தேமதுரக் குலவையிட்டு, பொங்கலைக் கண்டு பூரிப்பார்....

காளைக்குக் குளியல், கழுத்துக்கு மாலை....கொம்புக்கு வண்ணம் குழைத்தெடுத்த சந்தன மேல்பூச்சு...

ஆகா காளைகள்கூட களிநடம் ஆடும்.....

இந்த மேலோட்டச் சுருதிகள் என்னறிவினைத் தாலாட்டுப் பாடித் தூங்க வைத்தது உண்மைதான்.....ஆனால் விழித்துக் கொண்டபோது விடைதெரியாத வினாக்கள்தான் மிஞ்சின.

அடுக்குப்பானை...வெண்ணெய்யாய் மண்ணெடுத்து வெங்கலமாய்ச் சுட்டெடுக்கும் என்னருமைத் தோழனின் உப்பு மேனிதான் கருப்பு வண்ணம் கொண்டதோ!

அவன் உதிரம்தான் சிவப்பானதோ!

பொன்னி அரிசி...

யானை கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல்லென்று சேனைகட்டிப் போரடித்த தமிழரல்லவா....

அந்த அரிசியைப் பார்க்கும் போது...அவனின் உழைப்பு,...!

சேறுகலக்கச் சிந்திய வியர்வை வானத்துச் சூரியன் எம்குலப் பெண்களின் முகம்பார்க்க வானம் முழுதும் வந்து போயும் தலை நிமிரா குலவைப் பெண்கள்.... இவற்றையெல்லாம் உமியாய் விலக்கியல்லவா...... அரிசியைக் கண்டோம்...

உணவுக்கு வித்திட்ட உழவனை நினைவு கூரும்நாள் இப் பொங்கல் திருநாள்....

அதனால்தான் நாடு நகரங்களும், பொங்கலைக் கண்டு பூரித்துப் போகிறது....

**ஆ**ண்டுக்கு ஆண்டு அளப்பரிய ஆனந்தத்தை அள்ளித் தருகிற பொங்கல், இவ்வாண்டு ஏனோ எரியூட்டுகிறது...

தக்காணத்தின் தெற்கே இருந்து வீசும் தென்றலில் சுகந்தம் தெரியவில்லை... ஏதோ சூடு தெரிகிறது....

அமைதி தவழும் பூக்காடு....

அன்பின் பொருள் சொன்ன என் நாடு

அதுதான் தமிழ் நாடு..

போரில் கூட, சங்கொலி கேட்டதும், கத்திகளின் சத்தம்



கட்டுண்டு போகும்..... ஈட்டிகள் இருப்பிடம் போகும்..

மனித நேயமே மறுமலர்ச்சி அடைந்தது தமிழனால்தான்....

என்றெல்லாம் பெருமையாய் நாம்எப்போதும்சொல்வதுண்டு... இன்று தமிழகத்தை எண்ணிப் பார்க்கவே மனம் அழுகிறது. வீதிக்கு வீதி வெடிகுண்டுகள் வெடிக்கின்றன..பச்சைக்குழந்தைகள் கூட பலி ஆகிற கோரம் நடக்கிறது...

மனித உயிர்களின் மகத்துவம் அறியாத, பாவிகள் செயலால் அழிவது உயிர்கள் மட்டுமல்ல... பொருட்கள் மட்டுமல்ல.. தமிழகம்தான்!

வீதிகளில் மக்கள் நடந்து போகவே அச்சம் கொள்கிற அளவு இந்த விபரீதங்கள் நடந்து கொண்டு இருக்கின்றன.



ஆட்சியை எதிர்த்து நடக்கிற, ஆயுதப் போராட்டமா இது? நாட்டின் மீது நல்லெண்ணம் கொண்டவர்களின் போர்க் குரலா... இது? வெந்துபோன உள்ளங்களின் வெடிக்கிற உணர்ச்சியா இது...?

இல்லை... இல்லவே இல்லை.

'தேசவிரோத சக்திகள்' என்ற வார்த்தைக்கே இலக்கணம் வகுக்கிற நயவஞ்சகப் பேய்களின் நாச வேலைதான்...

ஜனநாயகத்தையே அடியோடு குழிதோண்டிப் புதைக்க ஆசைப் படுகிற நயவஞ்சகர்களின் சதி வேலைதான்...

உலகமே சமாதானத்திற்கு கைகோத்து நிற்கிற இந்த நேரத்தில், என் தாய்த்திரு நாட்டில் ஏன் வேட்டுச் சப்தம்!

மக்களின் உயிர்களை மண்ணாக நினைக்கிற இவர்களுக்கென்ன வழக்குகளும், விசாரணைகளும்....?

'தனியொருவனுக் குணவிலை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்' என்று பாரதி பாடினானே....

ஆயிரம் உயிர்களையே அழித்தொழிக்க எண்ணமிடும் இப்பாவிகளுக்காக எதை அழிக்கப் போகிறோம்...?

மதங்களாய்..... ஜாதிகளாய் பிளவுபட்டுப்போன நாட்டை 'மானுடம்' என்ற வார்த்தையால் கட்டிப் போட்ட கம்பனை நாம் ஏன் மறந்து போனோம்...?

விரைவில் முடிவுக்கு வாருங்கள்.. இக்கொடுமைகளை கட்டிப்போடுவது ஆட்சியில் இருப்பவர்கள் பொறுப்பு என்று கைகழுவி விடாதீர்கள்.

ஒவ்வொரு தனிமனிதனுக்கும் பொறுப்பு உண்டு...

தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்ற....

மீண்டும் தென்றலின் சுகந்தம் பரவ...

வீட்டில் உள்ளவர்களோடு கைகோத்து வீதிக்கு வாருங்கள். வீதியில் உள்ளவர்கள் கைப் பிடித்து நாட்டைப் பாருங்கள்..

மனித நேயம்..மனித நேயம்.. மனித நேயம்

இது நம்மவர் கோஷங்கள் ஆகட்டும்....

அப்போதுதான் இன்சுவைப் பொங்கல் பொங்கும்.. இனிமையாய் வாழ்வு மலரும்...

சூரிய அடுப்பில், சுட்டெடுத்த கோலப்பானையில் அமைதிப் பொங்கல் பொங்கட்டும்.....!



# இரவல் தாய்

— எஸ். லட்சுமிசுப்பிரமணியம்

குப்பத்து வாழ்வில் இந்த நிலையில்லாத குடும்ப வாழ்க்கை வெகு சாதாரணம். ஆனால் அஞ்சலைக்கு அது புதிதாக இருந்தது. அவள் பிறந்து வளர்ந்த கிராமத்தில் வாழ்க்கையின் அமைப்பும் ஓட்டமுமே வேறு.

புழுக்கின நெல்லைக் களத்து மேட்டில் காயப்போட்டு, பொழுதுசாயும் நேரத்தில் அள்ளித்திரட்டி, வண்டியிலே மூட்டை கட்டிப் போட்டுக்கொண்டு வந்து இறக்கினால், மடி நிறைய நெல் கூலியாகக் கிடைக்கும். மாரியாத்தாள் கோயிலிலே மாவிளக்குப் போடவருபவர்கள், அண்டா நிறையக் கூழ் காய்ச்சி, ஏழைகளுக்கு ஊற்றியாக வேண்டும். பொங்கல் திருநாள் என்று வந்து விட்டால், நெல்லும் பருப்பும் கரும்பும், வெல்லமும் மிகுதியாகும்.

அங்கே உணவுக்குப் பஞ்சம் இல்லை. உழைத்தால் கூலிக்குப் பஞ்சம் இல்லை. அஞ்சலை அங்கேயே முறை மாமனைக் கலியாணம் செய்துகொண்டு நிறைவான வாழ்க்கை வாழ்ந்திருக்கலாம். நகரத்திலிருந்து வந்த சோலையப்பனின் கிராப்பையும், டெர்லின் சட்டையையும் பார்த்து ஆசைப் பட்டுக்கொண்டு, பிடிவாதமாக அவனுடன் ரயிலேறி ஓடி வந்து விட்டாள்.....

கிராமத்தில் டூரிங் டாக்கீசில் படங்கள் வரும். கிராமத்துக்கு வரும் வாத்தியாரைக் கண்டு களத்துமேட்டுப்பெண் ஆசைப் படும் கதைகள் வரும். ஆற்றங்கரையிலும், தோப்பிலும், கட்டை வண்டி சவாரியிலும், அவர்கள் சேர்ந்து பாடுகிற பாட்டுக்கள் வரும். அப்புறம் கல்லியாணம் செய்துகொண்டு டவுனுக்குப் போய்க் குடித்தனம் செய்யும் காட்சியும் வரும். அத்துடன் படம் முடிந்துபோய் விடும்.

அதற்குப் பிறகு நடக்கும் வாழ்க்கையைப்பற்றி அவளுக்குத் தெரியாது. அதன் பின்னர்தான் பிரச்னைகள் ஆரம்பமாகிறது என்பதை அவள் அறியமாட்டாள். ஓடுகிற தண்ணீரில் அமிழ்ந்து குளிக்கும் கிராமத்து வாழ்க்கையின் நிறைவு, குழாய்த் தண்ணீரை வாய்ச்சண்டை போட்டுக் குடத்தில் பிடித்துக் கொண்டுவந்து, தட்டி மறைவிலே துணிவிலகாமல் பக்குவமாகக் குளிக்கும் வாழ்க்கையில் கிடைக்காது என்பது அவளுக்குத் தெரியவே தெரியாது.

முதலில் நகர வாழ்க்கையும் நன்றாகவே இருந்தது. சோலைக்கு மில்லில் வேலை கிடைத்தது. அவளுக்கும் குப்பத்துக்கு அருகில ஒரு வீட்டில் வேலை கிடைத்தது. இருவருக்குமாகச் சேர்த்துக் கிடைத்த வருமானம், அவர்கள் தேவைக்குக் கூடுதலாகவே இருந்தது. சாப்பாட்டுச் செலவுபோக சினிமாவுக்கும் சில்லறைச் செலவுக்கும் பணம் பாக்கி இருந்தது. மாடத்தில் பவுடரும் வாசனைத் தைலமும் மணம் வீசின. சமையல் அறையில் சின்ன வானொலிப் பெட்டி சிங்காரமாக இசை பாடிற்று.

அவள் மாதத்துக்கு ஒரு முறை அவனுடன் கடைக்குப் போய்வருவாள். அவளுக்கு ஒரு புதுப் புடவை கிடைக்கும். மில்லில் போனஸ் கிடைக்கும்போது, அவனும் ஏதாவது வாங்கிக்கொள்ளுவான். கையில் வாட்சு, காலில் புதுச் செருப்பு என்று அந்தப் புது சாமான்கள் அவன் உழைப்பிற்கு மெருகாக விளங்கும்.

அப்படி ஆறு ஆண்டுகள். மில்லை திடீரெனறு மூடிவிட்டார்கள். அவனுக்கு வேறு தொழில் தெரியாது. மற்ற ஆலைகளில் புது ஆட்களைச் சேர்த்துக் கொள்ளத் தயங்கினார்கள். கிராமமாக இருந்தால் உழவுவேலைக்கு உதவியாகவாவது போய் வரலாம். ஒரு வேளைச் சோற்றுக்காவது நிச்சயமாகக் கூலி கிடைக்கும். பட்டணத்தில் அதற்கும் பஞ்சம்தான்.

முதற் குழந்தை சிங்காரம். அவன் பிறநதபோது வாழ்க்கை சொகுசாகவே இருந்தது. அவனைச் சீராட்டவும் பாராட்டவும் அவர்களுக்கும் மனத்தில் மகிழ்ச்சியும், வீட்டில் நிறைவும் இருந்தது. தலைக்கு எண்ணெய்தடவி, சொக்காய் போட்டு, கையில் சிலேட்டு கொடுத்துப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவைக்க வசதியும் இருந்தது.

இன்றைக்கும் அவனுக்கு சோற்றுக்குத் திண்டாட்டம் இல்லை. மதிய வேளையில் பள்ளிக்கூடத்தில் சுடுசோறு போடுகிறார்கள். தட்டில் காயும் பருப்பும் வைத்து மணக்க மணக்க உணவு கொடுக்கிறார்கள். வீடு இருந்த நிலையில் அதை அவன நினைத்துப் பார்க்கக்கூட முடியாது. பள்ளிக்கூட வாழ்க்கையில் அவனுக்குச் சோற்றுக்குப் பஞ்சமில்லை.

இரண்டாவது குழந்தை ராணி. பெயரில்தான் அத்தனை மெருகு. பிறந்த மறு மாதமே வீட்டில் வறுமை புகுந்துகொண்டு விட்டது. சோலைக்கு வேலைபோய் விட்டது. குழந்தையும் தக்கவில்லை.

அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் அன்றாடங்காய்ச்சியாக, அவரவருக்குக் கிடைக்கிற கூலி வைத்துக்கொண்டு அரிசி வாங்கி, அரை வயிற்றுக்கு எப்படியோ நிரப்பி, வாழ்நாளைத் தள்ளிக் கொண்டுவந்தார்கள்.

அப்போதுதான் மூன்றாவது குழந்தை காளி உருவெடுத்தான். அவன் உருவான வேளையே சரி இல்லை. சோலை கிடைத்த கூலியில் எங்காவது போய் குடித்து விட்டுத் திரும்பி வருவான். வயிற்றில் சுமையுடன் இருக்கும் அஞ்சலைக்கு அடிமேல் அடி விழும். அவளை ஒரு தள்ளு தள்ளிச் சுவர்மூலையில் கொண்டு போய் மோதுவான். பாய்ச்சலில் பதுங்கும் மிருகம்போல அவள் எதிர்த்தால், காலால் எட்டி உதைப்பான். அப்புறம் இரவு வெகு நேரம் அவள் வயிற்றைப் பிடித்துக்கொண்டு அழுதவண்ணம் இருப்பாள். வயிறு நிறைந்த நிலையிலும் அவள வயிறு காலியாகத்தான் இருக்கும்.

அவள் வேலை செய்த வீட்டில் மாதச் சம்பளத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக முன்பணமாகவே வாங்கிக் கொண்டு வருவாள். அதையும் சோலை குடிப்பதற்குக் கொண்டுபோய் விடுவான். அழுகையும் சண்டையும் தான் மிச்சம். அடுப்பில் சோறு சமைக்கப் பணம் மிஞ்சாது.

காளி பிறந்து விட்டான்.

நடுநிசி வேளைக்கு இடுப்புவலி எடுத்துவிட்டது. 'பிரசவத்துக்கு இலவசம்' என்று போட்டிருந்த ஆட்டோவில், செலவில்லாமல் மருத்துவமனைக்குப் போய்ச்

சோர்ந்து விட்டாள். பிரசவமாகிப் பத்து நாட்கள் வரையில் கவலை இல்லாமல் இருந்தாள். வேளா வேளைக்கு ரொட்டியும் பாலும் கிடைத்தன. அப்புறம் வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். ஏன் வீட்டுக்குத் திரும்பினோம் என்று இருந்தது.

அவளுக்கும் சோறு இல்லை; குழந்தைக்கும் பால் இல்லை. பிரசவம் என்று போனதில் வாடிக்கையாகப் பார்த்து வந்த வேலையும் போய்விட்டது. சோலை ஒழுங்காக வீட்டுக்கு வருவதுகூட இல்லை.

அழும் குழந்தையை அணைத்துக் குலுக்கி அஞ்சலை அதன் அழுகையை அடக்க முயன்று கொண்டிருந்தாள். ஆசைப்பெருக்கில் அர்த்தமில்லாத பேச்சுக்கள் கொஞ்சலாக உதிர்ந்துகொண்டிருந்தன. ஆயினும் குழந்தையைத் தேற்ற முடியாமல் அதன் கத்தல் உயர்ந்துகொண்டே போயிற்று.

''வயித்துப்பசி! ஆட்டினா அளுகை அடங்கிடுமா?''

அந்தப் பேச்சைக் கேட்டு அவள் அதிர்ந்து திரும்பினாள். கையில் துண்டுப் பீடியுடன் அந்த ஆள் நின்று கொண்டிருந்தான்.

''குழந்தைக்கு என்ன வயசு?''

''ஒரு மாசங்க—''

''நீ வேலைக்குப் போறியா? இன்னும் தெம்பு திரும்பலியா?''

''வேலைக்குப் போயிக்கிட்டு இருந்தவதான். பிரசவத்துக்குப் போனதிலே வேலை போயிடுச்சி. உடம்பிலே தெம்பு இருக்குது. வேலை கொடுப்பாரைத்தான் காணோம்.''

''உன்னோட நல்ல வேளை, நான் இந்தப் பக்கம் வந்தேன். புதுசாப் பிள்ளை பெற்ற தாய் கிடைப்பாளான்னு பார்த்துக்கிட்டே வந்தேன். நீ கிடைச்சே.''

''என்னாத்துக்கு?'' என்று சந்தேகப் பார்வையாக அவனைப் பார்த்தாள் அஞ்சலை.

''பயப்படாதே! சொகுசான வேலைதான். பங்களாவிலே நெழலிலே உக்காந்து பார்க்குற வேலைதான். சோறும் கிடைக்கும்.''

''என்னா வேலை?''

''பின்னாலே வா. தெரியும்!''

''குளந்தே?''

''அதெ பக்கத்துக் குடிசையில யாருகிட்டேயாச்சும் கொடுத்திட்டு வா. குளந்தையோட வந்தா வேலை கெடைக்காது. ஒன்னைச் சேர்க்க மாட்டாங்க...''

''நீ என்னாய்யா சொல்லுறே?''

''பயப்படாமே வா புள்ளே! நான் பார்த்துக்கிறேன்.....''

வேறு வழி இல்லாமல், வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் குழந்தையைப் பக்கத்துக் குடிசையில் கொடுத்துவிட்டுப் போனாள்.





அது ஒரு பங்களா. சுற்றிலும் செடியும் கொடியுமாகக் குளிர்ச்சியாக இருந்தது. பக்கத்தில் கார் நின்று கொண்டிருந்தது. வீட்டில் தொலைக்காட்சி கூட இருந்தது. பகலிலேயே வண்ணப்படம் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தப் பெரிய அம்மாள் வெளியே எழுந்து வந்தாள். அந்த ஆளைப் பார்த்ததும் ''என்னாப்பா? கெடைச்சுதா?'' என்று கேட்டாள். அவன் கையை நீட்டி அவளை அடையாளம் காட்டினான். அஞ்சலைக்கு ஏனோ பயமாக இருந்தது.

அவளை உள்ளே அழைத்துக் கொண்டு போனார்கள். உட்கார வைத்துச் சோறு போட்டார்கள். குளு குளுவென்று பழைய சோறு. கூடவே கெட்டியாக மோர். உப்புக்கல்லைப் போட்டுச் சாப்பிட்ட போது வயிறு குளிர்ந்தது. கை கழுவி, தண்ணீரை ஏந்திக்குடிதது விட்டு, முந்தானையிலே கையைத் துடைத்துக்கொண்டு எழுந்து நின்றாள்.

அவளைத் தனியாக அதன் பிறகு உள்ளே அழைத்துக் கொண்டு போனார்கள்...

முதலில் தயக்கமாக இருந்தது. போகப் போக அதுவே வழக்கமாகிவிட்டது. அந்தப் பங்களா வாசமும், வயிறு நிறையச் சோறும், சில சமயம் கிடைக்கும் பழங்களும் பாலும், அவளை மடக்கிவிட்டன. அவளால் மறுக்க முடியவில்லை.

கணவனையும், வீட்டையும், குழந்தையையும் நினைத்துப் பார்த்தபோது கொஞ்சம் ஏக்கமாகவும், சிறுது வேதனையாகவும் கூட இருநதது. ஆனால் என்ன செய்ய! பிழைப்பு நடந்தாக வேண்டும். கணவனுக்குச் சம்பாதித்துப் போட வக்கில்லை. குடும்பத்தில் செலவுக்குப் பணம் இல்லை.

கணவனிடம் அதை அவள் சொல்லவில்லை. சொல்லுவதற்கும் பயமாக இருந்தது. மகன் சிங்காரத்துக்கும் அது தெரியாது. அவன் பள்ளிக்கூடத்துக்குப் போய்விட்டுச் சாயங்காலம்தான் வீடு திரும்புவான். அதற்குள் அவள் வீடுதிரும்பிவிடுவாள். கட்டினவனுக்குத் தெரியாமல், பெற்ற மகனுக்குச் சொல்லாமல், பிறந்த குழந்தையையும் வஞ்சித்து விட்டு, இப்படி ஒரு வேலை செய்வதற்கு அவளுக்கு வருத்தமாகத்தான் இருந்தது. ஆனால் அவளுக்கு வேறு வழி இல்லை. ஏழைகளுக்கு நல்லது, கெட்டது



என்று பிரிக்கும் அருகதை இல்லை; பிழைப்பு நடந்தால் சரி தான்.

காளி ஏங்கிப் போனான். கரைத்துக் கொடுத்த மாவைக் குடித்துக் குடித்து வயிற்றில் கட்டி விழுநது விட்டது. மருத்துவம் செய்ய வசதி இல்லை. சோலை கவனிப்பதில்லை. அவளும் வீட்டில் இல்லை.

ஒருநாள் விடி இருட்டில் குழந்தையின் 'கொர் கொர்' என்ற சத்தம் அடங்கிவிட்டது. சோலை தான் குழந்தையைப் புதைக்க எடுத்துக்கொண்டு போனான். விம்மி விம்மி அழுத அஞ்சலையின் முகத்தை அவனால் பார்க்க முடியவில்லை. அவள் முதுகில் ஆதரவாகத் தட்டிக் கொடுத்தான். குழந்தையை அவன் கந்தையில் சுற்றி எடுத்துக் கொண்டு போனான்.

இரவு நேரம்.

அன்று முழுவதும் அஞ்சலை சாப்பிடவில்லை. அன்று சோலையும் வெளியே போகவில்லை.

''அஞ்சலை! ரொம்ப நாளைக்குப் பொறகு நம்ம குடும்பத்துலே எல்லாம் சரியாயிட்டுன்னு நெனெச்சேன். காளி நம்மை அழ அழ விட்டுட்டுப் போயிட்டான்!''

''என்னா சரியாயிட்டுது?'' என்று நிமிர்ந்து பார்த்தாள் அஞ்சலை.

''பழைய மில்லைத் திறந்துட்டாங்க! நாளையிலிருந்து அங்கே வேலைக்குப் போகலாம. சாயங்காலம் ஒழுங்கா வீட்டுக்கு வந்துடுவேன்; நீ வேணும்னா வேலைக்கு போ; இல்லாங்காட்டியும் கவலைப் படாதே! நமக்குச் சோறு துண்ண வசதி இருக்குது''.

அஞ்சலை விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள். வாயில் முந்தானையை வைத்து விம்மலை அடக்கிக்கொண்டாள். அப்படியும் அது தெறித்து விழுந்தது.

''ஏம் புள்ளே அளுவறே?''

''மவனைப் பறிகொடுத்துட்டேன்யா! மறுபடி அந்த வேலைக்குப் போகவா? நான்தான்யா கொளந்தையைக் கொன்னுப்புட்டேன்—''

''என்னாது? என்ன சொல்லுறே? நீ வேலைக்குப் போய்க்கிட்டு இருந்தியா? என்னா வேலை?''

''பங்களாவுலே கொளந்தைக்குப் பால் கொடுக்கிற வேலை. அது கட்டி விளுநத குழநதை. தாய்ப்பால் கெடைச்சாததான உடம்பு சரியாகும்னு சொன்னாங்களாம். பெத்தவளுக்குப் பால் இல்லே! இரவல் தாயா நான் தாய்ப்பால் கொடுததேன். அநத புள்ளே பொழைச்சுட்டுது. என கொளந்தே தாய்ப்பால இல்லாமே கட்டி உளுந்து செத்துப் போயிட்டுது. பால் இருநதும் பெத்த குளந்தைக்குக் கொடுக்க முடியாமப்போன பாவி ஆயிட்டேன்யா! நான் பாவி!'' என்று மார்பில் அடித்துக்கொண்டாள் அஞ்சலை.

பேச வகையறியாமல் அவளையே வெறிக்கப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான் சோலை.

அழுது புலம்பி, கண்ணீர் பெருக்கி ஓய்ந்து, முகத்தைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்தாள் அஞ்சலை.

''கிராமத்துலே... வீட்டுலே தொல்லை வந்தா, நோய் நொடி வந்தா, ஆத்தாளுக்குப் பலிகொடுப்பாங்க... கோழியை வெட்டிப் படையல் வைப்பாங்க. உசிரு பலியானா வீட்டுலே உசிரு பொளைச்சிடும். இங்கே நம்ம வீட்டுலே மறுப்பு எல்லாம் இப்போ சரியாயிடுச்சி. ஆனா அப்புடி எல்லாம் நல்ல படியா ஆவுறத்துக்கு, ஆத்தாளுக்குப் பலி தேவையா இருந்துச்சு! ஒரு உசிரைப் பலியா எடுத்துக்கிட்டா. என் கொளந்தை... உசிரைக் கொடுத்து நம்ம குடும்பத்தைக் காப்பாத்திட்டான்!''

கண்களில் ஓர் அபூர்வ ஒளி பளிச்சிட, ஏதோ ஒரு புதுத் தத்துவத்தைக் கண்டெடுத்துச் சொல்பவளைப்போல, வெறி மிகுந்த குரலில் பேசினாள், அஞ்சலை.

சோலைக்கு அதற்குப் பதில் சொல்லத் தெரியவில்லை!





# வாழ்க இசை





டாக்டர்
பானுமதி ராமகிருஷ்ணா

என்னுடைய இனிய பொங்கல் வாழ்த்துக்கள். தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி என்னும் பெயருடன் சென்னையில் நடைபெறும் இசைக் கல்லூரியின் இயக்குநர் மற்றும் முதல்வராகப் பணியாற்றுவதில் பெருமை அடைகிறேன். இத்தகைய ஒரு அரிய வாய்ப்பினை எனக்கு அளித்த தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் எனக்கு அளித்த இந்தச் சிறந்த வாய்ப்பினைப் பெறுவதன் மூலம் என் தந்தை திரு பொம்மராஜு வெங்கட சுப்பையா அவர்களின் நீண்ட நாளைய ஆசையையும் ஆவலையும் பூர்த்தி செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

கர்நாடக இசையின் வளர்ச்சிக்குத் தனி நாட்டம் கொண்டு செயல்படும் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையிலுள்ள அரசு தற்பொழுது சென்னை அரசு இசைக் கல்லூரியின் நிர்வாகத்தின் நலன் கருதி சென்னை இசைக் கல்லூரியைப் பொறுத்த மட்டில் தனியாக- இயக்ககமாக மாற்றியமைத்து கல்லூரியின் முதல்வர் பதவியினை துறைத்தலைவர் அந்தஸ்துக்கு உயர்த்தி, இயக்குநர் மற்றும் முதல்வர் நிலையில் மேல்நிலைப்படுத்திக் கொடுத்துள்ளது உண்மையிலேயே பெருமைப்படத்தக்கதாகும்.

தற்பொழுது இக்கல்லூரியில் 600க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியரும், இதனைச்சார்ந்த நான்கு மாலைநேரக் கல்லூரிகளில் 200க்கும் மேற்பட்ட மாணவ மாணவியரும் இசை பயின்று வருகின்றனர். முந்தைய ஆண்டுகளைக் காட்டிலும் இசை பயிலும் மாணவ, மாணவியரின் எண்ணிக்கை, சென்ற ஆண்டிலிருந்து இரு மடங்காக அதிகரித்திருப்பது மாணவர்களுக்குள்ள இசை ஆர்வத்தினையும் அதே சமயத்தில் கல்லூரியின் சிறந்த நிர்வாகத்தையும் எடுத்துக்காட்டுகிறது.





இக்கல்லூரியின் பல்வேறு துறைகளிலும் (வாய்ப்பாட்டு, வீணை, வயலின், மிருதங்கம், கடம், நாதஸ்வரம், தவில், புல்லாங்குழல், கஞ்சிரா, பரதநாட்டியம், நட்டுவாங்கம், இசையியல்) 32க்கும் மேற்பட்ட ஆசிரியர்களும், மாலைநேரக் கல்லூரிகளில் பகுதிநேர ஆசிரியர்களாக 13 ஆசிரியர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

1985 ஜூன் மாதம் இக்கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு வகுப்பறைகளைச் சீர்திருத்துதல், ஆசிரியர் ஓய்வு அறைகளை விரிவு படுத்துதல், மாணவ, மாணவிகள் சீருடை அணிய வரையறுத்தல், கல்லூரியைச் சூழ்ந்துள்ள இடங்களைச் சூழ்நிலைக்கேற்ப அமைத்தல் போன்ற பணிகளை நான் நிறைவு செய்துள்ளேன். கல்லூரிக்கென ஒரு சின்னத்தையும் உருவாக்கியுள்ளேன். நீண்ட காலமாக இக்கல்லூரியில் பணிபுரிந்து வந்த ஆசிரியர்களின் பணியானது பணிவரன்முறைப் படுத்தப்படாமலேயே இரு நிலைமையினைக் கண்ணுற்று உடனடி கவனம் மேற்கொண்டு அனைத்து ஆசிரியர்களின் பணியினைப் பணி வரன்முறைப் படுத்தியுள்ளேன் என்பதுடன் இந்த நடவடிக்கையின் தொடர்பாக மதுரை இசைக் கல்லூரி ஆசிரியர்களின் பணியும் பணிவரன்முறைப் படுத்தப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது சென்னை இசைக் கல்லூரியின் முகப்பில் மும்மூர்த்திகள், திருவள்ளுவர் ஆகியோரின் திருவுருவங்கள் அமையப்பெற்ற நுழைவுவாயில் அமைக்க நடவடிககை மேற்கொண்டுள்ளேன் என்பதுடன், இப்பணி அரசின் அனுமதியுடன் விரைவில் முடிவடையவும் உள்ளது. மேற்படி நுழைவுவாயில் அமைக்கப் பெறுவதால் சென்னை இசைக் கல்லூரியில் நுழையும்பொழுதே ஓர் இசைக் கோயிலின் உள்ளே நுழைவது போன்ற ஓர் உணர்வினை ஏற்படுத்தும் என உறுதியாக நம்புகிறேன்.

கர்நாடக இசையின் தொன்மையைப் பேணிக் காப்பதற்கும், இசையறிவினைப் பரப்புவதற்கும் இக்கல்லூரி இயங்கி வருகிறது. தற்பொழுது இக்கல்லூரியில் இதர மாநில மாணவ, மாணவிகள் பலரும் இசை அறிவு பெறுவதுடன் மொரீசியஸ், மலேசியா, இலங்கை, கலிபோர்னியா, பிரான்ஸ் போன்ற அயல் நாடுகளிலிருந்தும் கர்நாடக இசை ஆர்வம் காரணமாக இங்கு வந்து இசை பயின்று வருவது மிகவும் பெருமைப்படத்தக்க ஒன்றாகும். இசை உலகில் பெரும்புகழ் பெற்றுத் திகழ்ந்த மூத்த இசைவாணர்கள் பலரும் இக்கல்லூரியில் ஆசிரியர்களாகப் பணி புரிந்திருக்கின்றனர்.



இளைஞர்கள் கர்நாடக இசையின்பெருமையை உணர்ந்து அதனைச் சிறப்புடன் கற்றுத் தேற வேண்டுமென்ற ஆவலினால் இசை ஆர்வமிக்க பல தொழிலதிபர்களும் தர்ம சிந்தனை உள்ளவர்களும் இக்கல்லூரி மாணவ மாணவிகளில் அரசுத் தேர்வில் சிறப்பாகத் தேர்ச்சி பெறுபவர்களுக்கு தங்கப் பதக்கங்கள் வழங்குவதற்கும் மற்றும் உதவித் தொகை வழங்கப் பெறுவதற்கும் நிதி உதவி செய்து வருகின்றனர். இது போன்று இசையின் மீது நாட்டம் உள்ள பலரும் இவ்விசையின் வளர்ச்சிக்கென உதவ முன் வந்தால் இன்னும் நிறைய மாணவ, மாணவிகள் கர்நாடக இசையினைக் கற்க ஆர்வமுடன் முன்வருவார்கள் என்பதுடன் சென்னை தமிழ்நாடு அரசுஇசைக் கல்லூரி பிற்காலத்தில் நன்கு வளர்ச்சி பெறுவதற்கு வாய்ப்புண்டு.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்து வரும் ஊக்கத்திலும், இக்கல்லூரியின் வளர்ச்சிப்பணிகளுக்குத் தொடர்ந்து நல்கும் ஆதரவும் சென்னை தமிழ் நாடு அரசு இசைக் கல்லூரி கூடியவிரைவில் பலதுறைகளிலும் வளர்ச்சி பெற்றுத் தென்னகத்தில் - ஏன், இந்தியாவிலேயே சிறந்ததொரு இசைப் பல்கலைக் கழகமாக உருவாகும் என்பதில் எனக்கு நிறைய நம்பிக்கை உள்ளது.

வாழ்க இசை, வளர்க தமிழ்.



# வளர்ந்தோங்கும் அண்ணா மாவட்டம்

நிர்வாக வசதிகளை முன்னிட்டு பெரிய மாவட்டங்களைப் பிரித்துப் புதிய மாவட்டங்களை தமிழக அரசு உருவாக்கி வருகிறது. அந்த அடிப்படையில் மதுரை மாவட்டத்தைப் பிரித்து அண்ணா மாவட்டம் உருவாக்கப் பட்டது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களால் 15.9.85 அன்று தொடங்கி வைக்கப்பெற்ற - திண்டுக்கல்லைத் தலைநகரமாகக் கொண்ட அண்ணா மாவட்டம் நித்தமும் வளர்ந்தோங்கி வருகிறது.

திண்டுக்கல் நகரம் பூகோளத்தின்படி 78 டிகிரி கிழக்கு தீர்க்க ரேகையிலும், 10 டிகிரி வடக்கு அட்ச ரேகையிலும் அமைந்துளளது. தமிழ்நாட்டில் அநேகமாக மத்திய பகுதியில இருக்கிறது. மைசூர் யுததத்தின் போது இநத நகரம் சரித்திரத்தில் ஒரு முககிய மான பிரதேசமாக இருநதுள்ளது. இந்நகரம் மேற்கேயுள்ள மலைக் குன்றில் திப்புசுல்தான் மேற்படி யுத்தத்தின்போது சேனைகள் தங்குவதற்குப் பாசறைகள், அதைச் சுற்றி ஒரு கோட்டையும் நிறுவினார். மலையில் ஒரு கோவிலும், புகழ்வாய்ந்த இராணுவப் பாசறைகளும் இந்த நகருக்கு வரும் யாத்திரிகாகளை மிகவும் கவருகிறது. மலை உச்சியிலிருந்து நகர் முழுவதையும் மிகத் தெளிவாகக் காணலாம்.

இந்நகர் திண்டுக்கல் எனப் பெயர் பெற்றதற்குக் காரணம் இம்மலைக் கோட்டை ஒரு 'திண்டு' போல் இருப்பதே ஆகும். சுற்றிலும் மலைகளால் சூழப் பட்டு உடல் நலத்திற்கு உகந்த சீதோஷ்ண நிலையில் கடல் மட்டத்திலிருந்து சுமார் 1000 அடி உயரத்தில் உள்ளது. குறிப்பாக க்ஷயரோகத்தில் பீடிக்கப் பட்டுள்ள நோயாளிகளுக்கு இது ஒரு சுக வாசஸ்தலமாக விளங்குகிறது. 1866ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1ஆம் தேதி சென்னை மாநிலத்தில பிரகடனப்படுத்தப் பட்ட 29 நகரங்களில் இது ஒன்றாகும்.

1602ஆம் ஆண்டிலிருந்து 1609ஆம் ஆண்டு வரை மதுரையை ஆண்ட முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கரால் 1605இல் திண்டுக்கல் கோட்டை முதன்முதலாகக் கட்டப்பட்டதாக வரலாறு கூறுகிறது. 1815ஆம் ஆண்டில் வந்த டர்ன்புல், சீஸ் என்ற எழுத்தாளர்கள், 'பக்தர்கள் பெயரால் ஒற்றர்கள் கோட்டைக்குள் நுழைந்து உளவு அறிய ஏதுவாகும்' என சந்தேகித்த திப்புசுல்தான், மலைக்கோட்டையின் நடுவில் கோயில் கொண்டிருந்த(அபிராமி அம்மன்) விக்கிரகத்தை எடுத்து மலையின் கீழே இப்போது ஊருக்குள்ளிருக்கும் கோயிலில் பிரதிஷ்டை செய்யக் கட்டளையிட்டார் என்று எழுதியிருக்கிறார்கள்

திண்டுக்கல் நகர்மன்றம் 118 ஆண்டுகளைக் கடந்துள்ள இந்நாளில் சுமார் 360 ஆண்டுக்கு

முன்கட்டப்பட்டகோட்டையைப் பார்க்கிறோம். என்றும் அழியாத நினைவுச் சின்னமாக இக் கோட்டை, கல், மண் கலந்து கட்டப்பட்டதென நம்பவே முடியாதவாறு பிரமாண்டமான உருக்குக் கோட்டையாகத் திகழ்கிறது.

இது கட்டப்பட்ட காலத்தில் இக்கோட்டையைச் சுற்றியும், ஒட்டியும் ஒரு அகழியிருந்ததாக பிரான்ஸிஸ் எழுதியுள்ள மதுரை மாவட்ட கெஜட்டில் கூறப்படுகிறது. இன்று அந்த அகழி தூர்ந்துவிட்டது.

சுமார் 1209 அடி நீளமும், 900 அடி அகலமும், 280 அடி உயரமும் கொண்ட இம்மலையிலுள்ள கோட்டையைப் பிடிக்க, மைசூர் மன்னர்களும், ஆங்கிலேயர்களும் மாறி மாறிப் பலமுறை முயன்று, கோட்டைவிட்ட சுவையான வரலாறு உண்டு.

1736ஆம் ஆண்டு நாயக்கமன்னரிடமிருந்து சந்தாசாகிப் என்பவர் திண்டுக்கல் கோட்டையைப் பிடித்துத் தன்னுடைய இளைய சகோதரர் சதக் சாகிப் என்பவரைப் பரிபாலிக்கக் கட்டளையிட்டார். பின்பு 1747ல் மராத்தியர் ஒரு பக்கமும், உத்தம பாளையத்திலிருந்து ராம நாயக்கர் என்ற பாளையக்காரர் மற்றொரு பக்கமும், மைசூர் பர்க்கி வெங்கிடராவ்வேறொரு பக்கமும் தாக்கினார்கள். ஆனால், இறுதியில் மைசூர்க் காரர் வசமானது.

### ஹைதர் ஆட்சி

மைசூர்க்காரரைப் பாளையக்காரர்கள் அடிக்கடி துன்புறுத்தி வந்தார்கள். ஆகவே, 1755ல் பாளையக்காரரை அடக்க ஹைதர்அலி திண்டுக்கல்லுக்கு அனுப்பப்பட்டார். 1767ல் ஆங்கிலக் கம்பெனியின் தளபதி முகம்மது யூசுப் என்பவரால் ஹைதர்அலி விரட்டப்பட்டு, கோட்டை ஆங்கிலேயர் வசமானது. ஆனால், மறு ஆண்டே ஆங்கிலேயரைத் துரத்தியடித்தார் ஹைதர்அலி. ஹைதர்அலி மனைவியின் சகோதரி அமரானுஸ்ஸாபீகத்தின் கணவர் மீர் ராஜாளிகான் என்பவர் 1772-லிருந்து 1782 வரை 10 ஆண்டுகள் திண்டுக்கல்லில் ஹைதரின் பிரதிநிதியாக இருந்து வந்தார். 1773ல் அமருனுஸ்ஸா பீகம் இறந்துவிட்டார்.

திண்டுக்கல் மலைக்கோட்டைக்குத் தென்புறம் ஒரு மசூதி இருக்கிறது. அதல் ஒரு பாரசீகக் கல்வெட்டிலிருந்து, அந்த மசூதியில் அமருனுஸ்ஸா பீகம் என்பவர் சமாதி இருப்பதாகவும், அதைப் பராமரிப்பதற்காக இனாமாக விடப்பட்ட இடம்தான் 'பீகம்பீர்' என்று அழைக்கப்படுவதாகவும் வரலாறு சான்று கூறுகிறது. 'பீகம்பீர்' என அழைக்கப்பட்ட இடம்தான் இன்று 'பேகம்பூர்' என வழங்குகிறது.

### திப்புசுல்தான் வந்தார்

1783ல் ஆங்கிலேயர் திரும்பவும் திண்டுக்கல் கோட்டையைக் கைப்பற்றினார்கள். 1784ல் ஆங்கிலேயருக்கும், மைசூர்க்காரருக்கும் மங்களூரில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி ஆங்கிலேயர் மறுபடியும் மைசூர்க்காரர் வசமே ஒப்படைத்தார்கள். 1788ல் திப்புசுல்தான் திண்டுக்கல் வந்தார்.

1790ஆம் ஆண்டில் இரண்டாவது மைசூர் யுத்தத்தில் மீண்டும் ஆங்கிலேயர் கைப்பற்றினர். 1947 ஆகஸ்ட் 14 வரையில் ஆங்கிலேயரின் ஆளுகையில்தான் இருந்திருக்கிறது. 1947 ஆகஸ்ட் 15ல் இந்தியா, வெள்ளையர் பிடியிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமடைந்தது. ஆக, சுமார் 157 ஆண்டுகள் திண்டுக்கல் கோட்டை ஆங்கிலேயருடைய ஆட்சியிலிருந்திருக்கிறது. இந்தியாவில் ஆங்கிலேயர் அடியெடுத்துவைத்த காலை, மதுரை மாவட்டத்தில் முதன்முதலாக அவன் இரும்புக் கரங்களுக்குக் கிட்டிய பகுதியும் திண்டுக்கல்தான்.

திண்டுக்கல்லிலிருந்து வடக்கே 8 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ள தாடிக்கொம்புகிராமம் ஒரு காலத்தில் திண்டுக்கல் வட்டத் தலைமை இடமாகவும் அங்கேயே மாவட்ட ஆட்சியரின் விசாரணைகள் நடந்ததாகவும் சரித்திரம் கூறுகிறது. இங்கு அமைந்துள்ள அழகர் என்ற சுந்தரராஜப் பெருமாள் கோவிலைச் சுற்றியுள்ள சிற்ப வேலைப்பாடுகள் மதுரை திருமலைநாயக்கர் காலத்திய சிற்பங்களைப் பிரதிபலிக்கின்றன. இந்தக் கோவிலின் சிற்ப வேலைப்பாடுகளும் முன்னால் அமைந்துள்ள மண்டபமும் மிகவும் சிறப்புப் பெற்றவையாகும்.

### அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அதிக வருமானம் பெறும் திருக்கோயிலாகும். நாட்டின் பல பாகங்களிலிருந்தும், பெரும்பான்மையான பக்தர்கள் கூடும் திருத்தலமாகும்.

இத்திருக்கோயிலின் சென்ற பசலி ஆண்டு வருமானம் ரூ.

அண்ணா மாவட்டத் தொடக்க விழா



3,33,37,240 ஆகும். இதில் 33 சதவீதம் உண்டியல் மூலமாகப் பெறப்படும்வருவாயாகும். இந்தப் பசலி ஆண்டு எதிர்பார்க்கும் வருமானம் 4 கோடி ஆகும். இத் திருக்கோயிலின் பல முதலீடுகளில் ரூ. 6¼ கோடி அளவில் உபரி நிதி சேமிப்பாக உள்ளது. நடப்பு ஆண்டில் அதாவது கடந்த 11 மாதங்களில் வந்த வருமானத்தில் செலவுபோக ரூ.1,23,73,000 உபரி நிதி சேமிப்பாகப் போடப்பட்டுள்ளது. இவை நீங்கலாக கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணித் திட்டத்திற்காக இத்திருக்கோயில் நிதியினின்று ரூ.1கோடி தனி நிதியாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. மற்றும் தமிழ்நாடு ஆலய மேம்பாட்டுத் திட்ட நிதி, தமிழக திருக்கோயில் பணியாளர்கள் நலநிதித் திட்டம் ஆகிய இரு திட்டங்களுமாக இத் திருக்கோயில் நிதியினின்று ரூ.1,68,00,000 அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலுள்ள கிராமப்புறங்களில் அமைந்துள்ள சிறிய திருக்கோயில்கள் பல பழுதடைந்து திருப்பணி செய்ய நிதி வசதியின்றி உள்ளன. இக்கோயில்களைப் பழுதுபார்த்து திருப்பணி செய்வதற்குத் திருக்கோயில் நிதியிலிருந்து ரூ. 1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிரந்தர வைப்பு நிதியாக வங்கிகளில் மூலதனம் செய்யப்பட்டு அதனின்று கிடைக்கும் வட்டி வருவாயினின்றும் கிராமப்புறக் கோயில்களின் திருப்பணிக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் ஏற்கெனவே 1985ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டுள்ள 85 திருக்கோயில்களுடன் மேலும் 65 கோயில்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மொத்தம் 150 திருக்கோயில்களின் திருப்பணிக்காகச் சென்னை அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் 13.3.86 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் ரூ. 15 இலட்சம் வழங்கப்பட்டது. மேலும் இத் திட்டத்தின் கீழ்பயனடையத்தக்க ஆலயங்களைக் கணக்கிட்டு தொடர்ந்து நிதியுதவி அளித்து திருப்பணி செய்ய நடவடிக்கை உள்ளது.

பழனி மலையை மேன்மேலும் பசுமையாக்கி அழகுபடுத்த வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில் மலையில் தோட்டங்கள் நிறுவியும், அழகிய பூங்காக்கள் அமைத்தும், மலையின் அழகினை வளர்க்கத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



அதிகாலையில் மிகுந்த ஆர்வமுடன் காத்திருந்து முதல் பூசையின் பொழுது ஆண்டவனைத் தரிசித்துத்திரும்பும் பக்தர்களின் மனத்திருப்தியைக் கருதி அவர்களுக்கு சுவாமிக்கு அர்ச்சனை செய்த மலரைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மலைக்கோயிலுக்குச் செல்லும் பாதைகளின் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடங்களை, வருவாய்த்துறை, மற்றும் காவல் துறையினரின் ஒத்துழைப்புடன் கோயில் பணியாளர்களைக் கொண்டு அனைத்தும் (கட்டடங்களையும், கடைகளையும்) அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. மலைக் கோயிலுக்கு செல்லும் கிரிவதியும் பாதவிநாயகர் கோயிலை ஒட்டியுள்ள பகுதியும் போக்குவரத்திற்கும், பக்தர்கள் செல்லுவதற்கும் வசதியாக மிகவும் அகலமாகி உள்ளன. இதனால் சாலைகள் புதுத்தோற்றத்துடன் விசாலமாகக் காணப்படுகின்றன.

மலைக்கோயில் பிரகாரங்கள் விரிவுபடுத்தும் பணியில் ஏற்கெனவே கிழக்கு மற்றும் வடக்குப் பகுதிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. தெற்குப் பிரகாரம் விரிவுபடுத்தப்பட்டுள்ள பிரகாரத்தின் மேல் தளத்தில் பக்தர்கள் நடந்து செல்வதற்கும், கூட்ட காலங்களில் வரிசையை ஒழுங்குபடுத்தவும், தங்கரதத்திற்குச் சௌகரியமாகவும் போதுமான இடவசதி உள்ளது. கீழே உள்ள நிலவறை சரக்கறையாகப் பயன்படுத்திக் கொள்ளவும் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

இத்திருக்கோயில் சார்பில் குழந்தைகளுக்கான ஆங்கிலப் பள்ளி கடந்த 15 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகின்றது இப்பள்ளிக்கு நிரந்தர கட்டடம் இல்லாததால் இப்போது வடசேரி மடம் காலியிடத்தில் சுமார் 5 இலட்சம் செலவில் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

மலைக்கோயிலையும், திருக்கோயிலையும் அழகுபடுத்தும் திட்டத்தின்கீழ் மலைக்கோயிலைச் சுற்றியுள்ள இடங்களில் பூங்காக்கள் அமைத்து வரப்படு

கிறது. இத்திருக்கோயிலிலிருந்து முதலீடுபெறும் பல வங்கிகள் மேற்படி பூங்காக்களை உபயமாக அமைத்திருக்கின்றன.

பக்தர்கள் தங்குவதற்கெனத் திருக்கோயில் நிர்வாகம் பல தங்கும் விடுதிகளைக் கட்டிப் பராமரித்து வருகிறது. இவற்றின் படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணை உறைகள் அவ்வப்போது வாங்கப்பட்டுப் புதிதாக மாற்றுவதற்கும், அவைகளைச் சலவை செய்து தருவதற்கும், நன்கு சுத்தமாக வைத்து அவ்வப்போது மாற்றுவதற்கும் கூடுதல் எண்ணிக்கையில் இவை வாங்கப்பட்டு நன்கு பராமரிக்கப்படுகிறது.

பத்தர்கள் இறைவனைத் தரிசிப்பதற்கென்றே மலைமீது ஏற முதன் முதலில் மின் இழுவை ரயில் விடப்பட்டது பழனியில் தான் என்பது குறிப்பிடத்தக்கது. மின்சாரத்தின் உதவியால் இயங்கும் இந்த மின் இழுவை ரயில், வயது முதிர்ந்தவர்களும், நடக்க முடியாதவர்களும், உடல் நலம் இல்லாதவர்களும், குழந்தைகளும் மலைமீது சென்று ஆண்டவனை தரிசித்துவர இதுமிகவும் உதவியாக இருக்கிறது.

இப்போது இரண்டு மின் இழுவை ரயில்கள் இயங்குகின்றன. இந்த ரயில்கள் எட்டு நிமிடங்களில் மலையின் உச்சியைச் சென்றடைந்து, அங்கிருந்து புறப்பட்ட எட்டு நிமிடங்களில் அடிவாரத்தை வந்தடைகின்றன.

இந்த மின் இழுவை ரயில்கள் காலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை இயங்குகின்றன. இந்த ரயிலில் பயணம் செய்ய, ஒரு தடவைக்குப் பெரியவர்களுக்குத் தலா ரூ.2, 10வயதுக்கு உட்பட்டவர்களுக்குத்தலா ரூ. 1 கட்டணமாக வசூலிக்கப்படுகின்றது. மூன்றாவது மின் இழுவை ரயில் ஒன்று விரைவில் நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**அண்ணா மாவட்டம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் குடும்பத்திற்கு ஒரு வீடு அளிக்கும் திட்டம்...**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திட்டங்களுக்கிணங்க பொருளாதாரத்தில் நலிவுற்றோர்; குறைந்த வருவாய்ப் பிரிவினர், நடுத்தர வருவாய்ப் பிரிவினர் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர் ஆகியோருக்காக அடிப்படை வசதிகளுடன் தனித்தனி வடிவமைப்புகளில் வீடுகளைக் கட்டித் தருகின்றது.

அண்ணா மாவட்டத்தின் தலைநகரான திண்டுக்கல் ஒரு பெரிய நகரம். மேலும் தொழில் வளர்ச்சியடைந்த நகரமானதாலும் மக்கள் பெருக்கம் அதிகமான நகரமானதாலும் தமிழக அரசானது திண்டுக்கல் நகரத்தில் வீட்டு வசதியினைப் பெருக்கத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தைப் பணித்தது.

தமிழக அரசின் கருத்தினைச் செயலாக்கும் முகமாக வீட்டு வசதி வாரியம் இதுவரை 182 ஏக்கர் நிலம் கையகப்படுத்தி அதில் பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கு 40 வீடுகளும், குறைந்த வருவாயினருக்கு 74 வீடுகளும், நடுத்தர வருவாயினருக்கு 100 வீடுகளும் மற்றும் உயர் வருவாயினருக்கு 24 வீடுகளும் திட்ட மதிப்பு ரூ. 161 இலட்சங்களில் கட்டி முடித்துள்ளது.

மேலும் கட்டம் இரண்டில் நடுத்தர வருவாயினருக்கு 180 குடியிருப்புகளும், உயர் வருவாய்ப் பிரிவினருக்கு 25 குடியிருப்புகளும் ரூ. 74 இலட்சங்கள் மதிப்பீட்டில்கட்டப்பட்டு வருகின்றன. ரூ.178 இலட்சங்கள் மதிப்பீட்டில் நடுத்தர வருவாயினருக்கு 204 குடியிருப்புகளும் மற்றும் உயர் வருவாயினருக்கு 96 குடியிருப்புகளும் கட்டப்பட்டு வருகின்றன. இது தவிர திண்டுக்கல்லில் வரும் ஆண்டுகளில் வீட்டு வசதியைப் பெருக்க நடுத்தர வருவாயினருக்கு 924 குடியிருப்புகளும், உயர் வருவாயினருக்கு 340 குடியிருப்புகளும் திட்ட மதிப்பு ரூ. 858 இலட்சங்களில் கட்ட உத்தேசிக்கப்பட்டு அதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது தவிர மேலும் சுமார் 381 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டு அதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



வரும் நடப்பாண்டுகளில் திண்டுக்கல்லில் சுமார் 1264 குடியிருப்புகள் கட்டத் திட்டமிடப்பட்டு பூர்வாங்கவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத்திட்டங்கள் பூர்த்தியடையும் முன்பாக மக்களின் அடிப்படைத் தேவையான மருத்துவமனை, பள்ளிக்கூடம், தபால் அலுவலகம், திருமண மண்டபம், விளையாட்டு அரங்கம், அங்காடி மையங்கள் ஆகியன ஏற்படுத்திக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழக அரசானது அரசு ஊழியரின் வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு அரசு ஊழியர்கள் குடியிருப்புகளின் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கிட்டப்பணித்துள்ளது, திண்டுக்கல்லில் ஏற்கெனவே 72 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பெற்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் ரூ. 130 இலட்சங்கள் திட்ட மதிப்பீட்டில் 114 அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு நடப்பு ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டன. மேலும் 84 வீடுகள் ரூ. 56 இலட்சத்தில் அரசு அலுவலர் குடியிருப்புகள் கட்டி முடிக்கும் தறுவாயில் உள்ளன.

இது தவிர கூட்டுறவுச் சங்கங்களுக்கு 'ஹட்கோ' நிதியுதவியுடன் உறுப்பினர் கட்டுமான மதிப்பீட்டில் 30% பணம்பெற்றுக் கொண்டு வீடுகளைக் கட்டும் திட்டமும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தினால் கட்டப்படுகிறது. தற்சமயம் ஒட்டன்சத்திரத்தில் இதன் அடிப்படையில் ரூ.102 இலட்சங்கள் செலவில் 180 குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தினால் கட்டப்பட்டு வருகின்றன. அண்ணா மாவட்ட வருவாய்க் கோட்டங்களில் ஒன்றான கொடைக்கானலில் 6.00 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 480





குடியிருப்புகள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டு அதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. மேலும் நிலக்கோட்டையில் 50 ஏக்கர் நிலமும், பழனியில் 34 ஏக்கர் நிலமும் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டு அதற்கானவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**அண்ணா மாவட்டம் திண்டுக்கலில் தோல் பதனிடும் கூட்டுறவுச் சங்கம்..**

திண்டுக்கல் தோல் வர்த்தகத்தில் சிறந்து விளங்கக்கூடிய நகரம். சிறிதும், பெரிதுமான ஏராளமான 'தோல்' பதனிடும் தொழிலகங்கள் நிறைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு, திண்டுக்கல் முடிவுறும் தோல் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் 1978ல் துவங்கப்பட்டது. சிறிய அளவில் தோல் பதனீட்டுத் தொழில் புரிவோர் தங்களுடைய ஆடு, மாடு தோல்களை (முடி நீக்கப்பட்ட நிலையில்) கொண்டுவந்து கொடுத்து குறைந்த கட்டணத்தில் தேவையான வண்ணங்களில் இறுதி நிலைப்படுத்திப் பெற்றுச் செல்கின்றனர்.

இந்தச் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் சுமார் 1½ கோடி ரூபாய் மூலதனத்தில் துவங்கப்பட்டது. இங்குள்ள இயந்திரங்கள் அனைத்தும் பிரான்ஸ், இத்தாலி, மேற்கு ஜெர்மன், செக்கோஸ்லோவேகியா போன்ற வெளிநாடுகளிலிருந்து சுமார் 90 இலட்சம் ரூபாய் செலவில் தருவிக்கப்பட்டுள்ளன.

இந்த நவீன இயந்திரங்கள் மூலம் தோல் பதப்படுத்தப்பட்டு, வண்ணமிட்டு பத்து முதல் பதினைந்து தினங்களுக்குள் சிறு தொழில் முயற்சியாளர்களுக்குக் கிடைக்க வாய்ப்புள்ளது. மின் சாரத்தடையினால்பாதிக்கப்படாமலிருக்க ரூ.2 இலட்சம் செலவில் ஜெனரேட்டர் பொருத்தப்பட்டுள்ளது. 58 உறுப்பினர்களுடன் பதிவு செய்யப்பட்டுள்ள இச்சங்கத்தில் 11 இயக்குநர்களைக் கொண்டு நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இலாபகரமாகத் தொழில் வணிகத் துறையின் மேற்பார்வையில் திண்டுக்கல் முடிவுறும் தோல் சேவைத் தொழிற்கூட்டுறவுச் சங்கம் இயங்கி வருவதை யாரும் மறுப்பதற்கில்லை.

**திண்டுக்கல் பூட்டுத் தொழிலாளர் தொழில் கூடடுறவுச் சங்கம்**

திண்டுக்கல் பூட்டு மிகவும் பிரசித்தி பெற்றது. திண்டுக்கல்லில் கடந்த 28 ஆண்டுகளாகத் திண்டுக்கல் பூட்டுத் தொழ்லாளர் தொழில் கூட்டுறவுச் சங்கம் மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. சுமார் 70 தொழிலாளர்கள் வேலை செய்யும் இந்தச் சங்கம் தயாரிக்கும் பூட்டுகளுக்கு வட மாநிலங்களில் நல்ல கிராக்கியுள்ளது.

இச்சங்கம் துவக்கம் முதல் தற்போது வரை இலாபகரமாகவே இயங்கி வருகிறது. கடந்த 1981-82ஆம் ஆண்டில் ரூ.3 இலட்சத்து 30 ஆயிரமாக இருந்த உற்பத்தி 1985-86ல் ரூ. 7 இலட்சத்து 80 ஆயிரமாக உயர்ந்துள்ளது. 1986-87ல் ஆண்டிற்கு ரூ.11 இலட்சம் உற்பத்திக் குறியீடாக நிர்ணயித்துச் செயல்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் இச்சங்கம் ஈட்டிய இலாபம் ரூ. 1 இலட்சத்து, 21 ஆயிரமாகும். சங்கம் வெற்றி நடை போடக் காரணம், இச்சங்கத்தில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்குப் போனஸ் வழங்குவது சிறப்பம்சமாகும்.

அரசு இத்தொழிற் கூடத்தை விரிவுபடுத்தி நவீனமயமாக்க ரூ. 1 இலட்சம் அனுமதித்துள்ளது. இங்குள்ள தொழிலாளர்களுக்குச் சங்கம் சீருடையும், ஈட்டுறுதிப் பணம், வருங்கால வைப்புநிதி போன்றவற்றிற்கு ஏற்பாடு செய்து ஊக்கமும், உற்சாகமும் கொடுப்பதே இச்சங்கத்தின் வெற்றிக்குக் காரணம்.

# தமிழ் வளர்க்கும் அரசு



## தவத்திரு குன்றக்குடி அடிகளார்



தமிழ்நாடு அரசு மக்கள் விரும்பி ஏற்றுக் கொண்ட அரசு; தமிழர் அரசு; தமிழரசு. ஆதலால, தமிழ்மொழி வளர்ச்சிக்கு-மேலும் சிறந்த பணிகளுக்குத் திட்டமிடுதல் வேண்டும். பொன மனச் செம்மல் - மாண்புமிகு முதல்வர் தலைமை ஏற்றுள்ள அரசில் - தமிழ்நாடு- அரசில் தமிழ்ப் பண்பாட்டுத் துறை ஒன்றாக அமைந்தது. இது வரலாற்றுச் சிறப்புடைய பணி. தமிழ்ப் பல்கலைக்கழகமும் தோன்றியது. இந்த முயற்சிகள் தமிழ் வளாச்சிக்குரிய அடிப்படைகள் போல்வன.

தமிழ்ப் பண்பாடு காலத்தால் மூத்தது; கொள்கையில் சிறந்தது. இந்தப் பண்பாடு உரிய தனத் தன்மையுடன் பாதுகாக்கப்பெறுதல் வேண்டும். இநதப் பண்பாடு சமயந்தழீஇயது. ஆனால் சமயம் சாராதது. தமிழ்நெறி தனித் தன்மை உடையது. அதே போழ்து பொதுத்தன்மையுடன் முரண்படாதது. ஆனாலும் அடிக்கடி அயல்வழக்குகள் ஊடுருவல் செய்துள்ளன. இந்த ஊடுருவல்கள் இனி எதிர்வரும் காலத்தில் ஊக்குவிக்கப்படுதல் கூடாது. செந்தமிழ் வழக்கு அயல் வழக்கின் துறை வென்று விளங்குதல் வேண்டும்.

தமிழ், தமிழ்நாட்டின் கல்வித் துறையின் அனைத்துப் பிரிவுகளிலும் பயிற்று மொழியாதல் வேண்டும்.

ஆங்கிலம் ஒரு மொழியாகக் கற்பிக்கப்பெற வேண்டுமே யொழிய எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஆங்கிலம் பயிற்று மொழியாக நீடித்தல் கூடாது.

தமிழ், துறைதோறும் வளர்வதற்குரிய முயற்சிகள் காலக் கெடுவுடன் கூடிய பணித்திட்டத்துடன் மேற்கொள்ளப் பெறுதல் வேண்டும்.

திருக்குறளை இந்திய நாட்டு நூலாக்கும் முயற்சயைத் தீவிரப் படுத்துதல் வேணடும்.

இந்திய மொழிகள் அனைத்திலும திருக்குறளும், திருக்குறளை மையமாகக் கொண்ட ஆய்வு நூல்களும் வெளியிடப் பெறுதல் வேண்டும்.

உலகந்தழீஇய திருக்குறள் வளர்ச்சிக கருத்தரங்குகள் - மாநாடுகள் நடததுதல் வேண்டும்

திருவள்ளுவர் முதற் பாவலர்; சிறநத சிநதனையாளர். திருக்குறள தமிழிலேயே பிறநத தனித்தன்மை மிக்க நூல். திருக்குறள் வேறு எந்த மொழியிலருந்தும் வந்ததல்ல. திருக்குறள் எநத ஒன்றைப் பின் தொடாநது வநத வழிநூலும் அல்ல. திருககுறள, ஒனறைத தழுவிப் பிறந்த நூலும் அல்ல. இன்று சிலா தனத்தன்மைக்குக் கேடு செய்யும் வகையில் எழுதியும் பேசியும் வருகின்றனர். தமிழ்நாடு அரசு திருக்குறளைத் தமிழ்நாட்டு அரசன் நாட்டு நூலாக அறிவிக்க வேண்டும். பொது நிகழ்ச்சிகள் அனைத்திலும் தமிழ்த்தாய் வாழ்த்தினைத் தொடர்ந்து திருக்குறள் சொல்லித் தொடங்கும்படி செய்ய வேண்டும். தமிழ்நாட்டு அரசின் பரிசாக வெளிநாட்டு அரசுப் பிரதிநிதிகளுக்குத் திருக்குறள் ஆங்கிலப்பதிப்பு வழங்கலாம். இங்ஙனம் தமிழ்நாடு அரசு துறைதோறும் தமிழை வள்ர்க்க வேண்டும். இது நமது பொங்கல் வேண்டுகோள்! வாழ்க, பொன் மனச் செம்மல்! வளர்க அவர்தம் அரசு! தமிழ் வளர்க! வாழ்க, தமிழ்!



# தமிழன் கண்ட கலைகள்

முத்தமிழ்க் காவலர்

கி. ஆ. பெ. விசுவநாதம்





தமிழ் மக்கள் எதனையும் துருவி ஆராய்ந்து, கண்டெடுத்து, தொகைப்படுத்தி, வகைப்படுத்தி, முறைப்படுத்தி, பெயர்ப்படுத்தி, செயற்படுத்தி இருக்கின்றனர். இது ஆய்வுக்கலை எனப்பெறும். இதைக் கண்டவர்கள் தமிழகத்துச் சான்றோர்கள். அதுவும் இன்று நேற்று அல்ல, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு.

**இசை:** இசையை ஏழாகக் கண்டனர். குரல், துத்தம், கைக்கிளை, உழை, இழி, விளரி, தாரம் எனக் கண்டு ஏழாயிரம் ஆண்டுகளாயின. இன்னும் எவரும் எட்டாவது இசையைக் காணவில்லை.

**சுவை:** சுவையை ஆறாகக் கண்டனர். இனிப்பு, புளிப்பு, கசப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு எனக்கண்டு பல ஆயிரம் ஆண்டுகளாயின. இன்னும் எவரும் ஏழாவது சுவையைக் காணவில்லை.

**நிலம்:** நிலத்தை ஐந்தாகக் கண்டனர். மலையும், மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி. காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லை. மணலும் மணலைச் சார்ந்த இடமும் பாலை. கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல். ஊரும் ஊரைச் சார்ந்த இடமும் மருதம் எனக் கண்டு ஐயாயிரம் ஆண்டுகளாயின. இன்னும் ஆறாவது நிலப் பரப்பை எவரும் காணவில்லை. அந்தந்த நிலங்களில் விளையும் மலர்களின் பெயரையே நிலங்களுக்கும் வைத்திருப்பது வியப்பைத் தருகிறது.

**காற்று:** இசையை ஏழாக, சுவையை ஆறாக, நிலத்தை ஐந்தாகக் கண்டவர்கள்தான் காற்றையும் நான்காகக் கண்டு வகைப்படுத்தி, பெயர்ப்படுத்திச் செயல்படுத்தியிருக்கிறார்கள். கிழக்கேயிருந்து வருகிற காற்றுக்குப் பெயர் ''கொண்டல்'' எனவும், அது மேகத்தின் மூலம் கடல் நீரை அள்ளி மழையாகப் பொழிந்து முல்லை நிலத்தை வாழ்விக்குமெனவும், மேற்கேயிருந்து வருகிற காற்று ''கோடை'' எனவும் அது ஆற்றின் மூலம் நீரைக் கொண்டுவந்து மருத நிலத்தை வாழ்விக்குமெனவும், வடக்கே இருந்து வருகிற காற்று ''வாடை'' எனவும், அது பயிர்களை வளர்க்குமெனவும், தெற்கேயிருந்து வருகிற காற்றுக்குப் பெயர் ''தென்றல்'' எனவும், அது மக்களை வளர்க்குமெனவும், ஆய்ந்து தமிழகத்துக்கு நான்கு புறத்திலிருந்தும் காற்று வருமெனக் கண்டு கூறியிருக்கிறார்கள். சில நாடுகளில் காற்று நான்கு புறங்களிலிருந்தும் வருவதில்லை.

**மொழி:** காற்றை நான்காகக் கண்டவர்கள் மொழியை மூன்றாகக் கண்டிருக்கிறார்கள். உலகில் எந்த மொழியும் இரண்டாகக் கூட இல்லை. ஒன்றாகவே உள்ளன. தமிழ்மொழியை மட்டுமே மூன்றாகக் கண்டு கூறி இருக்கிறார்கள். இது, இயல், இசை, நாடகம் என்றாகும். இவை எண்ணம், துணிவு, செயல் எனப்பெறும். இயற்றமிழ்ப் புலவர்களெல்லாம் எண்ணத்தை வளர்த்து மறைந்துபோனவர்கள். இசைத்தமிழ்ப் புலவர்களெல்லாம் உள்ளத்தை உருக்கி முடிவுக்கு வரச் செய்திருக்கிறார்கள். நாடகத் தமிழ்ப் புலவர்களெல்லாம் நடத்திக் காட்டி மக்களை நல்வழிப்படுத்தியிருக்கிறார்கள்.

**இலக்கணம்:** காற்றை நான்காகவும், மொழியை மூன்றாகவும் கண்டவர்கள்தான் இலக்கணத்தை இரண்டாகக் கண்டிருக்கிறார்கள். கண்ணாற் காணப்படுகின்ற பொருள்களுக்கெல்லாம் ஒரு இலக்கணம் ''புறம்'' எனவும், மனத்தால் நினைக்கப்படுகின்ற



பொருள்களுக்கெல்லாம் ஒரு இலக்கணம் ''அகம்'' எனவும் வகுத்துக் காட்டியிருக்கிறார்கள். இது கண்டு மூவாயிரம் ஆண்டுகளாயின. இதுபோன்ற ஒரு இலக்கணத்தை உலகில் எந்த மொழியிலும் காணமுடியாது. ஆங்கிலத்திலும் வடமொழியிலுங் கூட இலக்கணம் இரண்டாக இல்லை.

**ஒழுக்கம்:** இசையை ஏழாக- சுவையை ஆறாக - நிலத்தை ஐந்தாக - காற்றை நான்காக - மொழியை மூன்றாக - இலக்கணத்தை இரண்டாகக் கண்டவர்கள் ஒழுக்கத்தை ஒன்றாகக் கண்டு மக்களோடு சேர்த்து இணைத்துவிட்டார்கள். திணை என்றால் ஒழுக்கம். மக்கள் உயர்திணை ஒழுக்கம் உள்ளவர். பிற அனைத்தும் அஃறிணை. ஒழுக்கமற்றவை. இவை அனைத்தையும் தமிழ்ச்சான்றோர்கள் கண்டு கூறிப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆயின. இவற்றில் மாற்றம் எதையும் உலகில் உள்ள எவராலும் காணமுடியவில்லை.

**கட்டடக்கலை:** தமிழ் அறிஞர்களின் கட்டடக்கலைச் சிறப்பை ஆயிரம் ஆண்டுகளாக நிற்கும் தஞ்சைப் பெரிய கோவில் கோபுரத்தையும், திருச்சிக்குக் கிழக்கே 12 மைல் தொலைவில் உள்ள கல்லணையையும் பல நாட்டினர் இன்றும் வந்து கண்டு வியந்து பாராட்டிக் கொண்டிருக்கின்றனர்.

**காவியக்கலை:** சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, ஆகிய பழங்காப்பியங்களும், கம்பராமாயணமும், வில்லிபாரதம் போன்ற காவியங்களும் படிக்கின்வர்களுக்கு அவர்களின் மனக்கண் முன்னே பல ஓவியங்களையும் மாட்டி மகிழ்வித்து வருகின்றன. ஆம்; காவியங்கள் என்றால் அவற்றுள் ஓவியங்கள் தோன்றப் பெற வேண்டும்.

**ஓவியக்கலை:** தமிழகத்துச் சிற்றன்னவாயிலில் உள்ள பல்லவர் காலத்துஓவியங்களும் தஞ்சை இராசராசேசுவரத்திலுள்ள சோழர் காலத்து ஓவியங்களும் தமிழகத்து ஓவியக் கலைஞர்களின் கலைத் திறமையை நமக்குக் காட்டிக் கொண்டிருக்கின்றன. காவியத்துள் ஓவியங்கள் காணப் பெறுவது போல் இந்த ஓவியங்கள் பல காவியங்களையே நமக்குக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

**சிற்பக்கலை:** தமிழகத்துச்சிற்பக் கலைஞர்களின் கலைத்திறனை வெளிநாட்டினர் பலர் தமிழகத்துத் திருக்கோயில்களிலும், மாமல்லபுரத்திலும் இன்றும் வந்து கண்டு மகிழ்ந்து சென்று கொண்டிருக்கின்றனர்.

**மருத்துவக்கலை:** தமிழறிஞர்கள் கண்ட மருத்துவக் கலை தமிழ் மருத்துவம் எனப்பெறும். இதைக் கண்டவர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சித்தர்கள். அதனால் இதைச் சித்தமருத்துவம் என்றும் கூறுவதுண்டு. இதன் கருவும், உருவும் உணவே மருந்து; மருந்தே உணவு; என்பதுதான். இது உடலைப் பாதுகாக்க உணவு வகைகளே போதுமானவை என்பது தான். இதையும் மீறி வரும் சில நோய்களைச் செடி, கொடி, இலை, தழை, வேர், விதை, பூண்டு முதலியவைகளைக் கொண்டும் கியாழம், மாத்திரை, எண்ணெய்ப் பொடி (பஷ்பம்), நஞ்சு, பாடாணம் முதலியவற்றைக் கொண்டும் நோய்களைப் போக்கும் வகை முறைகளைக் கூறிக்கொண்டிருக்கிறது. இன்று உலகம் முழுதும் பரவி இருக்கும் ஆங்கில மருத்துவம் மூலம் தீராத நோய்களைத் தமிழ் மருத்துவம் தீர்த்து வருகிறது.

**சாகாக்கலை:** தமிழ்க் கலையில் சாகாக் கலை என்பதும் ஒன்று. இக்கலை தமிழ்மொழியில் மட்டுமே இருந்தது. அது இன்று அழிந்து போயிற்று. எனினும் அக்கலையின் நிழலைப் பதினெட்டு சித்தர் பாடல்களில் இன்றும் காணலாம். சாகாக் கலையின் ஆசிரியர்களே சித்தர்கள். அக்கலையின் முடிவெல்லாம் ஒன்றே ஒன்று. அது அருமையாகப் பெற்ற இவ்வுடலை அழிய விடாமல் பாதுகாக்க முடியும் என்பதே. அவ்வாறு செய்யாமல் பலர் தமது உடல்களை அழிய விடுவது கண்டு அவர்கள் வருந்தியிருக்கின்றனர்.

''இசைவான கப்பலினை ஏக
வெள்ளத்தில்
எந்நாளும் ஓடாய் - என்று
ஆடாய் 'பாம்பே''

என்பது பாம்பாட்டிச் சித்தர் வாக்கு. இந்த உடம்பில் இந்த உயிர் என்றென்றும் தங்கியிருக்க வேண்டும் என்பது அவரது கருத்து.

''நந்த வனத்திலோர் ஆண்டி
-அவன்
நாலாறுமாதமாய்க் குயவனை
வேண்டி
கொண்டுவந்தா னொரு தோண்டி
-அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப்
போட்டுடைத் தாண்டி!''

என்பது மற்றொரு சித்தரின் வாக்கு. இவ்வுலகத்தில் ஓர் ஆன்மா பதது மாதமாய் தாய் வயிற்றில் தவமிருந்து பிரமாவை வேண்டி ஓர் உடம்பைக் கொண்டு வந்தான். அதைப் பாதுகாக்கத் தெரியாமல் இவ்வுலக இன்ப துன்பங்களில் உழன்று ஆடியோடிச் சாகடித்தான் என்பது இதன் பொருள். இதிலிருந்து மனிதன் இவ்வுடம்பைப்பெற்றது அதை அழியவிடுவதற்கல்ல என்பது பெறப்படுகிறது.

**ஆட்சிக் கலை:** கடந்த இரண்டாவது உலகப் போரில் அபிசினியா நாடு வீழ்ச்சியுற்றபோது மேலை நாட்டுப் பத்திரிகையொன்று தனது தலையங்கத்தில் ''ஆயிரம் ஆண்டுகள் ஒரே பரம்பரையினரால் தொடர்ந்து ஆட்சி செய்து வந்த உலகத்தின் ஒரே நாடு வீழ்ச்சியடைந்தது'' என எழுதியிருந்தது. அது உண்மையை உணரவில்லை என்றே தோன்றியது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஒரே பரம்பரையினரால் தொடர்ந்து ஆட்சி செய்து வந்த உலகின் ஒரே நாடு தமிழகம். பாரத இராமாயண காலத்திலும் தமிழகத்தின் மீது எவரும் படையெடுத்து வந்ததாகச் செய்தி இல்லை. அலெக்சாண்டரின் படை காவேரிக் கரையைக் கூடக் கடக்க முடியவில்லை. இந்தியா முழுவதும் அசோகருடைய கொடி பறந்து கொண்டிருந்த போதும் தமிழகத்தில் தமிழ் மன்னர்களின் கொடியே பறந்து கொண்டிருந்தது. அதுமட்டுமல்ல; இலங்கை, மலாயா, சிங்கப்பூர், பர்மா, ஜாவா முதலிய நாடுகளையும் தமிழகம் ஆண்டு வந்திருக்கிறது. ஆகவே தமிழ் மொழியில் நாடாளும் கலை உண்டா? என்பது ஒரு கேள்வியே அல்ல! ஏனெனில் அது நாடாண்ட மொழி. உள்நாட்டை மட்டுமல்ல; வெளிநாடுகளையும் ஆண்டு வந்த ஒரு வல்லரசு மொழியாகும்.

இதுகாறும் கூறியவற்றால்- தமிழ் மக்களின், தமிழகத்தின், தமிழ் மொழியின் பல்வேறு கலைகளையும் ஒருவாறு அறியலாம்.



# மகுடி ராகம்



—குன்னக்குடி வைத்தியநாதன்

பௌர்ணமி நிலவு பளிச்சென்று தன் வெண்ணொளியை விண்ணிலும் மண்ணிலும் அள்ளி அள்ளி வீசி, குளுமையான இனிமையான இதமான தன்மையினை வெளிப்படுத்திக் கொண்டிருந்தான்.

எப்பொழுதும்போல்ஆனந்தன் ஆற்று மணலில் அமர்ந்து ஆகாயத்தை அண்ணாந்து பார்த்து மகிழ்ந்தவாறே தன் நாதஸ்வரத்தை ஒரு தரம் தடவிக் கொடுத்து, பின்னர் அதை வாசிக்கத் தொடங்கினான். நள்ளிரவின் நடுஜாமத்தில் நல்ல நாதமயமான நாதஸ்வர ஓசை நயமாக ஒலிக்கத் தொடங்கியது.

அந்தப் பிரதேசமே இசையின் ஒலியால் சூழப்பட்டு இருக்கும் நேரம், ஒரு வயோதிகர்; வெண்தாடி புவியை நோக்கி வளர்ந்து முகமெல்லாம் சுருங்கி, கோல ஊன்றி தள்ளாடித் தள்ளாடி சற்றே தூரத்தில் நடந்து கொண்டே தன்னை உற்று நோக்குவது ஆனந்தனுக்குத் தெரிந்தது; அருகில் சென்று அந்தப் பெரியவரை அணுகி, 'ஐயா இந்த நள்ளிரவில் இங்கு சஞ்சரிக்கும் தாங்கள் யார்?' என்று வினவினான். அந்தப் பெரியவரோ மிக மெலிய குரலில், 'உன் பெயர் ஆனந்தனா' என்று கேட்டதும் அசந்துபோன ஆனந்தன் 'ஆமாம்' என்று கூறவே, ஆற்று மணலில் இருவரும் அமர்ந்து பேசத் தொடங்கினார்கள். 'இப்படி ஒரு இசைக் கலைஞனாக நீ வளருவாய் என்று குழந்தையிலேயே தெரியும்' என்று பெரியவர் சொன்னதும், அவன் துணுக்குற்றான். 'என்னை உங்களுக்கு முன்பே தெரியுமா' என்று வினவினான். அவர் தம் பொக்கை வாயைத் திறந்து ஒரு சத்தமில்லாச் சிரிப்பை உதிர்த்து 'அது ஒரு பெரிய கதை' என்றார். ஆனந்தன் வியப்புடன் அவரை நோக்கினான். அவரும் மெதுவாகச் சொல்லத் தொடங்கினார்.

நந்தபுரம் ஒரு சிற்றூர். அதில் நல்லப்பன் என்றொரு நாதஸ்வர வித்வான் இருந்தான். அவன் சிறுவயது முதல் இசை ஆராய்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டானேயன்றி இசையுலகில் பெரும்புகழ் பெறவில்லை, அவன் வாழ்க்கையில் செய்து முடிக்க வேண்டிய ஓர் சபதமும் நிறைவு பெறாமல் இருந்து வந்தான். ஒருநாள் தன் நாதஸ்வரத்தின் மூலம் மகுடி ராகத்தின் இசை நயத்தை வாசித்து வாசித்துப் பழகும் போது அவனன்பு மனைவி கமலம் குடிலில் பின்புறம் இருந்தாள். நேரம் இரவு நேரம். தன்குடிலில் பின்பக்கம் அமர்ந்து இசையில் மயங்கிய மங்கை கமலம் வலக்கையில் வழவழவென்று ஏதோ ஊருவதும்போல் தெரியவே சட்டென்று கமலம் அதை இடக்கையால் இறுக்கிப் பிடிக்க அதுவொரு நல்ல பாம்பென அறிவதற்குள் கமலத்தின் கையில் தீண்டி விட்டது. கமலத்தின் அலறல் கேட்ட நல்லப்பன் பதறி கதறி அழுதான். தன் மகுடி இசையால் அழகுப் பதுமையாம் கமலத்தின் உயிருக்கே உலை வைத்ததை எண்ணிக் கொதித்தெழுந்தான். பாம்பை அடிக்க முற்பட்டான். கமலம் தன் கடைசி நேரத்தில் 'அந்தப் பாம்பை அடிக்காதீர்கள்! ஏற்கெனவே நமக்குச் சர்ப்பதோஷம் உள்ளது' என்றாள்.

'ஆனால் அந்த அரவத்திடம் ஒரு சத்தியம் பெற்றுக் கொள்ளுங்கள். பவுர்ணமிக்குப் பவுர்ணமி, மாரியம்மன் கோவிலருகில் உள்ள புதரிலிருந்து புறப்பட்டு இந்தப் பாம்பு ஊரில் உள்ள யாரைவாவது தீண்டுவது வழக்கமாம். இன்றும் அதன்படியே உங்கள் இசையும் சேர்ந்து கொள்ளவே இந்தக் கதி ஏற்பட்டது. ஆகவே, உங்கள் அற்புத இசையை ஒவ்வொரு பவுர்ணமியும் மாரியம்மன் கோவில் புற்று அருகில் உட்கார்ந்து இசைப்பதாகவும் அதில் மகிழும் நாகம் யாரையும் தீண்டாமல் இருக்க, பாலும் ஊற்றுவதாக வேண்டிக் கொள்ளுங்கள்' என்றாள்.

அதன்படி அந்த அரவத்தின் முன் உட்கார்ந்து இந்தச் சத்தியத்தை எடுத்து உரைத்தான். அதுவும் மெதுவாகத் தன் படத்தைத் தரையில் அடித்துப் பின்பு மெதுவாக நெளிந்து, புற்றுக்குச் சென்றது.

தொடர்ந்து பல ஆண்டுகள் நல்லப்பன் புற்றுமுன் அமர்ந்து மகுடி வாசிப்பதும் அதில் நாகம் மகிழ்ந்து அவனளிக்கும் பாலுணவும் அருந்தி, புற்றுக்குள் சென்று விடுவதும் வழக்கம்.

ஊர் மக்களும் இப்பொழுதெல்லாம் பவுர்ணமிக்குப் பவுர்ணமி ஊரில் யாரையும் நாகம் தீண்டுவதில்லை என்றும், அதற்கான காரணம் தெரியாமலும் விழித்தனர். பிறகு சில காலமாக மிகுந்த நோய்வாய்ப்பட்ட நாகப்பன் தன் இசையை இசைக்க முடியாமல் போனதால் நாகம் மிகுந்த சீற்றத்துடன் இருந்து வருகிறது. அதைத் திருப்திப் படுத்த வேண்டுமென்றால் சுகமான நயமான உன் நாதஸ்வர இசையால்தான் முடியும். இதை எனக்காகச் செய்வாயா? அப்படி நீ செய்யாவிட்டால் இந்த ஊர் மக்களை ஒவ்வொருவராக இன்று முதல் நாகம் தீண்டப் புறப்பட்டுவிடும்' என்று கூறவே, ஆனந்தன், 'அப்படியானால் அந்தப் புற்று இருக்கும் இடத்தைக் காட்டுங்கள்' என்று கூற, பெரியவரும் தள்ளாடித் தள்ளாடி நடந்து புற்றுக்கருகே சென்றார். மலைபோல்வளர்ந்து சிறு மணல் வீடு போன்று காட்சி அளித்த அதனுள்ளிருந்து நுண்ணிய நாக்குகள் வெளிப்பட, நாகம் தன் தலையைத் தூக்கித் திரும்பிப் பார்த்ததும்தான் தாமதம் பெரியவரை நோக்கித் தன் படத்தை எடுத்து மிகுந்த சீற்றத்துடன் புற்றில் சுழன்று சுழன்று வந்தது.

'ஊம் மகுடி வாசி...வாசி ஆனந்தா! இல்லாவிட்டால் உனக்கே ஆபத்து!' என்று பெரியவர் உரத்த குரலில் கூறினார். எடுத்த நாதஸ்வரத்திலிருந்து இசையை உதிர்த்தான் ஆனந்தன்.

புன்னாகவராளியை வாசிக்க வாசிக்க, தன் மனம் மகிழ்ந்த நாகம், பெரியவர் அருகில் வந்து அவர் மேலெல்லாம் ஏறி விளையாடத் தொடங்கிவிட்டது; பெரியவருக்கும் ஒரே மகிழ்ச்சி. ஆனந்தன் வாசிப்பில் அவரும் மயங்கினார். அந்தச் சமயம் நடந்த நிகழ்ச்சிதான் பயங்கரமானது.

படுவேகமாக மகுடியை நீண்ட நேரம் வாசித்துக்கொண்டிருந்த ஆனந்தனின் தலை சுற்றியது, திடீரென்று இசை நின்றது. அதே சமயம் பெரியவரின வலக்கரத்தில் நாகம் தீண்டியது, உடனே அது எங்கோ ஓடி ஒளிந்து கொண்டது. ஆனந்தன் பெரியவரின் நிலையைக் கண்டு அதிர்ச்சியடைந்து அவரை அணுகினான். தன் கடைசி நேரத்தில் அவர் மிகவும் தாழ்ந்த குரலில், 'அப்பா! ஆனந்தா இந்தப் பாம்பு இனி யாரையும் தீண்டாது! பயப்படவேண்டாம். அதன்சபதம் நிறைவேறிவிட்டது. இதன் பெண் அரவத்தைச் சிறு வயதில் நான்...தான்..அடித்துக் கொன்று விட்டேன். அதன் சீற்றம் காரணமாக ஒருநாள் கனவில், 'உன் குடும்பத்தையே அழிக்கிறேன் பார்' என்று சொல்லியதுபோல் இருந்தது. அதன்படி கமலமும் மறைந்தாள்.

இப்பொழுது ஒரு ரகசியம் சொல்லப்போகிறேன் நீ என்மகன் தானப்பா, உன்னைச் சிறு வயதிலேயே உள்ளூர்க்கோவில் நாதஸ்வர வித்வானிடம் ஒப்படைத்தது நான்தான். பாம்புக்குப் பயந்து அவ்வாறு செய்தேன். உன் அம்மா கமலமும் அரவத்தால் தீண்டி மறைந்தாள். உனக்கும் நாதஸ்வரக் கலையை நன்கு போதிக்கும்படி கோவில் நாயனக்காரரிடம் கூறினேன். உனக்குச் சிறப்பாகவே வந்து விட்டது. அந்தக்கலை ஓர் நாதஸ்வர நல்லப்பன் வேறு யாருமில்லையப்பா, உன் அப்பன் நான் தானப்பா என்று சொன்ன வார்த்தைகளைக் கேட்டு அக மகிழ்ந்த ஆனந்தன் அவரை அன்புடன் 'அப்பா, அப்பா!' என்று பல முறை கூப்பிட்டுக் கதறியழுத நேரம். அந்நள்ளிரவில் நிசப்தம் நிலவியது.பெரியவரின் ஆவி வானை நோக்கிச் செல்வது போலத் தெரிந்தது.

நீண்ட நாட்களாகவே அனாதை போன்ற சூன்யமான வாழ்க்கையைச் சுவைத்த ஆனந்தன், தகப்பன் கிடைத்து அவர்மறைந்தற்குக் காரணமான அரவத்தைச் சீற்றத்துடன் கொல்ல நினைத்து அதற்குத் தன் நாதஸ்வரத்தையே பயன்படுத்த எண்ணிக் கையில் எடுத்தோங்கியதும் அது கனமாக இருக்கவே பயந்து போன ஆனந்தன் நாதஸ்வரத்தைப் பார்த்தால், ஓசை வரும் வழியில் நாகம் தன்னைத் திணித்துக் கொண்டு தன் உயிரை மாய்த்துக் கொண்டிருந்தது தெரிந்தது. அதைப் பார்த்துக் கண்ணீர் விட்டான் ஆனந்தன், அதற்குள் அந்த ஊர்மக்கள்ஒன்று கூடி இந்த அதிசயத்தை நேரில் கண்டனர்.

இக்கதையை அவர்களிடம் சொன்னதும் பொது மக்கள் நாகத்தின் சபதத்தையும் சத்தியத்தையும் பெரியவரின் கலையையும் அவர் வாரிசான ஆனந்தனையும் புகழ்ந்ததோடு அந்த ஊர்ப்புற்றுக்கருகே நாகத்திற்கு நாதஸ்வர நாகம் என்றுபெயரிட்டு ஆலயம்எழுப்பத் தொடங்கினார்கள். சர்ப்ப தோஷம் யாருக்கு இருந்தாலும் அவர்கள் அங்கு தொழுதால் தோஷம் நீங்கிவிடும் என ஊர் மக்கள் நம்பினர். ஆலயத்திற்குப் பூசாரி யார்? யார்? பூசாரி.... ஆனந்தன்தான்!



# 'தை' - இது ஒரு தமிழ் நாகரிகம்!

சுகி. சிவம்

ஆங்கில நாகரிகத்திற்கும்தமிழ் நாகரிகத்திற்கும் இடையே நிறைய வேறுபாடுகள் உண்டு. உயர்ந்த சிறந்த வரவேற்பை வெப்பத்துடன் தொடர்புசெய்து 'Warm Welcome' என்பது மேலை நாகரிகம்.

நாம், குளிரக் குளிர வரவேற்றார் என்போம். 'மனம் குளிர' என்று பாராட்டுவோம். சாரணம் உண்டு. குளிர் பூமியில் வெப்பம் வரவேற்கப்படுகிறது. வெப்ப பூமியில் குளிர் வரவேற்கப்படுகிறது. எனவே வரவேற்கும் வார்த்தையில் இவை சம்பந்தம் கொள்கின்றன.

'இயல்பான வெப்பம் மிகுந்த தமிழ் மண்ணில் மார்கழி, தை இருமாதங்களும் குளிர்ச்சி காரணமாகச் சிறப்பிக்கப் பெற்றன.

சைவ உணர்வுடையோர் மண்ணகக் கயிலை என்னும் சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரையும், வைணவ வாழ்வியலார் கோயில் எனச் சிறப்பிக்கும் திருவரங்கத்தில் வைகுண்ட ஏகாதசியும் கொண்டாடுவர். இதுவே மார்கழி மாதத்தின் சமயச் சிறப்பாகும்.

அதிகாலை துயில் எழுதல், குளிர் நீராடல், நோன்பு நோற்றல், மழை வேண்டல், நல்ல கணவனை வேண்டி இறையருளைத் துதித்தல் என்று மக்களின் பொதுப் பிரச்சனைகள்-தனிப் பிரச்சனைகள் மார்கழி வழிபாடாகிறது.

அத்தகைய நோன்பின் நிறைவோடு தை பிறக்கிறது. வீட்டுத் தேவைகளும் நாட்டுத் தேவைகளும் நிறைவேறும் என்று தை மாதத்தின் முதல் விடியல் தன்னம்பிக்கை தருகிறது. அதுவே பெரும் விழாவாக மக்கள் சமூகத்தால் கொண்டாடப் பெறுகிறது.

ஆறு மாதக் காலத்தின் அயராத உழைப்பு அறுவடையாவதால், வீட்டு முற்றங்களில் மகிழ்ச்சி பொங்கல் இடுகிறது. இது ஓர் உணர்ச்சியுள்ள விழா, உயிர்ப்புள்ள விழா.

விண்வெளிக் கோள்கள் மீது மிக ஆர்வம் காட்டிய மண் தமிழ்மண். இயல்பான பாடல்களில் கூட 'வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று' என்று கோள்கள் நிலையைக் கோடிட்டுக் காட்டுவது தமிழ்க் கவிதை.

நிறை நிலவு நாட்களையெல்லாம் இறைவிழவு நாட்களாகக்



# இன்பப் பொங்கல்

—பாக்கிய மணாளன்

காடேகித் திருத்தியங்கே கழனி யாக்கி
களங்குவிக்கும் உழவரெல்லாம் இன்பத் தாலே
வீடேகிச் செங்கரும்பும் மஞ்ச ளோடும்
விருந்தோம்பி வைக்கின்றார் இன்பப் பொங்கல்!
பாடேகிப் பட்டதாலே இத்'தை' நாளில்
பலனெல்லாம் கிடைத்திட்ட இன்பத் தாலே
நாடேகி வாழவைக்கும் உழைக்கும் மக்கள்
நன்றியுடன் வைக்கின்றார் இன்பப் பொங்கல்!

வியர்வையை நீராக்கி உழைத்த மக்கள்
வீடெல்லாம் எழுகின்ற இன்பத் தாலே
துயரத்தை மறந்திங்கே இல்ல மெல்லாம்
தூய்மையுடன் வைக்கின்றார் இன்பத் தாலே

வயலெல்லாம் வளமாக்கி உழைத்து நம்மை
வாழ்க்கையில் உயர்த்திட்ட இன்பத் தாலே
பயனேதும் கருதாத மாட்டுக் கெல்லாம்
பரிவுடனே வைக்கின்றார் இன்பப் பொங்கல்!

உதிக்கின்ற செங்கதிரின் ஒளியை யேந்தி
உயர்ந்திட்ட உழவரெல்லாம் இன்பத் தாலே
துதிக்கின்ற எண்ணத்தில் இதய மேற்றித்
துடிப்புடனே வைக்கின்றார் இன்பப் பொங்கல்
மதிக்கின்ற பொருளெல்லாம் உழவர் வாழ்வில்
மனமகிழச் செய்கின்ற இன்பத் தாலே
மிதிக்கின்ற இடமெல்லாம் வளமே சேர
மிடுக்குடனே வைக்கின்றார் இன்பப் பொங்கல்

கொண்டாடியது இம்மண்ணின் மன முதிர்ச்சியின் அடையாளம். மார்கழித் திருவாதிரை, தைப் பூசம், மாசிமகம், பங்குனி உத்திரம் என்று பௌர்ணமி நாட்களில் விழித்திருந்து விழா நிகழ்த்தியவர் தமிழர்.

நிலா என்ற கோள் மீது கவனம் செலுத்தியே விழா என்பதை அமைத்தனர் நம் முன்னோர். மாதம் முழுவதும் நிலவை மையப் படுத்தி விழா எடுத்தவர்கள் ஆண்டுக்கு ஒருமுறை சூரியனைச் சிறப்பிக்கும் விழா எடுத்தனர். அதுவே தைப்பொங்கல். எப்படியோ. மண்ணில் வாழ்ந்தாலும் விண்ணில் நிகழும் கோள்களின் இயக்கங்களில் நம் முன்னோர் கவனம் செலுத்தினர் என்பது மகிழ்வுக்குரியது.

சூரியனை ஒரு நட்சத்திரம் என்று விஞ்ஞானம் தெளிவு படுத்தினாலும், உலகின் வாழ்வு இயக்கம், மழை, பயிர், வளர்ச்சி எல்லாமே சூரியனையே நம்பி இருப்பதால் அவனைத் தெய்வமாக எண்ணினர் நம் முன்னோர். சூரியனார் என்றும், சூரிய நாராயணர் என்றும் தெய்வமாக்கி, கோயில் எடுத்து வணங்கினர்.

விவசாயம் என்ற பயிர்வாழ்வு இம்மண்ணின் உயிர் வாழ்வாக அமைந்து போனதால் பயிர் வாழ்வுப் பண்டிகையைச் சூரிய இயக்கத்துடன் தொடர்புபடுத்தி இப்பெருவிழாவை அமைத்துவிட்டனர். உயர்திணை மனிதன் திணை கடந்த தெய்வத்திற்கு விழாக் காணும்போது அஃறிணை மாட்டையும் சேர்த்து நினைத்தது ஓர் ஆச்சரியம்தான் !

ஒவ்வொரு விழாவும் அந்தச் சமூகத்தின் பண்பாட்டுக்கு ஓர் உன்னதமான அடையாளம். தைப்பொங்கல் தமிழ் நாகரிகத்தின் வெளிப்பாடு. ஆம்.

உயர்ந்த சூரியன் - உயர முயலும் மனிதன் - உயர்வுக்கு ஏங்காத விலங்கு. மூன்றும் இவ்விழாவில் இணைப்புறுகிறது. உலகின் இயக்கத்துக்கு மூன்றும் இணைந்திருப்பதே வெற்றி தருகிறது என்பது இந்த விழாவின் ரகசியம்.

தன்னிலும் மேம்பட்ட சூரியனை வணங்கும்போதே, தனக்கு நிகர் ஆகாத மாடு என்ற விலங்கையும் இணைத்து வழிபாடு செய்ய நினைத்த தமிழன் பண்புள்ளவன். பாராட்டத்தக்கவன். நாகரிகம் மிக்கவன்.

நன்றி காட்டுவது என்பது நாகரிகத்தின் அடையாளம். உதவி செய்தவர்க்கு நன்றி எண்ணுவது, நன்றி சொல்லுவது, நன்றிகாட்டுவது என்பது பண்பின் முதிர்ச்சி. நன்றியைச் சொல்லாலும் செயலாலும் வெளிப்படுத்தாதவரை நாகரிகம் அற்றவர்கள் என்பது பலரது முடிவு.

தனக்கு, தன் வாழ்வுக்கு உதவிய சூரிய ஒளியை, வெப்பத்தை நன்றியுணர்வோடு வணங்குகிறோம். அதே நேரத்தில் உழவனுக்கு முன் நடந்து சேற்றில் அவனுக்கு வழிகாட்டிய ஜீவனையும் வணங்குகிறோம். வீட்டில் உழவன் மனைவிக்குப் பதிலாக அவன் வீட்டுச் சிசுவுக்குப் பால் ஊட்டிய தாய்மையின் மலிவுப் பதிப்பான பசுவையும் வணங்குகிறோம்.

நம்மில் உயர்ந்தோரை வணங்குவது பெரிய நாகரிகம் இல்லை. அது திணிக்கப்படுகிறது. தவிர்க்க முடியாதது. ஆனால் நம்மில் குறைந்தாரை நன்றியுடன் நினைவுகூர்வது உயர்ந்த நாகரிகம். பண்பான அடையாளம்.

மே மாதம் முதல் நாளை உழைப்பாளர் தினம் என எண்ணுகிற நாம், இந்த மண்ணைப் பொறுத்தவரை இதையே உன்னதமான உழைப்பாளர் தினமாக எண்ண வேண்டியுள்ளது.

'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்' என்ற பழைய நினைப்போடு 'உழவர் போற்றுதும் உழைப்பாளர் போற்றுதும்' என்ற புதிய நினைவும் சேர்ந்து இந்த விழாவைச் சிறப்பிக்கட்டும்.

பட்டணத்துக் கவர்ச்சியில் இன்னும் மயங்காமல் கிராமத்து மண்ணில், வேர் பிடித்து நிற்கிற தலைமுறை உழவர்களைத் தலை வணங்கிப் பாராட்டுவோம்.

'பயிர் வாடினால் - உயிர் வாடும்' என்பதறிந்து பயிருக்கு உயிரூட்டி, உயர்வை உப்பை விளைநிலத்து உரமாக்கும் உழைப்பாளர்களை வணங்க வேண்டியது படித்தவர்களின் நாகரிகத்திற்கு ஓர் அடையாளம்.

'தை'-இது ஒரு தமிழ் நாகரிகம்.

# ஊமைக்காரன்

## தாமரைமணாளன்

ஒண்டியாய் அங்கே உட்கார்ந்திருந்து உட்கார்ந்திருந்து பரமசிவத்துக்குப் போரடித்துவிட்டது. நம் ஒரிஜினல், சாட்சாத் கைலாசபதியான - பார்வதி நாயகனான பரமசிவனாரேதான் !

அவர் எங்கும் இருப்பவர்: எங்கே வேண்டுமானாலும் இருப்பார். அவர் இல்லாத இடமே இல்லைதான். ஆனால் அப்போது இருந்த இடத்தில் அவரைத் தவிர வேறு ஒன்றுமில்லை.

புல் பூண்டு முளைத்துக்கிடந்த அந்த தரிசு நிலத்தில் கட்டடம் என்று சிவன் குடியிருந்த அந்தக் கல்மண்டபம் ஒன்றுதான் இருந்தது. அக்கம்பக்கத்தில் மனித வாடையே இல்லை.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார் பரமசிவம். தனிமை தாளவில்லை. தன்னை யாரும் தேடி வராவிட்டாலும் தாமாவது தேடிச் சென்று மனிதர்களை வசியம் செய்து தன்பக்கம் இழுக்க வேண்டும் என்ற நிலை மெதுவாகப் புரிய ஆரம்பித்தது.

மனிதர்களைப் படைத்துக் காக்கிறாரே தவிர, அவர்களுடைய **'சைகாலஜி'** அவருக்கு ரொம்ப நாளாகப் பிடிபடவில்லை.

அவர் யோசனை செய்தார்.

தன் அருகிலிருந்த தரிசு நிலம் தான் கண்ணில் பிடிபட்டது. ஞான திருஷ்டியால் கணக்குப் பிள்ளையின் பேரேட்டைப் புரட்டினார். அது பண்ணை பங்காருசாமி பெயரில் பட்டாவாகி இருந்தது.

பண்ணை பங்காருசாமி என்றதும் பகவானுக்குக் கொஞ்சம் நம்பிக்கை. மனிதர் கொஞ்சம் விளம்பரப்படுத்தப்பட்ட பக்திமான். சாமி கும்பிடுகிறாரோ இல்லையோ, கோயிலுக்கு அபிஷேகம் செய்வார்.

அவரிடம் பேச்சு வார்த்தை நடத்துவது என்று பகவான் முடிவு செய்தார். பண்ணையார் ரொம்ப பிஸியானவர். காலையில் பண்ணையாட்களை விரட்டுவதிலிருந்து இரவு பன்னிரண்டு மணிவாக்கில் தூங்குவது வரை ஒரே கெடுபிடியான வேலைகளாகத்தான் இருக்கும். அவரைச் சந்திக்க வேண்டுமானால் அவருடைய வீட்டுத் திண்ணையில் மணிக்கணக்காக உட்கார்ந்திருக்க வேண்டும். நம் பரமசிவத்துக்குப் பண்ணையார் வீட்டுத் திண்ணையில் போய்க்



காத்து இருப்பதில் ஆட்சேபனை இல்லை; ஆனால் பண்ணை யாரைப் பார்க்க வேலைக்காரன், தன்னை அனுமதிப்பானா என்று சந்தேகம்.

ஒரே ஒரு வழி. கனவில் சந்திப்பதுதான். அப்போதுதான் கியூவில் நிற்க வேண்டியதில்லை. பண்ணை வீட்டுத் திண்ணையில் காத்திருக்க வேண்டியதில்லை.



கனவில் போனார் கடவுள்!

'பங்காருசாமி, என்னைச் சுற்றி ஏகப்பட்ட தரிசுநிலத்தை போட்டு வைத்திருக்கிறாயே, அதைக் கவனிக்கக்கூடாதா? பொன்னாகக் கொட்டுமே!' என்று கூறி மறைந்தார்.

கனவிலிருந்து விழித்த பண்ணையாருக்கு முதலலல் பயம். மனைவியை அழைத்து விஷயத்தைச் சொன்னார். அந்த அம்மாள், ''கடவுள் மாதிரி ஒருவர் கனவில் வந்தால் அது நல்லதில்லை. ஏதோ தெய்வக் குற்றம் ஏற்பட்டிருக்கிறது. மந்திரிச்சால் சரியாப் போகும்'' என்று யோசனை கூறினார். ஆனால் பண்ணையாருக்கு ஒரு சபலம். கனவில் வந்த கடவுள் ஏதோ பொன் கிடைக்கும் என்றாரே, ஏதாவது புதையல் சமாசாரம் இருக்குமோ..!

மறுநாளே நாலைந்து ஆளை அழைத்துக்கொண்டு போய் நிலத்தைத் தோண்டிப்பார்க்கச் சொன்னார். அதற்குள்ளிருந்து பாம்பு வந்தது. பூரான் வந்தது; புதையல் வரக் காணோம்.

கோயில் மண்டபத்து வாசலிலேயே குடையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து வாய்க்கு வந்தபடி சாமியைத் திட்டிவிட்டு ஆட்களோடு கிளம்பிவிட்டார்.

பகவானுக்கு ஏமாற்றம். சோர்வோடு சிந்தித்துக்கொண்டிருக்கும்போது அவர் கண்ணில் இன்னோர் உருவம் தென்பட்டது.

அவன்தான் 'பட்டினி' பழனிசாமி! வாரத்தில் பாதி நாட்கள் அரைப்பட்டினி! மீதி நாட்கள் ? முழுப்பட்டினி.

அவன் கனவில் போய் நின்றார் பகவான்.

''நான் இருக்கும் இடத்தருகே உள்ள நிலத்தைக் கொஞ்சம் பாரேன். பொன்னாக கொழிக்கும்!'' என்று பண்ணையாரிடம் சொன்னதையே அவனிடமும் சொன்னார்.

பழனிசாமி தூக்கத்திலிருந்து எழுந்து உட்கார்ந்தான். மனைவி குழந்தை எல்லாரையும் எழுப்பினான். பகவான் தன் கனவில் வந்ததைச் சொல்லிச் சொல்லிப் பூரித்தான்.

மறுநாள் காலை. பழனிசாமி குடும்பத்தோடு போய்ப்பண்ணையார் வீட்டு வாசலில் நின்றான்.

''ஐயா, நம்ப கல்மண்டபத்துக் கோயில் பக்கத்து நிலத்தைப் பயிரடறேன்ங்க'' என்றான். பண்ணையார் யோசித்தார். சும்மா கிடக்கும் நிலத்திலிருந்து ஏதாவது வரட்டுமே!

''சரி சரி, முக்கால்வாசி எனக்கு. உனக்குக் கால்வாசி வாரம். கணக்காக வாரம் வரல்லேன்னா கட்டிவச்சு உதைப்பேன்'' என்று கருணையோடு கூறி அனுப்பினார்.

மறுநாளே கடவுளுக்குக் களை வந்துவிட்டது. தன் குடும்பத்தோடு அந்தக் கோயில் மண்டபத்தில் குடியேறிவிட்டான் பழனிசாமி. ஏழெட்டுப் பிள்ளைகள். மனைவி, மருமக்கள் - பெருங்கூட்டம்.

பகவானுக்குத் தனிமை தீர்ந்தது. இருபத்திநான்கு மணி நேரமும் 'ஜேஜே' என்று சத்தம், ஆரவாரம், உற்சாகம், சிரிப்பு. சிரிப்பினூடே அழுகை. அழுகையினூடே சிரிப்பு.

விடியற்காலையிலேயே பழனிசாமியும் அவன் குடும்பமும் தரிசு நிலத்தோடு போராட ஆரம்பித்துவிடுவார்கள். அவர்கள் உழைப்பில் நிலம் சிரித்தது. பயிர்கள் சிரித்தன. பகவானும் சிரித்தார்.

நெல்மணிகள் பொன்னாக மின்னின.

''சாத்தியாடி, ஆண்டவன் கருணை காட்டிட்டார். அவர் சொப்பனத்தில் வந்து குடுத்த வாக்குப்படியே மண்ணரசி பொன்னாகக் கொட்டிக் குடுக்கிறா..'' என்று விழுந்து விழுந்து கும்பிட்டான்.

அறுவடை ஆனதும் முதல் வேலையாகப் பண்ணையாருக்குச் சேர்ப்பிப்பதாக ஒப்புக்கொண்டபடி நெல்லை அளந்தான்.

அடுத்த நாள், பண்ணையார், காரில் வந்து இறங்கினார்.

''ஏய் பழனிசாமி, முதல்லே இந்த மண்டபத்தைக் காலி பண்ணுங்க'' என்று உத்தரவிட்டார்.

''ஏன் சாமி?''

''ஏன் என்றா கேக்கிறே....? என் நிலத்திலே முதன் முறையா பயிர் விளைஞ்சிருக்கு. எல்லாம் பகவான் அருள். அதுக்காக விசேஷ பூஜை ஏற்பாடு பண்ணியிருக்கேன். நீயும் உன் கூட்டமும் மண்டபத்தை அடைச்சுக் கிட்டிருந்தா எப்படி?''

பழனிசாமிக்கு உற்சாகம் ''சாமிக்கு நீங்களே விளக்கேற்ற வந்திருக்கிறப்போ நான் தடையா இருப்பேனா? இப்பவே காலி பண்ணிடறேன்'' என்று அந்த விநாடியே காலி செய்து கொடுத்தான்.

அன்று அமர்க்களமாகப் பூஜை செய்தார் பண்ணையார். வகை வகையான பிரசாதங்கள். ஊரே திரண்டு வந்தது. ஆனால், ஒரு குடும்பம் மட்டும் உள்ளே நுழைய முடியவில்லை. பழனிசாமியின் குடும்பம்தான்.

மழை தூறிக் கொண்டிருந்தது. இருந்தாலும் ஒரு மரத்தடியில் ஒதுங்கி நின்று, சாமிக்கு விசேஷ பூஜை நடக்கும் காட்சியை மெய் மறந்து ரசித்துக் கொண்டிருந்

தார்கள், அவன் குடும்பத்தார்கள்.! 'பூஜை நடந்ததும் பிரசாதம் கொடுப்பார்களே, பிறகென்ன?' என்று நம்பிக்கை.

பூஜை கோலாகலமாக அர்த்த ஜாமம் வரை நடந்தது.

''சாமி, உன் அருளால் என் பூமி செழிச்சுட்டுது'' என்று துதித்தார் பண்ணையார்.

பூஜை முடிந்ததும் பிரசாதங்களை எல்லாம் பண்ணையார் காரில் ஏற்றினார். ''எல்லாரும் வீட்டில் போய்ச் சாப்பிடலாம். நேரமாகிவிட்டது''என்று கூறி, தன் நண்பர்களுடன் காரில் ஏறினார் பண்ணையார்,. கார் பறந்தது.

மரத்தடியில் நின்ற பழனிசாமியின் குடும்பத்தினர் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

பகவான் கண்கள் கொதித்தன.

பண்ணையார் கண்ணயர்ந்த நேரம் கனவில் போய் நின்றார்.

''பண்ணைப் பங்காரு, பூஜை எல்லாம் பிரமாதமாப் பண்ணினே, ஆகா என்னை மறந்துட்டியே... நீ''.

''என்ன சாமி, உம் கருணையால் என் பூமி செழித்தது. அதை மறக்காமல் பூஜை செய்தேனே'' என்றார்.

''நினைக்க வேண்டியவனை நினைக்கவில்லையே...நிலம் தரிசாகக் கிடக்கும் போதும் என் கருணையும் இருந்தது; நிலமும் இருந்தது. ஆனால் பலன்இல்லை, பழனிசாமியின் உழைப்பு சேர்ந்ததால் தான் உன் நிலமும் செழித்தது. என் கருணைக்கும் மகிமை வந்தது. அவன் குடும்பத்தை நினைக்க மறந்துவிட்டாயே....'' என்றார் கடவுள்.

பண்ணையாருக்குப் பதில் சொல்ல முடியவில்லை. ''சாமி ஏன் இப்படி நேரம் கெட்ட நேரத்தில் வந்து என் கழுத்தை அறுக்கிறீர்? எனக்குத் தூக்கம் வருகிறது. ஏதோ மரியாதைக்குப் பூஜை செய்தால் சந்தோஷப்படாமல் வம்புக்கு வந்து நிற்கிறீரே உமக்கு அந்தப் பழனிசாமி பயல் ஒசத்தின்னா, அவனுக்கு ஒரு வரத்தைக் கொடுத்துட்டுப் போமே! என்னிடம் வந்து கலாட்டா பண்றீரே?'' என்று திரும்பிப்படுத்துக் கொண்டார்.

''கவனிக்கிறேன்.'' பகவான் சிரித்துக் கொண்டார்.



பல மாதங்கள்...சில வருடங்கள் கழிந்தன:

மீண்டும் ஒரு நாள்.

திடீரென்று கோயில் மண்டபத்தில் பெரும் ரகளையாக இருந்தது.

பண்ணையாரின் ஆட்களுக்கும் பழனிசாமியின் குடும்பத்தாருக்கும் மோதல் .

''உடனடியாக நெலத்தை விட்டுட்டுப் போகணும்'' என்று பண்ணையார் ஆட்கள் பழனிசாமி குடும்பத்தினரை மிரட்டிக் கொண்டிருந்தார்கள்.

காரணம், மறுநாள், ஒருபுதிய சட்டத்தை அமல்படுத்த அந்த ஊருக்குக் கலெக்டர் வருவதாக இருந்தது. தொழிலாளர்களுக்கு தொழிலில் உரிமை; உழைத்தவனுக்கு நிலத்தில் உரிமை என்று உரிமை வழங்கும் புதிய அரசின் திட்டம் அது.

மறுநாள் கலெக்டர் வந்து பார்ப்பதற்குள் பழனிசாமி குடும்பத்தையே வெளியேற்றப் பண்ணையார் செய்த ஏற்பாடு தான், அந்த ரகளைக்குக் காரணம்.

பழனிசாமி குடும்பம் கோயில் வாசலில் விழுந்து கதறியது.

''சாமி, உன்னை நம்பி உழைச்சோமே, இப்போ பழையபடியும் நிர்க்கதியாக நிற்கிறோமே! உன்னைத்தவிர எங்களுக்கு வேறு கதியில்லை'' என்று புலம்பினார்கள்.

நள்ளிரவு.

பண்ணையார் எதிரில் போய் ஆவேசத்துடன் நின்றார் பகவான்.

''பழனிசாமியின் குடும்பத்தை ஏன் விரட்டுகிறாய்?''

''பின்னே என்ன சாமி, ஏதோ பொழச்சுட்டுப் போறான்னு நெலத்தைக் குடுத்தா, அவங்களுக்கு நெலத்து மேலேயே உரிமை வருதாம்! இது அக்கிரமம் இல்லையா?''

பகவான் சிரித்துக் கொண்டே கேட்டார்: ''ஆமாம், உழைத்த அவனுக்கு உரிமை இல்லாவிட்டால், உனக்கு என்ன உரிமை?''

பண்ணையாருக்கு ஆத்திரமாக வந்தது. ''என்ன சாமி, நீர் கடவுளா லட்சணமா மாதிரியா பேசுகிறீர்? அவன் உழைச்சா, உழைச்சவனுக்குக் கூலிதானே உண்டு! உரிமை எப்படி வரும்?'' என்றார்.

''உழைத்தவனுக்குக் கூலிதான் என்றால், உனக்கு?''

''நான் பணம் போட்டு நிலம் தராவிட்டால் அவன் எப்படிப் பயிர் வைப்பான்?'' என்றார் பண்ணையார்.

''அவன் உழைக்காவிட்டால் நிலத்தில் பயிர் விளையுமா? உன் நியாயப்படியே பேசுகிறேன்; அவன் உழைப்புக்குப் பலன் வெறும் கூலிதான் என்றால், பண முதலீடு செய்த உனக்கு உன் பணத்துக்குரிய வட்டி தானே உண்டு! நிலத்தின் உரிமை எப்படி வரும்?'' என்றார் கடவுள்.

பண்ணையார் ஆவேசத்துடன் ''என்ன சாமி! அடிப்படையிலேயே கை வைக்கிறீர்கள். பணம்போட்டு வாங்கிய என்னை நிலத்துக்குச் சொந்தக்காரன் இல்லை என்கிறீரே! நான் தான் நிலத்துக்கு உரிமைக்காரன்..''

''பங்காருசாமி, ஒரு கணம் நிதானித்துச்சொல். இந்தநிலம்... நீர்...அத்தனையும் நான் உங்களுக்கு உழைத்து வாழ்வதற்காகக் கொடுத்தது. நான்தான் அவற்றுக்கு உரிமைக்காரனே தவிர, நீ அல்ல!'' என்று பகவான் ஆவேசத்துடன் கேட்டார். அவர் முக்கண்ணில் ஒளியில் மூவுலகத்தையும் எரிக்கும் ஜோதி தெரிந்தது.

பங்காருசாமி வெலவெலத்துப் போனார்.

''பங்காருசாமி, தெய்வம் மனிதர்கள் மூலமும், அரசின் மூலமும்தான் செயல்படும். அதை நீ மதிக்காவிட்டால்..'' கடவுள் சொல்லி முடிக்குமுன், பண்ணையார் திடுக்கிட்டு விழித்துக்கொண்டார்.

ஆம்; இனி அவர் விழித்துக் கொள்வதைத் தவிர, வேறுவழி இல்லை.

இல்லாவிட்டால் அவரால் இனி தூங்கவே முடியாது.

# கரைநாட்டிசை

## இசைச் சித்தர் சி.எஸ்.ஜெயராமன்

தமிழ்மொழியில் கர்நாடகம் என்ற சொல்லே கிடையாது. எத்தனையோ நுண்கலைகளை ஆராய்ச்சியின் மூலம் கண்டு பிடித்த ஆதிவாசி மறத்தமிழன் சகலவற்றிற்கும் பெயரிட்டவன்-தன் தாய் மொழியை மறந்து இழிவுபடுத்த பிறமொழியின் தலைப்பை இசைக்கு அமைத் திருப்பானா? அதை நன்கு சிந்திக்க வும். உண்மையான சொல்லை, பொருளைக் கீழே விளக்கமாகத் தருகின்றோம்.



பல நூற்றாண்டுகளுக்கு முன் கிழக்கிந்தியக் கம்பெனியான வெள்ளையர்கள் தமிழ்நாட்டை-இந்தியாவையே தன் நிர்வாகத் திற்குக் கொண்டுவந்த பின்னர் தான் ''பர்லாங்'' என்ற சொல் லும், ''மைல்கல்'' என்ற சொல் லும் வழக்கத்திற்கும், பழக்கத் திற்கும் வந்தது என்பதை அனை வரும் அறிவர்.

சேர, சோழ, பாண்டியர் காலத்தில் திக்குகளையும் திசை களையும்,எல்லைகளையும் அடை யாளமாகக் கூறி ஆதிவாசிகள் மேற்கண்டவைகளைக் கடைப் பிடித்து வந்தார்கள் என்பது ஒரு சிலர் மட்டுமே அறிந்த ஒன்றாகும். கரைகளையும் அடை யாளமாகக் கூறுவர். தற்போது கூட, தஞ்சை மாவட்டத்தில் சில கிராமங்களில் அக்கரைக்கு இக் கரைப் பச்சை என்பார்கள். விளக்கம் இது:

கரை + நாடு = கரைநாடு
கரை + நாடு + இசை = கரை நாட்டிசை.

சோழகரை நாட்டிசை, சேர கரை நாட்டிசை, பாண்டியகரை நாட்டிசை. மேற்சொன்ன மூன்று பொருளையும், வழக்கத்தில் தவ றாகக் கூறி கரை நாட்டிசை என் பதற்குப் பதிலாக, கர்நாட்டிசை என்றும் மேற்கொண்டும் மருவி, கர்நாடக இசை என்று சொல் லாது கர்நாடகச் சங்கீதம் என்று எல்லோரும் இன்றும் கூறிவரு கின்றனர்.

கன்னடமொழியின் தலைப்பில் தமிழ்நாட்டின் இசை என்ற-சொல்லுக்குப் பதிலாகக் கர்நாட கச் சங்கீதம் என்று தைரியமாகப் பணபலத்தாலும், பத்திரிகைப் பலத்தாலும் தவறாகப் பல நூல் களை எழுதி, அந்த நூல்களை எடுத்துக்காட்டாகத் தமிழர் களுக்கு எடுத்துக்கூறி ஏமாற்றி வருபவர்கள் யார் என்பதைக் கண்டு பிடியுங்கள். இதனை



எதிர்த்து வாதாடி முறிடியக்கத் தமிழர்களிடம், பணபலமும் இல்லை; ஒற்றுமையும் இல்லை; புத்தகங்களும் இல்லை.

தில்லியில் வாழும் தமிழர் மரபினர் ஒரு கோடி ரூபாய் செலவில் தமிழ்ச்சங்கம் என்ற கட்டடத்தை அமைத்துள்ளார்கள். பெங்களூரிலும் தமிழர் மரபினர் தமிழ்ச்சங்கக் கட்டடத்தை அமைத்து அதில் ஒரு சில இசை வகுப்புகளையும் நடத்தி வருகின்றனர். பொள்ளாச்சியிலும் தமிழிசைச் சங்கம் என்ற ஒன்றைப் பதினைந்து ஆண்டுகளாக நல்ல முறையில் செயல்படுத்தி வருகின்றனர். என்றாலும் இசைக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை விட, தமிழ்மொழிக்கு மிகமிக முக்கியத்துவத்தைக் கொடுத்து அனைத்துச் சங்கங்களும் ஒன்று கூடி ஒற்றுமையுடன், கர்நாடகச் சங்கீதம் என்ற சொல்லே கிடையாது என்பதை மாவட்டங்கள் தோறும் கூட்டத்தை அமைத்து பழமை இசை என்ற சொல்லுக்குப் பதிலாக மேற்கண்ட அடையாளங்களைப் புகுத்தி, சோழகரை நாட்டிசை, சேரகரை நாட்டிசை, பாண்டிய கரை நாட்டிசை எனப் பெயர்களை அமைத்துள்ளார்கள். அது தான் தமிழிசை என வலியுறுத்த வேண்டும்.

மூன்று பிரிவிற்கும் கரையைப் புகுத்தியிருப்பதன் உட்பொருள் இசையின் பாணி, என்பதையே குறிக்கும். தஞ்சை மாவட்டப் பாணி, அது தான் கரை. மதுரை மாவட்டப்பாணி அதுதான் கரை. சேரமாவட்டப் பாணி அதுதான் கரை.

மேற்கொண்டவைகளை மனதில் கொண்டு தமிழ்ப்புலவர்கள்தமிழ் ஆராய்ச்சியாளர்கள் வாதிட வேண்டும். தமிழிசைக்கு இசை இலக்கணம் தேவை என்றால் என் போன்றவர்கள் தெரிந்தவைகளைக் கூட எழுதி வாதிட, விளக்கம் தர, செயல்படுத்தித்தர தயாராக உள்ளோம்.

எனவே கர்நாடகச் சங்கீதம் உண்டா இல்லையா? கரை நாட்டுச் சங்கீதம் உண்டா இல்லையா? என்பதை ஆழ்ந்த தன்மையில் சிந்தித்து முடிவு எடுக்கும்படி தமிழர் மரபையும் அறிஞர்கள், புலவர்கள், ஆராய்ச்சியாளர்கள், பத்திரிகை நிருபர்கள், மற்றும் தமிழ்ப் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், காமராசர் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் எல்லாப் பல்கலைக் கழகங்களும் இதனைச் சிந்தித்து முடிவு எடுத்துச் செயல்படுத்தித் தரும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

வேடிக்கையான ஒன்றல்ல இது. தமிழர் மரபிற்கே பெரும் இழுக்கைத் தேடித்தந்த ஒரு சொல்லானது தான் கர்நாடகச் சங்கீதம் என்ற சொல். எனவே தொன்மைத் தமிழிசை என்பதைப் பெரியவர்களும் அறிஞர்களும் கலந்து அதன்படி செயல்பட வேண்டும் என்பது நமது இலட்சியம் ஆகும். வாழ்க தமிழ்! வளர்க கலை!! வெல்க தமிழ்!!!

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்'** —குறள்



# அப்பச்சிக்குத் திண்ணை போதுமே



வீடு முழுவதும் ஒரேவாசனை, ஒரே வாசனையா? இல்லையே, இல்லை, பல்வகை வாசனைகள். ஊதுபத்தியின், சந்தனத்தின், மலர்களின், இன்னோரன்ன பிற வற்றின் வாசனைகள்......அந்த வீட்டையே நறுமணங்களின் கலவையில் முக்கி எடுத்திருந்தாற் போல் அது மூக்கைத் துளைத்துக் கொண்டிருந்தது.

கலியாண வீட்டின் வாசனை அது. சண்முகம் வாய்க்குள் சிரித்துக்கொண்டார். அவருடைய திருமணநாள் பற்றிய நினைவுகள் அவர் மனத்துள் கிளர்ந்தெழுந்தன. ஈராண்டுகளுக்கு முன்னர் இறந்துபோன அருமை மனைவியின் ஞாபகம் நெஞ்சில் நெருட, அவரிடமிருந்து ஒரு நெடிய மூச்சு சீறிக்கொண்டு புறப்பட்டது.

ஞானம் இன்று உயிரோடு இருந்தால்....மகனின் திருமணத்தை நடத்த விட்டிருப்பாளா? கீழ்ச்சாதிப்பெண்ணை மருமகளாக ஏற்க மனமொப்பி இருப்பாளா? ஒருகாலும் மாட்டாள். பெரிய குருஷேத்திரப் போரே நிகழ்ந்திருக்கும். ஒன்று மகன் தாயின் ஒப்புதலுக்காகக் காலமெல்லாம் காத்திருக்க நேர்ந்திருக்கும்; அல்லது - தனது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள அவன் குடும்பத்திலிருந்து வெளியேறிச் செல்ல நேர்ந்திருக்கும். ஞானம் இறந்து போனது ஒரு வகையில் மகனுக்குச் சாதகமாய்ப் போயிற்று. இந்நினைப்புத் தம்மையும் அறியாது அவரை உதட்டைக்கடிக்க வைத்தது.

சே, என்ன நினைப்பு இது ஆயினும் அதுதானே உண்மை என்ற நினைப்பை மனத்தினின்று அவரால் விரட்ட முடியவில்லை. அவருடைய இனத்தாரில் அவர்தாம் மெத்தப் படித்தவர். அந்த நாளில் அவர் குடும்பத்திலும், சுற்றத்தாரிலும் பட்டப்படிப்புப் படித்த ஒரே இளைஞன் அவர்தாம். மகனின் கல்வித் தாகத்தைப் புரிந்துணர்வோடு தீர்த்து வைத்த அவன் அப்பாவுக்குத்தான் அவர் நன்றி கூற வேண்டும். அவருடைய அப்பா ஏழெட்டு வகுப்புக்கள் மட்டுமே படித்திருந்தவர். அவர்களது வழிவழிவந்த குலத்தொழிலான வணிகத்தை அவரும்செய்து வந்தார். நல்ல காசு கிடைத்தது. தம் ஒரே மகனைத் தாம் செய்து வந்த வணிகத்துக்கு வாரிசாக அவர் நம்பி இருந்தார். ஆனால் சண்முகத்துக்கோ படிப்பில் நாட்டம். சண்முகத்தின் வாத்தியார் வேதாந்தம் அய்யங்கார் வீடு தேடிவந்து சண்முகம் மிக நன்றாய்ப் படிப்பதாகவும், அவன் படிப்பை நிறுத்தக்கூடாது என்றும் அவன் அப்பாவிடம் அவனுக்காகப் பரிந்துரை செய்தாரே, வேதாந்தம் என்று அவருக்கு அவருடைய பெற்றோர் வைத்த பெயருக்கு ஏற்ப அவர் ஒரு பெரிய வேதாந்தியாகத்தான் திகழ்ந்தார். இன்று சண்முகத்திடம் இருக்கின்ற ஞானமெல்லாம் அவர் விதைத்த வித்துக்களினின்று முளைத்த மரந்தான் அதனால்தான் மகன் ராமகிருஷ்ணன் தாழ்ந்த சாதி என்று முத்திரை குத்தப்பட்ட இனப் பெண்ணைக் காதலித்து அவளை மணக்கும் விருப்பத்தைத் தம்மிடம் வெளியிட்டபோது அவர் மறுப்புச் சொல்லவில்லை.

''சாதியில் எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லைடா. பொண்ணு நல்லவதானே'' என்று அவர் புன்னகை செய்தபோது ராமகிருஷ்ணன்தான் எப்படி ஒரு நம்பாமையுடன்அவரைப்பார்த்து விழித்தான். இந்த ஞாபகத்தில் அவர் சிரித்துக் கொண்டார்.

மகனின் விருப்ப வெளியீட்டுக்கு அவரது உடனடியான எதிரொலி சம்மதம் நிறைந்த அந்தப் பதில்தான். அதற்குப் பிறகுதான் மருமகளின் குடும்பம் பற்றிய மற்ற விவரங்கள் அவருக்குத் தெரியவந்தன. அவள் ஒரு பணக்காரப்பெண், படித்தவள், அவள் அப்பா மைய அரசு அலுவலகம் ஒன்றில் தாழ்த்தப்பட்டவர்க்குரிய பதவி உயர்வு ஒதுக்கீட்டால் அலுவலர் ஆனவர் என்பதெல்லாம் தெரிந்தபோது அவருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டதென்னவோ உண்மைதான்.

அறைக்கு வெளியே காலடி ஓசை கேட்க, அவர் தலை உயர்த்திப் பார்த்தார். ராமகிருஷ்ணன்தான் அறைக்குள் நுழைந்து கொண்டிருந்தான் புது மணமகனுக்குரிய கூச்சத்துடன், அரையாக அவரைப் பார்த்தபடி ''அப்பச்சி! நாங்க ரெண்டுபேரும் இன்னிக்கு மகாபலிபுரத்துக்குப் போய்ட்டு வரலாம்னு இருக்குறோம்,'' என்றான்.

ஒரு புன்னகை காட்டிவிட்டு, 'ஜமாய்' என்றார் சண்முகம். ராமகிருஷ்ணனின் முகம் அதன் கருமைக்கு அப்பால் சிவப்புக் காட்டியது.

ஒரு கணம் தயங்கிவிட்டு, ''இன்னிக்கு ஒரு நாள் ஓட்டல்ல சாப்பிட்டுக்குவிங்களா, அப்பச்சி'' என்றான், குரலில் ஒரு தயக்கமும் குற்றமும் ஒலித்தன.

சண்முகம் பெரிதாய்ச் சிரித்து ''அதுக்கென்ன, ராமு நீ கவலைப் படாம போயிட்டு வாப்பா. எனக்கேதான் சமையல் செய்யத் தெரியுமே. நீங்க ரெண்டுபேரும் திரும்புறச்சே சாயந்திரம்ஒரு ஆறு மணியாவது ஆகாது? டிபனும் காப்பியும் செய்து வச்சுடறேன்.. இரவுச் சமையலைக்கூட ஆறுக்கெல்லாம் முடிச்சு வச்சுடறேன்.

ஜோதிர்லதா கிரிஜா

எம் மருமகளும் என் கைச் சமையலை ருசி பார்க்கட்டுமே'' என்றார்.

அவன் குரலில் ஒரு பதற்றம் காட்டி, ''அதெல்லாம் வாணாம், அப்பச்சி. நாங்க வெளியில் சாப் பிட்டுட்டு வந்துடறோம். நாங்க வரப்ப அநேகமா இருட்டிடும்னு நினைக்கிறேன். எங்க சாப் பாட்டுக்கு நீங்க ஒண்ணும் சிரமப் படுத்திக்காதீங்க, அப்பச்சி'' என்றான் அவசரமாக.

''சரிப்பா, ராமு.,''

''அப்ப நாங்க போய்ட்டு வறோம்ப்பா. ஒரு அரைமணியில கெளம்பிடுவோம். போறதுக்கு முன்னாடி வந்து சொல்லிக் கிறேன். அவ ட்ரெஸ் பண்ணிக் கிட்டிருக்கா...''

''சரி''.

மகன் பக்கத்து அறைக்குள் புகுந்து கதவைத் தாழிட்டுக் கொண்ட ஓசை கேட்டது. திருமணம் முடிந்து இந்த நான்கு நாட்கள் வரையில் வீட்டில உறவுக்காரப் பெண்கள் இருந் தார்கள். அவர்களே சமையலை யெல்லாம் கவனித்துக் கொண் டார்கள். யாரும் இல்லாமற் போன முதல்நாள் இதுதான். மகன் மனைவியோடு வெளியே போகிறான். எனவே மருமகளின் சமையலைச் சுவைத்து மதிப் பெண் போடும் வாய்ப்பு இன்று அவருக்கு இல்லை.

அவர் எழுந்து தாம் பாதி படித்திருந்த புத்தகத்துள் அடை யாள நறுக்கு ஒன்றைச் செருகி மேசை மீது கிடத்தி விட்டு வெளியே வந்தார். வழி நடையைக் கடந்து தோட்டத் துக்குப் போய் நின்றார். கல் யாணச் சந்தடியில் தோட்டத்து மரங்களை மறந்து போனது ஒரு குற்ற உணர்வால் அவரது நெஞ்சில் குத்தியது. மகனும் மருமகளும் கிளம்பிப் போன பிறகு கொய்யா, வாழை, தென்னை மரங்களுக்குத் தண்ணீர் ஊற்றவேண்டும் என்று நினைத்துக் கொண்டார். வேப்ப மரக்காற்று முகத்தில் பட்டது. டிசம்பர் மாதச் சிலுசிலுப்புடன் வீசிய காற்று அவருள் ஒரு புத் துணர்ச்சியை விளைவித்தது. அவருக்கு உடனே சொல்லி மாளாத மகிழ்ச்சி ஏற்பட்டது. வாழ்க்கையின் முழுப் பயனையும் அடைந்து விட்ட நிம்மதி ஒரு பேரனோ பேத்தியோ பிறந்து விட்டால் கிடைத்துவிடும் என்று நினைத்தார்.

மகனின் அறையினின்று வெளிப்பட்ட சிரிப்புச் சத்தம்



அவரது சிந்தனையைக் கலைத்தது. அந்த அறையின் சன்னல்கள் தோட்டத்துப் பக்கம் பார்த்திருந்தன. அவர் சட்டென்று நகர்ந்து நின்றார். சன்னல கதவுகள் சாத்தப்படாத நிலையில், மகனையும் மருமகளையும் ஏதேனும் அந்தரங்கக் கோலத்தில்தாம் பார்த்து, அவர்களும் அதைக் கவனித்துவிட்டால் இருவருக்கும் கூச்சமாகிப் போகுமே என்ற கவனத்தால் அவர் அந்தச் சன்னல்கள் தெரியாத இடத்துக்கு நகர்ந்து போனார்.

'உங்க அப்பச்சி' என்ற மருமகளின் சொற்கள் அவர் செவிகளை வந்தடைய, ஓர் ஆவலுடன் அப்படியே நின்றார். ஒற்றுக் கேட்கிற வழக்கமற்றவராயினும், தம் மருமகள்தம்மைப் பற்றி என்ன சொல்லப் போகிறாள் என்பதைத்தெரிந்து கொள்ளும் இயல்பான ஆசைக்கு ஆட்பட்டு அவர் செவிமடல்களை விடைத்துக் கொண்டார்.

''உங்க அப்பச்சி அந்த ரூமை விட்டு வெளியே வரவே மாட்டாரா ?''

''ஆமா, வேணி ரொம்பப் படிப்பாளி எங்க அப்பச்சி, படிப்பு படிப்பு, படிப்பு-எப்ப பாரு படிக்கிறதுதான் வேலை அவருக்கு, அதுலயும் ரிடையர் ஆகி வீட்டில இருக்கத் தொடங்கிட்டாரில்ல ? ரெண்டு மூணு லைப்பரரீஸ்ல மெம்பராச் சேர்ந்திருக்காரு. பொழுது போகணுமே! ஏன்? எதுக்குக் கேக்கறே?''

''நீங்க ஒண்ணுந் தப்பா எடுத்துக்கலைன்னா ஒண்ணு சொல்லணும்..''

''சொல்லு?''

''அந்த ரூம்ல உங்க அப்பச்சி தன்னோட புத்தக அலமாரி தானே வெச்சிருக்காரு? அதை ஹால்ல கொணாந்து வச்சுக் கட்டுமே?'

''ஏன்?''

''வெச்சுக்கிட்டாருன்னா அந்த ரூமையும் நாம வெச்சுக்கலாம்.''

'ரொம்ப நாளா அவரு அந்த ரூம்ல இருக்காரு, வேணி. அது அவருடைய உலகம்.''

''இருக்கட்டுமே, இப்ப மகனுக்குக் கலியாணம் ஆயிடுச்சுல்ல? மருமக வந்தாச்சு. வீட்டுல இனி ஆள் நடமாட்டம், சாமான் சச்சரவெல்லாம் அதிகமாகும். தனக்குன்னு ஒரு ரூம்ல உங்க



அப்பச்சி உக்காந்தாருன்னா அது பொதுவில ஒரு இடைஞ்சலை உண்டாக்குமில்ல? அதான், நீங்க வேறு எதுவும் தப்பா எடுத்துக் காதீங்க.''

''எடுத்துக்கல்லே, ஆனா எங்கப்பா எங்க உக்காருவாரு ?''

''அதான் திண்ணை இருக்குதே அங்க ஈஸ்சேரைப் போட்டுக்கிட்டு உக்காரலாமே? திண்ணையில வெளிச்சமும் நல்லா வருது... அவருக்கும் அது வசதிதானே?...

''ஆமா, வேணி, நீ செல்றாப்ல அப்பச்சிக்கு அந்தத் திண்ணையே போதும்னுதான் எனக்கும் இப்ப தோணுது.''

மகனின் இந்தச் சொற்கள் சண்முகத்தைப் பளாரென்று அறைந்தன.

''ஆனா இப்பவே வேண்டாம் இன்னும் ரெண்டொரு நாள் போகட்டும். அதுக்குப் பெறகு சொல்றேன். அவரு ஒண்ணும் நினைச்சுக்காம இருக்கணும். அதான் கொஞ்சம் தயக்கமா இருக்குது.''

''நினைச்சுக்கிறதுக்குஎன்னங்க இருக்குது இதில? நியாயமாப் பார்த்தா அவரேகூட அதைச் செய்யணும். ஏன்னா நிறைய சாமான்களாம் இன்னும் சேர்ந்துக்கிட்டே போகும் பாருங்க. ஹால்ல கொணாந்து எல்லத்தையும் வெச்சா அசிங்கமா இருக்குமில்லியா?''

''ஏன்? ஏதானும் சாமான்கள் வருதா?''

''நம்ம குடும்பத்துக்குன்னுநாம சேகரிக்க வேண்டிய சாமானுங்க இன்னும் எம்புட்டோ இருக்குதே. ப்ரிஜ் வாங்கணும். டி.வி. வாங்கணும். இன்னொரு கோத்ரெஜ் அலமாரி வாங்கணும்., உங்க வீட்டுல டேபிள் இல்லே. அதுவும் வாங்கணும்... டைனிங்டேபிள் கூட கொஞ்ச நாளுக்குப்பெறகு வாங்கணும், எல்லாத்தையும் ஹால்லயா வெப்பாங்க? வெச்சா வர்ரவங்க போறவங்களை எங்க உக்கார வைக்கிறது? அதான், ஒரு பொதுவான நன்மையை உத்தேசிச்சுத்தாங்க சொல்றேன்.''

''ஓகே, புரியுது, அப்பச்சிக்குத் திண்ணை போதும்னுதான் எனக்கும் தோணுது, உக்காந்து புஸ்தகம் படிக்கிறதுக்குத் தனி ரூம் என்னத்துக்கு நீ சொல்றாப்ல?''

இரண்டாவது தடவையாகச் சண்முகம் நெஞ்சில் அடி வாங்கினார். அவருள் கசப்பும் வியப்பும் ஒரு சேரப் பொங்கின. ஆயிரம் தான் காரணங்கள் இருப்பினும் தம்மைத் தமது நெடுநாளைய இருப்பிடத்திலிருந்து கிளப்ப அவர்கள் எண்ணியதை அவரால் தாங்க முடியவில்லை. அவருடைய அறையே அவருக்குச் சொர்க்கம். அதுவே அவருக்கு எல்லாமும், நாற்பத்தைந்து ஆண்டுகளாக அவர் அந்த அறையில் வசிக்கிறார் - தமது மாணவப் பருவத்திலிருந்து.

அவர் கண்கள் கலங்கின, என்ன பெண் இவள். வந்ததும் வராததுமாய் இப்படி அதிகாரக்கொடி நாட்டப் பார்க்கிறாளே? மனிதர்களுக்கு நியாயம் என்பதே கிடையாதா? உடனேயே அவருக்குள் பெருங்கசப்புத் தோன்றியது. பெற்று வளர்த்த மகனுக்கே இல்லாத கரிசனத்தைப் பிறிதொரு குடும்பத்துப் பெண்ணிடம் எதிர்பார்ப்பதும், அது அவளிடம் இல்லையென்றுபழிப்பதும் எத்தகைய மடமை!

அவர் மெல்ல நகர்ந்து தம் அறையை யடைந்தார். அவருள் சினம் கனன்று கொண்டிருந்தது.

'அப்பச்சிக்குத் திண்ணை போதுமே'

அரைமணி கழித்து அவரிடம் வந்த மகனும் மருமகளும் விடை பெற்றனர். ராமகிருஷ்ணன், "நாளையிலேருந்து ஹனிமூனுக்கு நாங்க ஹைதராபாத் போகலாம்னு இருக்கோம். ஒரு பதினஞ்சு நாள் சுற்றுப் பயணம். அதுக்கு அப்புறம்தான் வருவோம் ...'' என்றான்.

''செய்..டிக்கெட்டுக்கெல்லாம் ஏற்பாடு பண்ணிட்டியா?''

''ரெயில்வேல இருக்கிற ப்ரண்ட் ஒருத்தன் ரிசர்வேஷன் பண்ணிக் குடுக்கறேன்னிருக்கான்.



கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆய மகள் ....

—கலித்தொகை

அநேகமா இன்னிக்கு ஈவினிங் தெரிஞ்சுடும். நாங்க வறோம், அப்பச்சி?'

''ரைட்')

ஹைதராபாத், பூனா, எல்லோரா, அஜந்தா என்று இருவரும் தேனிலவைக் கழித்துவிட்டு ஊருக்குத் திரும்பியபோது பூட்டிய கதவு அவர்களை வரவேற்றது. ஒரு வேளை தங்களுக்குச் சிற்றுண்டி வாங்கிவர அப்பச்சி ஓட்டலுக்குப் போயிருக்கக்கூடும் என்று எண்ணிய இருவரும் திண்ணையில் ஆயாசத்துடன் அமர்ந்தனர். அப்போது எதிர் வீட்டுச் சிறுமி ஓடிவந்து ஓர் உறையை ராமகிருஷ்ணனிடம் கொடுத்துப் போனாள்.

அவன் பதற்றமாய் அதைப் பிரித்துப் படிக்கலானான். அவன் தோளுக்குப் பின்னால் நின்று வேணியும் மாமனாரின் கடிதத்தைப் படித்தாள்.

'அன்புள்ள மகன் ராமகிருஷ்ணனுக்கு,

இப்படி ஒரு கடிதம் எழுத நோந்ததற்கு மிகவும் வருநது கிறேன. நம் வீட்டை நான் வறறு விட்டேன். தாத்தாவின் வீட்டை அப்பச்சி எப்படி விற்கப்போயிறு என்று உனக்கு ஆத்திரம் வரக்கூடும். இந்த வீடு என் அப்பச்சியுடையதுதான். ஆனால் மூதாதையர் சொத்தன்று. என் அப்பச்சி தம் சுய வருமானத்தில் கட்டியது. அதனை எனக்கு எழுதி வைத்த என் அப்பச்சி அதை விற்கும் அதிகாரத்தையும் எனக்கு அளித்து உயில் எழுதி இருக்கிறார். எனவே நான்அதை மயிலாப்பூர் மாடவீதியில் இருக்கும் எனக்குத் தெரிந்த ஒருவருக்கு விற்றுவிட்டேன். இனி மாதாமாதம் நீ அவருக்குவாடகை கொடுக்கும்படி இருக்கும்.மாதம் ஐந்நூறு ரூபாய்க்குக் குறையாது என்று சொல்லிவிட்டார். நீ அவரோடுபேசிக்கொள் சென்னை வழக்கப்படி பகடித் தொகையும் கொடுக்கும்படி வற்புறுத்தினார். நான் உனக்காக வாதாடி அதிலிருந்து விலக்குப் பெற்றேன். இல்லாவிடில் ஓர் இரண்டாயிரமாவது அவருக்கு நீ அழ நேர்ந்திருக்கும். அவரது முகவரியைக் கடிதத்தின் பின்புறத்தில் எழுதி இருக்கிறேன். அவரே உன்னைச் சந்திக்க வருவார். எனது இந்த நடவடிக்கை உனக்கு வியப்பையும் குழப்பத்தையும் விளைவித்திருக்கும். என்ன செய்ய எனக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது. நானே எனது அறையை ஒழித்துக் கொடுக்க எண்ணி இருந்தேன். நீ அவசரப் பட்டுவிட்டாய். என்ன படித்து என்ன? மனத்தில் அன்பும் நன்றியும் இல்லாத பிறவி ஓர் அவமானமே!

'அப்பச்சிக்குத் திண்ணையே போதும் என்று நீ வேணியிடம் சொல்லிக்கொண்டிருந்தது தற்செயலாய்த் தோட்டத்துக்கு வந்த என் காதில் விழுந்துவிட்டது. ஆமாம், எனக்குத் திண்ணைகளே போதும் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். நான் ஊர் ஊராய்ச் சுற்ற முடிவு செய்துவிட்டேன். வீடு விற்ற பணம் செலவாகும்வரை நான் போகிற ஊர்களிலுல் வீட்டுத் திண்ணைகளில் படுத்துறங்கிப் பின் ஏதேனும் அனாதை விடுதியில் சேர்ந்து கொள்ளுவேன்.

திண்ணை போதும் என்று சொன்னதற்கு இத்தனைப் பெரிய பழி வாங்கலாமா என்று உனக்குக் கோபம் வரலாம்.என்னுடைய இடத்தில் உன்னை வைத்துப் பார்த்தால் என் உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ளுவாய். பிள்ளை என்ன செய்தாலும் பொறுத்து, விட்டுக் கொடுத்து, அவன் கையால் கொள்ளி வாங்காவிட்டால் சொர்க்கம்போய்விடும் என்று பயந்து எல்லா அவமானங்களையும் சகித்துக்கொண்டு போகும் சாதாரணத் தகப்பன்மாரிலிருந்து நான் மாறுபட்டு நடக்க முடிவு செய்துவிட்டேன். தாய்தகப்பன்மார்கள் இப்படி நடக்கத் தொடங்கினால்தான் பிள்ளைகள் அன்பினால் இல்லாவிட்டாலும், அச்சத்தினாலாவது - ஒழுங்காக நடப்பார்கள். உனக்கு என் ஆசிகள். வேணிக்கும்தான்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள
சண்முகம்.

வியர்வைத் துளிகள் தோன்றிய முகங்களுடன் அப்பச்சிக்கென்று ஒதுக்கி இருந்த திண்ணையில் இருவரும் பொத்தென்று சரிந்து உட்கார்ந்தார்கள்.



நாட்டு மக்கள் நலம் பெற நல்ல நல்ல
திட்டங்களும் சட்டங்களும் உருவாகும்
தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகம்.



அறிவு தேடும் வயதில் உணவு தேடும் கவலையைப் போக்கிச் சீருடையும், பாட நூலும் வழங்கி வலிமைமிக்க அறிவு சான்ற தலைமுறையை உருவாக்கும் முதல்வரும், நாடு காக்கும் நாளைய தலைமுறையும்.



எழில் கொழிக்கும் உதகை ஏரியில்
எழில் கூட்டும் சிறுவர் ரயில்.



காந்தி மண்டபம், கன்னியாகுமரி. இதன் அருகே ஆசியாவிலேயே மிகப் பெரிய திருவுருவச் சிலை-குறள் வடித்த வள்ளுவருக்குக் குமரிக்கடலின் நடுவே குன்றின் மேல் அமைக்கப்படவுள்ளது. (மதிப்பீடு: ரூ. 432 லட்சம்-சிலையின் உயரம் 75 அடி. பீடத்தின் உயரம் 45 அடி)



# பண்பாட்டுப் பலகணி

டாக்டர் ஔவை நடராசன்

இலக்கியங்களைப் பண்பாட்டுப் பலகணிகளென்று கூடக் கூறி மகிழலாம். பழந்தமிழ் இலக்கியங்களுக்குள்ளும் பழைமை சான்றது புறநானூறு. பழந்தமிழ் மக்களின் வரலாற்றுக் கருவூலமாகவும் புறநானூறு திகழவல்லது.

புறநானூற்றுப் பொன்னேடுகளைப் புரட்டினால் ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் நம் கண்ணெதிரே காட்சிதரும். அத்தகைய காட்சிகளிலே ஒன்றாக இன்றைய பொங்கல விழா தெரிகிறது.

பிட்டங் கொற்றன் என்ற பெருந்தகையாளன் வாழ்ந்த குதிரைமலை நாடு! இழுமென இழிதரும் அருவிகள் - வான் தொட வளர்ந்த மூங்கில்கள்- கை போல் மலர்ந்த காந்தள்- இந்தச் சூழலையுடைய அகன்ற நிலப்பரப்பில் பன்றிக்கூட்டம் பசிக்கு இரைதேடி அலைகின்றது. அந்தப் பன்றிகள் கிழங்கினை அகழ்ந்து தின்று முடித்த இடம் பொழுதெலாம் உழவன் உழவு செய்த நிலம் போலுள்ளது. அந்தக் காட்சியினைக் குறவர்கள் கண்டனர். தினை விதைப்பதற்குரிய பருவமாகவும் அது அமைந்திருந்தது. எனவே தினை விதைத்தார்கள். தினையும் விளைந்தது. அந்தப் புதுவிளைவு கண்டு அவர்கள் உள்ளம் பொங்கியது. புதிதுண்ணத் தொடங்குகின்றார்கள். ஆடிப்பட்டம் தேடி விதைத்துத் தைபிறந்தால் வழிபிறக்குமென்று வழிமேல் விழிவைத்துக் காத்திருந்த மக்கள், தைத் திங்களில் புதிதுண்ணும் செயலை, தஞ்சைத் தரணியில் இன்றும் -''புதிதுண்ணுதல்'' என்றே போற்றுவார்கள். அதற்குரிய நாள் 'பூச நாள்' என்பதும்-அந்த நாளே அக்காலத்தில் தைத்திங்கள் முதல் நாளாக மலர்ந்ததும் எண்ணத்தக்கது.

புதிதுண்ணும் திருநாளில் மரையான் பாலையே உலை நீராக வைத்துப் பாற்பொங்கல் செய்கின்றார்கள் வீட்டு முன்னிடத்தில்-முன்றிலில் -முற்றத்தில் -மல்லிகைப் பந்தலில் தெருத் திண்ணை போல் அகன்று விளங்கும் வாழையிலைகளில் பலருக்கும் பகுத்தளித்துப் பரிவோடு உண்டு களிக்கின்றார்கள்.

முந்துவிளை யாணர்
நாள் புதிது உண்மார்
மரையான் கலந்த நுரைகொள்
தீம்பால்
மான்தடி புழுக்கிய புலவுநாறு
குழிசி
வான்கேழ் இரும்புடை
கழா அது ஏற்றி
சாந்த விறகின் உவித்த புன்கம்
கூதளம் கவினிய குளவி
முன்றில்

செழுங்கோள் வாழை
அகல் இலைப் பகுக்கும்.

புறநானூற்றுக் காட்சியில் இன்றைய பொங்கல் விழாவின் நடைமுறைகளைப் பார்க்கின்றோம்!

குதிரைமலை நாட்டின் குறவர் வாழக்கையில் சந்தன மரமே விறகாகப் பயன்படுகிறது என்ற பெருமிதப் பின்னணியில் அவர்களுக்குச் சந்தன மரத்தினருமை தெரியவில்லை என்ற செய்தியும் நிழலாடுகிறது.

மணங்கமழும் சந்தனமே விறகானாலும் பொங்கலிட்ட பானையில் புலவு மணங் கமழ்கிறதாம். மேலும் அக்குடும்பத்தாரின் அகப்பண்போ நனிசிறந்து மிளிர்கின்றது. உடலளவில் காட்சிதரும் நாகரிகம் இன்றைய அளவிறகு மிகுந்திருக்கலாமே தவிர உள்ளத்தில் ஊறுகின்ற அன்பின் கனிவாகிய பண்பாட்டு மேம்பாடு அங்கே சுடர் விடுகின்றது. இப்படி உற்றாரும் உறவினருமாகச் சுற்றந் தழுவிய சூழலில் கூடியிருந்து குளிர்ந்துண்ணும் காட்சியே,

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புக
பகடு நடந்த கூழ் பல்லாரோடு
உண்க

என்ற வாழ்க்கை இலக்கணம் வகுக்க அடித்தளமாகின்றது என்றும் எண்ணத் தோன்றுகிறது.

ஒத்தறிவான் உயிர் வாழ்வான் என்ற ஒப்புரவாண்மையே எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க என்ற ஒருமைப்பாட்டுணர்வே - பொங்கல் விழாவின் உள்ளுறையாகப் பொலிவதைக் காண்கின்றோம்.

சமய மரபுகளுக்கும் சடங்கு நெறிகளுக்கும் சற்றேனுமிடமில்லாத இயற்கை விழாவாகவே இன்றளவும் உழவர் திருநாள் தமிழர் திருநாளாகக் கொண்டாடப்படுகின்றது. அந்த ஒருநாள் அல்லது ஒன்றிரண்டு நாள்கள் விழாக் கொண்டதேயல்லாது பொங்கல் விழாவின் குறிக்கோள் நம் வாழ்வில் முழுவதும் மலர்ந்ததா? இல்லை யென்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

பகுத்துண்டு வாழ்கின்ற பண்பாட்டுத் திருநாளை ஆண்டு தவறாமல் கொண்டாடுகின்ற நாட்டில் பசித்தவர்கள் என்று எவரேனும் இருக்கலாமா? இல்லார்களும் இல்லை. உடையார்களும்

இல்லை என்ற இலக்கியச் சிந்தனை காப்பியக் கற்பனையாகத் தானே கரைந்து கொண்டிருக்கின்றது.

ஏற்பது இகழ்ச்சி என்று பேசும் எழிற் கொள்கையோடு வாழ முடியாமல் ஏந்திய கையினராகத் திரிகின்றவர்களை இன்றும் காண்கின்றோமே!

இந்த நாட்டில் இன்னும் இல்லாமை இருக்கின்றது! ஏன்? ஒருவர் உரிமையை அடுத்தவர் தடுக்கின்ற பொல்லாமையும் இருக்கின்றது. காரணம் வாழ்வியல் நூல்களை எழுத்துக்கும் பேச்சுக்குமேயன்றி நடைமுறை வாழ்வுக்கென்று கல்லாமையும் இருக்கிறது. இந்தக் குறைகளையெல்லாம் எடுத்துச் சொல்லாமையும் இருக்கத்தான் செய்கின்றது.

பொங்கலுக்கு முதல்நாளில் வேண்டாத பழுதடைந்த பழம் பொருள்களைப்புறம்போக்குவது போல சமுதாயத்தில் காணப்படும் குறைபாடுகளைக் களைவோம்-ஒத்தாரும் தாழ்ந்தாரும் உயர்ந்தாருமாகிய வேறுபாடுகளைத் தவிர்ப்போம். ஒருமை உள்ளவர்களாய் உரிமை உள்ளவர்களாய் உலகியல் நடத்துவோம். எல்லோரும் இன்புற்று வாழவேண்டும் என்ற பொன் மனத்தைப் போற்றுவோம்!

தமிழ்நலம் தழைக்க எங்கள்
தாயகம் பெருமை கொள்ள
அமிழ்தினும் இனிய தாகும்
அருங்கலைச் செல்வம் ஓங்க
இமிழ்கடல் உலகம் எல்லாம்
இசைந்தொரு குலமே யாகத்
தமிழ்த்திரு நாளில் அன்பு
தழைத்திட வாழ்த்துகின்
றோம்!



* மாடுமேய்க்கும் பையன் உன்னை
மாலையிடப் போறான்
மாடுமேய்த்தால் என்ன-என்னை
மாலையிட்டால் போதும்!



# தமிழர் ஆண்டு

தமிழர்க்குத் தமிழில் தொடர் ஆண்டு இல்லாத குறையை உணர்ந்த தமிழ் அறிஞர்கள், சான்றோர்கள், புலவர்கள் ஆகியோர் 1921இல் சென்னைப்பச்சையப்பன் கல்லூரியில் கூடி ஆராய்ந்தார்கள்.

திருவள்ளுவர் இயேசுகிறித்துப் பிறப்பதற்கு 31 ஆண்டுகள் முன்பு பிறந்தவர் என்றும் அவர் பெயரில் தொடர் ஆண்டு பின்பற்றுவது என்றும் அதையே தமிழ் ஆண்டாகக் கொள்வது என்றும் முடிவு செய்தார்கள்.

திருவள்ளுவர் ஆண்டுக்கு முதல் மாதம் தை; இறுதி மாதம் மார்கழி; கிழமைகள் வழக்கில் உள்ளவை. புத்தாண்டுத் தொடக்கம் தை முதல் நாள்.

திருவள்ளுவர் ஆண்டு கண்டு பிடிக்க ஆங்கில ஆண்டுடன் 31ஐக் கூட்டல் வேண்டும். 1985+31=2016.

1985 சனவரி 14; 14-1-85; சனவரி 14, 1985 என எழுதுவது போல 2016 தை 1; 1 தை, 2016; தை 1, 2016 எனச்சுருக்கி எழுதலாம்.

தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் ஆண்டு முறையை ஏற்று 1971ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு நாட்குறிப்பிலும் 1972 முதல் தமிழ்நாடு அரசிதழிலும் 1981 முதல் தமிழ்நாடு அரசின் அனைத்து அலுவல்களிலும் நடைமுறைப் படுத்தி வருகிறது.

தகவல் - வ. வேம்பையன்,

# அன்றும் இன்றும்



திரைப்பட இயக்குநர்
கே.பாக்யராஜ்

சமீபத்துலெ ஒரு நாளு நானே கார் ஓட்டிட்டு அவசரமா ஏ.வி.எம். ஸ்டூடியோவுக்கு ரெகார்டிங்குக்காகப் போயிட்டிருந்தேன். ரோட்லே அளவுக்கதிகமான டிராபிக். பெருசா மீசை வெச்சிட்டு வாட்டசாட்டமா ஒரு போலீஸ்காரர் கையை ஆட்டி காரை நிறுத்துவார். அது ஜனங்க பாதையைக் கடக்கற இடம் கூட இல்லே! எதுக்காக வண்டியை நிறுத்துனாருன்னு யோசனையோட சடனா பிரேக் போட்டேன்.

எதிர்த்தாப்பிலே பாத்தா டீசன்டா காலேஜ் ஸ்டூடன்ட் போல ஒருத்தர் கண் தெரியாத ஒருத்தர் கையைப் புடிச்சு பாதுகாப்பா ரோட்டைக் கிராஸ் பண்றதுக்காக 'ஹெல்ப்' பண்ணிட்டு இருந்தாரு. காரை நிறுத்துன போலீஸ்காரர் என்னைப் பாத்துட்டாரு. பக்கத்துலெ வந்து...

''யாரோ காலேஜ் ஸ்டூடன்ட் போல இருக்கு... அக்கறை...யோட கண்ணு தெரியாத ஒருத்தர் கையைப் புடிச்சிட்டு ரோட்டைக் கிராஸ் பண்றதுக்காக நின்னாரு. ரோட்டை ஜனங்க கிராஸ் பன்றெ எடம் இன்னும் கொஞ்ச தூரம்தள்ளி இருக்கு. அந்த ஸ்டூடன்ட் ரோடு கிராஸிகாக அவ்வளவு தூரம் போயி வெயிட் பண்ணுனா ஒரு வேளை அவருக்கு பஸ் கிடைக்காமே திண்டாடலாம். பஸ் ஸ்டாப்புலெ பாத்தீங்களா... திருவிழா மாதிரி ஜே..ஜே..ன்னுகூட்டம் ..அதுதான் உங்களுக்குசிரமம் குடுத்து வண்டியை நிறுத்திட்டேன்.''

மீசைக்குச் சம்பந்தமில்லாமல் ரம்மியமாகச் சிரித்தார் போலீஸ்காரர். காலேஜ் ஸ்டூடன்ட்...... பிஸியான ஒரு பஸ் ஸ்டாப்..... அங்கே எத்தனையோ அட்ரேக்ஷன். அதை எல்லாம் லட்சியம் பண்ணாமே..கண் தெரியாத ஒரு வயசானவருக்குப் பொறுப்பா உதவறது ஒரு பக்கம்.

அதனாலே...அந்த ஸ்டூடன்ட் காலேஜுக்கு லேட்டாப் போகக் கூடாதுங்கற அப்பா ஸ்தானத்து அக்கறையோட நெனைக்கற மீசை வெச்ச போலீஸ்காரர். ஒரு பக்கம் இந்தச் சுமுகமான உறவு....உண்மையிலே மனசுக்கு நிறைவா இருந்தது.

இப்பேர்ப்பட்ட நிகழ்ச்சிகளை நான் அங்கங்கே சந்திக்கறேன். போன வாரம் ஈரோட்டுக்கு 'எங்க சின்ன ராசா' சூட்டிங்காக ஏர்க்காடு எக்ஸ்பிரஸ்லெ போயிட்டு இருந்தேன். பாத்ரூம் போயிட்டுத் திரும்பறப்போ.... வண்டி ஏதோ ஒரு சின்ன ஸ்டேசன்லெ நின்னது. நாங்க பிரயாணம் செய்த கம்பார்ட்மென்டுக்குப் பொறுப்பா இருந்த கண்டக்டர் அவசரமா கதவைத் திறந்து யாரையோ சுத்திமுத்தித் தேடுனார். கையிலே ஏதோ பார்சல். என்னைத் திரும்பிப் பார்த்தவர் விசயத்தை விளக்கினார்.

''நம்ம கம்பார்ட்மென்டுலெ ஒருபாஸஞ்சருங்க..நான் வேண்டாங்க வேணடாங்க..... வீட்டு சப்பாத்தி நல்லா இருக்கும் சாப்பிடுன்னு நாலு ஐந்து குடுத்துட்டாங்க....நம்மாலே ரெண்டுக்கு மேலே தள்ள முடியலீங்க. வேஸ்ட் பண்ணக் கூடாதுன்னுதா யாராவது ஏழைபாழை இருப்பாங்கன்னு பக்கறேன்''

ராத்திரி 11.00 மணிக்கு மேலே இருக்கும். நல்ல மார்கழி

குளிர். மப்ளரும் ஸ்வட்டரும் சகிதமா இருந்த அந்த ரயில்வே சிப்பந்தி செஞ்ச விசயம் சிறுசா இருந்தாலும் அவர் எடுத்துட்ட சிரத்தை மனிதாபிமானத்தோட இருந்தது.

இப்பேர்ப்பட்ட நல்ல விசயங்கள் சமுதாயத்துலெ வளர்ரதுக்கு பத்திரிகையும் சினிமாவும் ரொம்ப ஊக்கம் குடுக்கறதா நான் நெனைக்கறேன்.

'வெள்ளத்துலெ சிக்கிய சிறுவனை இளைஞர் துணிச்சலுடன் காப்பாற்றி கரையில் கண்ணீருடன் நின்ற தாயிடம் சேர்த்தார். போலீஸ் கமிஷனர் இளைஞருக்கு விருது வழங்கினார். பக்கத்தில் உள்ள படத்தில் இளைஞரும் சிறுவனும் உள்ளனர்.'

இப்பேர்ப்பட்ட செய்திகள்-தினசரியில் பார்க்கிற ஜனங்களுக்குச் சந்தர்ப்பம் வர்றப்போதானும் அதுமாதிரி உதவணும்கற ஒரு தைரியத்தைக் குடுக்குது!

சினிமா இதைவிட இன்னும் ஒரு படி மேலே. படத்துலெ வர்ற ஹீரோ எப்பிடி டிரஸ் பண்றாறு..எப்பிடி ஸ்டைலா நடக்கறாரு. எப்பிடி வசனம் பேசறாரு அப்படீன்னு யூசுவிலா எல்லாரும் பாலோ பண்ணுவாங்க. ஆனா அதைவிட அந்த ஹீரோ இக்கட்டான சமயத்துலியும் எப்பிடி மத்தவங்களுக்கு உதவி செஞ்சாருங்கற விசயம் படம் பாக்கறவங்களுக்கு மேலோட்டமாத் தெரியாட்டியும் மனசுலெ ஆழமாப் பதிஞ்சிறும். அப்பேர்ப்பட்ட நல்ல பாதிப்புகளை அன்னைக்கே நம்ம எம். ஜி. ஆர். படம் தவறாமே வெச்சிருந்தார். தனக்குப் புடிச்ச விசயங்களை ஒரு நடிகரா மட்டுமே இருந்துட்டு படங்கள்ளெ கொண்டு வர்ரது சாதாரணமான விசயம் இல்லை. பணம் போடக்கூடிய ஒரு புரட்யூசர் வசூலுக்காக ரெண்டு கிளப் டேன்ஸ் வெக்கணும்னு தீவிரமா இருப்பார். அந்த நேரத்துலெ வயசான கிழவிக்கு ஹீரோ உதவி பண்றதா 'நம்மவர்' நடிச்சு மனிதாபிமானத்தை வலியுறுத்தினார்.

அது மட்டுமல்ல தன்னை இளைஞர்களும் பொது ஜனங்களும் கவனிச்சு கைதட்டி ரசிக்கிறாங்கன்னு தெரிஞ்ச உடனே ரம்ப ஜாக்கிரதையா தன்னுடைய கேரக்டர் ரோல்களை செஞ்சார்.

எங்க வீட்டுப் பிள்ளையிலெ ஒரு சீன்...இப்பவும் ஞாபகம் இருக்கு அதுலெ துணிச்சலாசவுக்கெடுத்து வில்லனை அடிக்கிற எம்.ஜி.ஆர். அம்மா கிட்டே 'பாம்பு........ பாம்புன்னு' நல்லதுக்காக ஒரு பொய் சொல்ல வேண்டி வருது.. ஆனா....அப்பிடி பொய் சொல்றதுக்கு முன்னாலே ஒரு புத்தர் படத்துக்கு எதிர்லெ நின்று மன்னிப்புக் கேட்பார்.

நல்லதுக்காக இருந்தாலும் அம்மாகிட்டே பொய் சொல்றது எவ்வளவு அவசியத்தோட சொல்லணும்னு அந்தக் காட்சியிலே அன்று வலியுறுத்துனது கதையோட்டத்தை மீறி கவனத்தைக் கவர்ந்தது! சினிமா ஜனங்களை அதிகமா பாதிக்கும் தெரிஞ்ச உடனே இப்பிடி சின்ன சின்ன விசயங்கள்ளேகூட அவர் எடுத்துட்ட அக்கறை எங்களைப் போன்ற கலைத்துறையில் உள்ளவங்களுக்கு நிச்சயமா ஒரு முன் உதாரணம்.

செக்ஸ் நெறைஞ்ச ரேப் சீன்களும், ஆபாச கிளப் டேன்சுகளும் படம் தவறாமே வந்து அதுதான் ஜனங்களுக்கும் புடிக்கும்னு எல்லாரும் நினைச்ச நேரத்துலெ ஒரே ஒரு எம்.ஜி.ஆர் தான் அவருக்குப் புடிச்ச நல்ல விசயங்களை ஜனங்களுக்கும் புடிச்ச மாதிரி சொன்னாரு சொல்லி ஜெயிச்சாரு!

அவர் ஜெயிச்சதுக்கு, சொன்னது மட்டுமல்ல காரணம் சொன்னதைத்தான் செஞ்சாருங்கறது முக்கியம்! ஒரு தடவை அவர் சினிமா சூட்டிங்காக மேட்டுப்பாளையம் வந்திருக்கிறார். வர்ர வழியிலெ ஒரு எடத்துலெ ரோடு ரிப்பேர் நடந்துட்டு இருந்தது. ஒரு பத்து பதினைந்து தொழிலாளிங்க நல்ல வெய்யில்ல தார் ரோடு போட்டுக்கிட்டிருந்தாங்க. எல்லார் கால்லேயும் தார் ஆடு படாம சாக்குகித்தானே சுத்திக் கட்டிக்கிட்டு வேலை செஞ்சத பார்த்தாரு. உடனேதான் வந்த வண்டியே நிறுத்தி அந்த தொழிலாளிங்கிட்ட பேசியிருக்காரு அவங்களும்.

'வாங்கற சம்பளத்தில நாங்க எப்படிங்க பூட்ஸ்ல்லாம் வாங்க முடியும் என்று அவங்க நிலைமையை சொல்லி இருக்காங்க.... உடனே பின்னாடி வந்த வண்டிய திருப்பி கோவைக்கு அனுப்பி, அந்த தொழிலாளிக்கு தேவையான ஷூக்களை வாங்கி தந்ததுக்கு அப்புறமே அந்த இடத்தவிட்டுப் போயிருக்காரு. அப்ப எம்.ஜி.ஆர் எந்தப் பதவியிலும்கூட இல்லே.

இந்த நிகழ்ச்சியை..என் நண்பர்கள் மூலம் நான் கேள்விப் பட்டபோது,

நம்ம நாட்டுல மகான்கள் கால்களுக்கு மரியாதை செய்யறது வழக்கம். ஆனா கஷ்டப் படறவங்க கால்களுக்கு மரியாதை செய்த மகான்...எம்.ஜி.ஆர் தான்னு பேசிக்கிட்டோம்.

சாதாரணமா சொந்த வாழ்க்கையிலே ஒரு நடிகர் எப்படி நடக்கறார் என்பதற்கும், சினிமாவிலே அவரு எப்படி நடிக்கிறார்ங்கறதுக்கும் நிறைய வித்தியாசமிருக்கு.. ஆனா நம்மவரு ரெண்டையும் ஒன்னுபோல செஞ்சதாலதான் அன்னைக்கும் சரி, இன்னைக்கும் சரி நிலையா நிற்கிறார். இன்னைக்கும் எத்தனையோ புதுப் படங்கள் ரிலீஸ் ஸானாலும் எம்.ஜி.ஆர் நடித்த பழைய படம் பக்கத்தில போட்டா ஜனங்க கூட்டம் அந்த தியேட்டர்ல நிரம்பி வழியுது.

என்வே மனிதாபிமானம் மட்டுந்தான் என்னைக்கும் ஜெயிக்கும். மற்ற எந்த அராஜகமும் வன்முறையும் நிச்சயம் நமக்கும் சரி, அப்பாவி மக்களுக்கும் சரி, அழிவைத்தான் கொடுக்கும். இதே நாம் எல்லாரும் புரிஞ்சு நடந்துகணுங்கறதுதான் இந்த நல்ல நாள்லே என்னையோட உண்மையான ஆசை!



# மனத் தேர் நிலைக்கு வந்தது

இந்துமதி

நான்கு நாட்களாக நித்யாவிற்கு மனசு சரியில்லை. ஒரு முடிவிற்கும் வர இயலாத குழப்பமாக இருந்தது. ஒரு வாரததில் முடிவு தெரிவிக்கும்படி அப்பா மிகச் சுலபமாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டார். எந்த விஷயத்திலும் சட்டென்று முடிவு எடுப்பது அப்பாவின் சுபாவம். முடிவு எடுத்த பின் மாறாது இருக்கிற பிடிவாதம். இல்லாவிட்டால் வெற்றிகரமான ஒரு வியாபாரியாக அவரால் இருக்க முடியாது. லட்சக்கணக்கில் பணத்தைப் புரட்ட முடியாது. வியாபாரத்திற்கு வேண்டுமானால் சட்டென்று எடுக்கிற முடிவு சரியானதாக இருக்கலாம். ஆனால் இதில் அப்படி முடிவு எடுத்துவிடமுடியாது. இது இதற்கு சரிவராது. இது வாழ்க்கைப் பிரச்சினை. ஒரு முறை எடுக்கிற முடிவு வாழ்நாள் முழுவதற்கும் வரப்போகிற விஷயம். இந்தத் தரம் தப்பாகிப் போனால் பரவாயில்லை. அடுத்த தரம் பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டுவிட முடியாது. இதற்கு அடுத்த தரமெல்லாம் கிடையாது. இது கல்யாண விஷயம். அவளை வாழ்நாள் முழுதும் சந்தோஷப்படுத்த வேண்டிய விஷயம். அதனாலேயே அப்பா முடிவு எடுக்கிற பொறுப்பை அவளிடம் விட்டு விட்டார் என்று தோன்றிற்று.

இப்போது அவள் சொல்ல வேண்டியதெல்லாம் யாரைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள விருப்பப்படுகிறாள் என்பதுதான்.

''ஏம்மா... உன் மனசுக்கு யாரைப் பிடிச்சிருக்கோ, அவன் பெயரைச் சொல்லு. ஜகதீசன் என்னோட தங்கை பிள்ளை என்பதற்காகவோ-அவன் பெயரைச் சொன்னால் நான் சந்தோஷப்படுவேன் என்றோ அல்லது ராம்குமார் உங்க அம்மாவோட அண்ணா பையன் என்பதற்காக-அவளைத் திருப்தி படுத்தணும் என்கிற காரணத்துக்காகவெல்லாம் சொல்லாதே. அவங்க, ரெண்டு பேருமே உனக்காகப் போட்டிபோடறது நிஜம்னாலும்-உனக்கு யாரைப் பிடிச்சிருக்கு என்பதுதான் முக்கியம். ரெண்டு பேரும் நல்ல பசங்க, படிச்சிருக்கான்கள். வெள்ளை வெளேர்னு அழகாக இருக்கான்கள், நல்ல வேலை என்பதெல்லாம் வாஸ்தவம். ஆனால் உன் மனசுக்குப் பிடிச்சு ஒருத்தன்தான் இருக்க முடியும். அது யாருன்றதுதான் எங்க கேள்வி. ஜகனா? ராம்குமாரா? ..நீயே நல்லா யோசிச்சு முடிவு சொல்லு. அப்புறம் அப்பாவுக்காகப் பண்ணிக்கிட்டேன், அம்மாவுக்காகச் சம்மதிச்சேன்ற குற்றம், குறையெல்லாம் வரக்கூடாது. உனக்குள்ளேயும் 'ஐயோ இவனை ஏன் கல்யாணம் பண்ணிக்கிட்டோம். அவனைப் பண்ணிக் கிட்டிருக்கலாமேன்னும் தோணக்கூடாது. அப்படி எந்தச் சலனத்துக்கும் இடமில்லாத வகையில் நல்லா யோசிச்சு முடிவான பதிலா சொல்லிடும்மா...? என்ன...?''

''சரிப்பா...''

''இன்னும் ஒரு வாரத்துல உன் பதில் எனக்குத் தேவை. அப்புறம்தான் நானும் ஒரு முடிவோடு செயல்ல இறங்க முடியும். தை பிறந்ததும் கல்யாணத்தை முடிச்சுடணும்னு இருக்கேன். அதனால் இந்த வாரக் கடைசியில் நீ சொல்லிடணும். என்ன..?''

''சரி''...

தலையாட்டிவிட்டாளே தவிர முடிவிற்கு வருவதென்பது அத்தனை சுலபமான விஷயமாக இல்லை. இரண்டு பேரிடமும் அவளால் மிகச் சுலபமாகப் பேச முடிந்தது. சிரிக்க முடிந்தது. பார்த்த படம், படித்த புத்தகம், கொண்டு வந்த வீடியோ கேஸட் என்று எல்லாவற்றையும் நல்ல நண்பர்களாகப் பகிர்ந்துகொள்ள முடிந்தது.

''ராம்... லைப்ரரியிலிருந்து ஷிட்னி ஷெல்டன் புஸ்தகம் கொண்டு வந்திருக்கேன். நான் படிச்சுட்டு உங்களுக்குத் தரேன்.''

—காலையில் ஆபீஸ் போகு முன் நாள் தவறாமல் வந்து அரை மணிநேரமாவது பேசிவிட்டுப் போகிற ராம்குமாரிடம் உட்கார்ந்து பேசுகிற நேரத்தில் அவனது அமைதி, நிதானம், மென்மையாய் வெளிவருகிற பேச்சு இவற்றில் லயித்து மனசு இவன் தான் என்று முடிவு செய்யும்.

பகல் முழுதும் அதே எண்ணத்தில் செயல்பட்டு சாயந்தரம் படபடவென்று புல்லட் சத்தத்தில் ''ஹாய் நித்தி...'' என்று சற்று உரத்த குரலும், ஆர்ப்பாட்டமான பேச்சும், சத்தம் போட்டுச் சிரிக்கிற சிரிப்புமாக தடதடவென்று சொட்டுகிற நீர் வீழ்ச்சியாக வந்து இறங்குகிற ஜகதீசனைக் கண்டதும் காலையில் செய்த முடிவு லேசாக ஆட்டம் காணும்.

கலகலவென்று பேசுகின்ற சுபாவம் ஜனகதீசனுடையது. இருக்கிற இடத்தை நிறைவாக்குகிற சாதுரியம். கிரிக்கெட், டென்னிஸ், ஹாக்கி ஒன்று விடமாட்டான். எல்லாம் விளையாடுகிற அத்லெட் உடம்பு. பத்து நிமிடம் ஓரிடத்தில் உட்காராத பரபரப்பு. வேகம் துடிப்பு.... பார்வையில் எதையும் சாதிக்க முடிந்த கர்வம் தெரியும். 'இந்த நித்யா எனக்குச் சொந்தமாகப் போகிறவள்' என்கிற உரிமை பேச்சில் வெளிப்படும்.

மாலை ஐந்தரை, ஆறு மணிக்கு வருகிறவன் ஏழரை, எட்டிற்குத்

தான் புறப்படுவான். சில சமயம் சமையலறை வரை போய்—

''என்ன மாமி டிபன்...?'' என்று கேட்டு வாங்கிச் சாப்பிடுவான்.

''உங்க கைக்குத் தனி ருசி மாமி.சாப்பிடக் கொடுத்து வச்சிருக்கணும்'' என்று அவள் நெஞ்சில் ஐஸ் கட்டிகளாகக் கொட்டுவான். பின்னர் நித்யாவோடு ஹாலில் உட்கார்ந்து அரட்டையடிப்பான். போகிறபோது மெதுவாகக் கேள்வி கேட்பான்.

''காலைல ராம் வந்திருந்தானா நித்தி...?

''வந்தாரே.. ஏன் கேட்கிறீங்க,..?''

''இல்லை.. வந்தானான்னு கேட்டேன்.. வந்து உம்முனு உட்கார்ந்துட்டு எழுந்து போயிருப்பானே...?''

''அவரும் இதையேதான் கேட்டார். நேற்று சாயந்திரம் ஜகன் வந்து லொடலொடன்னு கொட்டிட்டுப் போனானான்னு கேட்டார்....''

சடாரென்று அவன் முகம் மாறும். அவன் கேட்டதை விட அவள் அதைச் சொன்ன விதம் பிடிக்காதது தெரியும். தனக்குப் பரிந்து பேசாமல் ராம்குமாருக்குப் பரிகிறாளே என்கிற கோபம் வரும்.

''சரி நித்தி. ஒரு சின்ன சாலன்ஜ். என்னால் அவனை மாதிரி உம்முனு உட்காரமுடியும். உட்கார்ந்து காட்டறேன். அவனை என்னை மாதிரி கலகலன்னு பேசச் சொல்லேன் பார்ப்போம்...?''

''எதுக்கு இந்த சாலன்ஜ் எல்லாம். நீங்க, நீங்களாகவே இருங்க. அவர் அவராகவே இருக்கட்டும்....''

அதன் பின்னர் ஜகதீசனின் கலகலப்பு பிடிக்கிற மாதிரி தோன்றும். தன் படபடத்த சுபாவத்திற்கு அதுதான் ஒத்து வரும் என்று படும். கடிகாரத்தின் பெண்டுலம் போல் மீண்டும் மனது ஆடத்துவங்கும். ஜகனா.. ராம்குமாரா..? என்று தவிக்கும். அப்பா ஏன் முடிவு எடுக்கிற பொறுப்பைத் தன்னிடம் விட்டார் என்கிற கோபம் வரும்.

''நித்தி. . இவன்தானம்மா உனக்கு ஏற்றவன் இவனைத் தான் நீ கல்யாணம் பண்ணிக்கணும்னு என்க்குத் தோணறது'' என்று தீர்மானமாகச் சொல்லி இந்தத் தவிப்பிற்கும் அலைச்சலுக்கும் ஓர் முற்றுப்புள்ளி வைத்திருக்கக் கூடாதா என்று ஏங்கும்.

கடைசியில் ஒரு வாரத்திற்குப் பின்னர் மீண்டும் அப்பா கூப்பிட்டுக் கேட்டபோது சொன்னாள்.

''என்னால் ஒரு முடிவுக்கும் வர முடியலைப்பா.. ரெண்டு பேருமே நல்ல மாதிரி. ரெண்டு பேரும் என் கிட்ட அன்பாகத் தான் பேசறாங்க...''

''அதுல யாருக்கு உன் மேல் ரொம்ப அன்பு இருக்கிறதாப் படறது...?''

''ம்ஹூம்.. என்னால் கண்டு பிடிக்க முடியலை.''

''இதைக் கண்டுபிடிக்கிறது கஷ்டமா முட்டாள் பெண்ணே...? நான் ஒரு சின்ன டெஸ்ட் வைக்கிறேன். அதற்கப்புறம் நீயே முடிவு பண்ணு. என்ன...? ஆனால் ஒரே



ஒரு பழமொழியை மட்டும் ஞாப கப்படுத்த ஆசைப்படறேன்...''

''என்னப்பா...?''

''ஒரு புத்திசாலிப் பெண், தான் நேசிக்கிற ஒருவனைவிடத் தன்னை நேசிக்கிறவனையே கண வனாகத் தேர்ந்தெடுப்பாள். நீ புத்திசாலிப் பொண்ணாக இருக் கணும்னு நினைக்கிறேன்...''

அதற்கு இரண்டு நாட்கள் கழித்து அவரே சோதனை நடத்த வழிசொல்லிக் கொடுத்தார். இரு வரிடமும் தனித்தனியாக எப்படிப் பேச வேண்டுமென்று கற்றுத்தந்தார்.

அதன்படி அன்று மாலை நித்யா ஜகதீசனிடம் சொன் னாள்.

''ஜகன்.. நான் ராம்குமாரைக் கல்யாணம் பண்ணிக்கிறதா முடிவு பண்ணியிருக்கேன்...''

''என்ன.. என்ன..?'' என்று அதிர்ந்து போனான் அவன்.

''என்ன நித்தி இது. அந்த உம்மணாமூஞ்சி கூட உன் வாழ்க்கை எப்படி சந்தோஷமாக இருக்கும்..? உன்னால் கலகலன்னு நாலு வார்த்தை பேசக்கூட முடி யாதே....?''

''இல்ல ஜகன்... அவர் கூட தான் சந்தோஷமா இருப்பேன்னு தான் நினைக்கிறேன்.....''

''நோ. யு ஆர் ராங். நீ பண்ணி இருக்கிறது தப்பான ஒரு முடிவு நித்யா, தயவு செய்து இதை மாற்றிக்கோ..''

''இல்லை ஜகன். மாற்றிக்கிற தாக நான் இல்லை...''

''அப்படின்னால் இந்த முடி வுக்காகப் பின்னால் நீ ரொம்ப வருத்தப்படப் போறே... சங்கடப் படப்போறே..உனக்கும் ராம்குமாருக்கும் ஒத்தே வராமல் தவிக்கப்போறே....''

''அப்படியெல்லாம் ஆகும்னு நான் நினைக்கலை ஜகன்''...

''நிச்சயமா அதுதான் ஆகப் போறது. நான் சொன்னது நடக் கப்போறது. அப்படி நடந்தால் அப்போதும் இந்த ஜகன் உனக்கு உதவி செய்வான் நித்யா. ராம் குமாரை விட்டு நீ வந்தால் நேரே என்கிட்ட வரணும். என்னை உதவி கேட்கணும். நான் தான் உனக்கு எல்லாம் செய் வேன். என்ன நித்தி...?''



நித்யா வினாடி நேரம் அவனை அமைதியாகப் பார்த்தாள். பின்னர் நிதானமாகச் சொன் னாள்.

''ஆகட்டும் ஜகன். அப்படி ஏதாவது நேர்ந்தால் கட்டாயம் உன் கிட்டேதான் உதவி தேடி வருவேன்.''...

மறுநாள் காலையில் வழக் கப்படி ராம்குமார் வந்திருந்தான். எப்போதும் போல் அமைதியாக சோபாவில் உட்கார்ந்தான். சில நிமிட மௌனத்திற்குப் பின்னர் நித்யா மெல்லப் பேச்சை ஆரம் பித்தாள்.

''ராம்... உங்க கிட்டே ஒன்னு சொல்லணுமே....?''

''என்ன நித்யா.. சொல்லேன்..?''

''...வந்து... வந்து... நான் கல்யாணம் பண்ணிக்கிறதா முடிவு பண்ணிட்டேன்....''

''நல்ல சமாச்சாரம் தானே நித்யா. இதைச் சொல்ல என்ன தயக்கம்...?''

''அதில்லே... வந்து... நான் கல்யாணம் பண்ணிக்க முடிவு பண்ணியிருக்கிறது யாருன்னு நீங்க கேட்கலையே....?''

''இதைச் சொன்ன நீயே அதையும் சொல்வேன்னு காத்துக்கிட்டிருக்கேன்...''

''நான் ஜகனைத்தான் கல்யாணம் பண்ணிக்கிறதா முடிவு செய்திருக்கேன் ராம்....''

அதைக்கேட்ட ராம்குமார் சில வினாடிகள் கண்களை மூடிப் பேசாமல் இருந்தான். உள்ளுக்குள்ளிருந்து ஆழமான பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது. தன் ஏமாற்றம், தோல்வி எதுவும் தெரியக் கூடாது என்பதற்காகப் பிரயத்தனப்பட்டான். கீழ் உதட்டை மெல்லக் கடித்து தன்னை அடக்கிக் கொள்ள முயன்றபோது—

நித்யா கேட்டாள்.

''என்ன ராம்... நீங்க பதிலே சொல்லலை....?''

கண்களைத் திறந்தவன் அவளை மிக மென்மையாகப் பார்த்தான்.

''கன்கிராஜுலேஷன்ஸ் நித்யா ரொம்ப சந்தோஷம்...''

''நிஜமாகவே நீங்க சந்தோஷப் படறீங்களா ராம்.....?''

''நிஜமா சந்தோஷப்படறேன் நித்யா.....''

''உங்களுக்கு இதுல எந்த வருத்தமுமே இல்லையா...?''

அதற்கு உடனே பதில்சொல்லி விடவில்லை அவன், சிறிது யோசித்து அப்புறம் பேசத் தொடங்கினான்.

''வெல்... இதற்கு உண்மையான பதிலா சொல்லணும்னால் எனக்குள் வருத்தமிருக்கு. ஏமாற்றம், சோகம் எல்லாம் இருக்கு. ஆனால் அதெல்லாம் நானாக ஏற்படுத்திக்கிட்டதுதானே தவிர உன்னால் ஏற்பட்டதில்லையே நித்யா. நான்தான் உன் மேல் ஆசைப்பட்டேனே தவிர நீ படலைன்றது இப்போதானே தெரியறது. நானாக நீ என்னைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு நினைச்சு பழகினால் அது என் தப்பு. ஒண்ணை எதிர்பார்த்துப் பழகறது அன்பாகாது நித்யா. எதையும் எதிர்பார்க்காமல் இயற்கையா ஏற்படறதே அதுதான் நிஜமான அன்பு. நான் எதிர்பார்த்தது நிஜம்தான் என்றாலும் என் அன்பு போலியானதில்லை. உண்மையா உன்னை நான் நேசித்திருந்தால் -இதுதான் உன் ஆசை என்று வெளிப்படுத்தின அப்புறம் அது நிறைவேறணும். நீ சந்தோஷமா இருக்கணும். நான் தூர இருந்தாவது 'நம் நித்யா சந்தோஷமா நிம்மதியா, தன் மனசுக்குப் பிடிச்சவனோடு வாழ்க்கை நடத்தறான்னு' உன் சந்தோஷத்தை ரசிக்கணும். அப்படி ரசிக்கிற மனோபாவத்தை எனக்குள் நான் ஏற்படுத்திப்பேன் நித்யா. உடனே-இப்போதே அந்த மனோபாவம் வராது. லேசா ஒரு காயம், வடு எல்லாம் உள்ளுக்குள் விழுந்திருக்கு. நான் சாதாரண மனிதன்தானே...? கொஞ்சநாள் ஆனால் அந்த காயம் ஆறி, 'நம் நித்யா எங்கே இருந்தாலும் சந்தோஷமா இருக்கட்டும்'னு வாழ்த்த வரும். அது வரை கொஞ்சம் நான் ஒதுங்கிக்கறேன் நித்யா. தினமும் இங்கே வந்து தொந்தரவு கொடுக்காமல் விலக்கிக்கறேன் என்ன நித்—''

அதற்கு மேல் பேச விடாமல் அவள் கை அவனது வாயைப் பொத்த, சுற்றிச்சுற்றி ஓய்ந்த தேராக மனசு நிலைக்கு வந்தது...

# பொங்குக பொங்கல்

## திருச்சி பாரதன்



பொங்குக பொங்கல் பொங்குக இன்பம்
பொங்குக வாழ்வு பொங்குகவே!
தங்குக வளங்கள் மங்குக பகைகள்
எங்கணும் சாந்தி பொங்குகவே!

வானகச் சுடராய்ப் பொங்குக பொங்கல்
வண்டமிழ் மொழியாய்ப் பொங்குகவே!
தேன்நிகர் கனியாய்ப் பொங்குக பொங்கல்
தெய்வீக அருளுடன் பொங்குகவே!

அன்பு தழைத்திடப் பொங்குக பொங்கல்
ஆற்றல் நிலைத்திடப் பொங்குகவே!
பண்பு செழித்திடப் பொங்குக பொங்கல்
பார்நிலை உயர்ந்திடப் பொங்குகவே!

# பெரிதினும் பெரிது கேள்

## —எஸ்.வி.சகஸ்ரநாமம்

இன்று பொங்கல் திருநாள். இந்த நன்னாளில் நமது இந்திய மக்கள் அனைவரும் அமைதியான வாழ்வுபெற்று, சர்வமங்களமாக வாழ்வு பெற வேண்டுமென்று எல்லாம் வல்ல பராசக்தியைப் பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.

மனிதன் என்று பிறந்துவிட்டால் அவனது வாழ்க்கைவெறும் உண்பதும் உடுப்பதும்உறங்குவதுமாகக் கழித்துவிட்டால்தனக்கும் தனது நாட்டுக்கும் பயனுள்ளவனாக வாழ முடியாது.

மனிதன், தன்னைப் பற்றியும் தன்னைச் சார்ந்துள்ள சமுதாயத்தைப் பற்றியும், அறிந்து செயல்பட நான்கு வித உணர்வுகளைப் பற்றித் தெரிந்து கொள்வது அவசியம்.

ஒரு சமுதாயம் என்பது பல கோடி தனிப்பட்ட மனிதர்களின் சங்கமம்தான். ஆகவே சமுதாயம் என்பது நான்கு விதமான நினைவோட்டங்களைக் கொண்டதாக உள்ளது. அவை முறையே (1) பொருளாதார உணர்வு (2) சமுதாய உணர்வு (3) அரசியல் பற்றிய உணர்வு (4) கலாசார-பண்பாட்டுத்துறை என்பவையாகும். இந்த நான்கு உணர்வுகளும் சமுதாயம் என்னும் சதுரத்தை உருவாக்கும் கோடுகள் என்று சொல்லலாம். இதில் ஒன்று குறைந்தாலும் இந்தச் சதுரம் முழுமை பெற முடியாது என்பது தெளிவு.

இந்தச் சதுர வட்டக் கோட்டில் ஒருவித நினைவோட்டமான கலாச்சாரத் துறையில் பழகி வாழ்ந்து வந்தவன் என்ற அளவில் அந்தத் துறை பற்றிச் சில கருத்துக்களைக் கூறவே நான் ஆசைப்படுகிறேன்.

கலை என்று சொன்னால்அதற்குச் சில லட்சணங்களும் லட்சியங்களும் உண்டு. மனிதனுடைய பூரண வளர்ச்சி உதவுவதற்காகத்தான் ஆடுதல், பாடுதல்,சித்திரம் போன்ற நுண்கலைகள் தோன்றியுள்ளன.

நாற்பதாண்டுகளுக்கு முன்னால் மனித வளர்ச்சியில் உதவுகின்ற வகையில் கலையை ஆராதித்து வந்த கலைஞர்களும் கவிஞர்களும் உயர்கல்வி கற்ற மேதைகளும் சாதி மதம் மொழி பேதமில்லாத வகையில் ஒருமைப்பாட்டுணர்ச்சியுடன் அடிமைப் பட்டுக் கிடந்த நம் பாரத நாட்டின் விடுதலைக்காகவே தங்களது ஆற்றலையும் அறிவையும் பயன்படுத்தி அதில் வெற்றியும் கண்டார்கள்.



சுதந்திர வாழ்வைப் பெற்ற பிறகு அதைப் பேணிக் காப்பதற்கெனவே நமது கலைகளும் கல்வியும் பயன்படுவதற்காகச் சில திட்டங்களைப் பேரறிஞர்களும் பேரறிவாளர்களும் கூட வகுத்தார்கள். அப்படி அவர்கள் வகுத்துக் கொடுத்த திட்டங்களில் உருவானதுதான் இன்று தமிழகத்தின் தலைநகரமான சென்னையில் வளர்ந்துள்ள 'இயல் இசை நாடக மன்றம்' ஒன்று உருப்பெற்றது.

இந்த மன்றத்தின் மூலமாக தமிழக அரசு நம் நாட்டின் நலனுக்காக ஏற்பட்டுள்ள கலைகளில் பல ஆண்டுகள் தொண்டாற்றி வந்துள்ள கலைஞர் பெருமக்களுக்கும், இயல் துறையில் சேவை செய்த அறிஞர் பெருமக்களுக்கெல்லாம் விருதுகள் வழங்கியும் பொற்கிழிகள் வழங்கியும் மறைந்துபோன மாமேதைகளின் தைல வண்ணப் படங்களைத் திறந்து வைப்பதன் மூலம் தமிழக அரசு ஊக்கமளித்து வளரக் கூடிய இயல் இசை, நாடக நாட்டியங்களிலும் மற்ற இசைக் கருவிகளின் மூலம் தொண்டாற்றி வருபவர்களுக்கு ஊக்கம் பெற்று மேன்மேலும் இவர்கள் சிறந்த முறையில் முன்னேறவும் வழியுண்டாக்கவும் வழி பிறக்கும் என்று நெஞ்ச நிறைவுடன் செயலாற்றினார்கள்.

ஆனால் இயல் இசை நாடக மன்றம் தோன்றியதிலிருந்து இன்றுவரை அதனுடைய செயல்கள் அதிகமாகியுள்ளது. அதற்கேற்ற வகையில் அதற்கு உடனடியாகத் தேவை அது பணியாற்றுகின்றதற்கான அலுவலகக் கட்டடம். இந்த மன்றத்தில் நான் ஒன்பதாண்டுகளுக்கு மேல் இதன் காரியக் கமிட்டி அங்கத்தினராகப் பணியாற்றியிருக்கிறேன். அதன் காரணமாக இந்த மன்றம் சிறந்த முறையில் மேலும் மேலும் வளர்ச்சி பெற வேண்டுமென்று விரும்புகிறேன்.




இப்போது சமீப காலமாக அதாவது ஓராண்டுக் காலமாக இந்த மன்றம் ஆற்றி வருகின்ற பணிகளில் சிலவற்றை முக்கியமாக நாடகக் கலைஞன் என்ற முறையில் பாராட்டவும், வாழ்த்தவும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதாவது சில பணிகள் என்று குறிப்பிட்டதில் முக்கியமாக சமீபத்தில் நடத்திய கலைவாணர் நினைவு நாள் விழாவிலும், 2-1-87இல் நடைபெற்ற சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு விழாவிலும் மறைந்த கலாமேதைகளைக் கௌரவிக்கும்படியாக, பல ஆண்டுகள் கலைக்காகப் பாடுபட்டு உழைத்து இன்று வாடிய நிலையிலுள்ள நாடக நடிக நடிகைகளைத் தேடித் தேர்ந்தெடுத்து அவர்கள் வாழ்க்கையில் சிறுதளவு ஆறுதலும் புத்துணர்ச்சியும் பெற பொற்கிழி வழங்கி தமிழக அரசு கௌரவப்படுத்துவதைக் கலையுள்ளங் கொணடவர்கள் தமிழக அரசை வாழ்த்தித் தங்கள் நன்றியறிதலைத் தெரிவிக்காமலிருக்க மாட்டார்கள்.

இப்படிப்பட்ட சிறப்பான பணாகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள மன்றத்துறகு நாடகச்சாலையுடன் கூடிய மணடபத்தை அமைத்துக் கொடுப்பது மிகமிக அவசியமாகக கருதுக்றேன். இதனால் இன்னும் மென்மேலும் அவர்கள் கலாசசாரத் துறைக்காகத் திட்டங்கள் தீட்டியுள்ள யாவையும் வெற்றிகரமாகச் செயல்பட வசதியாகவும் இருக்கும். இது எனது புதிய யோசனையலல, கர்நாடக மாநிலத்திலும் ஆந்திர மாநிலத்திலும் இதைப் போனற மன்றம ரவ்ந்திரநாத் தாகூர் நூற்றாண்டு விழா நினைவாக எழுபபப்பட்டுள்ள நாடக மேடையையொட்டி அதை நிர்வகித்து வரும் பொறுப்புடன் நடைபெற்று வருகிறது. இந்த மணடபம் நல்ல முறையில் ஏற்படுமானால், இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழுககும் சேவை செய்யவும், அன்னிய நாட்டுக் கலைத் துறையைச் சார்ந்த குழுவினரோ தனிப்பட்ட ஆராய்ச்சி மேதைகளோ வரும்பொழுது அவர்களையும் நமது தமிழகக் கலைஞர்கள் மேதைகளையும் சந்திக்கச் செய்து கலாபரிவர்த்தனை செய்து கொள்வதற்கும் நமது கலாநிகழச்சிகளை நடத்திக் காட்டுவதற்கும் அவரது கலாநிகழ்ச்சிகளை நாம் காண்பதற்கும் உபயோகப்படுத்தலாம். அதனால் நல்ல பயனும் அடையலாம். நமது பண்பும் உயரும்.

பெரிதினும் பெரிது கேள் என்பது மகாகவிஞன் பாரதி வாக்கு. பாரதியாரின் வாக்குப்படி ஓரளவு வாழ்க்கை நடத்தி வரு

கின்றவன் என்ற முறையில் நமது தமிழகஅரசினரிடம் எனது இந்த வேண்டுகோளைத் தெரி வித்துக் கொள்கிறேன்.



இவ்வளவு ஆர்வத்துடன் நான் கேட்பதற்கு இன்று நமது தமிழக அரசின் முதல்வராக உள்ள நமது மாண்புமிகு முதலமைச்சர் பொன்மனச் செம்மலாக உள்ள புரட்சித்தலைவர் டாக்டர் திரு. எம். ஜி. ஆர் அவர்கள் நமது கலைகளின் முன்னேற்றத்திலே யும், உழைத்திளைத்துப் போன கலைஞர்களுக்கும் மழைக்குக் குடையாக, பசி நேரத்து உண வாக உதவி வருகின்ற கருணை யுள்ளங் கொண்டவர். இதில் உறுதியான நான் நம்பிக்கை கொண்டவன், என்ற முறையில் தான், இந்த வேண்டுகோளை சிக்கிரமாக நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.

புத்தாண்டில் பூத்துக் குலுங்கி பாரத மக்கள் பல வகையிலும் பணியாற்றிப் புதுவாழ்வடையும் முயற்சியில் யாவரும் ஈடுபடு வோம் என்று உறுதி கொள்வோ மாக!

நாட்டில் அமைதியும் அன்பும் பண்பும் வளர்ந்து யாவரும் ஒருமைப் பாட்டுணர்ச்சியுடன் வாழ்வோமாக!

பாரதக் கலைகள் வளர்க. கலைகளைப் போற்றி வளர்க் கும் காவலர்கள் வாழ்க!





# தமிழ்த் திரைப்பட வளர்ச்சியில் நமது முதல்வர் தொண்டு

**-டி.ராமானுஜம்**

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் பதவி ஏற்கும் போது தமிழ்நாட்டில் திரைப்படத்துறை மிகவும் நலிந்திருந்தது.

காரணம், தமிழ்த் திரைப் படங்களின் பெரிதும் மதிக்கத் தக்கவராக இருந்த எம்.ஜி.ஆர் அவர்கள் தனனுடைய சினிமா நடிப்பின் மூலம் மக்களைக் கவர்வதால் அந்தத் தொழிலை அடக்கி நசுக்கி வைக்க வேண்டும் என்ற காரணத்தால் அதை வளர விடவில்லை, அது நசிந்து போகும் அளவிற்கு வரிப்பளுவும் அதிகமாக்கப்பட்டது. சினிமாவிலேயே வளர்ந்தவர்கள் சினிமாவின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாகயிருந்த போது தமிழக அரசியலில் மாற்றம் ஏற்பட்டு மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்கள் பதவி ஏற்றார்கள். பதவி ஏற்கும்போதே இந்தத் தொழிலுக்கு ஏற்பட்டுளள இன்னல்களை அவர் அறிந்திருந்த காரணத்தால் பதவி ஏற்றவுடனே கலைவாணர் அரங்கில் ஒரு திரையரங்கு உரிமையாளர்கள் கூட்டத்தைக் கூட்டி ''நலிந்து போய் இருக்கும் இந்தத் திரைப்படத் தொழிலை மற்ற மாநிலங்களில் உள்ளதுபோல்பசுமையான நிலைமைக்குக் கொண்டுவருவேன்'' என்று சொல்லிக் கேளிக்கை வரி விகிதங்களில் ஒரு பெரிய புரட்சிகரமான மாறுதலை அறிவித்தார். அன்று தமிழகத்தில் சுமார் 750 நிரந்தரத் திரையரங்குகளும் 750 நடமாடும் திரையரங்குகளும் இருந்தன.

ஆனால் இன்றைக்கு 1,600 நிரநதரத் திரையரங்குகளும் 1,000 நடமாடும் திரையரங்குகளும் உள்ளன. இவ்வாறு வெகு விரைவில் வளர்ந்து உள்ளதைப் பாராட்டாதவர்களேகிடையாது! வியக்கும் அளவிற்கு இந்தத் திரையரங்குகள் வளர்ந்துள்ளன. அது மட்டுமல்ல, அன்று சுமார் 45 தமிழ்ப்படங்கள் தான் ஆண்டு ஒன்றுக்கு வெளிவந்தன. ஆனால் இன்று சுமார் 180 படங்கள் வெளிவரும் அளவிற்குத் தொழில் வளர்ந்துள்ளது.

வரியில் மாறுதல் செய்தாரே தவிர அரசுக்கு வருகின்ற வருமானம் அன்று 19 கோடியாக இருந்தது இன்று சுமார் 54 கோடி (வருடம் ஒன்றுக்கு) அளவிற்கு வரவும் செய்துள்ளார். முன்பெல்லாம் படம் எடுக்க, தயாரிப்பாளர்கள் சிரமப்படுவதையும் வெளியிடும் தினத்தன்று ஒவ்வொரு தயாரிப்பாளர்கள் சிரமப்படுவதையும் கடைசி நிமிடத்தில், நடித்தவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்க முடியாமல் பல தொந்தரவுகளுக்கு ஆளாகி வந்த நிலைமையும் மாறி இப்போதெல்லாம் படம் ரிலீஸ் தேதிக்கு 3 அல்லது 4 நாட்களுக்கு முன்பே பெட்டிகளை டெலிவரி கொடுக்கக்கூடிய அளவிற்குத் திரைப்படத்தயாரிப்பாளர்கள் உயர்ந்துள்ளார்கள்.

விநியோகஸ்தர்களும் தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ளக் கூடிய அளவிற்கு இன்று வசூல் உயர்ந்துள்ளது. முன்பெல்லாம் ஒரு தமிழ்ப்படத்திற்குப் பெரிய நகரங்களில் ரூ.30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரை விநியோகஸ்தர்கள் பங்காக வந்தது இன்று உயர்ந்தது. அந்த நகரங்களில் ரூ. 1 இலட்சம் முதல் (சில இடங்களில் 2 இலட்சம் வரை) வசூல் நிலைக்குத் தொழில் வளர்ந்துள்ளதை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

நடிகர், நடிகைகளுடைய சம்பளம், அவர்களுக்குத் தேவையான வசதி, தொழிலாளர் ஊதியம் இவை பல மடங்கு உயர்ந்துள்ளன. காரணம், திரையரங்குகள் அதிகமானதும் வரி மாற்றத்தால் அரசாங்கத்திற்கு வரவேண்டிய வரியும் வசூலாகி, திரைப்படத் தொழிலுக்கும் வந்து சேர்வதால், அனைவரும் மகிழ்ச்சியுடன் உள்ளனர்.

மாண்புமிகு முதல்வர் இந்தத் தொழில் எப்படி வளரவேண்டும் என்று தன் எண்ணத்தில் கொண்டிருந்தாரோ அந்த வளர்ச்சியை இன்று அவர் கேள்வியுறும்போது பெரு மகிழ்ச்சியுடன் காணப்படுகிறார். அவர் முதல்வராக இருக்கும்போதே திரைப்படப் (பேசும் படம்) பொன்விழா கொண்டாட்டங்களில் அவர் கலந்துகொண்டதை அத்தனை பண்பட்ட நடிகர்களையும் பாராட்டிப் பேசி மகிழ்வித்த காட்சியை யாரும் மறக்க முடியாது.

இப்படிப்பட்ட தொழில் 3 வருடங்களுக்கு முன் திடீரென வந்த 'வீடியோ' விஞ்ஞானம் மேலும் வளர்க்கும் என்று நாம் நினைத்த போது கள்ளத் தனமான வீடியோ சினிமாக்களும், கள்ளத்தனமான வீடியோ லைப்ரரிகளும் இந்தத் தொழிலைப் பாதித்து விடும் என்று அறிந்த நமது முதல்வர் மற்ற எந்த மாநிலத்திலும் மற்ற எந்த ஒரு முதல்வரும் செய்யாத, நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒரு ''பாதுகாப்பை'' அவசரச்சட்டம் இயற்றியதன் மூலம் திரைப்படத்துறையினர் 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டனர்.

அந்தச் சட்டத்தின் மூலம் எந்த ஒரு வீடியோ சினிமாவும் உரிமம் வாங்கித்தான் வீடியோ சினிமா நடத்த முடியும். அப்படி உரிமம் கொடுக்க அந்த வீடியோ சினிமா, திரையரங்குகளுக்கு 2 கி.மீ. தள்ளி இருக்கவேண்டும். திரையரங்குகள் போல் எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பதுடன் திரையரங்குகளுக்கு விதிக்கப்பட்டுள்ள அத்தனை விதிமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று சட்டம் இயற்றியதுடன் திரையிடப்படும் வீடியோ கேசட்டுகள் தணிக்கை செய்யப்படுவதுடன் அந்தந்தத் தயாரிப்பாளர் காப்பிரைட்

உரிமை பெறவேண்டும். அதைத் தான் திரையிடவேண்டும் என்று சட்டம் இயற்றியதின் காரண மாக இன்று வீடியோ சினிமாக் கள் வராமல் இருக்கவும் திரைப் படத் தொழில் பாதிக்கப்படா மல் இருக்கவும் வழிவகை செய் துள்ளார்கள். வீடியோ லைப்ரரி கள் வெளியிடும் கேசட்டுகள் தணிக்கை செய்யப்பட்டதாகவும் காப்பிரைட் சொந்தக்காரர்கள் உரிமை பெற்றதாகவும் இருக்க வேண்டும் என்ற முதல்வரின் 'புத்திக் கூர்மையை' மத்திய அரசு பாராட்டும் விதத்தில் சென் சார் சட்டத்தையும் காப்பிரைட் சட்டத்தையும் தமிழ்நாடு சட்ட தைப் போலவே அவைகளைத் திருத்தம் செய்ததைப் பார்க்கும் போது இந்தத் தொழிலிலேயே வளர்ந்த 'அவர்' இத்தொழில் நசிந்துவிட விடமாட்டேன் என்று 10 வருடத்திற்கு முன்பு எடுத்த சபதத்தை நிறைவேற்றி உள் ளதைத் திரைப்படத்துறையினர் ஒவ்வொருவரும் பாராட்டாமல் இல்லை. அவருடைய பொன் னான காலத்தில் மேலும் திரைப் படத் தொழில் பிரகாசிக்க வழி வகை கிடைக்கும்.





'நான் குறிவைத்தால் தவறாது. தவறுமானால் குறி வைக்க மாட் டேன்' என்று மர்மயோகி படத் தில் தான், சொன்னதை மீண் டும் ஞாபகப்படுத்தும் வகையில் 'இந்தத் திரைப்படத் துறையை நலிந்து போகவிட மாட்டேன். பசுமையாக வாழ வைப்பேன்' என்று தான் கூறியதை நடத்திக் காண்பித்த முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி செழித்தோங்கி நிலைக்கும்.

நடிகர் நடிகைகள், துணை நடி கர்களுடைய சம்பளங்கள் ஒரு சிலரைத் தவிர மற்றவர்களுக்கு மிகவும் குறைவாக இருப்பதை நினைத்து ஒவ்வொரு கூட்டத்தி லும் அவர்களுடைய வசதிக் குறைவை நினைத்து எம்.ஜி.ஆர் அவர்கள் வருந்துவார். அதுவும் குறிப்பாக வீர விளையாட்டுகள் செய்யும் ஸ்டண்ட் மாஸ்டர், ஸ்டண்ட் நடிகர்கள் ஆகியோரின் அவல நிலையையும், கரணம் தப்பினால் மரணம் என்று உள்ள நிலை மாற வேண்டும் என்றும் கதாநாயகர்களின் உயிருக்கு ஆபத்து நேர்ந்துவிடக் கூடாது என்பதற்காக ''டூப்'' வேடத்தில் நடிக்கும் ஸ்டண்ட் நடிகர்களுக்கு அதிக வசதியும், வருமானமும் வேண்டும் என்றும் அவர் விரும்பி னார்.



* வண்ண வண்ணக் கள்ஞ்செதுக்கி
வாடச் சம்பா கட்டடிச்சேன்
வண்டிக்குத்தான் நெல்வளக்க
வல்லாளனைத் தேடுறேனே!

இன்று வெளியாகும் எல்லாப் படங்களிலும் சண்டைக்காட்சி கள் மிகுந்த நடிகர், நடிகைகள், துணை நடிகர்கள், ஸ்டண்ட் நடிகர்கள் யாவரும் பெருத்த மன நிம்மதியுடன் வாழ்க்கை வசதிகளுடன் வாழ்ந்து வருவதும் அவர் திரைப்படத் தொழில் எப் படி இருக்கவேண்டும் என்று எண்ணியிருப்பாரோ அப்படி வளர்ந்து வருவதும், அவருக்கு மன நிம்மதி கொடுக்கும் என்பதில் எனக்குச் சந்தேக மில்லை.

# பல்லாண்டு புவிமேலே இனிது வாழ்வோம்!

திருமதி சௌந்தரா கைலாசம்



இப்புவியில் வாழ்கின்ற மனிதர் எல்லாம்
எங்கேயோ எதற்கேயோ பறக்கின் றாரே!
தப்பான பாதையிலே சிறிது கூடத்
தயங்காமல் மிகவிரும்பி நடக்கின் றாரே!
ஒப்புக்குப் புன்னகையை உதட்டில் காட்டி
உள்ளத்தில் பெருநெருப்பை வளர்க்கின் றாரே!
செப்புகிற வார்த்தைகளில் மெய்ம்மை என்னும்
ஜீவனையே நீக்கிவிட்டுக் களிக்கின் றாரே!

பயன்கருதா தொருசெயலும் செய்வ தில்லை!
பணம்கருதா தொருபொழுதும் இருப்ப தில்லை!
தயவென்னும் தன்மைக்கு நெஞ்சுக் குள்ளே
சற்றேனும் சிற்றிடமும் தருவ தில்லை!
உயரத்தில் நிதம் ஏறிக் கரைக டந்த
உவகையினை எய்துகிற முனைப்பும் இல்லை!
மயக்கத்தில் இருந்தபடி போலி யான
மகிழ்ச்சியிலே வாழ்நாளைக் கழிக்கின் றாரே!

பிறர்துயரில் இன்பமெனும் கோட்டை கட்டிப்
பெரிதாக வாழ்கின்ற நிலைமை நீங்கி
அறவழியில் நடைபோட்டு மாந்தர்க் கெல்லாம்
ஆனமட்டும் உதவிகளைப் புரிந்து விட்டால்
குறையென்ப தொருபொழுதும் நேரு மாமோ?
குவலயமே பேரின்பச் சோலை யாகி
நிறைவதனை எல்லார்க்கும் நல்கு மன்றோ?
நித்தியனின் ஒளிவெள்ளம் பெருகு மன்றோ?

கண்ணனவன் சொன்னபடி எதுசெய் தாலும்
கடவுளுக்கே அர்ப்பணிக்கக் கற்றுக் கொண்டு
மண்ணுலகில் நலம்புரிந்து மனிதர் வாழ்ந்தால்
மகிழ்வன்றி வேறேதும் வருவ தில்லை!
எண்ணுவதும் செய்வதுவும் சிறந்த தாக
இருக்கட்டும் இனிமேலே என்று பொங்கல்
பண்டிகைநன் னாளிதனில் உறுதி எற்றுப்
பல்லாண்டு புவிமேலே இனிது வாழ்வோம்!!

# நடிப்புக் கலையின் வளர்ச்சி





## திருமதி எம்.என்.ராஜம்

ஆய கலைகள் அறுபத்து நான்கு என்று நமது நாட்டில் பன்னெடுங் காலமாகச் சொல்லி வருகிறோம். ஓவியம் வரைதல், சிற்பம் செதுக்குதல், காவியம் படைத்தல், நடனம் ஆடுதல், இசைபாடுதல், குதிரை ஏற்றம், யானை ஏற்றம், வில் வித்தை இவை போன்றவை அறுபத்து நான்கு கலைகளுக்குள் அடங்கும்.

உள்ளத்தை மகிழச்செய்வது கலை; உணர்ந்து உணர்ந்து ரசிக்கச் செய்வது கலை; அத்தகைய கலைகளுள் நாடகக் கலையும் ஒன்று.

நாடகக் கலை நமது நாட்டில் தொன்று தொட்டு இருந்து வருகிறது. அதன் சிறப்பு, சொல்லில் அடங்காது. இளம் வயதில் அரிச்சந்திரன் நாடகத்தைப்பார்த்துத் தான் அண்ணல் காந்தியடிகள், 'வாழ்நாளில் எந்த நாளும் சத்தியத்தைக் கடைப்பிடிக்கவேண்டும்' என்ற கொள்கையை உயிர் மூச்சாகக் கொண்டிருந்தார்.

பகுத்தறிவுப் பகலவன் என்று பாராட்டப்பட்ட தந்தை பெரியார் அவர்கள், 'நூறு பொதுக் கூட்டங்களில் பேசிப் புரியவைக்க முடியாத விஷயங்களை ஒரே ஒரு நாடகத்தின் மூலம் மக்களுக்குப் புரிய வைக்க முடியும்' என்று ஆணித்தரமாக எடுத்துரைத்திருக்கிறார்.

விஞ்ஞானத்தின் சகாயத்தினால் இந்த நவீன காலத்தில் பல புதிய கலைகளும் நமக்குக் கிடைத்துள்ளன. அப்படிக் கிடைத்தவற்றுள் திரைப்படக் கலை, வீடியோ கலை ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

கைத்தொழில்களில் புரட்சி ஏற்பட்டு, இயந்திரங்கள் உருவாக்கப்பட்டது போல, கலைத் துறையிலும் இயந்திரங்கள் அறிமுகப் படுத்தப்பட்டன. கேமராக்கள் மூலம் திரைப்படம் தயாரிக்கப்பட்டது. இதன் காரணமாக ஒரு கதையை ஒரே நாளில் காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரிவரை வாழும் மக்கள் பார்ப்பதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

சமீப காலத்தில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள வீடியோ கலையின் உதவியால் நாடகங்கள், விழா நிகழ்ச்சிகள், திருமண வைபவங்கள் ஆகியவற்றைப் படமாக்க முடிகிறது. இந்தப் படங்களைத் திரையிட்டுப் பார்ப்பதற்கு வெள்ளித் திரை வேண்டியதில்லை. திரை அரங்கம் தேவை இல்லை. நமது இல்லத்தில் உள்ள தொலைக் காட்சிப் பெட்டியிலேயே திரையிடமுடிகிறது. இன்று நமக்குக் கிடைத்துள்ள இந்த வீடியோ சாதனம் சில ஆண்டுகளுக்கு முன்னரே நமக்குக் கிடைத்திருந்தால் கூட நமக்கு எவ்வளவோ அரும்பெரும் கலைப் பொக்கிஷங்கள் கிடைத்திருக்க முடியும். அன்னைத் தமிழையும் அரசியல் உணர்வையும் வளர்த்த அண்ணா அவர்கள் அரிதாரம் பூசி நடித்த சந்திரமோகன், நீதி தேவன் மயக்கம் போன்ற நாடகங்களை வீடியோஎடுத்திருந்தால் இன்று அவற்றைத் திரையிட்டு மகிழலாமே! அண்ணாவின் நடிப்புத் திறனை இன்றைய இளைய தலைமுறையினருக்கு உணர்த்தியிருக்க முடியுமே!

முத்தமிழ்க் கலாவித்வ ரத்ன டி.கே.சண்முகம் அண்ணாச்சி அவர்கள் தனது நல்ல முதுகைக் கூன் முதுகாக்கிக் கொண்டு, பல்லாயிரக்கணக்கான மக்களை ரசிக்க வைத்த ஔவையார் நாடகத்தை அன்று வீடியோ எடுக்க வாய்ப்புக் கிடைத்திருந்தால் இன்று அதனைப் பார்த்துப் பார்த்து ரசித்திருக்க முடியுமே!

திரைப்படக் கலையைப் பொறுத்த அளவில் நமது தமிழகத்திற்கு எப்போதும் பெருமை உண்டு. ஒரு காலத்தில் ஆண்டுக்கு 5 படங்கள் தயாரிக்கப்பட்டு வந்த தமிழகத்தில், இன்று, வாரத்திற்கு 5 படங்கள் உருவாக்கப் படுகின்றன. திரைப்படக் கலைத் தொழிலால் நமது தமிழகம் முன்னேற்றம் பெற்று வருகிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

திரைப்படங்கள் நமது தமிழகத்தில் உருவாகத் தொடங்கிய காலத்தில் பெண்கள் பங்கேற்பதற்கு அஞ்சினார்கள். அந்நாளில் குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த பெண்கள் மட்டும்தான் நடிப்பதற்குத் துணிந்து முன் வந்தார்கள். இன்று அந்த அச்சம் மறைந்துவிட்டது. எல்லா இனத்தவரும் எல்லாச் சமயத்தைச் சேர்ந்தவர்களும் நடிப்புத்துறையில் மனப்பூர்வமாக ஈடுபடுகிறார்கள். ஆர்வத்துடன் ஈடுபடுகிறார்கள். திரைப்படத்தில் நடிப்பதைப் பெருமையாகவும் கருதுகிறார்கள்.

நாடகத்தில் நடித்து, நடிப்பில் சிறந்து விளங்கியவர்களே அந்தக் காலத்தில் திரையுலகில் அங்கம் வகித்தார்கள். நாடக அனுபவத்தின் காரணமாகத் திரைப்படத்தில் அவர்கள் மிக எளிதில் நடிக்க முடிந்தது. அவர்களது திறமையும் ஒளிவீசித் திகழ்ந்தது.

பொதுவாக, பலதுறைகளிலும் அனுபவம் பெற்றவர்களை உலகம் போற்றுகிறது; வரவேற்கிறது. ஆனால் திரையுலகில் குறிப்பாக நடிப்புத்துறையில் அனுபவம் வாய்ந்த முதியவர்களை, புதியவர்கள் ஏளனமாக எண்ணுகின்ற இயல்பு காணப்படுகிறது.

ஒரு வீட்டில் கைக்குழந்தை விடாது அழுதுகொண்டே இருக்கிறது. காரணம் தெரியாமல்

தவிக்கிறாள் அதன் தாய். பக்கத்து வீட்டில் உள்ள நடுத்தர வயது மாதுடம் குழந்தையைக் காணபிக்கிறாள். அவளுக்கும், குழந்தையின் அழுகைக்குரிய காரணம் புலப்படவில்லை. இருவரும் சேர்ந்து அந்தக் குழந்தையை மூன்றாவது வீட்டிலுள்ள மூதாட்டியிடம் காண்பிக்கிறார்கள. குழந்தையின் அழுகைக்குரிய காரணத்தைக் கண்டுபிடிப்பதுடன், அழுகையைப் போக்குவதற்கும் வழிவகை சொல்கிறாள் மூதாட்டி. குழந்தையின் தாய், மூதாட்டிக்கு நன்றி தெரிவிக்கிறாள். மூதாட்டியின் அனுபவ அறிவுக்குப் பாராட்டுக் கூறுகிறாள்.

அவர் ஒரு செல்வந்தர்! அவருக்கும் இன்னொருவருக்கும் இடையே சொத்து சம்பந்தமான ஒரு வழக்கு. புதிய - இளைய வழக்கறிஞாகளிடம் அந்தச் செல்வநதர்க்கு நம்பிக்கை ஏற்படவ்ல்லை. அனுபவம் வாய்ந்த - முதிய வழக்கறிஞர் ஒருவரைத் தேடிச் சென்று கருத்துரை கேட்கிறார். அநத வழக்கறிஞர், முதுமை காரணமாக வழக்குரைக்கும் தொழிலிலிருந்தே ஓய்வு பெற்றுவிட்டார். என்றாலும் அவரைச் சந்தித்துக் கருத்துரை கேட்கப்படுகிறது. காரணம், வழக்கின் சிக்கல் தீருவதற்கு வகையானகாரணத்தைப் பழுத்த அனுபவ வாதியான வழக்கறிஞர் தெரிவிப்பார் - வழிகாட்டுவார் என்ற நம்பிக்கைதான்.

இப்படிப் பல்வேறு துறைகளிலும் முதியவர்களை-பழுத்த அனுபவ வாதிகளை மக்கள் தேடிச் செல்கிறார்கள். ஆனால் ஒரு நடிகரைப் பொறுத்த அளவில் அவர் முதுமை எய்திவிட்டார் என்றால் அவரைப் பயன்படுத்துவதற்குக் கலை உலகத்தினர் தயங்குகிறார்கள். அது மட்டுமல்ல, ''பாவம்! அந்த நடிகருக்கு வயசாயிடுச்சி! இப்ப அவரு நடிப்பெல்லாம் எடுபடாது!'' என்று சொல்லி, அவரை ஒதுக்குகிறார்கள். இந்த நிலை நியாயமா? வேறுதுறைகளில் முதுமைக்குப் பாராட்டுத் தருகின்ற சமுதாயம் நடிப்புத் துறையில் முதுமையைப் புறக்கணிப்பது நேர்மையாகுமா?

நடிப்பு என்றால் என்ன? வாழ்ந்திருந்த ஒரு பெருமகன் அல்லது திருமகள் பாத்திரத்தை மற்றொருவர் ஏற்று, தன்னை அவராகவே பாவித்துக்கொண்டு நடித்துக் காட்டுவது நடிப்பாகும்.

நடிப்புக் கலை நமது தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியிருக்கிறது.

'நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து' என்ற தேவார வாசகத்தில் நாடகம் என்ற சொல்லும், நாடகத்தின் பெருமையும் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன.

நடிப்புத்துறையில் ஈடுபட்டுள்ள நடிகர்கள் மட்டும்தான் நடிக்கிறார்கள் என்பதில்லை. வாழ்வியலில் உள்ள சகல துறையினரும் சமயம் வரும்போது நடிக்கத்தான் செய்கிறார்கள்.

மனைவியிடம் ஒரு செய்தியை மறைக்கமுயலும் கணவன் ஒப்பனை அணியாமல் நடிக்கிறான். முதலாளியிடம், ஒரு தகவலை மறைக்கத் துடிக்கின்ற தொழிலாளி, வேடம் அணியாமலேயே நடிக்கிறான். தவறு செய்த மாணவன் ஒருவன் தவறை ஆசிரியரிடம் மறைக்க முனையும் போது அரிதாரம் பூசாமலேயே நடிக்கிறான். இப்படி, சமுதாயத்தில் நடிப்பு பலரிடமும் காணப்படுகிறது. ஆனால் நடிப்பைத்தொழிலாகக் கொண்டுள்ளவர்கள் மட்டும்தான் நடிகர்கள் என்றழைக்கப்படுகிறார்கள். இதை நினைத்துப் பார்க்கும்போது எல்லாருமே நடிகர்கள்தான் என்று சொல்வது பொருந்தும்.

நடிகர்களுக்கு, ஒரு காலத்தில் நாட்டில் இருந்த அவப்பெயர் தற்போது நீங்கிவிட்டது. நடிகர்கள் பெருமைப்படும் காலம் பெருமைப்படுத்தப்படும் காலம் இப்போது உருவாகியுள்ளது. திரையுலகின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய மக்கள் திலகம் பொன்மனச் செம்மல் - டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற பின்னர் நடிகர்களின் அந்தஸ்து உயர்ந்துள்ளது. நடிகர்களை அரசியல் தலைவராக ஏற்றுக்கொள்ளும் இனிய பண்பு தமிழகத்தில் காலூன்றி ஆந்திர மாநிலத்திலும் அமெரிக்க நாட்டிலும் வேரூன்றியுள்ளது என்பதை வரலாறு சுட்டிக் காட்டுகிறது.

நமது தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் அரசு, கலைஞர்களைப் பாதுகாக்கும் அரசாகத் திகழ்கிறது. நலிவுற்ற நாடகக் கலைஞர்கள், திரைப்படக் கலைஞர்கள் ஆகியோருக்கு நிதியுதவிசெய்து வருகிறது.வசதியற்ற கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வு ஊதியத் தொகையை 75 ரூபாயிலிருந்து 150 ரூபாயாகஉயர்த்தித் தந்துள்ளது. சிறந்த திரைப்படங்களைத் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்குகிறது. திரைப்படக்கலைஞர்களுக்கும் பரிசு வழங்குகிறது. சிறந்த இலட்சியங்களை உணர்த்தும் திரைப்படங்களுக்கு நிதி உதவித்தொகையும் அளித்து வருகிறது. மறைந்த பழம்பெரும் இயக்குநர் ராஜாசாண்டோ அவர்களின் நினைவாக ஒரு பரிசை அறிமுகப்படுத்தி, சிறந்த தயாரிப்பாளர்-தொழில்நுட்பக் கலைஞர் ஆகியோருக்கு 25 ஆயிரம் ரூபாய் வழங்கிச் சிறப்பிக்கிறது.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் தொடங்கப்பட்ட திரைப்படக் கல்லூரியில் புதிய வசதிகளை ஏற்படுத்தித் தந்திருப்பதுடன் அறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றிருந்த போது தொடங்கப்பட்ட திரைப்படப்பிரிவை வளர்ச்சியுறச் செய்து வருகிறது.

பொன்மனச்செம்மலின் ஆட்சி, கலைஞர்களுக்குப் பொன்னான வாழ்வை வழங்குகிறது. அவரது ஆட்சியில் கலைஞர்கள் தலை நிமிர்ந்து நிற்க முடிகிறது. அது மட்டுமல்ல, கலைஞர்களின் வாழ்வும், பெருமையும், உயர்கிறது, உயர்கிறது, உயர்ந்துகொண்டே இருக்கிறது!





# ஒரு கிராமத்தில் தைப் பொங்கல்

உதய காலம் ஒளிமழை தூவ
உயிரில் புதிய இனிமை பரவ
புதையல் எடுத்த ஏழை முகம்போல்
உழவன் முகமும் உவப்புடன் மகிழ
தாவரத் தோரணம் ஆதிவாசிகள்
வாழ்வின் நிழலை அபிநயம் செய்யும்
வஞ்சகம் பொய்மை வாழ்வின் சூதுகள்
கொஞ்சமும் இல்லா கிராம வாழ்வின்
புதுப்புது அழகுகள் புறப்படும் திருநாள்
பழந்தமிழ் நாட்டுக் கலாச்சார விழாநாள்
செங்கரும்பும் திங்கள் முகமும் சேர
வளையல் ஓசையில் வனிதையர் கூடி
தேவ லோகத்தை பூமி மீது
ஆவலோடு படைக்கும் அதிசய நாளிது
பொங்குக பொங்கல் மங்கலம் எங்கும்
தங்கத்தமிழகத் தலைவன் வாழ்க!

கவியரசு
நா. காமராசன்

# ஒருகதை கவிதையாகிறது!

கவிஞர் மு.மேத்தா



கால்களிலே தைக்காமல்
எங்கள்
கண்களிலே தைக்கின்ற
கடிகார முட்களே...!
நீங்கள்
காலத்தின் கால்களோ?

ஏ! கடிகாரமே!
பேச்சை நிறுத்தாத
பெரிய மனிதனே!
குதிக்கும் உன்னுடைய
கால்களில் ஒன்று
ஏன்
குட்டையாய்க் கிடக்கிறது?

காலங்கள் தோறும்
இருந்து வருகிற
ஏற்றத் தாழ்வை
எடுத்துக் காட்டவோ?

பாவம்
படிக்க, எழுதப்
பழகாதவன் நீ...
என்றாலும்
சூரியனை பூமி
சுற்றி வருவதையே
சுருக்கெழுத்தில்
குறிப்பெடுக்கின்றாயே!

உழைத்தால் எப்போதும்
உயரலாம் என்பதற்கு
உதாரணம் நீதானோ?
நீ
காலச் சக்கரவர்த்தியின்
கணக்கப் பிள்ளையோ?

உன்னுக்குள்ளேயே
நீயோர்
ஓட்டப்பந்தயம் நடத்துகிறாய்
உன்னைப் பார்த்துவிட்டு
வீதிகளில் மனிதர்கள்
விரைவோட்டம் நடத்துகிறார்கள்.

கைகளில் உன்னைக்
கட்டி வைத்ததற்காக
அவர்களை
உன் கால்களாலேயே
வேக வேகமாய்
விரட்டிக் கொண்டிருக்கிறாய்!

ஓயாமல் ஒழியாமல்
உழைக்கின்றாய்
இருந்தாலும்
வசவுகள் மட்டுமே
வழங்கப்படுகின்றன.

சுறுசுறுப்பானவர்கள்
உன்னை
'அவசரக் குடுக்கை'
என்று
அழைக்கிறார்கள்.
சோம்பேறிகளோ
உன்னைத்
'தள்ளுவண்டி' என்று
எள்ளி நகைக்கிறார்கள்!

அதனால் என்ன...
கடிகாரமே நீ
கவலைப் படாதே!
உன் பெருமை
ஆகாயம் போலவே
அளக்க முடியாதது!

ஏனென்றால்—
வானம் கூட
பூமிப் பெண்
கட்டிக் கொண்டிருக்கும்
கடிகாரம் தான்

அதில்
சுற்றிவரும் முட்கள்தான்
சூரியனும் சந்திரனும்!


வளரட்டும் மொழியுணர்வு
வீங்குபுகழ்ப் பொங்கல்முதல் விரிகடல்சூழ் ஞாலமெல்லாம்
தீங்கின்றி வாழத் திருத்தமிழர் சேமமுற
பாங்குடைய அறிஞர்களின் பாதையிலே நாடுசெல்ல
ஓங்குபுகழ்ச் செந்தமிழால் உளமார வாழ்த்துகின்றேன்
இனஉணர்வும் மொழிஉணர்வும் என்றென்றும் வளர்ந்துவர
மனதினிலே அன்புமலர் மணம்விசித் தவழ்ந்துவர
பணமிருக்கும் இடமெல்லாம் பண்புகளும் செழித்துவர
குணமிருக்கும் நல்லோரைக் கும்பிட்டு வாழ்த்துகின்றேன்
அதிகாரம் செலுத்தவரும் ஆதிக்க மொழிவெறியின்
சதியை முறியடிக்கத் தடந்தோள் உயர்த்திடுவோம்
துதிபாடிச் சிலபேர்க்குத் துன்பத்தைக் கொடுக்கின்ற
மதியிலிகள் ஆணவத்தை மண்ணில் தகர்த்தெறிவோம்
இந்நாட்டின் அரியணையில் இருந்தமிழே கொலுவிருக்க
தென்னாடும் வடநாடும் சேர்ந்தே மகிழ்ந்திருக்க
எந்நாளும் ஆங்கிலமே இதற்கிங்கு துணையிருக்க
பொன்மனச் செம்மல்வழி பூமியிலே நாம் நடப்போம்
கவிஞர்
முத்துலிங்கம்

# தமிழர் திருநாள்



## தை பிறந்தது

தங்கத் தமிழ் நாட்டிலே தைத் திங்கள் பிறந்தது!
தரணியெல்லாம் மகிழ்ந்திட நற்பொங்கல் வந்தது!
பஞ்சமின்றிப் பகையுமின்றி நாடு செழிக்கவே
பாலும் தேனும் வளமும் சிந்தும் பொங்கல் வந்ததே!

தென்றல் வீசும் தெம்பு சேரும் பொங்கல் நாளிலே
மன்றம் போல் மனைமாட்சி துலங்கும் பொங்கல் நாளிலே
கன்று காலி துள்ளி ஓடும் பொங்கல் நாளிலே
காளையர் தோள் விம்மி உயரும் பொங்கல் நாளிலே
பூத்துக் குலுங்கி நாடு மலரும் பொங்கல் நாளிலே
பூவையர் கூடிப் பாட்டு முழக்குவர் பொங்கல் நாளிலே
நாடே நடனம் ஆடி மகிழும் பொங்கல் நாளிலே
நல்லனகூடும் அல்லன ஓடும் பொங்கல் நாளிலே
கொஞ்சுகின்ற பைங்கிளியும் கோல நடமயிலும்
வஞ்சிக்கொடி தேன் மொழியார் சிந்துபாடும் ஒயிலும்
தானதந்த சந்தமொடு ஆடிவரும் வசந்தம்
மாடுபிடிக் காளையரின் வீரநடை குலுங்கும்!

## குலவை ஒலி

செந்நெல் கதிர்கள் அறுத்துக் கூட்டிக்
களம் சேர்த்து அடித்துக் குவித்துப்
பொன் குன்று போலப் போரும் வைத்துப்
புணையல் மாடு மிதிக்கவிட்டு நெல்லைத் தூற்றிப்
பொலியோ பொலி! பொலியோ பொலி! என்று
குலவையிட்டுப் பாடுவோம் - தைப்
பொங்கலே வருகவென்று வாழ்த்துவோம்!
பொங்கலோ பொங்கவென்று ஆடுவோம்!

நெல்லும் கரும்பும் மஞ்சளும் இஞ்சியும்
எங்கும் விளைந்திடும் போதிலே
நல்ல திருநாள்! பொங்கல் பெருநாள்!
தைத் திங்கள் நன்னாள் பிறந்திடுமே!
சூழ்ந்த விருந்து கூட்டி உண்போம்
சொற்கலை நூல்கள் ஆய்ந்திடுவோம்
வாய்ந்த செல்வம் பகிர்ந்து கொள்வோம்
வையம் முழுதும் வாழ்த்த வாழ்வோம்!



— கவிஞர் முகவை ராஜமாணிக்கம்





## திருமணம்

காரேறிய கருங்குழல் சொருக்கும்
கனிகனிந்திடும் வாயிதழ் முறுக்கும்
கண்டவர் மனம் கல்லையும் உருக்கும்
கயல்விழிப் பார்வை நெஞ்சையும் மயக்கும்
சீரேறிய மாந்தளிர் நிறப் பட்டும்
சித்திர வண்ணக் கொசுவக்கட்டும்
சேர்த்து உடுத்தும் சிற்றிடை வனப்பும்
ஏர்பிடிக்கும் காளை ஏந்திழை கரம் பற்றினனே!

## களியாட்டம்

கும்மியடி பெண்காள்! கும்மியடி!
கோலவண்ணப் பெண்காள்! கும்மியடி!
உலையும், கலையும் பொங்குகவே என்று
ஒய்யாரமாய்க் கும்மி அடியுங்கடி!
செந்நெல்மணி குவிந்த தென்று கும்மியடி!
தீர்ந்தது வெம்பசி என்று கும்மியடி!
அந்தி சந்தி பாராமல் உழைப்பவர் நெஞ்சம்
ஆனந்தம் நிறைகவென்று கும்மியடி!
குதித்தோடித் துள்ளிவரும் கன்றுகளும் உண்ணக்
கொண்டுவைக்கும் பொங்கலினைச் சிறுவர்களும் உண்ண
அதிர்ந்தோடு காளை தன்னை மஞ்சுவிரட்டோட்டி
அடக்கி அதைப் பிடித்திடும் தைப்பொங்கலோ பொங்கல்!
சிறுமியரின் முகமலரப் பொங்குகவே பொங்கல்!
சேர்ந்த இரு உளம்குளிரப் பொங்குகவே பொங்கல்!
முறுவலிக்கும் தாயின்மனம் பொங்குகவே பொங்கல்!
முற்றும் இனிப்பாகிடவே பொங்குகவே பொங்கல்!

## தாயகம்

செந்தமிழ்நாடே! செந்தமிழ்நாடே!
செந்நெல்கதிர் ஆடுகின்ற செந்தமிழ்நாடே!

உரமிட்டுப் பயிர் விளைக்கும்
உழவர்களின் தாயகம்
காமுயர்த்திக் கவிதை பாடும்
கலைமலிந்த தாயகம்

கனகமணித் தாழ்வடங்கள்
பூண்ட தமிழ்த் தாயகம்
அனைவருக்கும் வாழ்வளிக்கும்
அன்னமிடும் தாயகம்!



# தவஞ்செய்யும் நெஞ்சோடு தைமுதல் நாள்

கவிஞர் ஈரோடு தமிழன்பன்



* கலப்பை
ஒரு கருப்பை ஆகி
நலன்கள் ஈன்றெடுக்குமா
உழவனுக்கு?

* பச்சைத் தொட்டில்களில்
புது
இன்பங்கள்
கண்மலருமா?

* சிதைந்த
புன்னகைகள்,
வாழ்க்கையின் உதடுகளில்
சீர்திருத்தப்படுமா?

* திசைமாறிப்போன
இசைகள் - இனி,
புல்லாங்குழலுக்குள்
திரும்பி வருமா?

* மழைமேக வில்கள்,
உலர்ந்த
உள்ளங்களில்
வண்ணங்கள் எழுத
வருமா?

* வேர்வைகளுக்கு,
நாடு
ஆர்த்தி எடுக்குமா?

* உழைக்கும்
தோள்களை முத்தமிட்டு
உலகம்
சுழலுமா?

பூபாளக் குயில்கள்
கூடுகட்டும் திசைகள்
பூப்பூவாய்
மலர்ந்திடுமா
என்று,
தை முதல் நாள்
தவஞ்செய்யும் நெஞ்சோடு
கிழக்கைத்
திறக்கிறது

* மார்கழிப் பனிமேல்
பாதம்
பதித்துவரும்
தையின் ஆன்மாவில்
வெப்ப யாகம்
வினாக்கள் செய்கின்றன

* சிற்றூரின்
வயற்பரப்பில் சின்னக் கங்கொன்று
மூச்சுயிர்த்தா'ல் - அதனால்
உறங்கும் கோடி கங்குகளில்
ஆவேசம்
வழி திறந்தால் - ஒரு
புதுமைச் சமுதாயம்
உதயமாகாதா - என்று
இதயம் தவித்தபடி வருகிறது தை!

பாட்டாளிகள்
வீட்டுப் பானைகளில்
பால் பொங்கலாய்,

அரசியல் சாசனங்கள்
அர்த்தப்படும் நாளை
அவசரப்படுத்தும் 'தைமுகம்'
சிவந்து தெரிகிறது!



# ஏ எழுத்து வியாபாரிகளே...

நாங்கள் எழுத்துக்கள்...
உதிரிப் பூக்களாக
இருக்கையில்,
ஒய்யாரமாக இருக்கிறோம்!
கதம்பமாக நீங்கள்
கட்டுகிறபோதுதான்
கலங்கிப் போகிறோம்...

O O O

ஒரு
பைத்தியக்காரனிடம்
அகப்பட்டுக் கொண்ட
பட்டுத்துணியைப் போல
பதங் குலைந்து போகிறோம்—
பரிதாபத்தை அடைகிறோம்—

O O O

உயிர் என்றும்,
மெய் என்றும்
உலவி வந்தோம்...
உங்கள்
நச்சு விரல் பட்டதுமே
உயிர்
மரித்துப் போகிறது;
மெய்
கலங்கித் தவிக்கிறது...

O O O

கற்கோயில்களாகக்
கட்டத் தெரியாமல்,
நீங்கள் எங்களைக்
குப்பை மேடுகளாகக்
குவித்துப் போடுகிறீர்கள்....

O O O

அணிகலனில்
பதிக்க வல்ல
வார்த்தை வைரங்களை
அம்மியில் வைத்துப்
பொடித்துக் கொண்டிருக்கிறீர்கள்...

O O O

ஆராதிக்க வேண்டிய
எழுத்துத் தேவதைகளை
அவிழ்த்துப் பார்க்கத்தான்
ஆசையே படுகிறீர்கள்...

O O O

கொடுமையிலும் கொடுமை!
எழுத்து வியாபாரிகள்
துச்சாதனராகி
எங்கள்
துகில்களை உரிகையில்,
பாண்டவரும் அல்லவா
பரவசமாய்ப் பார்க்கிறார்கள்!

அரசு மணிமேகலை

# கிளியும் அணிலும்





—குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா

மரத்தி லிருந்து கீகீ என்ற
சத்தம் வந்தது
வானில் பறந்த கிளியும் அதனைக்
கேட்க லானது
இறங்கி வந்தே அந்த மரத்துக்
கிளையில் அமர்ந்தது
இங்கு மங்கும் இலைகள் நடுவே
தேடிப் பார்த்தது.

மீண்டும் 'கீகீ' என்ற சத்தம்
அங்கு கேட்டது
விரைவில் கிளியும் கோபத் தோடு
திரும்பிப் பார்த்தது
நீண்ட வாலை உடைய அணிலை
அங்கே கண்டது
"நீதான் கிளிபோல் கத்தி னாயோ?"
என்று கேட்டது.

கிளையில் வாலை அடித்து அடித்துக்
'கீகீ' என்றுமே
கிட்ட வந்து நின்ற அணிலும்
சத்தம் போட்டது

"கிளியைப் போலக் கத்திக் கத்தி
எங்கள் இனத்தையே,
கேலி செய்வ தேனோ?" என்று
கிளியும் கேட்டது.

"எங்கள் குரலே இப்ப டித்தான்
இறைவன் படைத்தது
எவரைப் பார்த்தும் நாங்கள் கேலி
செய்வ தில்லையே!
உங்கள் குரலும், எங்கள் குரலும்
ஒன்று போலவே
உனது காதில் விழுந்த தென்றால்
எனது குற்றமா?"

கிளியோ இதனைக் கேட்டு மிகவும்
கோபம் கொண்டது
உளியைப் போன்ற அலகால் அணிலைக்
கொத்த முயன்றது
விழியை மூடித் திறப்ப தற்குள்
மரத்துப் பொந்தினுள்
விரைந்தே ஓடிப் புகுந்து அணிலும்
மறைந்து விட்டது!

சாமி-

# இசை மரபுகள்

நாமகிரிப்பேட்டை கே. கிருஷ்ணன்



இசையும் எல்லாக் கலைகளையும் போலவே பயிலப்படுவதுதான் என்றாலும், பயிற்சியாலும் பழக்கத்தாலும் மற்ற எல்லாக் கலைகளையும் விட இந்த இசைக் கலை மெருகடையப் பெறுகிறது பரிமளிக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

செவி வழி கேட்டதை, சிந்தை வழி பயின்றதை, சுய அனுபவத்தாலும் முயற்சியாலும் ஞானத்தாலும் மேலும் மேலும் அழகடையச் செய்வது ஒரு கலைஞனுக்கு இருக்கிற இருக்க வேண்டிய திறமை ஆகும். ஐந்தும் ஐந்தும் பத்து என்பது பள்ளிக் கணக்கு. இந்தப் பத்து என்ற எண்ணை எப்படியெல்லாம் வகுக்கலாம், பிரிக்கலாம், பகுக்கலாம் என்று ஆராய்வது கணித ஞானத்துக்கு மேம்பட்ட கலைஞானம். இந்தக்கலைஞானம் கற்றுப் பெறுவது - கற்பிக்க வருவது என்பதை விட கலைஞனுடைய மனோதர்மத்திற்கும் கற்பனைக்கும் ஏற்ப வருவது-வளர்வது- விரிவடைவது என்று கூறுவதே சரியாக இருக்கும்.

நமது குருகுல வாசமும் பயிற்சி முறையும் வெறும் கற்பித்தலுடன் நின்று விடவில்லை. மனோதர்மத்தையும் கற்பனை வளத்தையும் ஒழுங்குபடுத்தவும் அவை உதவின. வாய்ப்பாட்டு, கருவி இசை, நாட்டியம் என்று எதை எடுத்தாலும் இன்று மெக்கானிக்கலாக-இயந்திர கதியில் உள்ளன என்ற ஒரு குறைபாடு பொதுவாகவும் பரவலாகவும் கூறப்பட்டு வருகிறது. இதற்குக்காரணம் ஒரு குருகுல முறைப் பயிற்சி இல்லாமையும், கலைஞர்கள் தங்கள் மனோதர்மத்தை விரிவுபடுத்திக் கொள்ள வழிகாண முயலாமையுமே ஆகும்.

சித்திரத்தைப் பார்த்து சித்திரம் எழுதக் கற்றுக் கொள்வதுதான் ஓவிய ஞானம் உயர்வுடைய உள்ள வழியே தவிர ஒரு சித்திரத்தைப் பார்த்து அதே சித்திரம் எழுதுவது காப்பி எடுக்கிற வேலை. இதைச் செய்ய கலைஞனோ கலை ஞானமோ தேவையில்லை. இந்த உண்மை இன்றைய இளைஞர்களாகவுள்ள கலைஞர்களுக்குக் கவனத்தில் படவேண்டும். பத்து ஆண்டுகளாக ஒரே கீர்த்தனையை ஒரே மாதிரியாகப் பாடிக் கொண்டிருக்க இசைக் கலைஞன் தேவை இல்லை. கச்சேரி மேடை, கூட்டம் தேவையில்லை. கிராமபோன் ரிகார்டு அல்லது ஒரு கேஸட் போதும். அந்தக் கீர்த்தனையைப் பத்துவிதமாக எப்படியெல்லாம் பாடமுடியும் என்







பதைப் பரிசோதித்துப் பார்ப்பதில்தான் கலைஞன் மனோதர்மம் விரிவடையும் வாய்ப்பிருக்கிறது.

அண்மையில் நான்,நான்காவது தடவையாக அமெரிக்கா சென்று கச்சேரிகள் செய்யும் வாய்ப்பைப் பெற்றேன். அங்கே எல்லாம், ரசிகர்கள் ராகத்தையும் தாளத்தையும் கேட்டுத் தலை ஆட்டிவிட்டுப் போய்விடுவதில்லை. வாத்தியத்திலிருந்து வாசிப்பவர் திறமை வரை அக்குவேறு ஆணிவேறாக அலசி ஆராய்ந்து ஐயத்தைத் தெளிவுபடுத்திக் கொள்கின்றனர். இது ஒரு சங்கீத வளர்ச்சிக்குத் தேவையான ஒரு ஆரோக்கியமான அணுகுமுறை என்றே நான் கருதுகிறேன.

ஆண்டுதோறும் ஜனவரி முதல் நாள் சென்னையில் தமிழிசைச் சங்கத்தில் வாசிக்கின்ற அரிய வாய்ப்பும் எனக்குக் கிட்டி வருகிறது. இங்கேயும் நான் ஆண்டுக்கு ஆண்டு கச்சேரியை ரசிக்கக்கூடும் வெளிநாட்டவர்கள் எண்ணிக்கை அதிகமாகி வருகிறதைக் காணுகிறேன். இவர்கள் இசையை ரசிக்கிற பாங்கும் தனித்தன்மை வாய்ந்ததாகவே உள்ளது. இசையை இவர்கள் ஆழ்ந்து ரசிப்பதைச் சுத்தமாகத் தாளம் போட்டுத் தலையாட்டுவதைப் பார்க்கிறபோது உணமையாகவே பெருமையாகவும் மனநிறைவு பெறும் வகையிலும் உள்ளது என்பதைக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

இசை, பாடப் பாடத்தான் சுவை கூடும் என்பதுடன் இதனைப் போற்றிப் பாராட்டும்போது உண்மையிலே மிகவும் பரிமளிப்பதுடன் பாடுபவர்களுக்குப் பரிபூரண திருப்தியும் தருகிறது.

இசை பாடுவது போலவே அதை ரசிப்பதும் ஒரு கலை. தெய்வ கிருபையால் அது நம் மக்களுக்குத் தானாகவே வாய்க்கப் பெற்றுள்ளது. இயல்பாகவே இரத்தத்தில் ஊறியுள்ளது. என்றாலும் இந்த ரசிக ஞானத்தைப் பண்படுத்தினால் - முறைப்படுத்தினால் எவ்வளவு சிறப்பாக இருக்கும், இசைக் கலைஞர்கள் மனோதர்மம் விரிவடைய கற்பனை வளம் சிறகடித்துப் பறக்க உதவியாக இருக்கும் என்று நான் எண்ணிப் பார்ப்பது உண்டு.

குருகுலக் கல்வி முற்றிலுமாக மறைந்துவிட்ட நிலையில், தாங்களாகவே காதால் கேட்டு, கண்ணால் பார்த்து,கலைஞானத்தை வளர்த்துக் கொள்ளும் ஆசானில்லாத நவீன ஏகலைவர்கள் எண்ணிக்கை அதிகமாகிவிட்ட நிலையில்; சங்கீதக் கலை செழிக்கவும் சிறக்கவும் இசை பற்றியும் இசை மரபுகள் பற்றியும் நமது மக்களுக்குப் போதிக்கப்பட வேண்டியது அவசியம்.

மொழியும் மக்களும் முன்னேறக் கல்லூரிகளும் சர்வகலாசாலைகளும் கண்டுவரும் தமிழக அரசு இந்த இசைக் கலையின் மரபுகள் பற்றிப் போதிக்கவும், அவற்றைப் பேணிப் பாதுகாக்கும் வழிவகைகள் பற்றிய ஞானத்தை வளர்க்கவும் குறைந்த காலப் பயிற்சித் திட்டங்கள் தொடங்குவதும் - தயாரிப்பதும் தமிழிசைக்குப் பெரும் பயன் தருகிற மணியாக அமையும் என்பது எனது நம்பிக்கை.

கற்றலின் கேட்டலே நன்று என்றாலும், கேட்டலின் கேட்டதை ஆய்வதும் ஆய்ந்த வழி தொடர்ந்து பயில்வதும் பயிற்சி பெறுவதும் பண்ணோடு இணைந்து பாடல் பரிமளிக்கத் தேவையான முறைகளாகும். எனவே, அரசு தன் பங்கைச் செய்வதுடன் சங்கீத சபாக்களும், இசை அரங்குகளும் - மன்றங்களுங்கூட இதில் தங்களுக்குள்ள பங்கைப் பற்றிச் சிந்திப்பது இசைக்கு உயர்வையும் - இசைக் கலைஞர்களுக்குப் பெருமையையும் தேடித்தரும் என்பதில் ஐயமில்லை.

# நம்பிக்கை மலர்கள்

## கவிஞர் பொன்னடியான்



நம்பிக்கை மலர்களே
எங்கள் இதயத்தில்
நன்றாய் மலர்ந்திடுங்கள் - வரும்
நாட்களில் வெற்றிஎம்
மடிகளில் தவழ்ந்திட
நாளும் மலர்ந்திடுங்கள்

உழைப்புக் கரங்களில்
பூத்துக் குலுங்கிட
உறவோடு வந்திடுங்கள்
மக்கள் உள்ளத்தின் உள்ஒரு
உள்ளொளி ஏற்றியே
உணர்வினைத் தந்திடுங்கள்!

துடிப்பான நொடிப்பிலார்
சமுதாயம் படைத்திடத்
துணையாக நின்றிடுங்கள் - நெடுந்
தொலைதூ ரத்தில் உள்ள
துயர்கூட ஓடஎம்
தூகராய்ச் சென்றிடுங்கள்

பூமிப் பரப்பினில்
புதுமைகள் பூத்திட
புன்னகை காட்டுங்கள் - எங்கள்
புண்பட்ட நெஞ்சமும்
போர்ப்பாட்டுப் பாடிட
இன்னிசை மீட்டுங்கள்





# தைப் பொங்கல்

நிர்மலா சுரேஷ்

இது,
வயல்கள் எல்லாம்
வள்ளல்கள் ஆகும் நேரம்!

தைப்பாவை,
உழவன் கைப்பாவை!
பொன்னிருந்தென்ன
மணியிருந்தென்ன
மண் விளைந்தால்தான்
மானுடம் வாழ்கிறது!

உழைப்பவன்
கால்பட்ட சேறுதானே
கிராமியச் சந்தனம்!

அவன்,
விரல்தூவும் விதைதானே
மங்கள அட்சதை!

உழைக்கும் கரங்கள்
தன்னைத் தழுவவில்லையே
என்று
வானம் கூட
வருத்தப் படுகிறது!

பூமிப் பெண்ணின்
புதுப் பிரசவத்தைப் பார்த்து
ஆகாயமே! உன்னுள்ளம்
காயப்பட்டு விட்டதா?

உன்,
ஆதங்கக் கண்ணீரை
எங்கள்
அடுத்த நடவுக்கு,
அச்சாரமாய்த் தா!

அது வரை,
கழனி மங்கையின்
கதிர்ச் சிலம்புகளிலிருந்து
தானியப் பரல்கள்
உடைத்தெடுக்கப் படுவதைப்
பார்த்துக் கொண்டிரு!
இருப்பினும்,
இங்கே எரிவது
மதுரை அல்ல!
போகிக் குப்பைதான்!

# வளம் பெருகி நலம் சிறக்கும் காமராஜர் மாவட்டம்





"மாற்றங்களின்றி முன்னேற்றமில்லை, முன்னேற்றமில்லையேல் வரலாறு இல்லை. மாறுதல் என்பது சிறப்பாக அமையும் போது அதுவே முன்னேற்றத்துக்கான சீரான பாதையினையும் அமைத்துக் கொடுத்து விடுகிறது. சமூக முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும் ஒரு நாட்டின் இன்றியமையாத் தேவை என்றாலும் அதன் பலன்கள் ஏழைய எளிய மக்களுக்குக் கிடைப்பது அவசியம்..."

இவ்வரிய கருத்தை நமக்கு வழங்கியவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள். சொன்னது மட்டுமல்ல, அப்படிச் சொன்னதைச் செயல்படுத்திக் காட்டிய செம்மல் அவர்.

மிகப்பெரிய மாவட்டமான இராமநாதபுரத்தைத் துணிந்து தமது தீர்க்க தரிசனத்தில் மூன்றாகப் பிரித்து, அவற்றிற்கு தேசீயத் தலைவர்களின் பெயர்களைச் சூட்டி, அனைத்துத் தரப்பு மக்களையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார்.

இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட காமராஜர் மாவட்டத்தை முன்னுக்குக் கொண்டுவர மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி வருவதை மாவட்ட மக்கள் நன்குணர்ந்துள்ளனர்.

வானம் பார்த்த பூமியாய் இருக்கும் காமராஜர் மாவட்டத்தை வளம் கொழிக்கும் பூமியாக்க இரண்டு அணைகளைக் கட்ட ஆணையிட்டார் மாண்புமிகு முதல்வர் அவர்கள். இன்று அவை செயல் வடிவம் பெற்று விட்டன. கடந்த 30.12.86அன்று காலையிலும் மாலையிலும் நடைபெற்ற விழாக்களில் குல்லூர் சந்தை நீர்த்தேக்கத்தையும் வெம்பக் கோட்டை நீர்த்தேக்கத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது திருக்கரங்களால் திறந்து வைத்தார்கள்.

மேலும் 7½ கோடி ரூபாய் மதிப்பிலான அரசுத்துறைகளின் பல்வேறு திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் கட்டிடங்களைத் திறந்துவைத்தும், வாழ்வில் நலிந்தோர் நல்வாழ்விற்குக் கடன் தொகைகள், தொழிற்கருவிகள் வழங்கியும், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் ஏழைகளுக்குப் பட்டா பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசச் சீருடை வழங்கியும் மக்கள் நலம் காக்கும் ஒரு சிறந்த அரசின் கடமையை மாவட்ட மக்கள் உள்ளமெலாம் மகிழும் வண்ணம் செய்தார்கள்.

**குல்லூர் சந்தை நீர்த்தேக்கத் திட்டம்**

காமராஜர் மாவட்டத்திலுள்ள அருப்புக்கோட்டை வட்டமும் சாத்தூர் வட்டமும் மிகவும் பின்தங்கிய நிலைமையில் இருப்பதோடு, விளை நிலங்களும் வறட்சியால் அடிக்கடி பாதிக்கப்பட்டு விட்டன. பாசன வசதிகளைப் பெருக்கி, இப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் குல்லூர்சந்தை நீர்த்தேக்கத்திட்டத்தையும் வெம்பக் கோட்டை நீர்த்தேக்கத் திட்டத்தையும் வழங்கினார்கள்.

அருப்புக்கோட்டை வட்டம் குல்லூர்சந்தை கிராமத்தில்வருதுபட்டி ஓடை என்ற கௌசிகநதியின் குறுக்கே 27வது கிலோ மீட்டரில் குல்லூர்சந்தை நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நதி மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டத்தில் பேரையூர் கிராமத்திற்கருகிலுள்ள மங்கலரேவு ஏரியின் மிகை நீரிலிருந்து உற்பத்தி ஆகிறது. இது கடைசியில் வைப்பாற்றின் துணை நதியான அர்ஜுனா நதியுடன் சேருகிறது. இந்நீர்த் தேக்கத்தின் கொள்ளளவு 127 மில்லியன் கன அடி. ஆண்டுக்கு இருமுறை நிரப்பப்பட்டு, இதன் மூலம் மொத்தம் 254 மில்லியன் கன அடிநீர் கிடைக்கக்கூடும்.

இந்நீர்த் தேக்கத்தால் 2556 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும். இதன் பயனாக 2400 டன் கூடுதல் உணவு உற்பத்தியாகும் என எதிர்பார்க்

கப்படுகிறது. ரூ. 291 இலட்சம் மதிப்பிலான இத்திட்டத்தால் மாவட்டத்தின் பெரும்பகுதி பயன்பெறும். வறட்சி நிலைமாறி இப்பகுதி வளம்கொழிக்கும்என்ப தில் ஐயமில்லை.

**பலவேறு புதிய திட்டங்கள்**

போத்தம்பட்டி, சேதுராஜ புரம், குணநாய்க்கன்பட்டி, முத்துலிங்காபுரம், ஊமத்தாம் பட்டி ஆகிய கிராமங்களில் ரூ. 62.40 இலட்சம் செலவிலான 5 புதிய பாசனக் கண்மாய்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள். இவற றால் ஏறத்தாழ 450 எக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் பாசனவசதி பெறும். இக்கண்மாய் அமைப்புப் பணிகளின் காரணமாக, இலட்சக் கணக்கான விவசாயத் தொழி லாளர்க்கு வேலை கிடைத்துள் ளது.

மேலும் திருச்சுழி வட்டம், குண்டாற்றின் குறுக்கே படுகை அணை கட்டி ஆனைக்குளம் மற் றும் இதர கண்மாய்களுக்குத் தண்ணீர்கொண்டுவரும் வேலைக் கான அடிக்கல் நாட்டினார்கள். ரூ. 23 இலட்சம் மதிப்பிலான இப்படுகை அணைக்கட்டால் 1316 ஏக்கர் நிலங்கள் வளம் பெறும்.

மல்லாங்கிணறு, மலைப்பட்டி, எம்.ரெட்டியபட்டி ஆகிய ஊர் களில் ரூ. 13.95 இலட்சம் செல வில் கட்டப்படும் அரசு பள்ளிக் கட்டடங்களுக்கும், சாத்தூர் அரசு மருத்துவமனையில் ரூ. 10 இலட்சம செலவில் புற நோயா ளிக்கான பரிசோதனைக்கூடம் மற்றும்10 படுக்கைகள் கொண்ட பிரிவிற்கும், விருதுநகர் அரசு மருத்துவமனையில ரூ. 8 இலட் சம் மதிப்பில் கட்டப்படவுள்ள நிர்வாக அலுவலகத்திற்கும் அடிக் கல் நாட்டினார்கள்.

மேலும் விருதுநகர் நகராட்சி பகுதியல் அன்னை சிவகாமிநகர், நேருஜி நகர், ஏ.டி.பி.வளாகம், கம்மாபட்டி, ஆதிதிராவிடர் காலனிப் பகுதி, குடிசைவாழ் மக்களுக்கு அடிப்படை வசதிக ளான குடிநீர், சாலை, கழிவறை, குளியலறை தெரு விளக்கு, மழை நீர் வடிகால் வசதி ஆகியன அமைக்கும் பணிக்கான அடிக்கல் நாட்டினார்கள். விரைவுபடுத்தப் பட்ட குடிசைப் பகுதி மேம் பாட்டுத் திட்டத்தின் கீழான இப் பணிகள் ரூ. 12.70 இலட்சம் மதிப்பிலானவை. இவற்றின் காரணமாக 6234 குடிசைவாழ் மக்கள் பயன்பெறுவர்.

காமராஜர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றி யத்திற்காக திரவ நைட்ரஜன் ஆலை ஒன்று விருதுநகரில் கட் டப்பட்டுள்ளது. உறை விந்து சேர்க்கைக் கரு ஊட்டல்மூலம கறவை மாடுகளை இன விருத்தி செய்வுதற்கு உறைவிந்து குழல் கள் (உறை நிலைக்குக் கீழ்) 196 செ.கி. உறைநிலை அடைய திரவ நைட்ரஜனில் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதால், இந்தஆலை அமைக்கப்பட்டுள்ளது. ரூ. 67.40 இலட்சம் செலவில் கட்டப் பட்ட இந்த ஆலையால் சிறிய விவசாய்கள், மிகச் சிறிய விவ சாயிகள் ஆகியோர் அடங்கிய சுமார் 20,000 பால் உற்பத்தி யாளர்கள் பயன் பெறுவா. மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவக்கி வைத்த இத்திட்டத்தி னால் மாடுகளின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டு மாவட் டத்தின் மொத்த பால் உற்பத்தி உயர்த்தப்பெறும். மாவட்டத் தேவை போக அண்டைய மாவட் டங்களுக்கும் திரவ நைட்ரஜன் லாபகரமாக விற்பதற்கும் வாய்ப் புள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர் கள் அருப்புக்கோட்டை, விருது நகர், திருச்சுழி, சாத்தூர் ஒன்றி யங்களில் ஆதி திராவிடர்களுக் காக ரூ. 20.61 இலட்சம் செல வில் கட்டப்பட்டுள்ள 209 வீடு களையும், ரூ. 4.36 இலட்சம் செலவில் அருப்புக்கோட்டை, விருதுநகர், காரியாப்பட்டி ஒன் றியங்களில் கட்டிமுடிக்கப்பட்ட 17 சமுதாயக் கூடக் கட்டடங் களையும திறந்து வைத்தார்கள்.

சாத்தூர் மற்றும் அருப்புக் கோட்டையிலிருககும் அரசு அலுவலர்க்கென தமிழ்நாடு பொது அலுவலர்கள் கூட்டுறவு வீடுகட்டும சங்கத்திற்காக ரூ. 189.32 இலட்சம் செலவில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் கட்டிய340 வீடுகளைத் திறந்து வைத்தார்கள்.

விருதுநகர்,அருப்புக்கோட்டை ஒன்றியங்களில் ரூ. 2 இலட்சம் மதிப்பில் கட்டபபட்ட தானிய கிடங்குகள் இரண்டையும், விருது நகர் ஒன்றியததில் ரூ.1.20 இலட் சம் செலவில கட்டப்பட்ட கூடு தல் பள்ளிக் கட்டடங்கள் இரண டையும் திறந்து வைத்தாரகள்.

ரூ. 6 இலட்சம் மதிப்பிலான சாததூர் நகராட்சியின புதிய நகராட்சிக் கட்டடத்துறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள அடிக்கல் நாட்டினார்கள்.

அன்று மாலை வெம்பக் கோட்டை நீர்த்தேக்க வளாகத் திடலில் நடைபெற்ற விழாவில மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்துகொண்டு வெம்பக் கோட்டை நீர்த்தேக்கத்தினைத் திறந்து வைத்தாகள். அரசுத் துறைகளின் பல்வேறு திட்டப் பணிகளைத் துவக்கியும் வைத் தார்கள்.

**வெம்பக்கோட்டை நீர்தேக்கத் திட்டம்**

சாத்தூர் வட்டத்தில் வெம்பக் கோட்டை கிராமத்திற்கருகில்





வைப்பாற்றின் குறுக்கே இந்நீர்த் தேக்கம் அமைககப்பட்டுள்ளது. நீர்த்தேக்க அமைப்பிடம் வரை வைப்பாறு நதிப்படுகையில் கலிங் கலாறு, நகரையாறு, தேவியாறு, முதங்கியாறு, சேவல் பெரியாறு, ந்ச்சாபந்தி மற்றும் காயல்குடி யாறு என ஏழு துணை நதிகள் சேருகின்றன.

இத்துணை நதிகள் மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குச் சரிவில் உற்பத்தியாகின்றன. வைப்பாறும், காயல்குடியாறும் சேருமிடத்திற்குச் சற்று கீழே, இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட் டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 8100 ஏக்கர் புஞ்செய் நிலங்கள் புதிதாகப் பாசன வசதிபெறும். இதன் மூலம் 7900 டன் கூடுதல் உணவு உற்பத்தியாகுமென எதிர் பார்க்கப்படுகிறது.

மேலும் திருத்தங்கல் பகுதியில் நீர்ப்பாசன வசதியை மேம்படுத்த

வளம்பெறும் வானம்பார்த்தபூமி

ரூபாய் 63.5 இலட்சம் மதிப்பில் அர்ஜுனா நதியின் குறுக்கே அணை கட்டும பணிக்கு மாண்பு மிகு முதல்வர் அவர்கள அடிக்கல் நாட்டினார்கள்.

மேலதாயில்பட்டி, பாப்ப நாய்க்கன்பட்டி, நடையனேரி கூமாப்பட்டி ஆகிய கிராமங்களில் ரூ. 16.60 இலட்சம செலவில் கட்டப்படும் அரசு பள்ளிக்கட்ட டங்களுக்கும் ரூ. 18.95 இலட்சம் மதிப்பில் சித்துராஜபுரம, ஆசாரி காலனி, குசசநாயககன்பட்டி,



விளாம்பட்டி, வெம்பக்கோட்டை ஆகிய 5 கிராமங்களில் கட்டப்படவுள்ள குடிநீர்த்திட்டப்பணிக்கும், குன்னூரில் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ. 23.16 இலட்சம் மதிப்பீட்டில் பருத்தி விதை சுத்திகரிப்பு நிலையக் கட்டடத்திற்கும் அடிக்கல் நாட்டினார்கள்.

சிவகாசியில் ரூ. 14.86 இலட்சம் செலவிலான ஆதிதிராவிடர் மாணவியர் விடுதிக் கட்டடத்திற்கும், ரூ. 13.90 இலட்சம் செலவில் கிருஷ்ணன்கோயிலில் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கான தங்கும் விடுதிக் கட்டடத்திற்கும் அடிக்கல் நாட்டப்பட்டது.

உழவர் பெருமக்களின் நன்மையைக்கருதி திருவில்லிப்புத்தூரில் வேளாண்மைத் தகவல்தொடர்பு மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ரூபாய் 8 இலட்சம் செலவில் அமைக்கப்படும் இத்தகவல் தொடர்பு மையத்தின் மூலம் இப்பகுதியில் உள்ள சுமார் ஒரு இலட்சம் விவசாயிகள் பயன் பெறுவர். இப்புதிய வேளாண்மைத் தகவல் மையத்தின் மூலம் வேளாண்துறையின் ரின் புதிய பயிர் இரகங்கள் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்படும். இம்மையத்திற்கான அடிக்கல்லையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நாட்டினார்கள்.

வெம்பக்கோட்டை, சிவகாசி, இராசபாளையம், வத்திராயிருப்பு ஒன்றியங்களில் ரூ.62.01 இலட்சம் செலவில் கட்டப்பட்டிருக்கும் 689 ஆதிதிராவிட குடியிருப்புக்களையும் இதே பகுதிகளில் ரூ. 4 .36 இலட்சம் செலவில் கட்டப்பட்ட 14 சமுதாய மன்றங்களையும் துவக்கி வைத்தார்கள்.

வெம்பக்கோட்டை, சிவகாசி, இராசபாளையம் ஒன்றியங்களில் கட்டப்பட்ட ரூ. 3 இலட்சம் செலவிலான மூன்று தானியக் கிடங்குகளையும் வெம்பக்கோட்டை, சிவகாசி வத்திராயிருப்பு ஒன்றியங்களில் ரூ. 1.8 இலட்சம் செலவில் கட்டப்பட்ட 3 பள்ளிக்கட்டடங்களையும், சிவகாசி நகராட்சியில் ரூ. 3.20 இலட்சம் செலவில் கட்டப்பட்ட 3 நகராட்சி பள்ளிக் கட்டடங்களையும், ரூ.8.38 இலட்சம் மதிப்பில் சிவகாசியில் கட்டப்பட்ட அலுவல்புரியும் பெண்கள் தங்கும் விடுதியையும் திறந்துவைத்தார்கள்.

சிவகாசியில் ரூ. 4 இலட்சம் செலவில் கட்டப்பட்ட ஆய்வாளர் மாளிகையைத்திறந்தும், ரூ. 15 இலட்சம் செலவில் பேர்நாய்க்கன்பட்டி, வெற்றிலையூரணி, அனுப்பங்குளம் ஆகிய கிராமங்களில் கட்டப்பட்ட பாதுகாக்கப்பட்ட குடிநீர்த்திட்டங்களைத் துவக்கியும் வைத்தார்கள்.



## தமிழ்நாட்டில் முதலிடம்

1985-86 ஆம் ஆண்டுக்கான சிறுசேமிப்பு வசூலில் காமராஜர் மாவட்டம் தமிழ்நாட்டிலேயே முதலிடம் பெற்றுள்ளது. இதற்கான பரிசுக் கேடயத்தை காமராஜர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எல்.என். விஜயராகவன் இ.ஆ.ப அவர்களிடம் 30-12-86 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் வழங்கினார்கள்.

இப்புதிய மாவட்டம் உருவானதின் காரணமாக 1.4.86 முதல் 30.12.86 வரை இம்மாவட்டத்தில் 21,429 பேருக்கு வீட்டுமனைப்பட்டாக்களும், 675 பேருக்கு நிலப்பட்டாக்களும், 4308 பேருக்கு முதியோர் உதவித் தொகையும், உடல் ஊனமுற்றோர் 566 பேருக்கு உதவித் தொகையும், ஆதரவற்ற விதவைகள் 2834 பேருக்கு உதவித் தொகையும், கணவனால் கைவிடப்பட்ட 509 பெண்களுக்கு உதவித் தொகையும், ஆதரவற்ற விவசாயக் கூலிகள் 2330 பேருக்கு உதவித் தொகையும், 45 பேருக்கு தொழிலாளர் காப்புறுதித் திட்ட ஈட்டுத் தொகையும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டக் கடன் தொகையாக ரூபாய் 109.78 இலட்சமும், சுமார் 1,01,090 பள்ளிக்குழந்தைகளுக்கு இலவசமாகச் சீருடையும் வழங்கப்பட்டுள்ளன. சுமார் 9,13,571 பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 1,88,204 பேர் சத்துணவுத் திட்டத்தால் பயன் பெற்று வருகின்றனர். மேலும் சமூக நலத்துறை மூலம் நிறைவேற்றப்படும் அரசு நலத்திட்டங்களால் சுமார் 432 பேரும், பிற்பட்டோர் நலத்துறை மூலம் 448 பேரும், ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் 34 பேரும் பயன்பெற்றுள்ளனர்.

நீண்ட நெடுங்காலமாக வறட்சிக்கு இலக்காகி வந்த மண்ணில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவக்கி வைத்த திட்டங்களின், நலப்பணிகளின் காரணமாகத் தொழில் துறையிலும், வேளாண்மையிலும், பொருளாதாரத்திலும் மாவட்டமும் மக்களும் வளம் பெறுவது உறுதி.

''காமராஜர் மாவட்டம் என் சொந்த மாவட்டம். இந்த மாவட்ட மக்கள் அளித்த பேராதரவின் காரணமாகத்தான் நான் 1977ஆம் ஆண்டு முதலமைச்சரானேன்'' என்று நன்றிப்பெருக்குடன் சிறப்புரையாற்றிய மாண்புமிகு முதல்வர் அவர்களின் பார்வைபட்டதால் இம்மாவட்டம் மேலும் முன்னேறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

# புதுமைகள் மலர வழிவகுப்போம்!

பொறுமை என்னும் நிலத்தினிலே
பண்பு, அன்பு பயிரிடுவோம்
பொறாமை என்னும் களையெறிந்தே
பொதுநலப் பொங்கல் பொங்கிடுவோம்!

நெல்மணி எங்கும் குவிந்திடவே
நேர்த்தியாய் உற்பத்தி பெருக்கிடுவோம்
கண்மணி போல இருவரையே
கணக்காய்ப் பெற்று மகிழ்ந்திடுவோம்!

சிந்தனை மலர்கள் பூத்திடவே
செகமிசை அமைதி காத்திடுவோம்
வந்தனை சொல்லி உழவரையே
'வருக!' என்றே வரவேற்போம்!

இன்சுவை நல்கிடும் கரும்பினைப்போல்
இன்சொல் பேசியே மகிழ்ந்திடுவோம்
பன்னரும் நாட்டின் பெருமையினைப்
பாரெலாம் புகழ உழைத்திடுவோம்!

பெண்ணின் பெருமை ஓங்கிடவே
பேதம் இன்றிச் 'செயல்படுவோம்
மண்ணின் அருமை துலங்கிடவே
மனத்தில் ஒருமை கொண்டிடுவோம்!

மங்கல நாளாம் இந்நாளில்
மனைகள் செழிக்க வாழ்த்திடுவோம்
பொங்கலோ பொங்கல் எனமுழங்கி
புதுமைகள் மலர வழிவகுப்போம்!

பி.வி.கிரி



# மதுரகீதங்கள் தந்த மதுர பாஸ்கரதாஸ்



ஜெகவை பால்ராஜ்

**1921** ஆம் ஆண்டு அண்ணல் காந்தியடிகள் தமிழகத்தில் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்த சமயம். எங்கே சென்றாலும் மக்கள் கடலெனத் திரண்டு வந்து அண்ணலை வரவேற்றார்கள்.

செட்டிநாட்டுப் பகுதியில் சுற்றுப் பயணம் செய்து வந்த அண்ணல், அதனை முடித்துக் கொண்டு மதுரைக்கு வந்தார். மதுரை மாவட்டச் சுற்றுப் பயணத்தை முடித்துவிட்டு நெல்லை மாவட்டச் சுற்றுப் பயணத்தைத் தொடங்கினார்.

மதுரை ரயில் நிலையத்தில் ஒரு கவிஞர், ஓடிவந்து, அண்ணலை வணங்கி, அவருக்கு மாலை ஒன்றைச் சூட்டி, தான் எழுதிய பாடல்கள் அடங்கிய புத்தகம் ஒன்றை அவரிடம் கொடுத்துப் பெருமிதம் எய்தினார். புத்தகத்தைப் பெற்றுக் கொண்ட அண்ணல், உள்ளம் மகிழ்ந்தார். புத்தகத்தை எழுதிய அந்த ஆசிரியருக்கு நல்லாசிகள் வழங்கினார். ஆசிரியர் விடைபெற்றுச் சென்றார்.

அதன் பின்னர் அந்தப் புத்தகத்தைப் பிரித்துப் பார்த்த அண்ணல், அது தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளது என்பதை உணர்ந்தார். உடனே, தன்னுடன் சுற்றுப் பயணம் செய்த டாக்டர் ராஜன் அவர்களிடம், அந்தப் புத்தகத்தைக் கொடுத்து, ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொல்லுமாறு கேட்டுக் கொண்டார்.

'இந்து தேசாபிமான செந்தமிழ்த் திலகம்' என்ற அந்நூலில் உள்ள பாடல்களை டாக்டர் ராஜன் படித்துப் பார்த்தார்.

'கொக்குப் பறக்குதடி பாப்பா' என்றொரு பாடல்.

'ராஜி உடன்படிக்கை' என்றொரு பாடல்.

'தாழ்த்தப்பட்ட சோதரரைத் தாங்குவாருண்டோ' என்றொரு பாடல்.

'காந்தியோ பரம ஏழை சந்யாசி' என்றொரு பாடல்.

இப்படிப் பாடல் மணிகளின் தொகுப்பாக அந்தப் புத்தகம் திகழ்ந்தது.

**சுதந்தரப் போராட்ட காலத்தில் தமிழக நாடக மேடைகளில் பாடப்பட்ட விடுதலை இயக்கப் பாடல்கள் சிலவற்றையும், அவற்றைப் பாடிய பாடகர்களின் பெயர்களையும் 'தமிழரசு' 1.8.1986 இதழில் வெளியிட்டிருந்தோம். அந்தப் பாடல்களை எழுதிய கவிஞர் மதுர பாஸ்கரதாஸ் அவர்களைக் குறித்த செய்திகள் இங்கே இடம்பெறுகின்றன.**

'காந்தியோ பரம ஏழை சந்யாசி' என்ற பாடலைப் படித்து, அதனை அண்ணலுக்கு மொழி பெயர்த்துச் சொன்னார் டாக்டர் ராஜன்.



பாடலை எழுதிய கவிஞர், தன்னை மிகவும் பாராட்டியிருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டார் அண்ணல். சந்யாசி என்று தான் சொல்லப்படுவதை எண்ணியபோது அவருக்கே சிரிப்பு வந்துவிட்டது. பாடலை மிகவும் ரசித்தார்.

அண்ணல் ரசிக்கும் வகையிலே அவரைக் குறித்துப் பாடல் எழுதிய அந்தக் கவிஞர் தான் மதுர பாஸ்கரதாஸ் ஆவார். தேசிய இயக்கத்திற்கு எண்ணற்ற பாடல்களை எழுதி, மக்கள் நெஞ்சங்களில் நாட்டுப்பற்றை அவர் உருவாக்கியிருக்கிறார்.

தேசியக் கவிஞர் என்றும், முத்தமிழ் சேத்திர மதுரகவி என்றும் அழைக்கப்பட்ட அவர், மதுரை நகரில் 30-6-1892-ல் முத்துசாமித் தேவர், இருளாயி அம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். தமது 16வது வயதிலேயே பக்திப் பாடல்களையும் விடுதலை இயக்கப் பாடல்களையும் எழுதிப் புகழடைந்தார்.

அந்தக் காலத்து நாடக மேடையில் இவரது பாடல்கள் தான் ஒலித்தன; பொது மக்களுக்கு உற்சாகத்தை வழங்கின.

பக்தி ரசக் கீர்த்தனைகள் என்னும் நூலை 1915-ஆம் ஆண்டிலும், இந்து தேசாபிமான செந்தமிழத் திலகம் என்னும் நூலை 1921-ஆம் ஆண்டிலும் எழுதி வெளியிட்டார்.

தமிழ்த் திரைப்பட உலகில் முதல் முதல் வெளிவந்த பேசும் படம் காளிதாஸ் ஆகும். அந்தப் படத்தில் ஒலித்த பாடல்கள் பாஸ்கரதாஸ் எழுதியவை ஆகும். இந்த வகையில், முதல் திரைப்படப் பாடலாசிரியர் என்ற பெருமை அவருக்கு உண்டு. பின்னர் வெளிவந்த இராஜசேகரன், சகுந்தலை, போஜராஜன், தேவதாஸ், உஷா கல்யாணம், ராஜா தேசிங்கு, சந்திர

ஹாசன், ராதா கல்யாணம் ஆகிய திரைப்படங்களிலும் அவரது பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

எஸ். ஜி. கிட்டப்பா, எஸ்.எஸ் விஸ்வநாததாஸ், நாகசாமி பாகவதர், சொக்கலிங்கம், ஜாலி கிட்டு, எஸ். வி. சுப்பையா பாகவதர் போன்ற நாடக நடிகர்களும், கே. பி. சுந்தராம்பாள், எம். எஸ். சுப்புலட்சுமி, எம். எஸ். விஜயாள் போன்ற நடிகைகளும் மதுர பாஸ்கரதாஸ் அவர்களின் பாடலைப் பாடிப் புகழ் பெற்றார்கள். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், ஔவை தி.க. சண்முகம், கே. சாரங்கபாணி - ஆகியோர்களும் மதுர பாஸ்கரதாஸின் பாடலை விரும்பிப் பாடியிருக்கிறார்கள். இசைப் பேரறிஞர் அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் அவர்களும் இவரது பாடலைப் பாடியிருக்கிறார்.

5ஆம் உலகத் தமிழ்மாநாடு 1981-ல் மதுரையில் நடைபெற்றபோது பாஸ்கரதாஸ் நினைவு மலர் ஒன்றினை கே. எஸ். கருப்பையா என்ற தமிழ் அன்பர் வெளியிட்டார்.

பாஸ்கரதாஸ் எழுதி வெளியிடப்பட்டுள்ள 100-க்கு மேற்பட்ட இசைத்தட்டுகள், அவர் எழுதிய நாடகங்களின் கையெழுத்துப் பிரதிகள், புகைப் படங்கள், அவ்ரைப் பற்றி வெளிவந்துள்ள நூல்கள், இதழ்கள் ஆகியவற்றைச் சேகரித்து வைத்திருக்கிறார் திரு கருப்பையா.

மதுரையில் பெரியார் பேருந்து நிலையத்தின் அருகில் உருவாகியுள்ள திடீர் நகருக்கு 'பாஸ்கரதாஸ் நகர்' என்று பெயர் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கை நெடுநாளாக இருந்து வந்தது. அதனைத் தமிழக அரசு ஏற்றுக்கொண்டு, அண்மையில், கோரிக்கையை நிறைவேற்றியுள்ளது.

அந்தக் காலத்திலேயே பாஸ்கரதாஸ் தமது இல்லத்திற்கு 'தமிழகம்' என்று பெயர் சூட்டி மகிழ்ந்துள்ளார்.

விடுதலை இயக்க காலத்தில், வீறு கொள்ளும் வகையில் தமிழ்ப் பாடல்களை எழுதி, பொது மக்களின் உள்ளத்தில் விடுதலை வேட்கையை உருவாக்கிய பெருமை, மதுர பாஸ்கரதாஸுக்கு உண்டு; பாடலைப் பாடியவர்கள் மட்டுமல்ல-எழுதிய பாஸ்கரதாஸும் தமிழக மக்களால் எந்நாளும் நினைவு கூரத் தக்கவர்கள்.



# புரதம் தரும் பாதுகாப்பு

நம்முடைய நாட்டில் உணவு எல்லாருக்கும் கிடைக்கிறது. ஆனால் சத்துள்ள உணவு கிடைக்கிறதா? முக்கியமாகப் புரதச் சத்து நம்முடைய அன்றாட உணவில் இடம் பெறுகிறதா?

எண்ணெய் வித்துக்கள், மீன் போன்றவற்றிலிருந்து அதிகப் புரதச் சத்துணவைப பெற நாம் முயற்சி செய்தாக வேண்டும். நம்முடைய உணவுப் பழக்கத்தைக்கூட நாம் மாற்றிக் கொள்ள வேண்டும்.

புரதச்சத்துக் குறைவு நிரந்தரமான ஊனத்தையே நம் உடலில் ஏற்படுத்திவிடும். மூளை வளர்ச்சியைக் குன்ற வைக்கும். குழந்தைப் பருவத்தில் இந்தக் கோளாறு தோன்றிவிட்டால், பின்பு அதைப் போக்குவது கடினம். இந்த உண்மையை உணர்ந்திருப்பதால்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் குழந்தைகளுக்குப் பள்ளிகளில் இலவச சத்துணவு அளிக்கும் திட்டத்தைக் கொண்டுவந்தார். இந்தியாவில் இந்த வகையில் முன்னோடி முதல்வரானார் அவர்!

இந்தியாவில் 5 வயதுக்குட்பட்ட 10-15 கோடி குழந்தைகளில், தமிழகக் குழந்தைகள் மட்டுமே பேறு பெற்றவர்கள். அவர்களுக்குப் பள்ளிகளில் சத்துணவு இலவசமாகக் கிடைக்கிறது. மற்ற மாநிலக் குழந்தைகளில், வசதியுள்ளவர்களுக்கு ஓரளவு கிடைக்கிறது. ஏழைக் குழந்தைகளுக்கோ கொஞ்சமும் கிடைப்பதில்லை.

கர்ப்பிணி தாய்மார்களுக்குக் கட்டாயம் புரதச் சத்துணவு தேவை. கருவிலிருக்கும் குழந்தை பூரண வளர்ச்சி பெற்று, சுகப் பிரசவம் ஏற்பட இது மிகவும் அவசியம். குழந்தை பிறந்து பால் குடிக்கும்பொழுது அது தாய்ப் பாலிலிருந்து தனக்குத் தேவையான புரதச் சத்தைப்பெறுகிறது. ஆறு மாதம் ஆனதும், குழந்தைக்குப் புரதச் சத்து நிறைந்திட உணவைக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் குழந்தை திடகாத்திரமாக வளரும்.

புரதச் சத்து சரியான அளவில் கிடைத்து வளரும் குழந்தை, நினைவாற்றல் உள்ளதாகவும், படிப்பில் கெட்டியாகவும் வேலையானாலும் விளையாட்டானாலும் அதில் சுறுசுறுப்புள்ளதாகவும் மிளிரும்.

பால், நிலக்கடலை, கோதுமை, சோயா போன்றவற்றில் புரதம் இருக்கிறது. இந்தப் பொருள்களைக் கலந்து பலவகைப் புரத பிஸ்கட்டுகள் இப்பொழுது கடைகளில் கிடைக்கின்றன. குழந்தைகளும் சரி, பெரியவர்களும் சரி உணவோடு கூட இப்படிப்பட்ட தின்பண்டங்களையும் பயன்படுத்தலாம்.

நம் உடம்புக்குச் சக்தி கிடைக்கவும், உடம்பு தனது தேய்மானத்தை ஈடு செய்து கொள்ளவும், ஆரோக்கிய வாழ்வு நடத்தவும் நம்முடைய அன்றாட உணவில் புரதம், வைட்டமின், கனிமம் ஆகியவை இடம் பெற்றிருக்க வேண்டும். இதையே நாம் சமன உணவு என்கிறோம்.

—மு. முத்துக்காளத்தி






# முதல்வர் தொடங்கிய

# முத்தான திட்டங்கள்

நலிந்தோர்க்கு நலம் பயக்கும் நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், பின் தங்கிய பகுதிகளின் வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்துவதிலும் தமிழ்நாடு அரசு மறறைய மாநிலங்களுக்குமுன்னோடியாய்த் திகழ்கிறது. அதற்கொரு எடுததுக்காட்டாய் 1986 டிசம்பா இறுதியிலிருந்து புத்தாண்டின் முதல் வாரம் வரை மாண்புமிகு முதல்வர் அவர்கள் காமராஜா மாவட்டத்திலும், மதுரை மாவட்டத்திலும பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு திட்டப் பணிகளைத் துவக்கி வைத்ததைக் கூறலாம்.

மதுரை மாவட்டத்தில் 31.12.86 அன்று ஆண்டிப்பட்டியிலும் 1.1.87 அன்று கணடமனூரிலும் 2.1.87 அன்று சின்னமனூா ஒன்றியம் ஓடைப்பட்டி கிராமத்திலும் நடைபெற்ற விழாக்களில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்துகொண்டு அரசின் பல்வேறு பணிகளைத் துவக்கி வைததார். பல பணிகளுக்கு அடிக்கறகளும் நாட்டினார். இப்பகுதிகளில் மேலும் பல புதிய திட்டங்களைத் துவக்கவும் ஆணையிட்டார்.

தமது சொந்தத் தொகுதியான ஆண்டிப்பட்டியிலுள்ள, அம்மச்சியாபுரம், பந்தூாபட்டி, கோவில்பட்டி, ரோசனப்பட்டி, தெப்பம்பட்டி சித்தார்பட்டி ஆகிய கிராமங்களில் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்குத் தேசிய ஊரகக் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட 135 வீடுகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். ரூ. 12.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்டவை இவ்வீடுகள்.

குன்னூர், கோவில்பட்டி, மணியாரம்பட்டி, சித்தார்பட்டி ஆகிய கிராமங்களில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத் திட்டத்தின் கீழ் ரூ 7 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட 132 வீடுகளையும் திறந்து வைத்தார்.

ரூ 1 இலட்சத்து 96 ஆயிரம் செலவில் எத்தாகோவில், மல்லயபுரம், ரெக்கரைப்பட்டி, தொப்பம்பட்டி, கதிர்நரசிங்கபுரம், மெய்க்கிலார்பட்டி, மொட்டனுத்து, பந்துவார்பட்டி ஆகிய கிராமங்களில் கட்டப்பட்ட சத்துணவு மையங்களைத் திறந்து வைத்தார்.

ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றிய வளாகத்தில் ரூ 1 இலட்சம் செலவில் கட்டப்பட்ட அரிசி கிட்டங்கியையும் ரூ. 1 இலட்சத்து 50 ஆயிரம் செலவிலான கன்னியப்பபிள்ளை உயர்நிலைப் பள்ளி கூடுதல் கட்டடத்தையும் அரசு அலுவலர்க்குச் சலுகை வாடகையிலான 72 வீடுகளையும் ரூ 4 இலட்சத்து 69 ஆயிரம் செலவிலான பொம்மநாயக்கன்பட்டி மேல்நிலைத் தொட்டியையும் திறந்துவைத்தார்.

ரூ. 9 கோடியே 35 இலட்சம் மதிப்பீட்டில் வைகை அணைக்கட்டில் புதிய மின் உற்பத்தி நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார். நீா மின் திட்டப்பணி 1988ல் முடிவடையும். இத்திட்டம் நிறைவுபெற்ற உடன் அதன் மூலம் கிடைக்கும் மின்சாரம் ஆண்டிப்பட்டி முழுவதற்கும் போதுமானதாக இருக்கும்.

ரூபாய் 8 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பீட்டில் ஆணடிப்பட்டி இராஜதானி அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடம் ஆகியவறறிற்கு அடிக்கல்லும் நாட்டப்பட்டது.

**புதிய அறிவிப்புகள்**

ஆண்டிப்பட்டி தொகுதி மேலும் வளர்ச்சி பெற ஆண்டிப்பட்டி தனிவட்டமாக அமைக்கப்



படும் என்று முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

மேலும் ஆதிதிராவிடர்களுக்கு ரூ 2 கோடியே 25 இலட்சம்செலவில் மொத்தம் 3750 வீடுகள், தெப்பம்பட்டி அருகே ரூ 1 கோடியே 60 இலடசத்தில் புதிய கண்மாய் அமைக்கும் திட்டம், ரூ 1 கோடியே 18 இலட்சம் செலவில் ஜமபுலிபுத்தூர், பாலக் கோம்பை ஆகிய பகுதிகளில் புதிய கண்மாய் அமைக்கும் திட்டம், ஆண்டிப்பட்டியில் ரூ 8 இலட்சம் செலவில் புதிய காவல் நிலையம் மற்றும் குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஆகிய புதிய திட்டங்களை அறிவித்து அவை விரைவில் செயல்படுத்தப்படும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாவில் தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழ் நாட்டில் கள், சாராயக் கடைகள் மூடப்படுவதால் பாதிக்கப்படும்; தொழிலாளர்க்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரும் வகையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 2,000 வழங்க ஆணையிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

புத்தாண்டின் முதல்நாளன்று கண்டமனூரில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடமலைக்குண்டு -மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் அரசின் பல்வேறு துறைகளால் செய்து முடிக்கப்பட்ட பணிகளைத் துவக்கியதோடு, இனி துவக்கப்பட இருக்கும் பணிகளுக்கு அடிக்கல்லும் நாட்டினார்.

ஆதிதிராவிடர் குடும்பங்களுக்குக் கடமலைககுண்டு, மேலப்பட்டி, மத்தளமபாறை, தங்கம் மாளபுரம, பாலூத்து ஆகிய கிராமஙகளில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத திட்டம், மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித திட்டத்தின்கீழ் கட்டிமுடிககபபட்ட 115 வீடுகளையும, ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேமபாட்டுக் கழகத்தின்









சாபில் கண்டமனூர், துரைசாமி புரம், ராஜேநதிரநகர் ஆகிய கிராமங்களில் கட்டிமுடிக்கப் பட்ட 76 வீடுகளையும் தறந்து வைத்தார். ரூ. 15 இலட்சம் செலவ்ல் கட்டிமுடிக்கப்பட்டவை இவ்வீடுகள்.

ரூ 96 ஆயிரம் செலவிலான பொன்னம்படுகை ஊராட்சி ஒன் றியப் பள்ளிக் கட்டடம், கூரை யூத்தில் ரூ 1 இலட்சம் செலவில் கட்டப்பட்ட மேல் நிலைத் தொட்டி, ரூ 1 இலட்சதது 54 ஆயிரம் செலவிலான கடமலைக் குண்டு கால்நடை மருத்துவநிலை யம், நரியூத்து, ஆத்தங்கரைப் பட்டியில் ரூ 84 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட மாண்புமிகு முத லமைச்சர் சத்துணவு மையங்கள் இரண்டையும், அண்ணா கூட் டுறவு நூற்பாலையில் பணியாற் றும் இலங்கை அகதிகளுக்கென ரூ 21 இலட்சத்து 40 ஆயிரம் செலவில் கட்டிமுடிக்கப்பட்ட 214 வீடுகளையும் திறந்து வைத் தார்.

தொட்டப்ப நாயக்கனூரில் ரூ 27 இலட்சம் செலவில் நிறுவப் பட்டுள்ள விசைத்தறிக் கூடத்தை திறந்துவைத்தார். இவ்விசைத் தறிக் கூடத்தில் 48 தறிகள் நிறு வப்பட்டுள்ளன.

ரூ 1 கோடியே 2 இலட்சத்து 63 ஆயிரம் செலவிலான மயிலா டும் பாறை மற்றும் 9 கிராமங் களுக்கான கூட்டுக் குடிநீர்த்திட் டம, குமணன்தொழு மற்றும் 10கிராமங்களுக்கான கூட்டுக் குடி நீர்த்திட்டம், ராயர்கோட்டை மற்றும் 5 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த்திட்டம், சிங்க ராஜபுரம் குடிநீர்த்திட்டம் ஆகிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி னார்.

**புதிய அறிவிப்புகள்**

ரூ 4½ கோடி செலவில் திப்ப ரேவ அணைக்கட்டுத் திட்டம், கடமலைக்குண்டு, மயிலாடும் பாறை ஊராட்சி ஒன்றியங்களில் ரூ 62 இலட்சம் செலவில் வளர்ச்சிப் பணிகள் ஆண்டிப் பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் ரூ 63 இலட்சம் செலவில் வளர்ச் சிப் பணித்திட்டங்கள், ரூ. 23 இலட்சம் செலவில் கடமலைக் குண்டு மற்றும் மயிலாடும்பாறை ஒன்றியக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் ரூ. 17 இலட்சம் செலவில் ருத்துராயர் பெருமாள் கண்மாய்த் திட்டம் ஆகிய பணி களை மேற்கொள்ள மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட் டார்.

சின்னமனூர் ஊராட்சி ஒன்றி யம் ஓடைப்பட்டியில் 2.1.87 அன்று ரூ. 7 கோடியே 15 இலட் சத்து 40 ஆயிரம் செலவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு நலத்திட்டங்களைத் துவக்கி வைத்தார.

உத்தமபாளையம் வட்டம் ராயப்பன்பட்டி கிராமம் அருகே சண்முகா நதி நீர்த்தேக்கம கட் டப்படுகிறது. இதற்கு முதல்வர் அவர்கள் அடிககல் நாட்டினார். ரூ 6 கோடியே 95 இலட்சம் செல





வில் இந்த அணை கட்டப்படுகிறது. இதனால் 8 கிராமங்கள் பயனடையும். 1640 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுவதால் 1,568 டன் கூடுதல் உணவு உற்பத்தி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அணை கட்டும் பணி 4 ஆண்டுகளில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் 3 ஆண்டுக்குள நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேனி ஊராட்சி ஒன்றியத்தைச் சோந்த சுக்குவாடன்பட்டி, லட்சுமிபுரம், தாடிச்சேரி, கோபாலபுரம், காட்டுநாய்க்கன்பட்டி ஆகிய கிராமங்களில் ரூ. 12 இலட்சத்து 60 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட 140 வீடுகளையும் பழனிசெட்டிப் பட்டி மற்றும் சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த எழுவனம்பட்டி, புளிகுட்டி ஆகிய கிராமங்களில் ரூ.1 இலட்சதது 8 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட 3 சமுதாயக் கூடங்களையும் திறந்து வைத்தார்.

ஓடைப்பட்டியில் ரூ 1 இலட்சத்து 40 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட பேரூராட்சி அலுவலகம், ஓஞ்சான்பட்டி, தாடிச்சேரி, கோவிந்த நகரம் ஆகிய கிராமங்களில் ரூ 75 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட 3 தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டிகளையும் ஓடைப்பட்டி பேரூராட்சியில் ரூ 2 இலட்சத்து 7 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட வேளாண்மை அலுவலர் குடியிருப்பு மற்றும் கிராம விரிவாக்க அலுவலர் குடியிருப்புகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

ஓடைப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ 2 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் கட்டி முடிக்கப்பட்ட புதிய வகுப்பு அறை மற்றும் அறிவியல் பகுதி கட்டடத்தையும் திறந்து வைத்தார்.



மதுரைமாவட்டத்தில் நிகழ்ந்த இவ்விழாக்களில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்டங்களைத் துவக்கிவைத்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

''உங்களை இந்த விழாவில் காண்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இப்போது புதிய தெம்பும் உற்சாகமும் பெற்றிருக்கிறேன. நான் உங்களில் ஒருவன. நான் உங்கள் வீட்டுப்பிள்ளை. உங்களுக்காக உழைப்பவன். நான் உங்களைப் பாதுகாப்பதில் காவல்காரன். உங்கள் முன்னேற்றமே என் மூச்சு. என்னுடைய உயிர், உடல அனைத்தையுமே உங்கள் வளர்ச்சிக்காக அர்ப்பணித்திருக்கிறேன்.

''மக்கள் என்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். மக்களையும் என்னையும் எவராலும் பிரிக்க முடியாது. மக்களுக்காக நான் செய்யும் வளர்ச்சிப்பணிகளை யாரும் எந்த வழியிலும் தடுக்க முடியாது. நாட்டில அமைதியைக் கட்டிக்காப்போம். வன்முறையையும் பயங்கரவாதத்தையும் ஒழிபபோம்.

''நான் உருவாக்கும் இந்த வளர்ச்சித் திட்டங்கள் உங்களுக்கு முழு பலனளிக்க வேண்டும். இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முறைகேடுகள் இருந்தால் சொல்லுங்கள். அவர்கள் யாராக இருந்தாலும் கண்டிப்பாகத் தண்டிக்கப்படுவார்கள்.

மக்களின் உள்ளமே தமது இல்லமெனக் கொண்ட மக்களாட்சி முதல்வரின் பரிவுணர்வால் வறண்டு கிடந்த பாலை நிலங்களெல்லாம் வளம் பெறத் துவங்கிவிட்டன. சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டோரெல்லாம் முன்னேற்றம் பெறுகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவுகளெல்லாம் நனவாகின்றன.

கடமை முயற்சி தன்னம்பிக்கை முயற்சி தன்னம்பிக்கை கடமை தன்னம்பிக்கை

# நன்மொழி கேளீர்!



உன் கடமையைச் செய்ய முயல்க; அப்பொழுதுதான் உன் தகுதியை உடனே அறிந்து கொள்வாய்

—கதே

நல்லவனும் ஞானியும் சில சமயங்களில் உலகத்தைக் கோபிக்கலாம். சில சமயங்களில் அதற்காக வருந்தலாம். ஆனால் உலகில் தன் கடமையைச் செய்பவன் எவனும் அதனிடம் ஒரு பொழுதும் அதிருப்தி கொள்வதில்லை என்பது மட்டும் உறுதி.

—ஸதே

உலக அரங்கில், இன்ன வேடங்களில்தான் நடிப்போம் என்று கூற இயலாது. கொடுத்த பணிகளைத் திறம்படச் செய்து முடிப்பதே நமது கடமை.

—எபிக்டெட்டஸ்

அறமே ஆற்றல் என்று நம்புவோமாக. அந்த நம்பிக்கையுடன் நாம் அறிந்த கடமையை ஆற்றத் துணிவோமாக.

—ஆப்ரகாம்லிங்கன்

தன்னுடைய ஆற்றலைப் பயன் படுத்துவதில் மகிழ்ச்சியைக் காணாதவன, மகிழ்ச்சி காணப் போவதேயில்லை.

—கதே

இன்று உன்னால் கூடியமட்டும் நன்றாய்ச் செய். நாளை அதனினும் நன்றாய்ச் செய்யும் ஆற்றலை நீ பெறக்கூடும்.

—நியூட்டன்

பிறருக்கு நான் செய்ய வேண்டிய கடமை யாது? பிறரை நல்லவராக்குவதா? நான் ஒருவனைத்தான் நல்லவனாக்க வேண்டும். அவன் நானே. பிறர்க்கு மகிழ்ச்சி அளிப்பதே நான் செய்யக்கூடிய கடமையாகும்.

—ஆர். எல். ஸ்டீபென்சன்

வெற்றி கிடைக்கும் என்று உறுதியாக நம்புகிறவனுக்கு வெற்றி கிடைக்கவே செய்யும்.

—லிவி

எதுவும் தாமாக வருவதில்லை, ஏதேனும் வந்தாலும நல்லவை எதுவும் தாமாக வருவதில்லை; எல்லாவற்றையும் தேடியாக வேண்டும்.

—பக்ஸ்டன்

நான் என்ன செய்ய வேண்டும் என்பதே என் வேலை. என்னைப் பற்றிப் பிறர் என்ன நினைக்கிறார்கள்-என்பதன்று.

—எமர்ஸன்

சோம்பேறி இரண்டு முட்களும் இல்லாத கடிகாரம் மாதிரி. அது நின்றாலும் ஓடினாலும் உபயோகமில்லை.

—கௌப்பர்

தன்னம்பிக்கையே பெருந் தன்மையின் பிரதான செவிலித் தாய்.

—ஸர். பி. ஸிட்னி

நீ, நீயாக இருக்க உறுதி செய்து கொள் தன்னுடைய ஆற்றலை உணர்ந்தவன் தன்னுடைய துன்பத்தை இழந்தவன்.

—ஆர்னால்ட்

புல்லைப் போலப் பிழைகள் மிதக்கும்; முத்து வேண்டுவோர் மூழ்கியே எடுப்பர்.

—ட்ரைடன்

மனித இனம் கடன்பட்டிருப்பது முளைக்கன்று; முயற்சிக்கே! கடவுள் வரங்களை விற்கவே செய்கிறார். முயற்சியே அவற்றின் விலை.

—அடிஸன்

எதுதேவை? தீர்மானிக்க மனம்; வழி வகுக்க அறிவு; செய்து முடிக்கக் கை.

—கிப்பன்

ஒரு பிழையும் செய்யாதவர் உண்டு. அதற்குக் காரணம், அவர் செய்யத் தகுந்ததைச் செய்ய முயலாததே.

—கதே

ஒவ்வொரு பறவைக்கும் கடவுளே உணவு அளிக்கிறார். ஆனால், அதை அவர் அதன் கூட்டிற்குள் போடுவதில்லை.

—ஹாலண்ட்

மனிதனைக் கொல்வது வேலையன்று; வீண்கவலையே. இயந்திரம் சுற்றுவதால் அல்ல, உராய்வதாலேயே தேய்கிறது.

—பீச்சர்

மனிதன் தன் செல்வத்தையும் அறிவதில்லை. தன் ஆற்றலையும் அறிவதில்லை. செல்வத்தை அளவுக்கு மிஞ்சி மதிக்கின்றான். ஆற்றலை அளவுக்குக் குறைத்து மதிக்கிறான்.

—பேக்கன்

தொகுப்பு : மாமூலன்

கடமை முயற்சி முயற்சி தன்னம்பிக்கை கடமை தன்னம்பிக்கை கடமை முயற்சி

# The Whole World Watches While a New Technology Emerges



All eyes are on TNPL. As it turns to bagasse. The first attempt ever. Replacing the conventional raw materials. Reducing pressure on forest resources.



Rs. 40 Crores of Foreign Exchange will be saved annually through reduced imports. And the success of this venture will usher in several such projects, giving a tremendous boost to our economy.

# TNPL

*TNPL – Meeting the challenges......... effectively.*

TNPL

**TAMIL NADU NEWSPRINT AND PAPERS LIMITED**
(A Government of Tamil Nadu Enterprise)
16, Whites Road, Madras 600 014.

ARIES/DIPR

# கன்னியாகுமரி மாவட்ட
# கூட்டுறவு நூற்பு ஆலை லிட்.,

**நிர். ஒய். 238**

**ஆரல்வாய்மொழி - 629 301**

**தந்தி: "கன்பாஸ்பின்"** **தொலைபேசி எண். 24 & 26**

ஆண்டு ஒன்றுக்கு சராசரி விற்பனை.... சுமார் ரூ. 7 கோடி

**திரு சு. பொன்னுசாமி, பி.ஏ.,**
நிர்வாக இயக்குநர்

**திரு எஸ். முனீர்ஹோதா, இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சித் தலைவர் / தலைவர்

*With best compliments from :*

**TAN TEA**

**A Government of Tamil Nadu Undertaking**

## FROM ASIA'S LARGEST GLONAL TEA GARDEN

*TAN TEA - is byword for - Quality Tea*
*Quality to be way of life*
*Quality that keeps ahead of time*
*Have a Nice Day with a sip of Tan Tea*
*-The Quality Tea*

*It is the satisfaction that counts !!*

TANTEA

**CHAIRMAN CUM MANAGING DIRECTOR**
Tamil Nadu Tea Plantation Corporation
COONOOR - NILGIRIS



வெண்மைப் புரட்சியில்
சாதனை படைத்திடும்
மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள்
கூட்டுறவு ஒன்றியத்தின்

# பொங்கல் நல் வாழ்த்துக்கள்

## தமிழர் நலங்காக்கும் ஆவின்

தைத் திங்கள் முதல்நாளாம்
தமிழர் திருநாளில்
ஆவின் நெய் மணக்க,
ஆவின் பால் பொங்கலிட
ஆவின் சுவை வாழ்த்துக்கள்...

மதுரை மாவட்ட
பால் உற்பத்தியாளர்கள்
கூட்டுறவு ஒன்றியம்
மதுரை - 625 020.



சோ. நவநீதகிருஷ்ணன்
பெருந்தலைவர்





க. ஆதிமூலம், பி.இ.,
நிர்வாக இயக்குநர்



# திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சாதனை படைத்திடும்



# ஊரக வளர்ச்சித் திட்டங்கள்

## 1 ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

| | |
|---|---|
| பயனடைந்துள்ள குடும்பங்கள் | 160764 |
| ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் | 98090 |
| பயனடைந்த பெண்கள் | 38405 |
| வழங்கப்பட்டுள்ள கடன் | ரூ. 3923 இலட்சம் |
| மான்யத் தொகை | ரூ. 1420 இலட்சம் |
| 1986-87-க்கான நிதி ஒதுக்கீடு | ரூ. 311.24 .. |
| பயனடையும் குடும்பங்கள் | 19521 |

## 2 சிறு விவசாயிகளுக்கு பெருமளவில் உதவும் நலத்திட்டம்

பாசன வசதியைப் பெருக்கிக் கொள்ள சிறுபாசன திட்டங்கள்

| | |
|---|---|
| பயனடைந்த குடும்பங்கள் | 13995 |
| நிலமேம்பாடு மூலம் பயனடைந்த குடும்பங்கள் | 3063 |
| வழங்கப்பட்டுள்ள கடன் தொகை | ரூ.892 இலட்சம். |
| அரசு மான்யம் | ரூ.268 இலட்சம். |
| 1986-87ல் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மான்யம் | ரூ.145 இலட்சம். |
| பயனடையும் விவசாயக் குடும்பங்கள் | 10491 |

## 3 ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டம்

சாலைகள் அமைத்தல், சிறுபாசன வேலைகள், கசிவு நீர்க்குட்டைகள் அமைத்தல், 3 ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல், சுகாதார கழிப்பிடம் அமைத்தல் போன்ற 5554 பணிகள் ரூ. 12.38 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. 446 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

நடப்பாண்டில் ரூ. 210 இலட்சம் செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 4 தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் சமூக நலக்காடுகள் அமைத்தல், கிராமக் குளங்கள் அமைத்தல், சிறுபாசன வேலைகள், குடிநீர்க் கிணறுகள் அமைத்தல், ஊரகப் பகுதியில் சாலைகள் அமைத்தல், மேம்பாடு செய்தல், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், சமுதாய மன்றக் கட்டடங்கள் கட்டுதல், அரிசி மற்றும் சிமெண்ட் கிடங்கு, சமயலறை கொட்டகை, ஆதிதிராவிடர்கள் / மலைவாழ் மக்களுக்கு தொகுதி வீடுகள் கட்டுதல், சுகாதார கழிப்பிடங்கள் கட்டுதல் போன்ற 30974 வேலைகள் ரூ. 21.40 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. மற்றும் 439 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

1986-87 நிதி .ஒதுக்கீடு ரூ.379.43 இலட்சம்.

## 5 கிராமப்புறங்களில் வாழும் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டம்

3000 பெண்களுக்கு நடப்பாண்டில் குடும்ப வருமானம் பெருகிட நலத்திட்ட உதவிகள்: வங்கிக் கடன் ரூ. 180 இலட்சம் மற்றும் ரூ. 60 லட்சம் அரசு மான்யமாக வழங்கப்படும். 12 ஊராட்சி ஒன்றியங்களில் இப்பெண்கள் 150 குழுக்களாக அமைக்கப்பட்டு பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்கள் நடப்பாண்டில் நிறைவேற்றப் படும்.

இரா. சுப்பராமன், பி.ஏ.,
இணை இயக்குநர் / திட்ட அலுவலர்,
மாவட்ட அரசு வளர்ச்சி முகமை,
திருச்சிராப்பள்ளி.

வ. விஸ்வநாதன், இ ஆ. ப.
மாவட்ட ஆட்சித் தலைவர்
மற்றும் பெருந்தலைவர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
திருச்சிராப்பள்ளி.





# மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
# கன்னியாகுமரி (இருப்பு)

## நாகர்கோவில்

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்வோரின் வளமான வாழ்விற்கும், கிராம முன்னேற்றத்திற்கும் அரசு வழங்கிடும் வளர்ச்சிப் பணிகளின் நலனை எய்திட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினால் செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு ஆதரவு தர வேண்டுகிறோம்.

**அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்**
**(மானியத்துடன் கடன் வசதி அளித்து சுயவேலை செய்வதை ஊக்குவித்தல்)**

**ஆ) தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்**

**இ) தேசிய ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித்திட்டம்.**

இவ்விரு திட்டங்களினால் ஆதிதிராவிட மற்றும் மலை ஜாதியினருக்கு குடியிருப்பு வீடுகள் முழுமானியமாக கட்டிக் கொடுக்கப்படுகின்றன. பல்வேறு சமுதாய நலப்பணிகள் மேற்கொண்டு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

**ஈ) வேளாண்மை உற்பத்திப் பெருக்குத் திட்டம்.**

இத்திட்டம் விவசாய உற்பத்தியைப் பெருக்கிட சிறு மற்றும் குறுவிவசாயிகளுக்கு நிலச்சீர்திருத்தம் மற்றும் சிறுபாசன வசதிகளுக்கு மானியத்துடன் கடன் வசதி அளிக்கிறது.

**அ. கு. கருவேலம், பி.ஏ.,**
திட்ட அலுவலர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம்,
கன்னியாகுமரி மாவட்டம்,
நாகர்கோவில்.

**எஸ். முனீர்ஹோதா, இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சித்தலைவர்
மற்றும் பெருந்தலைவர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம்
கன்னியாகுமரி மாவட்டம்,
நாகர்கோவில்.

**ஜே.ஜே.எல். ஞானராஜ்**
தலைவர்
தமிழ்நாடு வர்த்தகக் கழகம்

தொலைபேசி
அலுவலகம் : 33114
26161
இல்லம் : 29801
: 33112



தமிழரசு பொங்கல் மலருக்கு எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள் !

**அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்!**

ஜே.ஜே.எல். ஞானராஜ்
தலைவர்
தமிழ்நாடு வர்த்தகக் கழகம், திருச்சி.

Telex : 0855-210 SIV-IN
Telegrams : 'VISCOSE' Coimbatore
Telephone : 37761 (4 lines) and 34551

# SOUTH INDIA VISCOSE LIMITED

**Registered Office: Post Box No. 3780 Rose Bed 334, Avanashi Road,**

**Coimbatore-641018—India**

*Manufacturers of Best Quality*
**WOOD PULP,**

**RAYON YARN -**
**STAPLE FIBRE &**

**POLYNOSIC STAPLE FIBRB**

*Factory :* **Sirumugai, Coimbatore District** *Grams :* **VISCOSE Sirumugai**

Phone ; 2061 (4 lines) Mettupalayam

தமிழர் திருநாளாம் இப் பொங்கல் திருநாளில்
அனைவருக்கும் எங்களது நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.



இங்ஙனம்

**கோவை தாலுக்கா**

**பஸ் உரிமையாளர்கள் சங்கம்,**

806, அவினாசி சாலை,
கோயமுத்தூர்.

WITH BEST COMPLIMENTS FROM

# NIZAM
# Paper and Board Mills Limited

**POST BOX NO: 56**

Old Palace Buildings

PUDUKKOTTAI-622 001

**PHONE NO: 2890**

**Manufacturers of:**

**Quality Papers**

FACTORY AT:

PULLANVIDUTHI - 622 304

Alankudi Taluk : ; Pudukkottai District

PHONE: **43 & 52** (VADAKADU EXCHANGE)



## காண்போமே!

கன்னியாகுமரி அருள்மிகு பகவதியம்மனுக்கு....

**தங்க ரதம்**

நாகர்கோவில் அருள்மிகு நாகராஜாவிற்கு....

**நாகாபரணம்**

சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலய மூர்த்திக்கு....

**தங்கக் கவசம்**

குமாரகோயில் அருள்மிகு சுப்ரமணியசுவாமிக்கு....

**தங்கக் கொடிமரம்**

இவை அத்தனையும் .... ''பொன்மனச் செம்மல்''

டாக்டர் எம். ஜி. ஆர்

ஆட்சியிலே



இவண்,

ஈ. பிச்சையா, பி.ஏ.,
உதவி ஆணையர்-செயல் அலுவலர்

டாக்டர் எஸ். நாகராஜன்,
M.B.B.S., D.C.H., F.I.C.A. (U.S.A.)
தக்கார்

## குமரி மாவட்ட
## இணைக்கப்பட்ட, மற்றும்
## இணைக்கப்படாத திருக்கோயில்கள்
## சுசீந்திரம்

# ஏற்றமிக்கதோர் எதிர்காலத்தின் அஸ்திவாரமாக 80-கோடித் திட்டமொன்று...



நாட்டின் மேக்னசைட் தேவையில் மூன்றில் ஒருபங்கு தயாரிக்கும் நிறுவனத்தின்சீரிய சேவை.

1979ம் ஆண்டில், தமிழக அரசின் நிறுவனமாகத் துவங்கிய, தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட், இன்று நமது நாட்டின் மேக்னசைட் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது.

தரச்சிறப்பான மேக்னசைட் தயாரிப்பாளரின் மற்றோர் அரிய முயற்சியே இந்த 80 கோடித் திட்டமாகும். இதன் மூலம் உலகத் தரக்கட்டுப்பாடுகளுக்கிணையான மேக்னசைட்டை அளித்து, இறக்குமதியைக் குறைத்து, அந்நியச் செலவாணியை மிச்சப்படுத்த உதவுகிறது தமிழ்நாடு மேக்னசைட்.

அதோடு கிராமப்புற வேலை வாய்ப்புகள் பெருகவும் வழிகோலுகிறது.

எஃகு தொழிற்சாலைகளுக்கான ரிஃப்ராக்டரி செங்கல்களுக்கு முக்கியமாக உபயோகமாகும் இந்த மேக்னசைட், கால்நடைத் தீவனம், இரசாயன உரம், இரயில்வே, மற்றும் மொசைக் தரைத்தளங்களுக்கும் அத்தியவாசியமானதாகும்.

தற்போது, மாதாமாதம் 10,000 மெட்ரிக் டன்கள் மேக்னசைட்டை உற்பத்திசெய்யும் தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட், எதிர்காலத்தில் ஏற்றமிக்க பல உற்பத்தி இலட்சியங்களில் வெற்றி வாகை சூடத் தயாராகிவிட்டது.

TANMAG

**தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்.**
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
5/53, ஓமலூர் மெயின் ரோடு,
ஜாகிர் அம்மாபாளையம் சேலம்-636 302

# செங்கோட்டை ஊராட்சி ஒன்றியம்
## தச்சு கொல்லுப்பட்டறை

செங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் செங்கோட்டை நவீன மரப்பொம்மை உற்பத்தி நிலையத்திலும் ஆய்க்குடி தச்சு, கொல்லு நிலையத்திலும் கடந்த 20 வருடங்களாக நல்ல தரமுள்ள விளையாட்டுச்சாமான்கள் மற்றும் வீடுகள், பங்களாக்களுக்கு வேண்டிய மரச்சாமான்கள் குறிப்பிட்ட நேரத்தில் தரமுள்ளதாகச்செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மேற்படி தேவைகளுக்கு அலுவலகத்தை அணுகவும்.

**என். பண்டாரம்,**
பெருந்தலைவர்.

**எம். பத்மநாபன், பி.காம்.,**
ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
செங்கோட்டை.

---

**தஞ்சாவூர் இசைக்கருவிகள் செய்வோர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம் லிட்., T. 1270**

16, தெற்கு ராஜ வீதி — தஞ்சாவூர் 613 009
தொலைபேசி எண். 20213.

(தரமான கர்னாடக இசைக்கருவிகள் உற்பத்தி மற்றும் விற்பனையாளர்கள்)

நல்ல பலாமரத்திலான வீணைகள் மற்றும் தம்புரா, மிருதங்கம், கோட்டு வாத்தியம், தபேலா செட்டு, வயலின், கிட்டார், ஹார்மோனியம், சுருதிப்பெட்டி, முகர்சங்கு முதலியவை கிடைக்கும்.

இசைக்கருவிகள் குறித்த நேரத்தில் பழுது பார்த்துத் தரப்படும்.

திரு G. வெங்கட்ராமன், பி.ஏ.,
தலைவர்.

திரு ப. சண்முகம், பி.எஸ்ஸி.,
I.C.O. செயலர்

(தமிழ்நாடு அரசு தொழில் வணிகத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது)

---

ஊராட்சி ஒன்றியம்

வையம்பட்டி

**தச்சு நிலையம்**

குறிப்பிட்ட காலத்தில் தேவையான மரத்தினால் செய்யப்பட்ட மாடர்ன் பர்னிச்சர்கள், தேவைக்கு ஏற்ப செய்து கொடுக்கப்படும்.

ச. எட்வர்ட், பி.காம்.
ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம், வையம்பட்டி.

வெ. சுப்பராமன்,
பெருந்தலைவர்,
ஊராட்சி ஒன்றியம், வையம்பட்டி.

Phone: 73040

அனைவருக்கும் எமது புத்தாண்டு

பொங்கல் வாழ்த்துக்கள்

## விஜயலட்சுமி டூரிஸ்ட்

144/1, பெருந்துறை ரோடு,
சேர்மன் தோட்டம், ஈரோடு-11.

எங்களிடம், திருமணம் மற்றும் உல்லாசப் பயணங்களுக்கு
குறைந்த வாடகையில் "வீடியோ கோச்"
பஸ் கிடைக்கும்.

Phone: 78378

## ராஜா டிரான்ஸ்போர்ட்ஸ்
&
## லாரி புக்கிங் சர்வீஸ்

246, நேதாஜி ரோடு, ஈரோடு.

ஈரோடு To சென்னை ரெகுலர் சர்வீஸ்

வழி: விழுப்புரம், திண்டிவனம், வேலூர், காஞ்சிபுரம்.

Phone : 2617

ஈரோடு To திருப்பூர்

ரெகுலர் சர்வீஸ்

## டிரேன்ஸ்போர்ட்ஸ் காண்ட்ராக்டர்ஸ்

TNPL புகளூர்.

**INDU** Sends you its best

The entire range of
PHOTOGRAPHIC PRODUCTS

- ★ PHOTO
- ★ CINE
- ★ X-RAY
- ★ GRAPHIC ARTS
- ★ INDUSTRIAL X-RAY
- ★ PROCESSING CHEMICALS

# Hindustan Photo Films Mfg. Co. Ltd.

(A Government of India Enterprise)
Regd.Office: Indunagar
OOTACAMUND-643005.

★ **MARKETING DIVISION:**
**Subramanian Building,**
**No. 1,Club House Road**
**MADRAS-600 002**

**BRANCHES/DEPOTS AT:**
**Bombay, Delhi, Calcutta,Bangalore, Cochin, Hyderabad, Ahmedabad, Bhopal, Jaipur, Kanpur, Chandigarh, Patna, Gauhati and Cuttack**

**HPF IS INDU**

**AND**

**INDU IS FILM**

INDU

பூத்துக் குலுங்கும் தமிழர் திருநாளில்

தமிழகமெங்கும் அமைதியும் செல்வமும் கொழிக்க

எங்களுடைய நல்வாழ்த்துக்கள்

**DITTY HOSIERIES**

*HOSIERY MANUFACTURERS*

MISSION STREET,

**TIRUPUR-638604.**

*Best Compliments From*

★

**Phone Offi: 2955**
**Resi: 855**

Sri Sabareeswarar Transport

★

**SF-164, POLLACHI ROAD,**

**UDAMALPET-642 126**

**COIMBATORE DISTRICT.**

டெலக்ஸ்: 455-239

தந்தி : COCEN BANK

தலைமை அலுவலகம் 2389
2063
தனி அலுவலர்: 2313

# புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கி

## புதுக்கோட்டை-622 001

### அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

உங்களின் எதிர்காலம் எல்லாவகையிலும்
வளமுடனும் மகிழ்வுடனும் திகழ
உதவி செய்வதும் எங்களது
வங்கியின்

## கற்பகதரு டெபாசிட் திட்டம்

எங்களது நகரக் கிளை தினமும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை வாடிக்கையாளர்களின் நன்மையைக் கருதி தொடர்ந்து செயலாற்றுகிறது! பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.

நகரக் கிளை ஞாயிற்றுக்கிழமை உட்பட வாரத்தில் 7 நாட்களும் வங்கி உண்டு. பங்கு கொண்டு பயன் பெறுவீர்!

புதுக்கோட்டை நகரில் முற்றிலும் பெண்களைக் கொண்ட ''மகளிர் கிளை'' 24.10.86 முதல் செயல்பட்டு வருகிறது.

மேலும் விவரங்களுக்கு:

தலைமை அலுவலகம் மற்றும்
மாவட்டத்திலுள்ள 17 கிளைகளில்
ஏதேனும் ஒன்றை அணுக வேண்டு
கிறோம். -என்றும் நினைவிருக்கட்டும்-

**P.C. C. BANK — கற்பகதரு டெபாசிட் திட்டம்**

தனி அலுவலர் மற்றும் பணியாளர்கள்

# தமிழ்நாடு
# சேமிப்பு கிடங்கு நிறுவனம்

**ஒரு தமிழ்நாடு அரசு சார்பு நிறுவனம்**

**எண் 2, பிரகாசம் சாலை, தி. நகர்**

**சென்னை-600 017.**

***தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின்***

***பொங்கல் நல்வாழ்த்துக்கள்***

தானியங்களின் இழப்பைத் தவிர்ப்பது நிகழ்காலத் தேவை ஈட்டிய பொருளை சேமித்துக் காப்பது எங்களது சேவை!

ஆம்! சேமிப்புக் கிடங்குகள் நாளெல்லாம் வளரும் நன்மைகளின் தொடர்கதைகள் :

நவீன விஞ்ஞான முறை சேமிப்பு, நோய்த்தடுப்பு பணிகளோடு சேமிப்புப் பொருட்களுக்கு பாதுகாப்பீட்டுறுதி, சேமிப்புக் கிடங்கு பற்றுச் சீட்டுக்களின்மீது 75சதம் கடன் உதவி.

உணவுப் பொருட்கள் மற்றும் உரங்களின் சீரான விநியோகத்திற்கு சேமிப்புக் கிடங்குகளின் பணிகளே முதன்மையானது. சிறப்பான உற்பத்தியைக் கட்டிக்காத்து பசிப்பிணி விரட்டும் பணியில் அட்சய பாத்திரமாய் செயல்படும் அரசு நிறுவனமே சேமிப்புக் கிடங்குகள்.

பொருளாதாரக் கட்டுப்பாடு தனிநபர் ஆதிக்கத்திற்கு உட்படாமல் அனைவரிடமும் பரவலாக்கப்படுவதற்கும், வியாபார போட்டிகளின் மூலம் விலைவாசிகள் உயராமல் காப்பதற்கும் சேமிப்புக் கிடங்குகள் நிகழ்த்தும் பணிகள் நிகரற்றவை.

வாழும் மனிதர்களுக்கெல்லாம் வயிற்றுக்குச் சோறிடுதலே நமது சமுதாய சிந்தனை. அந்த மனிதாபிமானப் பணியின் ஊக்கத்திற்கு உறைவிடமாய் இருப்பவைகளே சேமிப்புக் கிடங்குகள்.

சேமிப்புக் கிடங்குகள் விவசாயிகளின் தோழன் மற்றும்
நமது தேசிய சொத்துக்களின் உயர்ந்த பாதுகாவலன்!!


தொலைபேசி எண்:
442119
446001
447673
447702

**நிர்வாக இயக்குநர்**
தமிழ்நாடு சேமிப்பு
கிடங்கு நிறுவனம்.
சென்னை-17.


RO. No. 85/MS/87/ARIES

# PROVEN PRODUCTS FROM TANCOF

WINNER
REFINED GROUNDNUT OIL

- PURE AND FRESH
- NUTRITIOUS BUT ECONOMICAL

PURENUT
GROUNDNUT OIL

- FARM AND FACTORY FRESH
- HEALTHY & HYGIENIC

*PRODUCED BY:*

## Tamilnadu Co-Operative Oilseeds Growers' Federation Ltd.,

MADRAS - 8.

Products from Farmers' own Co-operative - A byword for quality

## THE PALANI ANDAVAR MILLS LIMITED

UDAMALPET-642 126

COIMBATORE DISTRICT.

Telephone: 501 & 502

Telegrams: 'ANDAVAR'

★

*Manufacturers of:*

120s Super Combed Warp Yarn.
60s Combed Hosiery Cone Yarn.
50s Orange Label Hosiery Cone Yarn.
40s Red Label Hosiery Cone Yarn.
40s Green Label Hosiery Cone Yarn.
40s Violet Label Hosiery Cone Yarn.
34s Red Label Hosiery Cone Yarn.
40s Polynosic Cotton Blended Yarn.

MANAGING DIRECTOR
K. PARTHASARATHY

தைத் திருநாளாம் இந்நன்னாளில்

தமிழர்களின் வாழ்வு வளம்பெற

வாழ்த்துகிறோம்

**Yarn Tex**

Kamaraj Road, TIRUPUR-4

**Mohan Knitting Company**

Kamaraj Road, TIRUPUR-4

**Best Knitting**

Lakshmi Nagar 50 ft Road,

TIRUPUR-2

**Friends Knitting Company**

Kamaraj Road,

TIRUPUR-4

**Libra Hosieries**

Mangalam Road,

TIRUPUR-4

**D.S.P. Knitting Company**

Lakshmi Nagar,

TIRUPUR-2

# VISHNUVARDHAN
# PAPER MILLS PRIVATE LIMITED

*Regd. Office*

Venkata Nilayam
Venkatesa Mills Post
Udamalpet-642 128

Administrative Office & Mlls
Palani Road,
Madathukulam-642 113

*Phones:*

Udamalpet : 406, 407 & 408
Krishnapuram : 44
Grams : VEPEYEM

MANUFACTURERS OF QUALITY PAPERS

**COLOURED PRINTING (40 GSM AND ABOVE)**

**UNBLEACHED (40 GSM AND ABOVE)**

**CREAMWOVE (40 GSM AND ABOVE)**

# தெரிந்து கொள்ளணும் பெண்ணே!

செல்லம்மா, உன் பையனுக்கு 4 மாசம் முடியுதே! அவனுக்கு என்ன கொடுக்கறே?



4 மாசக் குழந்தைக்கு, தாய்ப்பாலைவிட வேறென்ன கொடுப்பாங்க?

## வளரும் குழந்தைக்குத் தாய்ப்பால் மட்டும் போதுமா?

**4-ம் மாதம் முதல்**

தாய்ப்பாலுடன் கீரைச்சாறு

காய்கறிச்சாறு.....

**5-ம் மாதத்தில்**

கேழ்வரகு, அரிசி,

கோதுமை போன்ற

தானியங்கள், பருப்பு

ஆகியவற்றின் கஞ்சி,

மசித்த இட்லி,

உருளைக்கிழங்கு

**6-ம் மாதத்தில்**

கீரைசாதம், தயிர்சாதம்

பருப்பு சாதம்

வேகவைத்த முட்டை

**அதோட தாய்ப்பாலைத் தொடர்ந்து கொடுக்கணும்.**

**மாசாமாசம் எடை பார்க்கணும்.**



ரொம்ப நன்றிம்மா.

நீ சொன்னபடியே செய்யறேன்

மத்தவங்களுக்கும் சொல்றேன்.




வெளியீடு : தொடர்புப் பிரிவு

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்

570, அண்ணாசாலை, சென்னை-18.

## நீலகிரி மாவட்ட விவசாய பெருங்குடி மக்களுக்கு நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்க நல்வாழ்த்துக்கள்

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டில் மிகப் பெரிய அளவில் அங்கம் வகிக்கும் ஒரு உற்ற நண்பனாவான். இச்சங்கம் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக விவசாயிகளின் வாழ்க்கையில் காணும் முன்னேற்றத்தில் தனது முன்னேற்றப் பாதையை அமைத்து விவசாயிகளின் நல்ல நண்பனாகவும், ஆசானாகவும் திறம்படச் செயலாற்றி வருகிறது.

நீலகிரி மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் தேவையான இடு பொருள்கள் அனைத்தும் மிகக் குறைந்த விலையில் தேவையான நேரத்தில் முழுமையாக வழங்கி, பயிர்ப்பாதுகாப்பு முறைகள் மற்றும் பயிர் வளர்க்கும் முறைகளை எடுத்துக்கூறி, விதை காலத்திலிருந்து விற்பனைக் காலம் வரை விவசாயிகளின் வாழ்வில் ஓர் அங்கமாகத் திகழ்ந்து வருகின்றது குறிப்பிடத்தக்கதாகும்.

நீலகிரிக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் இன்றேல் நீலகிரி மாவட்ட விவசாயிகளின் பொருளாதாரம் வெகுவாக பாதிக்கப்படும் என்றால் அது மிகையாகாது.

**30.6.1986ல்**

| | |
|---|---|
| அங்கத்தினர் எண்ணிக்கை | 21,988 |
| செலுத்திய பங்குத் தொகை | ரூ.32,09,110 |

**1985-86ஆம் ஆண்டில விற்பனை**

| | |
|---|---|
| உருளைக் கிழங்கு | ரூ. 577.98 இலட்சம் |
| மலைக் காய்கறிகள் | ரூ. 94.07 இலட்சம் |
| இரசாயன உரங்கள் | ரூ. 268.65 இலட்சம் |
| பூச்சிக் கொல்லி மருந்துகள் | ரூ. 53.70 இலட்சம் |
| 1985-86ல் நிகர லாபம் (தணிக்கை செய்யாதது) | ரூ. 24.67 இலட்சம் |

நீலகிரியில் உற்பத்தியாகும் உருளைக்கிழங்கு மலைக் காய்க்கறிகளில் 60%மேல் விற்பனைச் செய்தும் விவசாய பெருங்குடி மக்களுக்குத் தேவைப் படும் உருளைக் கிழங்கு, தேயிலை, தற்காறி உரங்களில் 75%சங்கமே சொந்தமாகத் தயாரித்து தரமான உரங்களை குறைந்த விலையில் விநியோகம் செய்து வருகிறது.

தமிழ்நாட்டிலேயே சிறந்த கூட்டுறவு விற்பனைச் சங்கம் என தொடர்ந்து 10 ஆண்டுகளாகக் கேடயங்கள் பெற்று வந்துள்ளது.

இச்சங்கத்தின் நடைமுறையைக் கண்டறிய பயிற்சியாளர்களும், கூட்டுறவாளர்களும் வெளிநாட்டு பிரமுகர்களும் வருகை தருவது குறிப்பிடத்தக்கது. நாளும் விவசாயிகளின் நலனுக்காகப் பாடுபடும் நீலகிரிக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தை மேன்மேலும் பலப்படுத்த நீலகிரி மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் சங்கத்தின் சேவையை முழுமையாகப் பயன்படுத்தி வாழ்வாங்கு வாழவேண்டி வாழ்த்துகிறோம்.

சா. கோவிந்தராசன்
தனி அலுவலர்.



## எங்களது இதயம் கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்

- பொங்கும் நுரை!
- மங்காத மணம்!
- நீங்காத வெண்மை!

இன்றே தேர்ந்தெடுங்கள்

# மயில் சோப்

தயாரிப்பாளர்:

டிரைசி கெமிக்கல்ஸ்,
கோட்டார், நாகர்கோவில்-2.

போன்: ஆபீஸ்: 3967
5342
வீடு: 4745
5668



ஆண்டுக்கொரு முறை பொங்கிடும் சர்க்கரைப் பொங்கல்!

ஆண்டு முழுக்கப்பொங்கி சத்துணவாய்ப் படைத்திடும் தமிழக வள்ளல்!

உடுத்த சீருடை கொடுக்கிறார்! படிக்கப்பாடநூல் கொடுக்கிறார்!

பார்போற்ற நல் சமத்துவம் படைத்திடும் புரட்சித்தலைவர் வழியில்

பாடநூல் நிறுவனப் பணிகளை உயர்த்திடுவோம்!

பள்ளிக்குழந்தைகள் பயன் பெற உழைத்திடவே

இப் பொங்கல் திருநாளில் உறுதியேற்றிடுவோம்!

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

அன்புள்ள,

கா. லியாகத் அலிகான், பி.ஏ. எல்எல்பி.

மேலாண்மை இயக்குநர்,

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

கல்லூரி சாலை, சென்னை-6.

DIPR/42/MS/87/NAS

பூத்துக் குலுங்கும் இந்த
பொங்கல் திருநாளில்
உங்கள் வாழ்வு மலர
எங்களது பொன்னான வாழ்த்துக்கள்!

**Chowdambikai Knitting Co,**

HOSIERY MANUFACTURERS,
KAMARAJ ROAD,
**Tirupur-638 604.**

*WITH BEST COMPLIMENTS FROM:*

**RAJA TALKIES,**
KARUNGAL
KANYAKUMARI DISTRICT
Prop: A. RAJ
Phone: 31

பொங்கல் நல்வாழ்த்துக்கள்

வீடியோ-பிக்சர் லேப்
வீடியோ படப்பிடிப்பிற்கும்
வீடியோ லைப்ரரிக்கும்

**பிரகாஷ் வீடியோ விஷன்.**

ஆசாரிமார் தெற்குத் தெரு,
மீனாட்சிபுரம்,
நாகர்கோவில்-1.

உரிமையாளர் கே. சாவியோ

*With best compliments from:*

OOOO
OOO
OO
O

**KRISHNAPRIYA THEATRE**

ARUMANA
K.K. DIST.

பொங்கல் நல்வாழ்த்துக்கள்

## தேன் ஈ பீடி & கதிர் பீடி

உரிமையாளர்கள்:
எஸ்.எம். அகுஸ்தீன்
வி. அந்தோணிமுத்து
ஏ.எம். பீட்டர்தாஸ்

**எஸ். எம். ஞானக்கண் நாடார் & கோ**

வாடிக்கையாளர்களுக்கு பொங்கல் நல்வாழ்த்துக்கள்

கல்யாண வைபவங்களுக்குரிய

| | |
|---|---|
| காஞ்சிபுரம் | மற்றும் இதர |
| பனாரஸ் | மில்ஜவுளிகளுக்கு |
| தர்மாவரம் | சிறந்த ஸ்தாபனம் |

**Y. சிங்கராய நாடார் அன் சன்ஸ்**
போன்: 4143
பார்க் சமீபம், நாகர்கோவில்.
H.O. வள்ளியூர்.

Best Wishes to the Tamil Arasu
Pongal Malar 1987 of
Tamil Nadu Government

**George Maijo Fish Products,**
**MANDAPAM,**
**Ramanathapuram District.**

Best Wishes to the Tamil Arasu
Pongal Malar 1987 of
Tamil Nadu Government

**Baby Marine Products,**
**MANDAPAM,**
**Ramanathapuram District.**

**COOKER**

**DOUBLE REFINED**

**COTTON SEED**

**COOKING OIL**

Preserves the Flavour of Food, Economical, Odourless,
Safest for the Heart Preserves Food Longer

இரத்தத்தில் கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்கிறது

**15 Kgs. Nett.**

## SSD Oil Mills Company (P) Ltd.

**IYYAPPANTHANGAL : MADRAS - 600 056.**



D. MAYANDI
*Vice-President*

**Phone : 30679**
**32769**

## TamilNadu Bus Owner's Association

*Prop:* **"Vel Murugan Transport" Madurai.**

**நவீன வசதிகள் யாவும் அமையப் பெற்ற**

**டூரிஸ்ட் பஸ்கள்**

**குறைந்த வாடகையில் கிடைக்கும்**

**தங்கள் சுற்றுலாத் தேவைகளுக்குத் தொடர்பு கொள்ளவும்.**

*WITH BEST COMPLIMENTS FROM...*

1. **The Dharmapuri Small Match Producer's Service Industrial Co-op. Society Ltd.,**
   Ind. No. 1054-Dharmapuri-5.

   *(Suppliers of Safety Matches-Hand Made)*

2. **The Dharmapuri Polythene Workers Industrial Co-op. Society Ltd.,**
   Dharmapuri-5.

   *(Suppliers of quality Polythene Bags)*

3. **The Dharmapuri Dist. Printers Service Industrial Co-op. Society Ltd.,**
   36, Anjakara Street, Dharmapuri-2.

   *(Suppliers of Books and Forms, Printing Orders from Government, Quasi Government Bodies)*

4. **The Dharmapuri District Strch Producers' Service Industrial Co-op. Society Ltd.,**
   Branch: Manikkam Godown, Sivapet, Salem-2.

   *(Suppliers of Sago Strch)*

**போன்: 221**

**Lion K. குமரவேல் கவுண்டர்,**
**ஜெயா எலக்ட்ரிகல் ஒர்க்ஸ்,**
293, தாராபுரம் ரோடு
ஒட்டன்சத்திரம்.

**வினியோகஸ்தர்கள்:**

''டெக்ஸ்மோ'', மோனோ பிளாக்செட், மோட்டார் பம்புகள், டெக்ஸ்மோ சிங்கிள் பேஸ் மோட்டார்கள், பம்புகள், ஜெட் மோட்டார்கள் மற்றும் 'டெக்ஸ்வெல்'' ஸ்டாட்டர்கள், சுட்சுகள், ஆயில் இன்ஜின்கள் மற்றும் ரங்கவேல் ஆயில் ஸ்டாட்டர்கள் உத்தரவாதத்துடனும் விலை சகாயமாகவும் கிடைக்கும்.

TNGST No: 819393

Pmt. No. 180806911

## அமல்ராஜ் லேத் ஒர்க்ஸ்

**சாண எரிவாயுகலன் தயாரிப்பாளர், மோட்டார், பம்ப் சீர்திருத்தகம்**
**டீலர் : பாலாஜி எரிவாயு அடுப்பு**
(Approved by KVIC Bombay)
**மெயின் ரோடு, புதுச்சத்திரம்.**
(Registeration as a Small Scales Industrial Units)

**உரிமை :** **K. சவரிமுத்து**

**குறிப்பு :** **எங்களிடம் சாண எரிவாயு டிரம் குறித்த நேரத்தில், குறைந்த விலையில் நல்ல முறையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.**



இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
COOP
MAX. RETAIL PRICE Rs. 4-50 TAXES EXTRA
குளித்ததும் குளிர்ச்சி
நாளெல்லாம் மகிழ்ச்சி
கோவாப்
சீயக்காய்த்தூள்
மதுரை கோட்ஸ் தொழிலாளர்
கூட்டுறவு பண்டகசாலை, லிட், ஏ 1449
மதுரை.

*WITH BEST COMPLIMENTS FROM*

**TIP TOP PARADISE**
**CAPE ROAD NAGERCOIL-1** **Phone : Shop : 4577**
**Resi : 5477**

**TIP TOP FANCY CENTRE**
**COLLEGE ROAD, NAGERCOIL** **Phone : 4299**

**TIP TOP SUPREME**
**COLLEGE ROAD, NAGERCOIL.**

**HOTEL ARISTO A/c**
*NON-VEGITARIAN,*
**CAPE ROAD, NAGERCOIL.**

---

*With best compliments from :*



**Vijayalekshmi Cashews Company**

**11–30, MAIN ROAD,**
**Kuzhithurai - Post**
**Tamil Nadu Unit**

**PHONE : OFF : 401, 301**
**TELEX : 436 - 243** **Telegram : NUTRIENS**

*With best compliments from :*

# "ANAND THEATRE"

**Props : A. VIJAYAN & BROR.**

**(M/s. A. P. APPAVOO NADAR & SONS)**

**TRIVANDRUM ROAD : THODUVETTY JN.**

**MARTHANDAM - 629 165.**

**Phone : 04651 - 402 (Kzi)**

***WITH THE BEST COMPLIMENTS FROM :***

★

## Saraswathi Bankers
## Lakshmi Bankers
## Moogambikai Bankers
## New Saraswathy Funds, Vadasery

★

**7, DENNIS STREET**

**NAGERCOIL**

**Phone : 3745**

# காமராஜர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

## விருதுநகர்

காமராஜர் மாவட்டத்தில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு முக்கியமாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் நிலையில் உள்ள நலிந்தோர் நல்வாழ்வுக்கு உதவும் ஒரே நிறுவனம்.

**காமராஜர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை**

நடப்பு 1986-87ஆம் ஆண்டில் அரசு மானிய உதவியாலும் வங்கி நிதி உதவியாலும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்குக் கீழ்க்கண்ட திட்டங்களின் கீழ் மானிய உதவி செய்கிறது.

| | |
